1209

ஓம்

காரைநகர்ச் சைவமகாசபை

# பொன்விழா மலர்

1967

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## காரைநகர்ச் சைவமகாசபை

# பொன் விழா மலர்



மலர் ஆசிரியர்:
**க. வைத்தீசுவரக் குருக்கள்**


**சைவமகாசபை,**
**காரைநகர்.**

விலை ( ரூபா: 5-00
மலாயா: 3 வெள்ளி

# சைவமகாசபைப் பரிபாலன மன்றத்தினர்
# (1967)

அ. குழு

1 திரு. மு. கு. சுப்பிரமணியம்
2 ,, சு. இராசசேகரம் J. P.
3 ,, மு. வைத்தியலிங்கம். துணைத் தலைவர்
4 ,, ச. சபாபதி. தலைவர்
5 ,, சி. கனகசுந்தரம்

ஆ. குழு

6 ,, வை. சுந்தரமூர்த்தி
7 ,, இ. கந்தையா
8 திருமதி பா. விநாசித்தம்பி
9 திரு. ஆ. கந்தையா
10 பிரமஸ்ரீ க. ரா. ஹரிஹரசாஸ்திரிகள்

இ. குழு

11 திரு. அ. நாகலிங்கம். உப தலைவர்
12 ,, அ. தேவராசா. துணைச் செயலாளர்
13 ,, அ. சிவபாதம். செயலாளர்
14 ,, ஆ. முருகேசு. பொருளாளர்
15 ,, சோ. அம்பலவாணர்

'அ, ஆ, இ.' ஒவ்வொரு குழுவினரும் முறையே வருடந்தோறும் இளைப்பாறுவார்கள்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# காரைநகர்ச் சைவமகாசபை
# பொன்விழா மலர்

## கடவுள் வணக்கம்

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படை யுடையாய் போற்றி போற்றி
மன்னிய சீர்மறை நான்குமாணுய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

முன்னை யென்னுடை வல்வினை போயிட முக்கணதுடை யெந்தை
தன்னை யாவரு மறிவதற் கரியவ னெளியவ னடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனி லிளமதி யதுவைத்த
அன்னை யாண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

பொன்மலைக் கொடியுட னமர்வெள்ளி யம்பொருப்பில்
தன்மையாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப்
பன்மையோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே
மன்னுமாதவர் தம்பிரான் கோயில் முன்வந்தார்.

திருச்சிற்றம்பலம்: திருச்சிற்றம்பலம்: திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

# பொன்விழா மலர் வாழ்த்து

[பண்டித வித்துவான்
க. சி. நடராஜன் B. O. L., Dip. Ed.]

## ஆசிரிய விருத்தம்

ஈழத்துச் சிதம்பரமென் றெடுத்துரைக்கும் ஏற்றம் மிக்க
எம்பிரான் திருக்கோயில் கொண்டருளும் இனிமை வாய்ந்து
வாழத்தான் வகையறிந்த வுயர்மக்கள் வதியுஞ் செல்வ
வளநிறைந்த வயலாரும் மருதமொடு நெய்தல் மன்னிச்
சூழத்தான் கடலுடுத்த சுந்தரஞ்சேர் தோற்றத் தோடு
சுரர்களுமே விழையவொளிர் தூயதிரு வூராங் காரை
வாழத்தான் பிறந்தபெரும் மாண்பினோரை வரவேற் றோம்பூர்
வளருமிள ஞாயிறொடு மதியம்போல் வாழ்க மாதோ 1.

சமயமெனு மெவற்றினையுந் தன்னகத்தே யடக்கிக் கொண்டு
சமயமெலாந் தனக்கமைந்த படிகளெனச் சாற்ற வாய்ந்து
சமயங்க ளனைத்தினுக்குந் தாய்போல விளங்குஞ் சைவ
சமயமதே சமயமெனச் சாற்றிடுவர் தக்க சான்றோர்
சமயமது நாளுளுந் தனிச்சிறப்பி னோங்க வென்றே
சமயமறிந் துழைப்பதற்குத் தாமுணர்ந்து முன்வந் தார்கள்
இமயமகள் பதிகருணை யினிதுாக்க வியலுங் காரை
எழினகரில் மகிழ்ந்துறையும் ஈடில்லா இன்ப மக்கள் 2.

சிவநெறியுஞ் செழுந்தமிழுஞ் சேருமிரு கண்ணோ போலச்
சிறப்பினொடு காத்துவருங் காரைநகர்ச் சீரி யோர்கள்
தவமுதல்வன் யோகமுனி தண்ணருள்கூர் ஆசி யோடு
தழைத்தோங்க வைந்துபத்தி ஞண்டின்முன் தாபித் தோங்கும்
அவனிமிசைத் தமிழ்சைவம் வளர்ச்சியுற வரிய தொண்டை
யாற்றிவருஞ் சைவமகா சபையினிதி னமைந்து வாழ்க
நவநவமா யஃதாற்றுஞ் சிவப்பணிகள் நாளும் வாழ்க
நலமோங்கு நறுந்தமிழுங் கலைகளுடன் நன்கு வாழ்க 3.

தாய்நாட்டி லுறைகின்ற தகைசான்ற புலமை மிக்க
தமிழறிஞர் ஆய்வுரையும் பாவகையுந் தகவே கொண்டு
சேய்நாட்டுப் பெரும்புலவர் தருமுரையுஞ் சிவணப் பெற்றுத்
தேவர்குறள் முதலாகச் செய்யவே தாந்தத் தெளிவு
தாயனைய சித்தாந்தங் காட்டுமெனுந் திறமுஞ் சாற்றுந்
தகுதிபெறு கட்டுரைகள் கலைவளங்கள் தாங்கி நின்று
வாய்மைநெறி மாண்பினிலே திளைத்துமனத் தோடு கண்ணும்
மகிழவரும் பொன்னின்விழா மலரினிது வாழ்க மாதோ. 4.

# உள்ளுறை


சைவமகாசபைப் பரிபாலன மன்றத்தினர்
(1967)

கடவுள் வணக்கம்

பொன்விழா மலர் வாழ்த்து
பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B. O. L., Dip.Ed.

1 முன்னுரை

2 ஆசிச் செய்திகள்

i தருமையாதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ii மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோம
[சுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள்

iii ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள்

iv ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள்

v சுவாமி சுத்தானந்தபாரதியார்

vi மகாதேவ ஆஸ்சிரமம்
ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள்

vii ஸ்ரீ ச. இராஜகோபாலாச்சாரியார்

viii அரசவைக் கவிஞர்
வெ. இராமலிங்கம்பிள்ளை M. L. C.

ix டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

x டாக்டர் பீம்சென் சச்சார்

3 அணிந்துரைகள்

i சிவாகமஞானபானு,
அச்சுவேலி, சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்

ii மட்டக்களப்பு, பண்டிதர் ஆ. சபாபதி

iii ஸ்ரீ. கி. பி. ஹரன்

4 காரைநகர்ச் சைவ மகாசபை வரலாறு

5 காரைநகர்ச் சைவமகாசபையின் போஷகர்கள் நாமாவலி

6 சீவிய அங்கத்தவர்களும் கடந்தகால உத்தியோகஸ்தர்களும்

7 சபைக்கு வருகை தந்து சொற்பொழிவாற்றிய பெரியார்கள்

8 ஸ்ரீமத். சிவயோகநாத சுவாமிகள்
பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B. O. L., Dip.Ed.

9 திரு. இ. நாகலிங்கம் அவர்கள்

10 திரு. மு. திசைநாயகம் [காசிப்பிள்ளை] அவர்கள்
பிரமஸ்ரீ கா. சி. மஹேசசர்மா F. R. A. S.
திரு. அ. கணபதிப்பிள்ளை R. M. P.

11 "அவர்களுக்குப் பிறகு அருணாசலந்தான்"
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

12 தேவர் குறள் ... 1
வித்துவான் கி. வா. ஜகந்நாதன் M. A.

13 வேதம் ... 5
கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் M. A., Ph. D.

14 ஆகமம் ... 9

வேதாகம பூஷணம் கு. பாலசுந்தரக்குருக்கள் B. A. (Hons)

15 திருநான்மறை முடிவு ... 18

(உபநிடதம்)

வியாகரண சிரோமணி தி. கி. சீதாராமசாஸ்திரிகள்

16 சம்பந்தர் செந்தமிழ் ... 25

வித்துவான் பொன். முத்துக்குமாரன் B. O. L.

17 அப்பர் பெருமான் அருள்வாக்கு 28

'சம்பந்தன்'

18 சுந்தரர் தேவாரம் ... 32

வித்துவான் க. கார்த்திகேசு B. A.

19 முனிமொழி ... 36

வேதாகம பூஷணம் கு. பாலசுந்தரக் குருக்கள் (B. A. Hons)

20 திருக்கோவையார் ... 43

தலையாளி, திரு. வே. கந்தையா

21 கண்ணுரமுதன் ... 50

செந்தமிழ்க் கலைமணி,

பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை

22 கருவூர்த்தேவரின் கவிதைகள் ... 53

செஞ்சொற்கொண்டல்,

வித்துவான், சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

23 திருமூலர் சொல் ... 60

திரு. க. சிற்றம்பலம்

24 பதினொராந் திருமுறை ... 65

பண்டிதர் மு. கந்தையா B. A.

25 சேக்கிழார் சிந்தனைக் கதிர்கள் ... 70

திரு. மு. ஞானப்பிரகாசம் B. A., B. Sc.

26 மெய்கண்ட சாத்திரங்கள் .. 76

சைவப்புலவர் சி. செல்லத்துரை

27 ''ஒருவாசகமென்றுணர்'' ... 81

புலவர் பாண்டியனார்

28 அத்வைதம் யாத்த இணைப்பு ... 86

டாக்டர் டி. எம். பி. மஹாதேவன் M. A., Ph., D.

29 தன்னை அறிதல் ... 92

நவாலியூர், வித்தியாரத்தினம் சோ. நடராசன் B. A.

30 சக்தி வழிபாடு ... 98

வித்துவான் மு. சபாரத்தினம்

31 சிவநெறி ... 101

அருள் மொழி அரசு, அமுதமொழிக் கொண்டல்,

திருமுருக. கிருபானந்தவாரியார்

32 அப்பர் வாக்கில் மிளிரும் அத்துவிதக் கொள்கைககள் ... 106
திரு. க. இராமச்சந்திரன்

33 இறைவனும் ஆன்மாவும் ஒன்ரு? வேரு? ... 109
ஸ்ரீ. கி. லக்ஷ்மணன் M. A.

34 ''வினையினீங்கி விளங்கியவறிவின் முனைவன்......'' ... 112
நவாலியூர் திரு. சோ. இளமுருகஞர்

35 முன்னடைந்த முதல்வர் ... 124
தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், சி. அருணைவடிவேலு முதலியார்

36 உண்மையான கல்வியின் நோக்கம் ... 128
திரு. ந. சபாரத்தினம் B. A.

37 சைவத்தின் உயர்நிலை ... 131
பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்

38 திருவாசகர் கையாண்ட பிரபந்தங்கள் ... 133
திரு. ச. தனஞ்சயராசசிங்கம் B. A. (Hons); C. L.; M. Litt.

39 சமய சமுதாயம் ... 139
புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

40 சைவசமயக் கிரியைகளின் இன்றியமையாமை ... 142
பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா

41 தேவாரத் திருமுறைகளும் சேக்கிழார் பெருமானும் ... 146
பண்டிதர் க. மயில்வாகனன்

42 திருநாவுக்கரசர் திருவுள்ளம் ... 149
பண்டிதை, சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி

43 மாணிக்கவாசகர் பெரிய விஞ்ஞானி! ... 152
திரு. செ. தனபாலசிங்கன் B. A. (Lond)

44 திருவருட்பயனில் ஒரு குறட் பயன் ... 156
பண்டிதர் ச. சுப்பிரமணியம்

45 கோயில் வழிபாடு ... 159
திரு. பெ திருஞானசமபந்தன் M. A., L. T.

46 வாழ்வாங்கு வாழச் சமயநெறி நிற்போம் ... 163
புலவர் க. பூரணம் B. O. L.

47 ஆலயவழிபாடு அவசியந்தானு? ... 165
சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர்

48 சிவமெனுந்தாய் ... 168
வல்வை, பண்டிதர் சங்கர. வைத்தியலிங்கஞர்

49 நால்வர் காட்டிய நன்னெறி ... 170
திரு. நா. முத்தையா

50 கோவில்களின் வளர்ச்சியும் ஆட்சியும் ... 173
டாக்டர் மா. இராசமாணிக்கஞர் M. A., L. T., M. O. L., Ph. D.

51 திருவுந்தியாரின் பொருணிலை ... 178
தருமையாதீனப் புலவர், சித்தாந்த சிகாமணி,
க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T.
52 மாணிக்கவாசகர் கண்ட தெய்வம் ... 180
சைவஇளவல் சி. திருநாவுக்கரசு
53 அத்துவிதவாதம் ... 182
"சங்கரன்"
54 சஞ்சிதம் ... 187
வித்துவான் க. முருகேசன்
55 சங்க காலத்திற் சைவம் ... 189
சைவப்புலவர் க. சி. குலரத்தினம்
56 வேதாந்தத் தெளிவு சைவசித்தாந்தம் ... 191
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
57 அடியார் நட்பை நாடு ... 193
58 நன்றி ... 194

# விளம்பரதாரர்களின் அட்டவணை

1 லேடன் இன்டஸ்றீஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம்
2 V. M. சண்முகம் & பிறதர், யாழ்ப்பாணம்
3 எஸ். ஆர். செல்லத்துரை, யாழ்ப்பாணம்
4 சிவபாலன் பீடிக் கம்பனி, கொழும்பு-12
5 ஈ. ஆர். எஸ். மில்ஸ், கொழும்பு
6 பொ. அம்பலவாணர், யாழ்ப்பாணம்
7 டொலர் அலுமினியம்
8 கணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்
9 என் வைத்திலிங்கம் அன் கம்பனி லிமிட்டெட், கொழும்பு-12
10 இரஞ்சனு அச்சகம், கொழும்பு-13
11 S. V பொன்னம்பலம் அன் சன்ஸ், கொழும்பு-13
12 யப்பான் ஜுவல்லர்ஸ், யாழ்ப்பாணம்
13 ஆரியபவான், கொழும்பு-11
14 பெட்டா பார்மஸி, கொழும்பு
15 காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.
16 செல்லமுத்தூஸ், கொழும்பு
17 நவகல்யாணி ஆபரண மாளிகை, யாழ்ப்பாணம்
18 ஆறுமுகம் நல்லதம்பி, யாழ்ப்பாணம்
19 யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்
20 யாழ் உலோகத் தொழிற்சாலை, யாழ்ப்பாணம்
21 எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ, கொழும்பு-3
22 லங்கா பெயின்ட் கொம்பனி, கொழும்பு-11
23 ஜெம் ஹவுஸ், கொழும்பு-11
24 மகாலெட்சுமி ஸ்டோர்ஸ், கொழும்பு
25 ஆ. ச. க. கந்தையாபிள்ளை, கந்தானை
26 சிவாஸ் புடவை மாளிகை, முறட்டுவா
27 லீலா ஸ்ரோர்ஸ் கொழும்பு-11
28 சுப. பெரியண்ணபிள்ளை அன் கோ, கொழும்பு-11
29 ஜி. எச். எ டி. சில்வா அன் கோ, வவுனியா
30 இலங்கை சணல் பொருள் தயாரிப்பு, காரைநகர்
31 ஐனு செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை கண்டாவளை
32 சினிமாஸ் லிமிடெற், கொழும்பு 2
33 அப்துல் ரஹீம்ஸ், கொழும்பு
34 கலைமகள் கம்பனி, கொழும்பு-11
35 வட இலங்கை உணவு தானிய மொத்த வியாபாரிகள் இறக்குமதி [யாளர் சங்கம்
36 A. வைத்திலிங்கம் அன் கொம்பனி, யாழ்ப்பாணம்
37 ச. வி. முருகேசு, யாழ்ப்பாணம்
38 சி. சின்னத்துரை & பிரதர், கொழும்பு
39 வி. கனகலிங்கம்பிள்ளை அன்ட் சன் கொழும்பு
40 எஸ். சந்தோஷ நாடார், கொழும்பு-11
41 ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்
42 பாரத் ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம்
43 ருஜு ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்

# List of Advertisers

1 Ceylon Knitwear Industries Ltd. Colombo-11
2 Lever Brothers Ltd., Colombo
3 Ceylon Marine and Hardware Store, Colombo-12
4 Sterling Products Ltd, Colombo
5 Regina Perfumery & Co., Colombo
6 C. V. Bhatt, Colombo -2
7 St. Anthony's Hardware Stores Ltd, Colombo 10
8 Malayan Trading Co., Colombo 12
9 The Kumaran Press, Colombo 12
10 The Indo - Ceylon Textile Co, Colombo 11
11 S K. Chelliah, Colombo
12 A. Thirunavukarasu Colombo 13
13 International Import & Export Co., Colombo
14 Siedles Cineradio Colombo 11
15 M/S A. K. Sangaran & Co., Colombo 12
16 Tilleys Hardware Stores, Colombo 12
17 A S Sangarappillai & Bro. Jaffna.
18 N. B. Abdul Gafoor, Colombo 13
19 D. Samson & Sons Ltd., Colombo 11
20 Ceylon Textiles Ltd., Colombo 11
21 Jaffna Stores, Dankotuwa
22 Uma Hardware Enterprises, Colombo 12
23 Rajan Stores, & Industry, Colombo
24 Lotus Stores, Colombo
25 S. Appukutty & Co, Colombo - 13
26 K M. Kaliappa Pillai & Co. Ltd., Colombo 11
27 Rajagopals, Jaffna
28 A. Perampalam & Sons, Jaffna.
29 V. M. Ponnampalam Co., Colombo 12
30 Hirani Industrial Works, Colombo
31 A. S Mohamed Ismail, Colombo.
32 Chettinad Corporation Private Limited, Colombo
33 S. S. Hameed & Co., Colombo
34 Jayapahan & Co., Jaffna.



திரு இ. நாகலிங்கம்

22-12-1893 22-7-1965

சைவமகாசபையின் ஸ்தாபக அங்கத்தவராகவும், செயலாளராகவும், தலைவராகவுமிருந்து சீவிய காலம் வரையும் தொண்டாற்றிய பெரியார்.

# முன்னுரை

பண்டுதொட்டே மக்கள் கூடி வாழ்கின்ற வாழ்வினை உடையர். இது வரலாற்று உண்மை. அவ்வகையில் இச் சைவமகாசபையாரும் 52 ஆண்டுகளாகக் கூடிப்பழகும் வாழ்வினை ஏற்படுத்தினர். இவர்கள் வாழ்வு சமயத் தொடர்பானது.

சைவம் என்பது சிவத்தோடு தொடர்புடையது. ஓசை நயம் நோக்கியும் உணரலாம். இவ்விரு சொற்களும் வடமொழி என்பர் தொல்காப்பியர். அஃது யாதாயினுமாகுக. 'முக்கட் செல்வன்' முதலாய பழந்தமிழ்ச் சொற்கள் சிவனைக் குறிப்பனவே.

பிற்காலத்தில், 'சிவன்' இத்தன்மையன் எனவும், சமய ஒழுக்க முறைகள் இவை எனவும் விளக்கப் பல நூல்கள் தோன்றின. அவைகளை அறிஞர்களே படித்துணர்வர். ஏனையோர் அறிஞர்பாற் கேட்டுணர்வர். அறிஞர்கள் கூட்டமே சங்கங்கள் – கழகங்கள் என்னும் பெயர்களில் இயங்கி வருகின்றன.

இச்சபை, காரைநகர்ச் சைவப் பெருமக்களால் ஆக்கப்பெற்றது. 52 ஆண்டுப் பழைமையது. கிராம முன்னேற்றங் கருதிப் பணியாற்றிவருவது. 50 ஆண்டு நினைவை மேற்கொள 'மலர்' ஒன்று வெளியாக்கவேண்டுமெனக் கருதியது. அக்கருத்தின் விளைவே இவ் வெளியீடு.

பல அறிஞர்களின் சமயக் கருத்துக்கள் நிறைந்த கட்டுரைக் கருவூலமாக விளங்குவது இது. இத்தேனைப் பருகி இன்புற வாசகர்கள் முன்வருவார்களாக.

யாம் மலர் வெளியிட முயன்றபோது தக்க ஆசிரியரைத் தேடினோம். சுந்தரேசுவரப் பெருமான் குருமரபினர் – ஆசிரிய நண்பர் **பிரமஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள்** ஞாபகம் வந்தது. அவர்களுக்கு எம் கருத்தை உணர்த்தினோம். மிக விருப்போடு அப்பணியை மேற்கொண்டார்கள். பல அறிஞர்களோடு தொடர்புகொண்டார்கள். கட்டுரைகளைப் பெற்றார்கள். அழகிய – நறிய மலரை எம்முன் வைத்துள்ளார்கள். அவர்கள் செயல் ''மலையினும் மாணப் பெரிது.

''முனிவரும் மன்னரு முன்னுவ பொன்னால் முடியும்.'' எனவே, மலர் அச்சிடுவதற்குத் தேவையான பணஞ் சம்பந்தமாகச் சபையிடத்துப் பேரபிமானமுடைய வர்த்தகச் செம்மல் **திருவாளர் க. சி. நடராசா** அவர்களுடன் ஆலோசித்தோம். அவர்கள் மிக விருப்பத்தோடு முற்பணமாக ஒரு பெரிய தொகையை உதவி ஊக்கினார்கள்; 65ஆம் ஆண்டு தொடக்கம் சபை நடைபெற்றுவரப் பல வழிகளில் உதவியும் வருகின்றார்கள். அவர்களின் உதவி 'ஞாலத்தின் மாணப் பெரிது'.

சபைச் சார்பில் மலர் வெளியிடும்போது அதன் வரலாறு முக்கிய இடம்பெறவேண்டும். சபை நிர்வாகம் பலரிடம் மாறிமாறிச் செல்வது கண்கூடு. அதனாலும் வேறு ஏதுக்களாலும் வரலாற்றுக் குறிப்புகள் தவறி இல்லாமற் போதலும் கூடும். இச்சபை அதற்குப் புறம்பானதன்று. 50 ஆண்டு வரலாற்றை நிரைப்படுத்தல் எளிதன்று. அதனை ஒழுங்குபடுத்தி உதவிய நண்பர்களுக்குச் சபையின் நன்றி உரியது.

விளம்பரங்கள் மூலம் மலரை அழகுறவும் நிதிநிலை சீருறவுஞ் செய்த வர்த்தகப் பிரமுகர்களுக்கு எமது நன்றி. பலவழிகளிலும் மலர் வெளிவருதற்கு உதவிய கொழும்பு சுங்க இலாகாவைச் சேர்ந்த **திரு. க. க. சுப்பிரமணியம்** அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

மலரை அழகுற அச்சிட்டு உதவிய கலாதேவி அச்சகச் சொந்தக்காரருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.


மலரின் மேலட்டையை அழகாய் அச்சிட்டு உதவிய குமரன் அச்சகத்தைச் சேர்ந்த **திரு. க. தியாகராசா** அவர்களுக்கும், அதன் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சபை அபிமானி **திரு. இ. ஆ. கந்தையா** அவர்களுக்கும் எமது நன்றி.

மலர் அழகாதற் கேதுவாகப் படங்களை உதவிய பெரியார்களுக்கும் நன்றி.

எல்லாமாய் அல்லதுமாய் நம்மை நடாத்திச் செல்கின்ற ஆலமர் கடவுளுக்கு வணக்கம். சபை — சபையோர் — மலர் — மலர் படிப்போர் முதலாய எல்லாரும் பல்லாண்டு வாழ்க என இறைவனை வழுத்துகிறோம்.

சைவமகாசபை, காரைநகர்.
பிலவங்க ஐப்பசி,
ஸ்கந்த ஷஷ்டித் திருநாள். 7–11–67.

**அ. சிவபாதம்,**
செயலாளர்,
(பரிபாலன மன்றத்தார்க்காக.)



தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவரும்
தருமையாதீனம் 25ஆவது
குருமகாசந்நிதானமுமாகிய
**ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய**
**சுவாமிகள் அவர்கள்**

# ஆசிச் செய்திகள்

உ
குருபாதம்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை
**ஞானசம்பந்த சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

தருமபுரம், மாயூரம் P. O,

*24–8–1967.*

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென
ஆலவாயில் உறையும்எம ஆதியே''

**சை**வசமயம் தெய்வப் பெருஞ்சமயம். சிவபிரானை முழுமுதற் பொருளாகக் கொண்ட இத்தொல் சமயம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை உடைய உலகப் பெருஞ்சமயம். இச்சமயத்தைச் சான்றோர் பலரும் தம அருளாற்றலால் போற்றிப் புரந்தனர். திருநீறு. உருத்திராக்கம் முதலிய சாதனங்கள் இச் சமயத்திற்குரிய பெருஞ் சிறப்புக்கள். சைவசமயி ஒவ்வொருவரும், தம் வாழ்வின் இலட்சியத்தை உணர்ந்து ஈடேறவேண்டும். அவ்வீடேற்றத்திற்கு உறுதுணை புரிவனவே அருளாசிரியர்கள் அருள்மொழிகள். பன்னிரண்டு திருமுறைகளும் பதினன்கு சாத்திரங்களும் ஆகிய தோத்திரமும் சாத்திரமும் கற்று, உணர்ந்து தெளிதல் வேண்டும்; அத்தெளிவே திருவடிஞானம் தலைப்படுவிக்கும்.

ஒரு சைவசபை பொன்விழா எடுக்கின்றது என்பது குறிப்பிடத் தகுந்தது. பொன்விழாக் காணும் இச்சபை வயிரவிழா, நூற்றுண்டு விழா முதலிய பல விழாக்களும் எடுக்கின்ற அளவுக்கு உலகப் பெருஞ் சபைகளுள் ஒன்றய் நின்று நீடு நிலவுவதாக இதனையொட்டிப் பிற சபைகளும் பெருகித் தழைத்துத் 'தெய்வநெறிச் சிவம் பெருக்கும்' திருப்பணி புரிவனவாக.

இந்நற்பணிகளை நோக்கமாகக் கொண்டு **இலங்கை, காரைநகர்ச் சைவமகாசபை** கடந்த அரை நூற்றுண்டு காலமாகச் சிவநெறிக்கும செந்தமிழுக்கும் ஆற்றிவரும் பணிகள் நம் பாராட்டிற்குரியன.

''என்னை அறிவென்றன் என்னறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்றன் சந்ததமும் — என்னையுன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்றன இம்மூன்றும்
ஆராயந் தவர்முத்த ராம்.

என்பது இவ்வாதீன முதற் பெருங்குரவர் ஸ்ரீகுருஞானசம்பந்தர் திருவாக்கு. இதன்கண் பதி, பசு, பாசம் என்ற முப்பெருந் தத்துவங்கள் மொழியப் பெற்றுள்ளன இவ்வாராய்ச்சியில் தலைப்பட்டவரே ஜீவன் முத்தராவர் என்று கூறுகின்ற இவ்வருள்வாக்கைச் சிந்தித்து உலகு நற்பயன் பெருக்குதல் வேண்டும்.

சிறப்புறப் பொன்விழாக் காணும் இச்சபையின் செயற்குழுவினர் மலரொன்றை வெளியிடுதலும், அதன்கண் தமிழ் கூறும் நல்லுலகு எங்கணும் உள்ள அறிவுடையார் கருத்துக்களையெல்லாம் உலகிற்கு இனிய பெருக்கி வழங்குதலும் மகிழ்விற்குரியவை. 'தாளாற்றித் தந்த பொருளையெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற பொருட்டே யாக்கும்' ஈழம் வாழும் அனைவர்க்கும் குறிப்பாகக் காரைநகர்ச் சைவமகாசபையினர் எல்லோர்க்கும் நல்லன எல்லாம் பெருகுக என்று எல்லாம்வல்ல சொக்கலிங்கப் பெருமான் சேவடிகள் சிந்திக்கிறோம்.

பொன்விழா இனிது நிகழ்க!

மகாசபை நீடு வாழ்க!

வாழ்க உலகெலாம்!



மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்

திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

உ

HIS HOLINESS THIRUVARUL THAVAYOGA

*Sri-la-Sri Somasundara Sri Gnanasambanda Desika*

*Paramacharya Swamigal*

**MADURAI AADHEENAM**

70, South Avani Moola Street,
Madurai, 26–6–67.
(S INDIA)

ஆசிரியர்,
**பொன்விழா மலர்,**
**சைவமகாசபை, காரைநகர்.**

**காரைநகர்ச் சைவமகாசபை** சென்ற 50 ஆண்டுகளாகச் சைவத்திற்கும், தமிழுக்கும், பெருந்தொண்டாற்றி அதன் பொன் விழாவை அண்மையில் கொண்டாடத் தீர்மானித்திருப்பதை அறிந்து மகிழ்கிறோம்.

ஒரு சபை 50 வருஷகாலமாகத் தொண்டாற்றி வருகிறதென்றால் அது அந்தச் சபையை நடத்துகிறவர்களின் சைவாபிமானத்தையும், அயராத உழைப்பையும், ஆர்வத்தையும், மெய்ப்பித்துக் காட்டுகின்ற காரியமாகும். அவ்வாறு அச்சபையை ஆரம்பித்தவர்கள் முதலாக இப் பொழுது நடத்திவருகிறவர்கள் ஈறாக எல்லோரையும் பாராட்டுகின்றோம்.

சபையின் பொன்விழா யாதொரு விக்கினமுமின்றி எல்லா வகையான சிறப்புக்களுடனும் இனிதே நடந்தேறவும், அதில் பங்கு கொள்ளுகிற அனைவரும் எல்லா நலங்களும் பெற்றுத் திகழவும், **சைவ மகாசபையானது** இன்னும் சிறந்தோங்கி வளர்ந்து மேன்மைகொள் சைவநீதியை உலகெல்லாம் பரவச்செய்யும் ஆற்றல் பெற்று மிளிரவும் திருவருள் பாலிக்குமாறு எல்லாம்வல்ல அங்கயற்கண்ணி பங்கனும் ஆல வாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

**ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்**

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

# ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடம், காஞ்சிபுரம்.

முகாம்: ப்ரோதத்தூா                                    தேதி: 30-12-66
(கடப்பை ஜில்லா)

இலங்கைத் தேசத்தில் காரைநகரில் ஜனங்களிடையே சைவசமயத்தின் தத்துவங்களைப் பிரசாரஞ் செய்யும் உத்தம நோக்கத்துடன் ஐம்பது வருஷங்களுக்குமுன் அனேக ஆஸ்திகர்களால் ஆரம்பிக்கப்பட்டுப் பிரதிவாரமும தகுந்த தமிழ்ப் பண்டிதரின் மூலம் தேவாரம் முதலிய சைவ நூல்களில் பயிற்சி வகுப்பு நடத்துவது, நால்வர் முதலிய சைவ பக்தர்களின் நினைவு நாட்களைக் கொண்டாடுவது முதலிய தொண்டுகளைச் செய்து கொண்டுவரும் **'காரைநகர்ச் சைவமகாசபை'**யின் நிர்வாகத்தினர் அண்மையில் இந்தச் சபையின் பொன்விழாவை விமரிசையாக நடத்த முன்வந்திருப்பதையும், அந்தச் சமயத்தில் ஆகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள் முதலிய அனேக சைவநூல்களைப்பற்றித் தேர்ச்சி பெற்ற அறிஞர்களால் எழுதப்படும் கட்டுரைகளைக்கொண்ட ஒரு மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து சந்தோஷிக்கிறோம்.

அன்பர்கள் எல்லோரும் இவ்வைபவத்துக்கும், மலர்வெளியீட்டுக்கும் உதவி செய்தும், ஒத்துழைத்தும் சைவக்கடவுளாகிய கூத்தப்பிரானின் அருளை அடைந்து எல்லா மேன்மைகளையும் அடைவார்களாக.



ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
**ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள்**

உ

HIS HOLINESS THAVATHIRU

# Sri la Sri Swaminatha Thambiran Swamigal

**NALLAI GNANA SAMBANTHAR AADEENAM**
NALLOOR, JAFFNA.
(Ceylon)

Camp. **நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்,**
179, கோவில் தெரு,
**நல்லூர்,**
6–10–67

ஈழத்தின் சிதம்பரம் என்னும் புகழ் படைத்த சிவாலயமும், இன்னும் பல ஸ்தலங்களும் அமைந்த காரைநகரில், ஆஸ்திகப் பெருமக்களால் அமைக்கப்பட்ட **காரைநகர்ச் சைவ மகாசபை,** தனது பொன் விழாக் கொண்டாடும் அமயம், நினைவுகூரும் முகமாகப் பொன்விழா மலர் தயாரிக்கப்படுவது போற்றத்தக்கது. சிறந்த சைவாபிமானிகளால் நடாத்தப்பட்டுவரும் இச்சபையின் செயற்கரிய சேவைகளை யாமறிவோம்; பங்குபற்றும் வாய்ப்பும் திருவருளால் நமக்கு இடையிடை கிடைத்துள்ளது.

இப் பொன்விழா மலர், சிவமணம் கமழும் மலராகவும், சிவானந்தத் தேனூறும் தெய்வ மலராகவும் மிளிர, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான்**

# YOGA SAMAJ

SRI RAM NAGAR, ADYAR,
MADRAS - 20.

**சைவமகாசபை பொலிக!**

உய்வருள் ஒருவன் எங்கள்
உள்ளத்தான கருணையாலே
பொய்யிருட் பகையொ ழிந்து
புவியெலாம் புதுமை பெற்று
மெய்யருட் பொலிவு சேர
மேதகு புலவர் போற்றும்
சைவமா சபை யிலங்கச்
சதாசிவம் அருளக மாதோ!

வானவளம் பொழிய, மாந்தர்
மங்கல வாழ்வு வாழத்
தேன்வளம் பொழியச் செல்வத்
திருவளம் பொழியக் கலவி
மான்களின் கவிதை பொங்க,
மாசிலா வுலகு போற்ற
நானென உளத்தில் ஆடும்
நாதனிங் கருள்க மாதோ!

அரிய முப்பொரு ளாகிய
[வுண்மையைத

தெரியக் காட்டியிச சீவன் சிவமபெறச்
சரியை யாதிநற் சாதனங் காட்டிடும்
பெரிய சைவம் பெறுகநல வெற்றியே

**சுத்தானந்த பாரதி**
10—8—67

# மகாதேவ ஆஸ்சிரமம்

ஜெயந்திநகர்,
உருத்திரபுரம். (P O)
(இலங்கை )
15—1—67

தமிழுக்கும் சைவத்துக்கும் அளப்பரிய தொணடுகளை இடையறாது ஆற்றிய **காரைநகர்ச் சைவமகா சபைக்கு** ஐம்பது ஆண்டுகள நிறைவுற்றதை அறிநது அகமிக மகிழ்கின்றேம். மனித சமூகம், உய்யும் நெறிககாக உழைத்த, இம் மகா சபையின் வளர்ச்சியைக் கண்டு சைவ சமயத்தவர் அனைவரும் பெருமைப் பட இடமுணடு. இசசபையின் ஆக்க வேலைகளுக்குஉறு துணையாயிருந்து தன்னடக்கத்தோடு அயராது உழைத்த அங்கத்தவர்கள், த ந் நல ம ற் ற சேவைபுரிந்து, அதனால தமது வாழ்வைப் புனிதப்படுத்தியுள்ளார்கள். அவாகளுக்கு எமது அனபு கலந்த ஆசியுரியது. அறிவையும அ ரு ளை யு ம் வளர்கக இத்தகைய பெரிய நிறுவனங்கள பல இன்னும் தோன்ற வேணடும்.இத்தகைய நிறுவனதமதைப் பற்றுக்கோடாகக் கொணடு தமது கருமமனைத்தையும் ஈஸ்வரார்ப்பண மாக்கிப் பணியாற்றுவதன் மூலம் சிதத சுத்தியும், சொல்லும் செயலும் ஒத்ததான உயாந்த உள்ளம் படைத்த கரும வீரர்கள் பலர் தோனறவேணடும். அப்பொழுதுதான் சமயத்தின் உணமையை அறியாது— தம் மதத்தையும, தம் கலைப பணபு களையும தாமே பேணுது தடுமாறும் தமிழினம் தலைதூககக முடியும். இதற்குக் காரைநகாச சைவமகாசபை பன்மடங்கு ஆற்றலுடன் பணியாற்றவேணடும் என்பது எமது பேரவா. சைவ உலகத்துக்கு ஓர் ஒளி விளக்காயப் புதுப் பொலிவுடன் இது பல்லாற்ருனும் வளர்ச்சிபெற்று விளங்கவேண்டுமென்று பரமனருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத்சத் சாந்தி.

**வடிவேல்சுவாமி**

**C. RAJAGOPALACHARI**

5, NAOROJI ROAD,
KILPAUK,
MADRAS-10

*4.4.66*

ஆசிரியர்,
பொன்விழா மலர்,
காரைநகர்ச் சைவமகாசபை,
காரைநகர்.

அன்புடையீர்,

இலங்கை, காரைநகர்ச் சைவமகாசபையில் பணியாற்று பவர்களுக்கு என் வாழ்த்துக்கள். ஐம்பது ஆண்டுகள் முடித்த ஒரு சபையில் வேலை செய்யும் தொண்டர்கள்மிகப் பெரிய பொறுப்பை வகித்து வருகிறார்கள். அவர்களுக்கு ஆண்டவன் அருள் வாருக.

**நாஸ்திகம் மக்களுடைய வாழ்க்கைகளை அடியில் தோண்டி வருகிறது. வெளி வேஷங்கள் மட்டும் இருந்தால் போதாது. உள்ளத்தில் வேர் ஊன்றிய பக்தி இருக்க வேண்டும். அப்போதுதான் நாஸ்திகத்தை எதிர்க்கும் சக்தி நமக்கு உண்டாகும்**

இதுவே என் பணிவு நிறைந்த செய்தி.

**இராஜகோபாலாச்சாரி**

**வெ. இராமலிங்கம்பிள்ளை M L. C.**

அரசவைக் கவிஞர்

**நாமக்கல்,**
சேலம் ஜில்லா,
*14.7.67.*

கொலைகளவு புலையாதி
குற்றமெல்லாம்
கூண்டோடு பூண்டற்றுப்
போகச்செய்தே
அலையாமல் அன்புவழி
அருளைநாடும்
ஆர்வத்தை மேற்கொள்ளும்
அறிவையூட்டும்
தலையாய சன்மார்க்கம்
சைவமாகும்
தரணியிலே முதலுதித்த
சமயம்அஃதே
கலையாத பக்தியொடு
கடைப்பிடித்தால்
கடவுளென்ற மெய்ப்பொருளைக்
காணலாகும் 1

அத்தகைய சைவத்தின்
ஆன்மஞானம்
அனைவருக்கும் உண்டாக்கும்
அறமமேற்கொண்டு
**பந்தைந்து ஆண்டுகள்** நற்
பணிகளாற்றிப்
பார்புகழும் பேர்பெற்ற
**காரைநகர்**
**சக்திமிக்க சைவமகா**
**சபைக்கு**மேலும்
சாதனைகள் கூட்டுமிந்தப்
பொன்விழாவை
வைத்தசிவ பக்தியொடு
வணங்கிநின்று
மனமார மகிழ்ச்சியுடன்
வாழ்த்துகின்றோம். 2.

**வெ. இராமலிங்கன்**

"GIRIJA"
30, Edward Elliot Rd ,
Mylapore, Madras- 4
July 27, 1967

Hon. Editor Golden Jubilee Souvenir,
Karainagar Saiva Maga Sabai,
Karainagar, Ceylon

I am glad to know that your Association has completed fifty years of useful existence. It is my earnest desire that it will grow more useful in the years to come.

Yours sincerely,
**S. Radhakrishnan**

HIGH COMMISSIHNER FOR INDIA IN CEYLON
COLOMBO 3,
*16.4 67*


I am glad to know that Karainagar Saivamaga Sabai is celebrating the completion of its 50 years of useful service in the promotion of religion, culture, prohibition and adult education in Karainagar These are laudable purposes for promoting human happiness. The more we cultivate them, the greater is the scope for developing the finer side of human nature which constitutes the very essence of our being.

I wish the Sabai still greater success in the years to come.

**Bhim Sen Sachar**

உ

# அணிந்துரைகள்



சிவாகமஞானபானு

## அச்சுவேலி, சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

ஆன்மாக்கள் தத்தம் பரிபக்குவத்திற்கேற்ப அறிவு விளக்கம் பெற்று உறுதியெய்தி இன்பவாழ்வு அடைதற்குச் சாதனமாயிருப்பது சமயமேயாம். சமயநெறி நின்று வாழ்வதே உண்மையான வாழ்க்கையெனச் சொல்லப்படும். உலகத்திற் பலப்பல சமயங்கள் உள்ளன. ஒவ்வொருவரும் யாதேனுமொரு சமயத்தில் நின்று அச்சமய நெறிபற்றி யொழுகல் வேண்டும். சமய அறிவில்லாதபோது வேறெந்த அறிவினாலும் மனம் சாந்தியடையாது.

சைவம் என்பது சிவசம்பந்தம் உடையது; சிவனாற் செய்யப்பட்டது; சிவனைத் தெய்வமாகவுடையது எனப் பொருள்படும். சிவம் என்பது மங்களம். தானும் மங்கல முடையதாயிருந்து தன்னை யடைந்த ஆன்மாக்களுக்கு மங்களத்தை விளைவிப்பது சிவம். சைவசமயமே மங்கள முடையது. மற்றைச் சமயங்கள் அசைவம். அவைகளாற் பயனின்றோ எனின்; அவற்றின் தாரதம்மியத்திற்கேற்பப் பயன்களுமுண்டு. சைவத்தின் மேற் சமயம் வேறில்லை. அது அதீத சமயம். வைதிக சைவத்துக்குச் சமயங்கள் அனைத்தும் அங்கங்கள். அதுவொன்றே அங்கியாகி இராசாங்கத்தமர்ந்து விளங்குவதாம். ''அயர்வறச் சென்னியில் வைத்து இராசாங்கத் தமர்ந்தது வைதிகசைவம்'' ''சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத் தக்கநெறி யிந்நெறியேதான் சன்மார்க்கம்'' எனத் தாயுமான சுவாமிகள் அறுதியிட்டுரைத்தருளினர். ''சைவமே பரமதர்மம், அதுவே அநுட்டிக் கற்பாலது. அச்சிவதருமத்தாலேயே முத்திப் பேறளிப்பவர் சிவபெருமான். ''அறுசமயத்திற்கடந்த சைவத்தினன்றி வீடிலது'' என்பது கந்தபுராணம்.

ஒவ்வொரு சமயமும் ஒவ்வோருண்மையை அறிவிக்கும். இவைகள் கூறாத உண்மைகளையுங் கூறி முழுமுதலாய் விளங்குவது சைவசமயம். ஒவ்வோருண்மை காணப்படுவது பற்றிச் சமயங்கள் யாவும் ஒன்றேயென்றுவது, எல்லாவுண்மையுங் கொண்ட சைவத்தோடு ஒப்பாவன என்றுவது கூறுவது தவறு. ஏனைச் சமயங்கள் சோபான முறையில் அமைவனவாகவுள்ளன. ஆன்மாவை உடன்படாத சமயம், பந்தங்களை உடன்படாத சமயம், பசுக்களைக் கடவுளாகக் கொள்ளும் சமயம் முதலிய சமயங்கள் தம்முள் மாறுபடுவனவும் வேறுபடுவனவுமாய் உயிர்களின் பக்குவபேதம் பற்றி அமைந்துள்ளன என்ற உண்மையை ஞான நூல்கள் நிலைநிறுத்தும். ''அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்'' எனவும்,

> யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே
> மாதொரு பாகனார்தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்
> வேதனைப் படுமிறக்கும் மேல்வினையுஞ் செய்யும்
> ஆதலா லிவையிலாதா னறிந்தருள் செய்வ னன்றே

எனவும் அருணந்திசிவாசாரியார் கூறியருளினர்.

''சோபான பட்சங் காட்டி'', ''நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காணநிற்பது'' என்பன தாயுமான சுவாமிகளின் அமுத மொழிகள்.

சமயாதீதமாகிய சைவம் சித்தாந்தம் எனப்படும். சித்தாந்தம் என்பது முடிந்த முடிபு எனப் பொருள் தரும். அந்தம் – முடிபு. சித்தம் – சித்தித்தது. அஃதாவது கிடைத்தது. ஆகவே, ஆராய்ச்சி அநுபூதி என்னும் இரண்டினாலும் நமக்குக் கிடைத்ததாகிய முடிந்த முடிபு என்பதாம். ஆகவே, அதனை மறுத்துக் கூறுவது யாதுமில்லை என்பது பெறப்பட்டது ''சித்தாந்தமே சித்தாந்தம்;அவைக்கு வேறானவை பூருவபக்ஷங்கள்'' என்று இரத்தினத்திரயத்திற் கூறப்பட்டது.

சித்தாந்த சைவத்தை மேற்கொண்டவர் வேதம் சிவாகமம் என்பவற்றில் கூறப்பட்டதற்குச் சிறிதும் மாறுபாடின்றிப் பதி பசு பாசம் என்னும் மூன்று பொருள்களின் தடத்த சொரூப லட்சணங்களைக் கொள்வர்.

> "பலகலை யாகம வேதம் யாவையினுங் கருத்துப்
> பதிபசு பாசந் தெரித்தல்"

என்று அருளிச் செய்தனர் உமாபதி சிவாசாரிய சுவாமிகள்.

> "சான்றவ ராய்ந்திடத் தக்க வாம்பொருள்
> மூன்றுள மறையெலா மொழிய நின்றன
> ஆன்றதோர் தொல்பதி யாரு யிர்த்தொகை
> வான்றிகழ் தளையென வகுப்ப ரன்னவே"

என்று கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும் கூறியருளினர். இங்கே பதி யென்றது முழுமுதற் பொருளாகிய சிவபெருமான். ஆருயிர்த்தொகை யென்றது பசு. தளை என்றது பாசம். பாசத்தைவிட்டுப் பசுக்கள் பதியினை அடைவதே முத்தியாகும். இதனை,

> படிக்கு நூல்கள் சிவாகமம் பசுபாசமோடு பதித்திறம்
> எடுத்தியம் புவதீசன் வார்கழல் ஏந்திடுந் தொழிலென்றுமே
> விடுத்திடும் பொருள் காமமாதிகள் வேண்டிடும் பொருளீண்டருள்
> முடித்து மும்மலம்விட்டு நின்மலனோடு நின்றிடன் முத்தியே

என்பதனாலும் அறிக.

இச்சித்தாந்த சன்மார்க்க நெறியின் வளர்ச்சிப் பொருட்டுப் பெரியோர்கள் அக்காலத்தில் தோற்றுவித்த சைவச்சபைகளுள் **காரை நகர்ச் சைவமகாசபையு** மொன்றாகும். அது, தான் தோன்றிய காலந் தொடங்கிப் பல சைவப்பணிகளை ஆற்றி வருகின்றது. இந்தச் சைவமகா சபையின் பொன்விழா மலரைப் பார்த்த அளவிலே இதனை வெளியிடும் அன்பர்களது சைவாபிமானத்தையும், அதனாலுந்தப்பெற்று மேற்கொண்ட முயற்சியையும் பாராட்டாதிருக்க முடியவில்லை.

இம்மலரில் வரும் கட்டுரைகளை எழுதியவர்கள் தமிழகத்திலும் நமது நாட்டிலுமுள்ள **சிறந்த அறிஞர்களென மதிக்கப்** பெறுபவர்**கள்**. கட்டுரைகள் வேதங்கள் ஆகமங்கள் பற்றியனவும், தோத்திர சாத்திர அருநூல்கள்பற்றியனவும், பிறவுமாய்ப் பயன்தரும் பலதிறத்தன.

இம்மலர், தேசம் மொழி என்பவற்றின் முன்னேற்றங்கருதிய பெரியோர்களது வாழ்த்துரை பெற்றதேயன்றிச் **சமயப் பெருந்தலைவர் களது** ஆசியும் பெற்ற சிறப்பினையுடையதாய்ப் பொலிந்திலங்குகின்றது. **இதுவரை வெளிவந்த மலர்களுள் முதலிடம் பெறும் இம்மலர், சைவாபி மானிகள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய அருமையுடையது.** அன்பர்கள் இம்மலரைப் பெற்றுப் படித்து இன்புற வேண்டுகின்றோம். சிவபெருமான் திருவருள் முன்னிற்பதாக.

## மட்டக்களப்பு, பண்டிதர் ஆ. சபாபதி

(முன்னாள் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்)

பூமாதர் நடமாடு பூமா தியாழ்ப்பாணம்
புகழ்நிலவு தீப கற்பம்
பொலிவுறக் காரைநகர் வளர்சைவ மாசபைப்
பொன்விழா பூத்த வின்பத்
தேமா பலாகதலி தெங்குநுங் கிக்கிளநீர்
தேனொடு திராக்ஷை பால்கள்
தெரிந்தெடுத் தின்புட னருந்திடக் கவின்நிலவு
தீந்தமிழ்க் கட்டு ரைகளைத்
தாமே தமக்குநிக ரானபே ரறிஞர்கள்
சகலதுறை போந்த வர்தரத்
தலைசிறந் திடுராத கிருட்டின னிராஜாஜி
சாற்றிடும் வாழ்த்து களுடன்
நாமும் படித்துரைக டருகெனப் பெற்றனம்
நல்லமுதெ னச்சு வைத்தேம்
நறுந்தமிழ்க் கார்பொழிந் திடுசைவ மழையென
நயந்தனம் வாழி வாழி.

---

**பூமாதர்:** சரஸ்வதி, இலக்ஷ்மி. இவர் தரும் கல்வியையும் செல்வத்தையுங் குறிப்பது.

**பூமாது:** பூமி

**நுங்கிக்கிளநீர்:** நுங்கு, இக்கு, இளநீர் என்று பிரிக்குக. இக்கு=கரும்பு.

**பால்கள்:** சிலேடை

# ஸ்ரீ கி. பி. ஹரன்

(பிரதம ஆசிரியர், "ஈழநாடு", யாழ்ப்பாணம்)

பூமகளும் நாமகளும் சிறந்து பொலியும் புண்ணியப் பதி காரை நகர். அங்குள்ள **சைவமகாசபையினர்** ஐம்பது ஆண்டுகளாகத் தொண்டாற்றிப் பொன்விழாக் கொண்டாடுவதுடன், சிவமணமும் தமிழ்மணமும் கமழும் அருமையான ஒரு பொன்விழா மலரினை வெளியிட்டிருப்பது பெருமைக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும். எல்லாம் ஈழத்துச் சிதம்பரத்திலே கோயில்கொண்டுள்ள ஸ்ரீ சுந்தரேசுவரப்பெருமானின் திருவருளே.

இப்போது இந்துசமயம் மிகவும் சீர்குலைந்திருப்பதாக ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகள் வேதனைப்பட்டுக் கூறியிருக்கின்றார்கள். சமூகக்குறைகளை நிறைசெய்யச் சமயம் வழிகாட்டுமாயின் அந்தச்சமயத்தையும் தாம் ஆதரிப்பதாகத் தமிழக முதலமைச்சர் அண்ணாத்துரை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சமூகக் குறைகளை நீக்கி, சீவனைச் சிவமாக்கும் புனிதப் பணியைச் செய்வதே சைவ ஸ்தாபனங்களின் பெரு நோக்கமாகும். பற்பல சரித்திர காரணங்களால் சைவ ஸ்தாபனங்கள் பலவும் இந்த மேலாய நோக்கத்தினை இதுவரை நிறைவேற்ற முடியவில்லை. பல சோதனைகளுக்கும் தப்பி இந்த ஸ்தாபனங்கள் இன்னும் உயிருடன் இருப்பதே பெரிய காரியம்.

சைவம் மீண்டும் புத்துயிர் பெற்று இலங்கவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்துக்களாகப் பிறந்துள்ளவர்களில் பலருக்கே சமய நம்பிக்கையும் தெய்வ பக்தியும் குறைந்துவிட்டன. காரணம், அன்றாட வாழ்விலே சமயமும் சமய ஸ்தாபனங்களும் தங்கள் குறைகளை நீக்க எவ்வித உதவியும் செய்யாதிருப்பதுதான். பலன் கண்டால் அமோகமான ஆதரவு கிடைப்பதுடன், சமய நம்பிக்கையும் அநுஷ்டானமும் கூடும்.

சிவம் என்றால் அன்பு. ஆருயிர்கட்கெல்லாம் அன்புப்பணி புரிவதே சைவ ஸ்தாபனங்களின் உயரிய நோக்கம். இந்த நோக்கப்படி எமது சமய ஸ்தாபனங்கள் எவ்வளவு தூரம் இன்று இயங்குகின்றன? சென்னை முதலமைச்சரின் பேச்சு சைவ ஸ்தாபனங்களுக்கும் தலைவர்களுக்கும் விடுத்துள்ள ஒரு சவாலாகும். சமூகக் குறைகளை நிறைசெய்யவும், ஆங்காங்கேயுள்ள மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய உதவிகளை எப்படிச் செய்யலாமென்பதையும் சைவஸ்தாபனங்களும், தலைவர்களும் சிந்தனை செய்து கூடுமானதைச் செய்ய இனி முற்பட இது ஒரு நல்ல தூண்டுகோலாக இருக்கவேண்டும்.

ஈழத்துச் சிதம்பரத்திலே அன்னதானம் முதலிய பல அன்புப் பணிகள் நடக்கின்றன. இன்னும் செய்யவேண்டியவை பலவுண்டு. பல சைவப் பெரியோர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட காரைநகர்ச் சைவ மகாசபை, இவை குறித்து இனி நன்றாக ஆராய்ந்து வேண்டுவன செய்ய முன்வரின் சைவ உலகினுக்கே அது மேலான முன்மாதிரியாக இருக்கும். அங்ஙனம் செய்யவும், மேன்மைகொள் சைவ நீதி ஈழத்தில் மட்டுமன்றி உலகெலாம் விளங்கவும் இச் சைவமகாசபை சைவப்பெருமக்களின் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற எல்லாம்வல்ல திருவருள் துணை நிற்குமாக!

மிகச் சிறப்பாகப் பொன்விழாவினைக் கொண்டாடும் காரை நகர்ச் சைவமகாசபை, இச் சிவப்பணியை இனி நன்கு நிறைவேற்ற இப் பெருவிழா நல்லதோர் வாய்ப்பாக அமையுமென்பதே என் நம்பிக்கையும் பிரார்த்தனையும்.

# காரைநகர்ச் சைவமகாசபை வரலாறு

இற்றைக்கு ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன், நமது கிராமத்தவரும் சிறந்த சைவாபிமானியுமாகிய **திரு. க. கதிரவேலு** அவர்கள், தமது உள்ளத்தில் எழுந்த பேரார்வத்தினால், திருவாளர்கள் **மு. திசைநாயகம், இ. நாகலிங்கம், ஆ. முருகேசு, இ. கந்தையா, ஆ. ச. கதிரைவேல், வே. தம்பி ஐயா, அ. சின்னத்தம்பி, க. நவரத்தினம்,** பிரமஸ்ரீ **கா. சி. மஹேசசர்மா** முதலானவர்களை ஒன்றுகூட்டிச் சமூகத் தொண்டு செய்யத் தொடங்கினார்கள். இவர்களது பெரு முயற்சியால் ஆனந்த வருஷம் பங்குனி மாதம் 2ஆம் திகதி **(15.3.1915)** ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில், திரு. மு. திசைநாயகம் அவர்கள் தலைமையிற் கூடிய கூட்டத்தில் நடைபெற்ற பேச்சுக்களின் பின், **'காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம்'** என்ற பெயருடன் ஒரு சங்கம் ஆரம்பமானது. நமது கிராமத்து மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றமடையச் செய்வதே அப்போது அச் சங்கத்தின் நோக்கமாக இருந்தது.

மேற்படி சங்கம் தனது நோக்கத்திற்கமைய மாணவர்களைச் சேர்த்து, சமயம், தமிழ்மொழி என்பனவற்றையும், பிற பாடங்களையும் போதித்து வந்தது. இதற்கு இளைஞர்களும் மற்றையோரும் ஆதரவுகாட்டி வந்தனர். இதனால் ஊக்கமடைந்த அங்கத்தவர்கள், குறித்த சங்கத்தை ஒரு பெரும் சங்கமாக்கும் நோக்கத்துடன், மேற்படி சங்கத்தின் பெயரை, **'காரை இந்து வாலிப சங்கம்'** என்று 1918ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் மாற்றினார்கள். பின்வருவோர் காரிய நிருவாக சபையினராகத் தெரிவுசெய்யப்பெற்றனர்.

| | |
|---|---|
| தலைவர்: | திரு. பொ. வேலுப்பிள்ளை அவர்கள் |
| உப தலைவர்கள்: | திரு. மு. திசைநாயகம் அவர்கள் |
| | திரு. ஐ. ஆறுமுகம் அவர்கள் |
| | பிரமஸ்ரீ ச. பஞ்சாட்சர ஐயர் அவர்கள் |
| காரியதரிசி: | திரு. இ. நாகலிங்கம் அவர்கள் |
| உப காரியதரிசி: | திரு. இ. கந்தையா அவர்கள் |
| தனாதிகாரி: | திரு. ஆ. ச. கதிரைவேல் அவர்கள் |
| உப தனாதிகாரி: | திரு. க. நமசிவாயம் அவர்கள் |
| கல்வி விருத்திக் காரியதரிசி: | திரு. சு. இராமநாதன் அவர்கள் |
| கல்வி விருத்தி உப காரியதரிசி: | திரு. சி. வே. தம்பிஐயா அவர்கள் |
| நிருவாகசபை அங்கத்தவர்கள்: | திரு. வே. சபாபதி அவர்கள் |
| | பிரமஸ்ரீ கா. சி. மஹேசசர்மா அவர்கள் |

இச் சங்கமானது சமயப் பிரசங்கங்கள் செய்வித்தும், சமய வகுப்புக்கள் நடத்தியும் சமயத்தை வளர்த்துவந்தது. அக்காலத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாசாலைத் (காரை இந்துக் கல்லூரி) தலைமை ஆசிரியராயிருந்த **பிரமஸ்ரீ ஈ. கே. சுப்பிரமணிய ஐயர்** அவர்கள் சமய

வகுப்புக்களை நடத்திவந்தார்கள். பிரமஸ்ரீ ச. பஞ்சாட்சர ஐயர் அவர்களும் **திரு. மு. திசைநாயகம்** அவர்களும் இவருக்கு உதவியாக இருந்தார்கள். இவ்வாறாக 'இந்து வாலிப சங்கம்' சிறப்பாக நடந்து வந்ததால் கிராமத்தின் மத்தியான ஓர் இடத்தில், சங்கத்துக்குச் சொந்தக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு நிருவாகசபையார் விரும்பினர். அதன்படி இப்போது கட்டடம் இருக்கும் இடமான பூதனைடைப்பு என்னும் காணியில், இரண்டு பரப்பு நிலத்தை, அதன் சொந்தக்காரர் **திருமதி வே. வள்ளியம்மையிடம்** நன்கொடையாகப் பெறுவதற்குக் காலஞ்சென்ற திரு. இ. நாகலிங்கம் அவர்களின் பெருமுயற்சியால் ஓர் உடன்படிக்கை செய்து, சித்தார்த்தி வருஷம் ஆடி மாதம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபையினர் அத்திவாரம் இட்டனர். அங்கத்தவர்களதும் பிறரதும் பொருளுதவி கொண்டு ஒரு சிறு கட்டடம் உருவாகியது. புதுக் கட்டடப் பிரவேசம் 1921ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் நடந்தது. சில மாதங்களின் பின் ஒரு நூல்நிலையம் தொடங்கப்பட்டுப் பலரும் வந்து வாசித்துப் பயனடையும் தன்மை உண்டானது.

இவ்விதமாக வளர்ந்து வந்த வாலிபர் சங்கமானது, 1924ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி சேர். வை. துரைசுவாமி அவர்கள் தலைமையில் ஒன்பதாவது வருஷாந்தக் கூட்டத்தை நடத்தியது. அக் கூட்டத்தில் பிரசங்கஞ் செய்த ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா அவர்கள், இளைஞர் முதியோர் என்ற பாகுபாடின்றி யாவரும் பயனடையவும் தொண்டு செய்யவுங் கூடியதாக, **'இந்து வாலிபர் சங்கம்'** என்ற பெயரைச் **'சைவ மகாசபை'** என மாற்றுவதன் நன்மையைக் கூறினார்கள். அவர் கூற்றுப்படி பெயர்மாற்றம் நிகழ்வதாயிற்று. சபையில் பெரிய கூட்டங்கள் நடத்துவதற்கும் தேசிய வகுப்புக்கள் வைப்பதற்குமாகப் பெரிய மண்டபம் ஒன்று தேவைப்பட்டது. அதனை இரத்தாட்சி வருஷம் கார்த்திகை மாதம் 27ஆம் திகதி (12-12-1924) கட்டி முடித்தனர். அதற்கு ரூபா ஆயிரம் வரையிற் செலவாகியது. ஷிவகுப்புக்களை நடாத்த ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டார். 1925ஆம் ஆண்டில் சபையின் பத்தாவது வருடாந்தக் கூட்டம் சேர். பொன். இராமநாதன் அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

தொழிற் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக, நெசவுப் பாடசாலையொன்றை நடத்தும் பொருட்டுக் காரை மலாய ஐக்கிய சங்கத்தினர் சபைக்கு 1200 ரூபா நன்கொடையாகக் கொடுத்தார்கள். சபையில் இடவசதி இல்லாதபடியால் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை மனேஜர் திரு. இ. நாகலிங்கம் அவர்கள், தமது பாடசாலையில், சபை ஆதரவில், நெசவு வகுப்பொன்றை இரண்டு ஆண்டுகள் நடத்திய பின் தமது சொந்தப் பொறுப்பில் சில ஆண்டுகள் நடத்தினார்கள். பின்னர் பணமுடை காரணமாக இம் முயற்சி கைவிடப்பட்டது.

இச்சபையின் அங்கமாக வியாவிற் கடற்கரையில் ஒரு மடாலயம் கட்டுவதற்குத் தேவையான முயற்சிகள் செய்யப்பெற்று, ருதிரோற்காரி வருஷம் சித்திரை மாதம் 11ஆம் திகதி மடாலயக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டது. இம்மடாலயம் சம்பந்தமான வேலைகளைக் கருங்காலி பலுகாடு என்னும் குறிச்சிகளிலுள்ளவர்கள் செய்யச் சம்மதித்திருந்தனர். இம்மடாலயத்தில் ஒரு சைவ ஆசாரியரைக் குடியிருத்தவும், புத்தகசாலை நடத்தவும், பிரசங்கம் முதலானவை செய்யவும் சபையினர் எண்ணியிருந்தனர். மடாலயம் தொடங்கிய நிலம் **திரு. அ. இராமநாதன்** அவர்களால், 6.5.1923இல், நொத்தாரிசு திரு. அ. கனகசபை முகதாவில், 237ஆம் இலக்கத்தில் முடிந்த உறுதியினால் சபைக்குத் தருமசாதனஞ் செய்யப்பட்டது. சபைக் கட்டடமுள்ள நிலமும் 1936ஆம் ஆண்டு மார்கழி மாதம் 10ஆம் திகதி திரு. **வே. கந்தசாமி** அவர்களிடம் 500 ரூபா விலைக்கு அறுதிவாங்கப்பட்டது.

சபைக் காரியாலயமும் மண்டபமும் பழுதுற்றிருந்தமையால் பலவசதிகளும் பொருந்திய ஒரு மண்டபத்தைக் கட்டுதற்கான முயற்சி தொடங்கப்பட்டது. அப்போதைய நிருவாகசபையார் பெரும் பிரயாசையுடன் நமது கிராமத்திலும், இலங்கையில் பல பாகங்களிலும், மலாயாவிலும் பணம் சேர்த்து 1940ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில், சபையார் அங்கீகரித்த மாதிரிப்படி புதிய கட்டடத்திற்குரிய வேலைகளைத் தொடங்கினார்கள். 1941ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வேலை ஒரு அளவுக்கு முடிந்தது. இதற்காகச் செலவழிக்கப்பட்ட பணம் 1700 ரூபாவாகும். இவ்வேலைகள் காரியதரிசி **திரு. இ. அம்பலவாணர்**, தனாதிகாரி **திரு**. சி. **தம்பிப்பிள்ளை** என்போரின் நன்முயற்சியால் நிறைவேற்றப்பட்டன. சபைமண்டபத்தின் நாலுமூலைகளிலுமுள்ளஅறைகளுள் தென்மேற்கு அறை **திரு. ஆ. சங்கரப்பிள்ளை** அவர்களின் உதவியுடன் சபையினராலும், வடமேற்கு அறை **முகாந்திரம் க.** முத்துக்குமாரு அவர்களாலும், தென்கிழக்கு அறை **காரை அபிவிருத்திச் சபையாராலும்**, வடகிழக்கு அறை சபை தொடங்கிய காலத் தலைவர் திரு. மு. **திசைநாயகம்** அவர்கள் நினைவாக, **பிரமஸ்ரீ கா. சி. மகேச சர்மா** திரு. அ. **கணபதிப்பிள்ளை** ஆகியோர் முயற்சியாலும் கட்டுவிக்கப் பட்டன.

சபைக் கட்டட நிலத்துக்கு முன்புறமாக இருந்த சிறுதுண்டு நிலத்தை மலாய் நாட்டில் வைத்திய கலாநிதியாக விளங்கும் நமது கிராமத்தவர் **திரு. ச. கணபதிப்பிள்ளை** அவர்கள் 1300 ரூபாவுக்கு வாங்கி 5.3.1953இல்,சபைக்குநன்கொடையாகஅளித்திருக்கின்றார்கள். அவர்களது செயல் நம்மவருக்கு முன்மாதிரியாக அமையும் என எதிர்பார்க்கின்றோம். கட்டடத்தில் எஞ்சியிருந்த வேலைகளை முடித்து அழகு செய்த காரை இந்துக்கல்லூரி அதிபர் **திரு. ஆ. தியாகராசா** M. A., M. Lit அவர்களுக்கும், ஆசிரியர் **திரு. மு. ஆ. கந்தையா** அவர்களுக்கும், **திரு. ச. நல்லதம்பி**

(சம்பந்தர் கண்டி) அவர்களுக்கும் சபை கடமைப்பட்டுள்ளது. இவர்கள் பிறருடைய உதவியோடு இவ்வேலைகளைச் செய்து ஒப்பேற்றினுலும் அன்ஞரின் பிரயாசை மெச்சத்தக்கது. கிழக்கு வாயிற்கதவு வேலைகள் பூச்சு வேலைகளை, நிருவாகசபையார், அபிமானிகளிடம் சேர்த்துக்கொடுத்த 3000ரூபா உதவியுடன் செய்வித்தவர் திரு. மு. கு. சுப்பிரமணியம் அவர்களாவர். ஷெட்தொகையில் 1000 ரூபா உதவிய பெருமை **திரு. ச. வே. பொ. சீவரத்தினம் அவர்களைச்** சாரும்.

1955ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி, S. 102ஆம் இலக்கத்தில் பொது ஸ்தாபனச் சட்டத்தின்கீழ் சபை பதிவுசெய்யப்பட்டது. இதற்கான வேலைகளைச் செய்து ஒப்பேற்றியவர் கொழும்பு, காரை அபிவிருத்திச் சபைத் தலைவரும் நியாயவாதியுமாகிய **திரு. வே. தில்லைநாதன்** B.A. அவர்களாவர். மலசலகூடம் கட்டுதற்கு வேண்டிய பணமுதவியும், கட்டட வேலைகளைச் செய்வித்தும் நிறைவேற்றியவர்கள் **திரு. க. பரமநாதர்** அவர்களும் **திரு. சோ. அம்பலவாணர்** அவர்களுமாவர்.

காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் **திரு. க. சிவகுருநாதர்** அவர்கள் ஞாபகமாக, அவர்களது மகன் **திரு. க. சி. நடராசா** அவர்களின் நன்கொடைப் பணத்திஞல், 1965ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி தொடக்கம் வாரந்தோறும் தேவாரவகுப்பு நடைபெற்று வருகின்றது. அவர்களது பரோபகாரசீலம் மதிக்கத்தக்கதொன்று.

''திசைநாயகம் ஞாபகச்சின்ன'' அறை, பூசை அறையாக இருக்கின்றது. அங்கு வெள்ளிக்கிழமை தோறும் பூசை, செபம், தியானம் முதலியன நடைபெறுகின்றன. இதிற்பலர் ஈடுபட்டு நன்மை பெறுகின்ருர்கள்.

நமது சபைக்காரியங்கள் நன்மையாக நடக்கவேண்டும் என்ற விருப்பத்திஞல் காலத்துக்குக் காலம் புத்திகூறியும் பொருளுதவி செய்தும் வருகின்ற **காரை அபிவிருத்திச் சபையாருக்கு** (கொழும்பு) எமது நன்றியுரியதாகுக. **திரு. வை. சுந்தரமூர்த்தி** அவர்கள் **சர்வோதய இயக்க மூலம்** சபையைப் பெரும் மத்திய நிலையமாக்கவும், காரைநகருக்கான சகல காரியங்களையும் பொறுப்பேற்றுச் செய்யும் வல்லமையுள்ளதாக்கவும் பாடுபட்டு வருகிருர்கள். இவர்களது முயற்சிகள் விரைவில் ஒப்பேறவேண்டும் என விரும்புகின்ரேம். இந்தவிஷயஞ் சம்பந்தமாக, திருவாளர்கள் ச. வைத்திலிங்கம் வே. கந்தையா என்பவர்கள் சபையின் பதிஞெராம் வருஷாந்தக் கூட்டத்தில் ஒருதீர்மானம் நிறைவேற்றிஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காரை மலாய ஐக்கிய சங்கம், சபையின் இளமைக்காலந்தொட்டுச் சபையைக் கண்காணித்துக் காலத்துக்குக் காலம் வேண்டிய பொருளுதவிகள் செய்து வருகின்றது. அதன் அங்கத்தவர்கள் இங்கு வரும்போது,

சபை வேலைகளைக் கவனித்து ஊக்கப்படுத்தி உறுதியுரைகள் கூறித் தளர விடாது செல்கின்றனர். அவர்களுக்கு எப்போதும் சபை கடமைப்பட்டுள்ளது.

இச் சைவமகாசபையானது அரைநூற்றுண்டுக் காலத்தில், இடையூறுகளைத் தாண்டி வளர்ச்சி பெற்றமை, இதனைத் தொடங்கிய பெரியார்களது மனத்தில் இடம்பெற்றுள்ள நற்சிந்தனையாலும், கடவுள் அருளாலுமேயாம்.

இச்சபையில் தங்கி நிரந்தரமாயிருந்து சேவைசெய்யத்தக்க பாதுகாவலர் அவசியம் வேண்டப்படுவர். அங்கத்தவர்களும் தருமசீலர்களும் இதற்கானவன செய்வார்களாக. பாதுகாவலர் தங்கியிருத்தற்குச் சமையலறை வசதியுடன் கூடிய ஒரு சிறு கட்டடம் அமைப்பித்து உதவுவதாகத் தமது பெயர் வெளிவருதலை விரும்பாத பேரன்பரொருவர் வாக்களித்து 1000 ரூபா முற்பணமாக உதவியுள்ளார். அவர் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றேம்.

## சபைத் தொண்டுகள்

1. **நூல்நிலையம்:-** 1926ஆம் ஆண்டில் 347 தமிழ்ப்புத்தகங்களும் 279 ஆங்கிலப் புத்தகங்களும் இருந்தன. அந்த ஆண்டில் மாத்திரம் 126 புத்தகங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. 13 பத்திரிகைகளும் வரவழைக்கப்பட்டன.

2. **சமயப்பணி:-** ஆரம்பகாலந்தொட்டுச் சமய வகுப்புகளும் சமய பாடப் பரீட்சைகளும் நடைபெற்று வந்தன. 1926ஆம் 1927ஆம் ஆண்டுகளில் பெருந்தொகையான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். சிவஞானசித்தியார் வகுப்பு பரமேஸ்வரக் கல்லூரி உப அதிபர் திரு. மு. ஞானப்பிரகாசம் B. A., B. Sc. அவர்களால் நடாத்தப்பட்டது. அவர்களுக்குச் சபையாரின் நன்றி உரித்தாகுக. ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்களால் தமிழ்ப் பாலபண்டித வகுப்பு 1935ஆம் 1936ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்டது. பலர் அவ்வகுப்பில் கற்றுப் பயனடைந்தனர். இவர்களால் இவ்வாண்டுகளுக்கு முன்னும் பின்னும் தமிழ் இலக்கண இலக்கிய வகுப்புக்கள் நடத்தப்பட்டனவென்பது குறிப்பிடத்தக்கது.

3. **பிரசுரங்கள்:-** Our young men and their Calture, நரகசதுர்த்தசி ஸ்நானம், திருமுறைப் பெருமை, நித்தியகருமம், நடராஜவடிவம், தில்லைத்திருநடனம், குருகுலவித்தியாலயம், மஹோற்சவவிளக்கம், புதுவருஷ சோபனம், திருவெம்பாவை விளக்கம் என்பன சபையாரால் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டன.

---

ஆரம்ப அங்கத்தவர்களுள், திருவாளர்கள் இ. கந்தையா, ஆ.ச. கதிரைவேல், அ. சின்னத்தம்பி, க. நவரத்தினம் என்போர் ஜீவவந்தர்களாக இருக்கின்ருர்கள். இப்பெரியார்களுக்கு எமது வணக்கம் உரித்தாகுக.

# காரைநகர்
# சைவமகாசபையின் போஷகர்கள் நாமாவலி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திரு | க. முத்துக்குமாரு | அவர்கள் | × |
| 2 | ,, | ஆ. சங்கரப்பிள்ளை | ,, | × |
| 3 | ,, | ச. நல்லதம்பி | ,, | |
| 4 | ,, | ந. நடராசா K. C. | ,, | × |
| 5 | ,, | அ. நாகலிங்கம் | ,, | |
| 6 | ,, | ச. வைத்தியலிங்கம் | ,, | × |
| 7 | ,, | இ. அம்பலவாணர் | ,, | |
| 8 | ,, | பொ.வே.வைத்தியலிங்கம் | ,, | |
| 9 | ,, | V. முருகேசு | ,, | × |
| 10 | டாக்டர் | S. கணபதிப்பிள்ளை | ,, | (மலாயா) |
| 11 | திரு, | அ. தங்கவேலு | ,, | × |
| 12 | ,, | கு. சங்கரப்பிள்ளை | ,, | × |
| 13 | ,, | சி. ச. குமாரசாமிப்பிள்ளை | ,, | (யாழ்ப்பாணம்) |
| 14 | ,, | அ. கந்தையா | ,, | × |
| 15 | ,, | மு. கு. சுப்பிரமணியம் | ,, | |
| 16 | ,, | மு. சிவபாதம் | ,, | × |
| 17 | ,, | வே. கணபதிப்பிள்ளை | ,, | |
| 18 | ,, | க. சி. நடராசா | ,, | 65 |
| 19 | ,, | சு. செல்லையா | ,, | (மலாயா) |
| 20 | ,, | சி. கனகசபை J. P. | ,, | (யாழ்ப்பாணம்) |
| 21 | திருமதி | தங்கம்மா நடராசா | ,, | 66 |
| 22 | திரு. | ஆ. தியாகராசா M. A. | ,, | |
| 23 | ,, | வீ. வன்னியசிங்கம் B. A. | ,, | |
| 24 | ,, | மா.வைத்தியநாதன் B.A. | ,, | |
| 25 | ,, | க. பரமநாதர் | ,, | |
| 26 | ,, | சோ. அம்பலவாணர் | ,, | |
| 27 | ,, | இ. வே. கந்தையா | ,, | (மலாயா) |
| 28 | ,, | ஆ. பரஞ்சோதி | ,, | 67 (மலாயா) |
| 29 | ,, | அ. சிவபாதம் | ,, | |

### கௌரவ அங்கத்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீமத் சி.சுப்பிரமணிய தேசிகர் | அவர்கள் | |
| 2 | பிரமஸ்ரீ கா. சி. மஹேசசர்மா | ,, | × |

### சீவிய அங்கத்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. | சி. ஆ. கணபதிப்பிள்ளை | அவர்கள் |
| 2 | ,, | ச. அருணசலம்பிள்ளை | ,, |
| 3 | ,, | சோ. சின்னத்தம்பி | ,, |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ,, | நா பொன்னம்பலம் | ,, | × |
| 5 | ,, | வே. அருணாசலம்பிள்ளை | ,, | |
| 6 | ,, | K. பொன்னையா | ,, | |
| 7 | ,, | A. T. ஆறுமுகம் | ,, | × |
| 8 | ,, | அ. சண்முகம் | ,, | × |
| 9 | ,, | க. கதிரவேலு | ,, | × |
| 10 | ,, | மா. பரமநாதர் | ,, | × |
| 11 | ,, | ச. அப்பாத்துரை | ,, | × |
| 12 | ,, | ச. சுப்பிரமணியம் | ,, | |
| 13 | ,, | பொ. செல்லப்பா | ,, | × |
| 14 | ,, | A. மாரிமுத்து | ,, | × |
| 15 | டாக்டர் | S. சுப்பிரமணியம் | ,, | × |
| 16 | திரு. | K. A. செல்லையாபிள்ளை | ,, | |
| 17 | ,, | C.S K. நமசிவாயம் செட்டியார் | ,, | × |
| 18 | ,, | இ. வை. பொன்னம்பலம் | ,, | |
| 19 | ,, | K. E. சின்னத்துரை | ,, | |
| 20 | ,, | சி. க. ஆ. கதிரவேலு | ,, | |
| 21 | ,, | மு. வைத்தியலிங்கம் | ,, | |
| 22 | ,, | அ. தேவராசா | ,, | |
| 23 | ,, | அ. கனகசபை | ,, | |
| 24 | ,, | ச. அருணாசலம் | ,, | |
| 25 | ,, | K. K. சுப்பிரமணியம் | ,, | × |
| 26 | ,, | S. K. முருகேசு | ,, | |
| 27 | ,, | V. நாகலிங்கம் | ,, | × |
| 28 | ,, | P. M. சங்கரப்பிள்ளை | ,, | (வட்டுக்கோட்டை) |
| 29 | ,, | சி. நவரத்தினம் | ,, | |
| 30 | ,, | க. செல்லையா | ,, | |
| 31 | ,, | ஆ. கோவிந்தபிள்ளை | ,, | |
| 32 | ,, | இ. ஆ. கந்தையா | ,, | |
| 33 | ,, | E. V. கார்த்திகேசு | ,, | |
| 34 | ,, | K. வேலுப்பிள்ளை | ,, | |
| 35 | ,, | S. R. கந்தையா | ,, | |
| 36 | ,, | மு. இரத்தினராசா | ,, | |
| 37 | ,, | S. R. ஆறுமுகம் | ,, | |
| 38 | ,, | A. V. அருளம்பலம் | ,, | |
| 39 | ,, | இ. நாகலிங்கம் | ,, | |
| 40 | ,, | S. துரைசாமி | ,, | |
| 41 | ,, | S. சிவயோகம் | ,, | |

| | | | | |
|---|---|---|---|---|
| 42 | திரு. | சி. இ. செல்லத்துரை | அவர்கள் | |
| 43 | ,, | K. A. கனகசபை | ,, | × |
| 44 | ,, | A. நல்லதம்பி | ,, | |
| 45 | ,, | S. ஆறுமுகம் | ,, | |
| 46 | ,, | V. செல்லையா | ,, | |
| 47 | ,, | வை. சுந்தரமூர்த்தி | ,, | |
| 48 | ,, | அ. மு. தில்லைநாதன் | ,, | |
| 49 | ,, | அ. கணபதிப்பிள்ளை | ,, | |
| 50 | ,, | பொ. பாலசுப்பிரமணியம் | ,, | |
| 51 | ,, | மு. சபாபதிப்பிள்ளை | ,, | |
| 52 | ,, | ச. அம்பலவாணர் | ,, | |
| 53 | டாக்டர் | P. சிவசோதி | ,, | |
| 54 | திரு. | பொ. ஆறுமுகம் | ,, | |
| 55 | ,, | அ. சுப்பிரமணியம் | ,, | |
| 56 | ,, | வே. த. ஆ. அருணாசலம் | ,, | |
| 57 | ,, | சு. சிங்காரவடிவேலு | ,, | × |
| 58 | ,, | அ. வ. பொன்னுத்துரை | ,, | |
| 59 | ,, | வே. நாகலிங்கம் | ,, | |
| 60 | ,, | க. கோவிந்தபிள்ளை | ,, | × |
| 61 | ,, | வே. கந்தையா | ,, | × |
| 62 | ,, | இ. சுப்பிரமணியம் | ,, | |
| 63 | ,, | வே. இராமலிங்கம் | ,, | |
| 64 | ,, | மு. ஆ. கந்தையா | ,, | |
| 65 | ,, | க. பத்மநாதன் | ,, | 66 |
| 66 | ,, | ச. பாலசுப்பிரமணியம் | ,, | |
| 67 | ,, | S M. கனகரத்தினம் | ,, | |
| 68 | ,, | N. சிவகுரு | ,, | |
| 69 | ,, | மு. பொன்னுத்துரை | ,, | |
| 70 | ,, | சி. முத்தையா | ,, | |
| 71 | ,, | K. ஆறுமுகம் | ,, | |
| 72 | ,, | V. M. சண்முகம் | ,, | |
| 73 | ,, | த. கந்தமூர்த்தி | ,, | |
| 74 | ,, | சி. சுப்பிரமணியம் | ,, | |
| 75 | ,, | செ. கனகசபை | ,, | |
| 76 | ,, | ச. க. முருகேசு | ,, | |
| 77 | ,, | K. R. ஹரிஹரசாஸ்திரிகள் | ,, | |
| 78 | ,, | K. நவரத்தினம் | ,, | |
| 79 | ,, | ஆ. முருகேசு | ,, | |
| 80 | ,, | க. வைத்தியலிங்கம் | ,, | (ஊர்காவற்றுறை) |
| 81 | ,, | க. ஆறுமுகம் | ,, | 67 |
| 82 | ,, | வ. பொன்னுத்துரை | ,, | |
| 83 | ,, | த. பூபாலசிங்கம் | ,, | |
| 84 | ,, | சோ. திருச்சிற்றம்பலம் B.A. | ,, | |
| 85 | ,, | அ. இராசையா | ,, | |

× இவ்வுடையாளருடையோர் சிவபதமடைந்தவர்கள்.

# கடந்தகால உத்தியோகஸ்தர்கள் 1915 - 1965

| | தலைவர்கள் | செயலாளர்கள் | தனாதிகாரிகள் |
|---|---|---|---|
| 1 | திரு. மு. திசைநாயகம் | திரு. இ. நாகலிங்கம் | திரு. ஆ. ச. கதிரைவேல் |
| 2 | ,, பொ. வேலுப்பிள்ளை 11ஆண்டு | ,, வி. அ. நாகலிங்கம் | ,, கு செல்லையா |
| 3 | ,, வீ. நமசிவாயம் | ,, மு. பொன்னம்பலவாணர் | ,, இ. கந்தையா |
| 4 | ,, ச. கணபதிப்பிள்ளை | ,, இ. அம்பலவாணர் | ,, வே. சுப்பிரமணியம் J. P. |
| 5 | ,, க. முத்துக்குமாரு 10ஆண்டு | ,, ச. ஆறுமுகம் | ,, சி. தம்பிப்பிள்ளை |
| 6 | ,, ச. நல்லதம்பி | ,, அ. தேவராசா | ,, மு. வைத்தியலிங்கம் |
| 7 | ,, A. V. குலசிங்கம் | ,, மு. அம்பலவாணர் | ,, ஆ. அம்பலவாணர் |
| 8 | ,, சி. சுப்பிரமணிய தேசிகர் | ,, பொ. நவரத்தினம் M. A. | ,, அ. கணபதிப்பிள்ளை |
| 9 | ,, இ. நாகலிங்கம் | ,, அ. நாகலிங்கம் | |
| 10 | ,, அ. கணபதிப்பிள்ளை | ,, ச. சுந்தரம்பிள்ளை | |
| 11 | ,, மு. ஆ. கந்தையா | ,, கா. நடராசா | |

# சபைக்கு வருகை தந்து சொற்பொழிவாற்றிய பெரியார்கள்.

1 சேர் வை. துரைசுவாமி (1924)
2 ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா
3 ,, சுவாமி சதானந்தா
4 ,, சுவாமி சர்வானந்தா
5 மகாத்மா காந்தியடிகள்
6 ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார்
7 பண்டித ஜவஹர்லால் நேரு
8 ஸ்ரீமதி கமலா நேரு
9 ,, இந்திரா காந்தி
10 ,, கமலாதேவி சட்டோபாத்தியாய
11 சுவாமி சச்சிதானந்த ராஜயோகிகள் (சங்கரசுப்பையர்)
12 ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள்
13 ,, நாகலிங்க சுவாமிகள்
14 திரு. சத்தியமூர்த்தி
15 சாத்தூர் வழக்கறிஞர், திரு. தூ. ச. கந்தசாமி
16 டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை
17 கோவை, ஸ்ரீ. சுப்பிரமணிய முதலியார் [சம்பந்த சரணாலயத் தம்பிரான்)
18 கோவை, ஸ்ரீ. எம். இராமச்சந்திரன் செட்டியார்
19 தூத்துக்குடி, சைவத்திருவாளர் ந. சிவகுருநாதபிள்ளை
20 ஸ்ரீ. ச. சச்சிதானந்தம்பிள்ளை
21 சித்தாந்த சரபம் ஈசானசிவாச்சாரியார்
22 பெருஞ்சொற் கொண்டல் சு. முருகேச முதலியார்
23 திரு. அ. ச. ஞானசம்பந்தன்
24 திருப்புகழ்மணி ரி. எம். கிருஷ்ணசுவாமி ஐயர்
25 சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
26 மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார்
27 பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண பாரதியார்
28 பண்டிதர் வே. மகாலிங்கசிவம்
29 டாக்டர் ஜே. சி. குமரப்பா
30 திரு. சு. நடேசபிள்ளை
31 கௌரவ வி. வி. கிரி
32 கௌரவ எம். எஸ். ஆனே
33 சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேலு முதலியார்
34 திரு. ஈ. டபிள்யூ. அரியநாயகம்
35 திரு. மு. ஞானப்பிரகாசம்
36 வித்துவான் கி. வா. ஜகந்நாதன்
37 பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
38 டாக்டர் பீம்சேன் சச்சார் (1966)



**சுவாமிகளின் அருள் மொழிகள்**

1 ஒரு பொல்லாப்பு மில்லை.

2. எப்பவோமுடிந்தகாரியம்.

3. யாமறியோம்.

4. முழுது முண்மை.

# ஸ்ரீமத். சிவயோகநாத சுவாமிகள்

**பண்டித, வித்துவான் க. கி. நடராஜன் B. O. L., Dip-Ed.**

யாழ்ப்பாணஞ் செய்த — ஏன் ஈழஞ்செய்த – இருந்தவப்பயனுக வந்தவதரித்தவர் ஸ்ரீமத். யோகசுவாமிகள். கொழும்புத்துறையில் அம்பலவாணர் என்னும் அருங்குணப் பெரியாருக்குச் சின்னுச்சியம்மையார் திருவயிற்றிற் பிறந்த சீர்சால் பெரியார் இவர். கற்பன கற்று உத்தியோகமும் பெற்று வாழ்ந்தவர். ஆயின், கருவிலே திருவடைந்த திருவருட்செல்வர் உத்தியோகத்தைத் துறந்தார்; உலகப்பற்றையும் விடுத்தார்; நல்லூரில் சீவன்முத்தராய் விளங்கிய செல்லப்ப சுவாமிகளின் சீடரானுர்; துறவு வாழ்க்கையை மேற்கொண்டொழுகினுர். மிக்க இளம் பிராயத்திலிருந்தே சுவாமிகளின் அடியானுக வாழும்பேறு எனக்குக் கிடைத்தது. யான் அறிந்த அக்காலத்திலிருந்தே அவர்தம் நரைத்த சடையும், நளினமலர் போன்ற நயனங்களும், சிரித்தவிதழும் திருமுகச் செவ்வியும் என் நெஞ்சைவிட்டகலாது என்றும் நிலைத்தன.

''கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்
வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல் — திருத்தலத்தில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடா நீ யென்றுன் அவன்'' என்று

தமது குருநாதரைச் சந்தித்தமையைச் சுவாமிகள் மிக உருக்கமாகப் பாடுதல் காண்க. அக்குருபரன் சிரித்துக்கொண்டே, ''தீரடா பற்றென்றுன்'' என்றும், தமக்கு அவர் நல்லூரிற் பட்டமளித்தாரென்றும், ''வாழ்வளிக்கச் சற்குருவாய்த் தாள்காட்டி யாண்டான் தனி'' என்றுங் கூறுதலையெல்லாஞ் சுவாமிகள் பாடியருளிய நற்சிந்தனைப் பாடல்களிற் காண்கின்றேம்.

சுவாமிகள் ஈழநாடு வாழவந்த சிவஞானி. இல்லை, உலகம் வாழ வந்த உத்தமர். இருடிகள், முனிவர், சித்தர்கள் என்றெல்லாம் யாம் நூல்

களிற் படித்திருக்கிறேம்; கேள்விப்பட்டுமிருக்கிறேம். ஆயின், ஈழநாட்டினராகிய யாம், எம் தவப்பேற்றினுல் நேரிற் கண்ட இருடியும் முனிவருமாக விளங்கியவர் ஸ்ரீமத். யோகசுவாமிகளே. சுவாமிகளின் உயர்ந்த வேதாந்த உண்மைகளையோ வேதாந்த சித்தாந்த சமரசப் போதனைகளையோ அறிந்து, அவரைப் பின்பற்றி வழிபட்டோர் சிலரே. அவரிடம் சென்ருல் சில அற்புதங்களைப் பெறலாம், அரிய சித்திகளைப் பெறலாம் என்று கருதிச் சென்றேருஞ் சிலர் இருந்தார்கள். அவர் அற்புதங்களை மதித்தவருமல்லர்; அவற்றைச் செய்யக் கருதியவருமல்லர்; வளையாத கருங்கல்லை வளைத்தாற்போலத் தம்மிடஞ் சென்ற அன்பர்களின் உள்ளங்களை வாக்காலும் நோக்காலும் பரிசத்தாலும் குழையச் செய்யும் பேரருள்வாய்ந்தவர்; திருவருள்நெறியில் திளைக்கச்செய்த சீலர். அவரை அண்மியமையால், அவர்தம் அரிய போதனைகளைக் கேட்டு ஒழுகியமையால் உய்திபெற்றுயர்ந்தோர் எண்ணுக்கடங்காதோர் இந்நாட்டி லுள்ளார்கள். கொழும்புத்துறை முனிவராகிய இப்பெருமானுல் நம்நாடு எத்தனையோ வகையில் உய்திபெற்றது. மலையில்லாத யாழ்ப்பாணத்தில் ஒரு ஞானமலையாக விளங்கியவர் அவர். அஞ்ஞான இருள் நீக்கும் ஒரு ஞானதீபமாக விளங்கியவர் அவர்.

கந்தை மிகையாங் கருத்தொடு கூடிய தூய துறவு இன்னதென்பதைக் காட்டியவர் அவர். கருத்திற் கடவுளும் கையிற் பணியுமாகக் கொண்டு பலன் கருதாது பணிசெய்வதைக் காட்டிய பரமர் அவர். பார்த்தவிட மெல்லாம் பரமனையே காண்பதெப்படி என்பதைக் காட்டித் தரும் பெரியார் அவர். பதார்த்தங்களூடாகப் பரனைக் காட்டும் பண்பினையே எஞ்ஞான்றும் அவரிடம் காணலாம். அருள் என்பது பொங்கித் ததும்பிப் பூரணமாய் விளங்குந் தோற்றம் அவரது திருத்தோற்றம். புறத்தே வைபவர் போலவும் சீறுபவர் போலவும் சிலகாலங்களில் கடிந்து கொள்ளும் அவர்தம் அகத்தே அருள் ததும்புவதை அறிந்தோர் அறிவர்.

அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய நற்சிந்தனைச் செய்யுள்கள் நமக்கெல்லாம் கலங்கரை விளக்கம்போல் வழிகாட்டி நிற்கின்றன. சிவதொண்டன் நிலையங்கள் யாழ்ப்பாணத்திலும் செங்கலடியிலும் அவர் காட்டிய மோனஞானப் பூசையை நினைவூட்டிக்கொண்டு விளங்குகின்றன. அவர்காட்டிய உழவைப்போற்றும் உத்தம வாழ்வுக்குச் சான்ருகச் செங்கலடியிலுள்ள சிவதொண்டன் நெல்வயல்கள் மிளிர்கின்றன. ஞானதீபமாகச் சிவதொண்டன் திங்கள் இதழ் விளங்குகின்றது. அவர்தம் திருச்சமாதி தொண்டர்கள் வழிபடுந் திருக்கோயிலாக அமைந்து திகழ்கின்றது. அவர் எம்மை விட்டு மறையவில்லை. எம்முடன் கூடவிருந்து எமக்கு வழிகாட்டி வருகின்ருர் என்னும் உணர்ச்சி எமக்கு என்றும் உண்டாகின்றது. அவர்கள் பெருமை விரிப்பிற் பெருகும் என்றஞ்சி இவ்வளவில் இம்மலருக் கமையச் சுருக்கிச் சொன்னும்.

"தரையில்மெய்ஞ் ஞான வின்பப் பிரமமாங் கடலி னுள்ளே
யொருவன துள்ள மொன்றி யொடுங்குமே லவனைப் பெற்றேர்
பெரியபே றெல்லாம் பெற்ருர்; பேணுமுக் குலமுந் தூய்தாம்;
பொருவிலா னிருந்த தேயம் புண்ணிய பூமி தானே"

— சிவப்பிரகாசப் பெருந்திரட்டு

சிவயோகநாதன் திருவடி வாழ்க.

# திரு. இ. நாகலிங்கம் அவர்கள்

சைவப்பெரியார் திரு. இ. நாகலிங்கம் அவர்கள், உயர் குணமும்,பரம்பரை பரம்பரையாக மக்களுக்குத் தொண்டு செய்யும் நற்பண்புமுள்ள உடையார் திரு. இராமலிங்கம் அவர்களது மகனுவர்.

திரு. நாகலிங்கம் அவர்கள், யாழ்ப்பாணக் கல்லூரியிற் கல்வி பயின்ற பின்னர், சென்னையில் உயர்தரக் கல்வி கற்ருர். மாணிக்கவாசகர் குதிரை வாங்கப்போய்க் கோயில் கட்டியதுபோல, இவரும் சென்னையில் கல்வி கற்கும் காலத்தில் அன்னிபெசன்ற்,ஜவஹர்லால்நேரு,காந்தியடிகள், பண்டித மாளவியா முதலிய இந்தியப் பெரியார்களது போதனைகளாலும் சாதனைகளாலும் கவரப்பட்டுத் தேசசேவை செய்வதே மேலான தொண்டென உணர்ந்தார்.

1915ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய இவர், காரைநகரில் ''இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம்'' ஒன்றை நிறுவி, அதன்மூலம் தேசத் தொண்டு செய்ய முன்வந்தார். இச்சங்கமே இப்போது '**சைவ மகாசபை**' என உயர்ந்த சபையாக விளங்குவது. இவர் இச் சபையின் உயிர் நாடியாக இருந்து அயராது உழைத்தார். மகாத்மாகாந்தி, ஜவஹர் லால் நேரு, இராஜகோபாலாச்சாரியார், கமலாதேவி, இராமநாதன் போன்ற பல உலகப் பெரியார்களைச் சபைக்கு வரவழைத்துச் சபையின் கௌரவத்தை உயரச் செய்தார். நெசவு தொழிலைச் சபைமூலம் செய்ய ஆரம்பித்தார். மதுபான ஒழிப்பு இயக்க வேலையிலீடுபட்டுப் பலரது ஆதரவுடன் எமது கிராமத்தில் மதுபானம் இல்லாதுசெய்து வெற்றியடைந்தார்.

வியாவிலில் உள்ள சைவப் பாடசாலையின் க்ஷீணித்த நிலையைக்கண்டு அதைப் பொறுப்பேற்ருர். அதற்குப் புதிய கட்டடங்களை அமைத்து, அதனை ஒரு முன்மாதிரியான சைவப்பாடசாலையாக நடாத்தினுர். இப்பாடசாலைக்குப் பக்கத்தில், வியாவிற் சமுத்திர தீர்த்தக்கரையோரமாக ஒரு மடாலயத்தையும் அமைக்க முயன்ருர்.

கருங்காலி முருகமூர்த்தி ஆலயத் தர்மகர்த்தாவாக இருந்து நிர்வாகத்தையும் வழிபாட்டு முறையையும் சீரிய முறையில் நடாத்தினுர்.

இவர் அணியும் கதர் வேட்டி, கதர்க் குல்லாய், கதர் அங்க வஸ்திரம் என்பன பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தின.

# திரு. மு. திசைநாயகம் [காசிப்பிள்ளை] அவர்கள்.

பிரமஸ்ரீ கா. சி. மஹேசசர்மா F. R. A. S.
திரு. அ. கணபதிப்பிள்ளை R. M. P.
காரைநகர்.

பெரியோர் சிறியோர், கற்றோர் கல்லாதோர் முதலான யாவராலும் **பிறக்கிராசி காசிப்பிள்ளை** என்று அன்புடன் அழைக்கப்பெற்று வந்தவராகிய திரு. முருகேசர் திசைநாயகம் அவர்கள், எமதூராகிய காரைநகரில், தங்கோடை என்னுங் குறிச்சியில், 1857ஆம் ஆண்டு பிறந்தவர்கள்.

இவர், உரிய காலத்தில் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று, கொழும்பு றேயல் அக்கடமியிற் (Royal Accademy) கல்வி கற்று வந்தார். அங்கு கல்வி கற்றபோது, ஜோகலே மாணவர் பண உதவிப் பரிசைப் (Geogerly Scholar) பெற்ற பெருமையினையுடையவர். பின்பு சட்டக் கல்லூரியிற் கற்று வழக்கறிஞரானார். சட்டக் கல்லூரியிற் கற்றபோது, தமது வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை இவர் எமக்குச் சொல்லியதுண்டு. அச்சம்பவம் இது:-

திரு. திசைநாயகம் அவர்களுக்குப்பின், சட்டக் கல்லூரியிற் சேர்ந்து படித்துவந்த ஒருவருடைய பிதா, ஆங்கில அறிவில்லாத ஒரு கமக்காரர். அவர், தம்முடைய மகனுக்குத் தேவையான ஒரு சட்டப் புத்தகம் திரு. திசைநாயகம் அவர்களிடம் இருப்பதை அறிந்து. அப் புத்தகத்தை விலைக்குத் தரும்படி இப்பெரியாரைக் கேட்டார். இவர், ஆறு ரூபாவுக்கு வாங்கிய புத்தகத்தைப் பன்னிரண்டு ரூபாவுக்கு விற்று, பணத்தை வாங்கி மேசையில் வைத்துவிட்டு, வெளியே போய்விட்டார். சிறிது நேரத்தின்பின் திரும்பிவந்து பார்த்தபோது, மேசையின்மேல் ஆறு ரூபா மாத்திரம் இருப்பதைக் கண்டார். மிகுதி ஆறு ரூபாவையும் வேறு யாரோ எடுத்துக் கொண்டுபோய்விட்டதையும் உணர்ந்தார்.

இந்தச் சம்பவம் தமது வாழ்க்கையில் ஒரு புதிய – நல்ல திருப்பத்தை ஏற்படுத்திவிட்டதென்றும், கஷ்டங்கள் கடலைப்போல வந்தாலும் நேர்மை தவறாமல், உண்மை நெறியினின்றும் பிறழாமல் நடப்பதென்று தாம் அன்றே தீர்மானித்துவிட்டதாகவும் இவர் எமக்குக் கூறியதுமன்றி, மரணபரியந்தம் வரையும் அவ்வாறே நடந்தும் வந்திருக்கிறார். நிற்க.

சட்டப் பரீட்சையில் தேறிய இவர், கொழும்பில் பெரும் புகழ் பெற்று விளங்கிய அப்புக்காத்து திரு. டோன் ஹோஸ்ற் (I Dornhorst K. C.) அவர்களிடம் நியாய நூல் சம்பந்தமான பயிற்சிபெற்ற பின்னர், யாழ்ப்பாணக் கோடுகளில் தமது தொழிலை நடாத்திவந்தார்.

இவர், விரிந்த அறிவும் பரந்த நோக்கமும் உடையவர்; ஆசிய அறிவியல் வளர்ச்சிக் கழகம் (Royal Asiatic society) வரலாற்றுக் கழகம் (Royal Historical Society) ஆகிய இரு சபைகளிலும் அங்கத்துவம் பெற்றிருந்தார். தருக்கம், இலக்கியம், சரித்திரம், வான சாஸ்திரம் முதலிய

வைகளில் நிபுணராய் விளங்கியதுமன்றி, அவை சம்பந்தமான பல சங் கங்களிலும் அங்கத்தவராகவும் இருந்தார்.

இவர் பிழையைக் கண்டவிடத்து முகம் பாராது கண்டிக்கும் சுபாவமுடையவர்.

வான சாஸ்திர, சோதிட சாஸ்திரங்களில் வல்லுநராக இருந்த இவர், காலாந்தரத்திலேற்பட்ட கிரக சலன பேதங்களை இந்தியர் திருத் தாமையினால், வருடப் பிறப்பு, உத்தராயனம், தட்சிணாயனம் முதலி யன அகாலங்களிற் கொள்ளப்படுகின்றன வென்றும், அவைகள் திருத் தப்படவேண்டுமென்றும் சொல்லிவந்தார். இவர், அக்காலத்திற் சொல் லிய திருத்தங்களையெல்லாம் இந்திய அரசினர் 1957 ஆம் ஆண்டிற்றான் சட்டமூலம் அனுசரிக்கத்தொடங்கினர்.

நம்மூர் வாசியும் முதன்முதல் இலங்கையில் வான சாஸ்திரம் சம்பந்தமான எவ். ஆர். ஏ. எஸ். (F. R. A. S.) என்னும் பட்டத்தைப் பெற்றவருமாகிய திரு. அல்லின் ஏபிரகாம் அவர்களை, இப்பட்டத்தைப் பெறுவதற்கு ஊக்குவித்து வழிகாட்டியவரும் திரு. திசைநாயகம் அவர் களே.

பரீட்சைகளுக்கு ஆயத்தஞ் செய்வோர் அநேகர், பிற ஊர் களிலிருந்தும் இவரிடம் வந்து, சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து போவதை நாங்கள் கண்டிருக்கிறோம். விசேஷமாக, தருக்க சாஸ்திர பாடத்தில் இவரது அபிப்பிராயத்தை இவருடைய ஆப்த நண்பர்களான திரு. சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்களும் திரு. நெவின்ஸ் செல்லத் துரை B. A. அவர்களும் அறியும் வழக்கமுடையவர்கள்.

இவர், சைவசமத்தில் நிரம்பிய பற்றுடையவர்; பாடினால் வெகு தூரத்துக்குக் கேட்கக்கூடிய. இனிமையான குரலுடையவர். இவருக்கு ஞாபகசக்தி மிக அதிகம். இவர், வைகறை நேரங்களில் படுக்கையிலி ருந்துகொண்டே பாடும்போது அயலவர்கள் கேட்டு அனுபவித்துக் கொண்டிருப்பார்களாம். கந்தபுராணத்தில், மன்மதன் வதைப் பட லத்தை முதற் பாட்டிலிருந்து கடைசிவரையும் பாடும்போது கேட்டுக் கொண்டிருக்கும் நாங்கள் பரவசமடைந்து விடுவோம்.

இப்பெரியார், காரைநகர்ச் சைவமகாசபையின் முதல் அக்கிரா சனாதிபதியாக இருந்து, அதன் விருத்திக் கேற்ற கருமங்களை ஆர்வத்தோடு செய்து வந்தார்.

பினாங் (Penang) கதிரவேலு என்றும், பிறவுண் (Brown) கதிர வேலு என்றும் அழைக்கப்பட்டுவந்த, பிரபல தோட்டச் சொந்தக்காரர் (Planter) இவரோடு கூடப்பிறந்த சகோதரர் ஆவர்.

கண்டி தர்மராஜக் கல்லூரி முன்னை நாள் தமிழ் விரிவுரையாள ரும், பாடநூல்களின் ஆசிரியருமாகிய திரு. வே. கணபதிப்பிள்ளை அவர் கள் இவரது மருகர் ஆவர்.

இவர் தமது வாழ்நாள் முழுவதும் பல்லோரும் புகழ, குன் றின்மேலிட்ட தீபம் போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தார்.

---

# "அவர்களுக்குப் பிறகு அருணசலந்தான்"

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —

ஒருசமயம், நாவலர் அவர்களின் தமையனார் புத்திரரும், யாழ்ப்பாணத்து நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மானேஜரும் ஆகிய ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள் மேற்கண்டவாறு சொன்னார்கள். 'அவர்கள்' என்று அவர்கள் சொல்லுவது நாவலர் அவர்களை.

ஆறுமுக நாவலர் அவர்களுக்குப் பிறகு ஷெ பிள்ளை அவர்களும், சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களும் தமிழை அபிவிருத்தி செய்வதற்கும், சைவத்தை ஒரு அளவுக்கேனும் பாதுகாப்பதற்கும் வெகுதூரம் பிரயத்தனம் செய்தார்கள். அவர்கள் பிரயத்தனம் அவர்கள் எண்ணியவாறு அநுகூலப்படவில்லை. அக்காலம் ஆங்கில மோகம் ஆகாயத்தை அளாவி, அண்ட முகட்டுக்கு அப்பாலேயும் போய்க்கொண்டிருந்தது.

1917ஆம் ஆண்டு கார்த்திகை மாசம் 'இந்துசாதன'த்தில் ஒரு விளம்பரம் வந்தது. பிள்ளை அவர்களும் புலவர் அவர்களும் சேர்ந்து செய்த விளம்பரம் அது நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒரு காவிய வகுப்பு உண்டியும் உறையுளும் பிறவும் உதவி இலவசமாக நடத்தப்படுமென்றிருந்தது. என்னையுள்ளிட்டுப் பதினெண்மர் அவ் வகுப்பிற் சேருதற்குச் சென்றோம்.

புலவர் அவர்கள் நேர்முகப்பரீக்ஷை நடத்தினார்கள். பக்கத்தில் மானேஜர் த. கை. பிள்ளை அவர்கள் இருக்கிறார்கள். என்முறை வந்தது. நான் போய் அவர்கள் முன்னிலையில் நிமிர்ந்தேன். எனக்குப் பதினெட்டு வயசு முடிந்து, அடுத்த வயசு நடக்கின்றது. பத்து வயசுக்குமேல் பள்ளிக்கூடப் பயிற்சிவாசனை கிடையாது. இடையிடையே திண்ணைப் பள்ளிக்கூடங்களிற் போய் நித்திரை தூங்குவதுண்டு. காகித ஆட்டங்கள் வேறு சூதுகளிலேதான் எனக்குப் போதிய பயிற்சி. இப்படிப்பட்ட என்னைப் புலவர் அவர்கள் சில கேள்விகள் கேட்டுவிட்டு, இறுதியில், 'கிறிஸ்தவ பள்ளியிற் படித்ததோ' என்று கேட்டார்கள். நான் 'ஆம்' என்று சிறிதும் கூசாமற் சொன்னேன். புலவர் அவர்கள் மானேஜர் அவர்களைத் திரும்பிப் பார்த்தார்கள், அவ்வளவுதான்.

என்னை அப் பரீக்ஷைக்குக் கொண்டு செலுத்தியவர்கள், நாவலர் அவர்களுக்கும், அவர்கள் மருகர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளைக்கும் மாணவராகிய, உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களின் இளைய புத்திரரும், காரைநகர் இந்துக்கல்லூரி முன்னைநாள் ஆசிரியரும்,

அப்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிற் படித்துக்கொண்டிருந் தவருமாகிய திரு. நடராஜா அவர்கள். திரு. நடராஜா அங்கே நடந் தவைகளைக் கவனித்துவிட்டு, அவர்களைத் தனிமையிற் கண்டு வெகு பரிதாபகரமான வேண்டுதல் செய்தார். ஆறுமாசம் வைத்துப் பார்த்து முடிவு சொல்லுவதாக எனக்கு உத்தரவு கிடைத்தது.

அடுத்த நாளே, அரிவரியிலிருந்து பாடம் ஆரம்பமாயிற்று. ஆறு மாசத்துக்கிடையில், என்னுடன் சேர்ந்தவர்களிற் பலர், ''இந்தப் படிப்பு வயிற்றுப் பிழைப்புக் குதவுமா'' என்று சொல்லிக்கொண்டு மெல்ல மெல்லக் கழன்று விட்டார்கள். ஒரு வருஷத்தில் விபூதிக்குரியவர்கள் எல்லாருமே போய்விட்டார்கள். நான் ஒருவன் மாத்திரம் தனித்து எஞ்சியிருந்தேன்.

ஒருநாள் புத்தம் புதிய மனிதர் ஒருவர் என் முன்னிலையிற் தோன்றினார். பொதுவான கரிய நிறம், மெலிந்து வரண்ட தேகம், வறுமை யில் அடிபட்டதற்கு அறிகுறிபோன்ற தோற் சுருக்குகள், முதுகோடு ஒட்டிய சுருங்கின வயிறு, சிந்தனை தேங்கிய முகம், நிலத்தை நோக்கிய பார்வை, தலை முண்டிதம், மயிர் முளையாத வழுக்கையல்ல, ஒரு துண்டி னால் போர்த்தியிருந்தார். கக்கத்திற் காகிதச் சுருள்கள். நான் திடீரென்று எழுந்து நின்றேன். அந்த மனிதர் சொன்னார்:—

''உந்தப் படிப்பு உபயோகப்படவேண்டுமானால், உபாத்தியாயர்ப் பத்திரம் ஒன்று வேண்டும். நீ என்னுடன் வா. உணவு உடையெல்லாம் உதவி, உன்னை ஒரு உபாத்தியாயர் ஆக்கிவைக்கிறேன்''

''இங்கே எல்லா உதவியும் கிடைக்கிறது. நான் இங்கேதானே படிக்கப்போகிறேன். உபாத்தியாயர்ப் படிப்புக்குரிய வல்லமை எனக்கு இல்லை'' என்று சொல்லி நான் மறுத்துவிட்டேன். எவ்வளவோ அந்த மனிதர் முயன்றும் வாய்க்கவில்லை.

''உனக்கு நான் சொல்லுவதொன்றும் விளங்கவில்லைப் பிள்ளை. நன்றாக யோசி'' என்று சொல்லிவிட்டு அந்த மனிதர் போய்விட்டார்.

**அந்தப் புதிய மனிதர் ஆர்?**

அந்தக் காலத்தில் வண்ணார்பண்ணையில் விபூதி விடுகிறவர்கள் விடியமுன் நாலுமணிக்கு எழுந்து, வில்லூன்றிக்கோ, பறைச்சேரி வெளிக்கோ வெளியே போவது வழக்கம். அந்த நேரத்தில் மழைபோலப் பனிபொழியுங் காலமாயிருந்தாலுங்கூட, அந்தமனிதர், அந்தத் துண்டி னாலேதான், தலையையும் மூடிப் போர்த்திக்கொண்டு, பறைச்சேரி வெளித் தெருவிலே, கிழக்குமுகமாக, யாழ்ப்பாணம் நோக்கி, வெகு தூரத்தி லிருந்து நடந்து வருவதை அடிக்கடி நான் காணுவதுண்டு. மனிதரைத் தூரத்தே நான் கண்டதும் மெல்ல விலகிவிடுவேன்.

**அந்த மனிதர் ஆர்?**

புலவர் அவர்கள் புத்தகம் படிப்பிப்பார்கள். மனேஜர் அவர்கள் கதைசொல்லி உலகம் படிப்பிப்பார்கள். இது அவர்கள் வழக்கம். ஒரு நாள்:

''அவர்களுக்குப் பிறகு அருணசலந்தான்' என்று, ஏதோ சந்தர்ப்பத்தில் மானேஜர் அவர்கள் கதைதொடங்கினர்கள். கதை சிறிது வளரத் தொடங்கவே, ''அந்தப் புதிய மனிதர்தான் அருணசலம்'' என்று எனக்குத் தெரிந்துவிட்டது. வெகு உற்சாகமாகக் கதையை உற்றுக் கேட்கத் தொடங்கினேன். கதை முழுவதையும் இங்கே அவிழ்க்க முடியாது. இனிக்கிற பகுதி—இல்லை உயிர் துடிக்கிறபகுதி—இதோ வருகிறது.

ஸ்ரீமாந் அருணசலம் அவர்கள் காரைதீவிற் பிறந்தவர்கள். வானசாஸ்திர மகா பண்டிதரான அலன் ஆபிரகாம் அவர்களுக்கு நெருங்கிய நண்பர்.

அருணசலத்துக்கு ஆங்கிலம் படிக்க வாய்க்கவில்லை. தெல்லிப் பழையில் அமெரிக்கமிஷன் ஆசிரிய கலாசாலையிற் படித்து மூன்ருந் தராதரப்பத்திர வகுப்பிற் சித்தியெய்தினர். இனி இரண்டாந் தராதரப் பத்திர வகுப்பிற் படிக்கவேண்டும். இரண்டிற்கும் இடையில் ஒரு அக்கினி ஆறு. அஃதாவது ஞானஸ்நானம். அது பெற்ருல்தான் அடுத்த வகுப்பிற்கு உயரலாம். இல்லையேல் அவ்வளவில் ஸ்தம்பனம்.

அடுத்த நாள் ஞானஸ்நான தினம். முதனுள் இரவு அருணசலத்துக்கு நித்திரையில்லை. அருணசலம் இருக்கிருர்; நிற்கிருர்; கிடக்கிருர்; நடக்கிருர். அவருடைய ஆத்மா சுழலுகின்றது. நீண்ட யோசனை. கோழி கூவுகின்றது. கோழியுங்கூவ, அருணசலத்தின் திருவுள்ளத்திலும் ஏதோ கூவினது. யோசனை முற்றுப் புள்ளியையடைந்தது. துணிவு பிறந்தது. இன்னும் இருள் விடியவில்லை. அது புறத்திருள். ஆனல், அருணசலத்தின் அகத்திருள் விடிந்தது. அருணசலம் தமது பெட்டியைத் தூக்கினர், மதிலில் ஏறினர்; தெருவிற் குதித்தார். இல்லை! அவர் வெறுந்தெருவிற் குதிக்கவில்லை! சைவ உலகத்திற் குதித்தார்! அருண சலம் குதித்தார்!! அக்கினி ஆற்றை ஒரே தாண்டில் தாண்டினர்! மகான் தாண்டினர்!!

முப்பது வருஷ காலம்; ஊண் இல்லை; உறக்கம் இல்லை; இயக்கம் இல்லை; பெண்டு இல்லை; பிள்ளை இல்லை; எதையும் – யாரையும் – திரும்பிப் பார்க்க நேரமில்லை. தெருத்தெருவாய் – ஊர் ஊராய் – அருணசலம் அலைந்தார். காரைதீவிலிருந்து கொழும்புக்கு, சேர் பொன். அருணசலந் துரையைக் காண, நடந்து போய் நடந்து வந்தார் என்றுகூடக் கதை. ''சைவப் பள்ளிக்கூடங்கள் ஊர் தோறும் கட்டவேண்டும். அதற்கு முன், சைவ உபாத்தியாயர்களை உற்பத்தி செய்யவேண்டும். அப்படியானல், முதலில் சைவர்களுக்கு ஒரு ஆசிரிய கலாசாலை வேண்டும்''. இது அருணசலத்தின் சங்கற்பம்.

**''சைவர்களுக்கு ஒரு ஆசிரிய கலாசாலை வேண்டும்''!**

முப்பது வருஷ முயற்சிக்குப் பிறகு – அருணசலம் அவர்கள் ''ஊழையும் உப்பக்கம்'' கண்டதன் பயனக, அரசாங்கம், 'சைவர்

களுக்கு, ஒரு ஆசிரிய கலாசாலையைத் தனித்து நடத்தப் பரிபக்குவமில்லையே' என்று வெகு காலம் கண்ணீர் வடித்து,

1915ஆம் ஆண்டு வரையில், 'கிறிஸ்தவர்களோடு பங்காளிகளாய்ச் சைவர்களும் நடத்தலாம்' என்று ஒருவாறு இரங்கியது. கத்தோலிக்கர் சேர மறுத்துவிட்டார்கள். ஏனைய கிறிஸ்தமிஷனரிமாரும், சைவர்களின் பிரதிநிதியான அருணசலமுஞ் சேர்ந்து நடத்த முன் வந்தார்கள்.

கோப்பாயில் ஐக்கிய ஆசிரிய போதனுசாலையொன்று தோன்றியது. சைவப் பகுதியை அருணசலம் நடத்த முன்வந்தார்.

மங்கல்ய தாரண தருணம். வாத்தியங்கள் கோஷிக்கின்றன. மாப்பிள்ளையும் எழுந்துவிட்டார். மங்கல்யமும் நல்ல மங்கல்யம். ஒரே ஒரு குறை. மணப்பெண் வரவில்லை. விலக்கு. எப்படியிருக்கிறது திருமண வைபவம்!

அருணசலம் சைவ விடுதியை நடத்த முன்வந்துவிட்டார். எல்லாம் ஆயத்தம். ஒரே ஒரு குறை. விடுதிக்குப் பிள்ளைகள் இல்லை.

அமெரிக்க மிஷன் நடத்தும் கிராமபாடசாலைகளில் ஐந்தாம் வகுப்புக்குமேல் கிடையாது. ஆறும் ஏழாம் எட்டாம் வகுப்புக்கள் தாண்டி, அவற்றுக்குமேல் 'என்றன்ஸ்' (Entrance) வகுப்பிலும் சித்தியெய்தியவர்களே ஆசிரிய கலாசாலைக்குரியவர்கள். அப்படிப்பட்ட பிள்ளைகளே அருணசலம் அவர்களின் விடுதிக்குத் தேவை. பிள்ளைகளுக்கு என்ன செய்வது!

அப்பொழுது சைவப் பள்ளிக்கூடங்கள் வெகு அருமை. நாவலரின் சைவப்பள்ளிக்கூடங்கள் இரண்டே இரண்டு. ஒன்று கோப்பாயிலுள்ளது. மற்றது வண்ணார்பண்ணையிலுள்ளது. அந்தப் பள்ளிக்கூடங்களில், மேல் வகுப்புக்கள்— 'என்றன்ஸ்'வரை வகுப்புக்கள்—நடத்துவதற்கு அருணசலம் முயற்சி செய்தார். அன்றி, குறிப்பிட்ட சில கிறிஸ்தவ பாடசாலைகளில், மேல்வகுப்பிற் படிக்கும் சைவப் பிள்ளைகளை— அஃதாவது ஞானஸ்நானத்துக்கென்று கிறிஸ்தவர்கள் அடைகாக்கும் பிள்ளைகளை — முற்றுக்கையும் இட்டார்.

பிள்ளைகளைத் தேடுவதற்கு மகான் அருணசலம் நாய்படாப் பாடுபட்டார். என்னிற்கூட ஒரு கண் வைத்தவர் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். யாழ்ப்பாணம் முழுவதும் திரிந்தார். வடமாகாணம் எங்கும் அலைந்தார். மட்டக்களப்புக்கு ஓடினார். அங்கும் இங்கும் பெரியவரும், சிறியவர்களுமாகப் பிள்ளைகள் சிலரைச் சேர்த்தார். உண்டி தருவேன்; உடை தருவேன்; புத்தகம் இனும்! என்றெல்லாம் ஆசைகாட்டிச் சேர்த்தார். சேர்த்த பிள்ளைகளைப் போஷிப்பதெப்படி?

அருணாசலம் பெற்ற பிள்ளைகள், தமது தகப்பனுர் தங்கள் சொத்துக்களை, ஊர்தோறும் திரிந்து பெற்ற பிள்ளைகளின் பொருட்டு, விரயஞ் செய்கின்றுர் என்று, கோட்டில் அந்த மகான்மீது வழக்குத் தொடுத்தவர்கள் என்றுகூடக் கேள்வி.

காரைதீவு வாசரும், ஒரு காலத்தில் பிரபல வர்த்தகரும், கப்பல் வைத்திருந்தவரும், மகா பிரபுவும், வள்ளலுமான திரு. வைரமுத்து ஆறுமுகம்பிள்ளை* அவர்கள், அருணாசலமவர்கள் சேர்த்துவரும் பிள்ளைகளுக்கு உண்டி — உடை — உறையுள் உபகரித்து இன்முகங்காட்டி, இன்சொற் பேசி, வலக்கரம் போல உதவினுர்கள்.

அருணாசலம் அவர்களின் ஆசிரியகலாசாலைக் கனவு — அவர்கள் கண்முன்னே நனவானது.

அருணாசலம் அவர்கள் அன்று இட்ட வித்துத்தான், கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையாயும், பிறகு. ஆண், பெண் ஆசிரிய கலாசாலையாயும் கிளைவிட்டிருக்கிறது. அதே வித்துத்தான் சைவ வித்தியா விருத்திச் சங்கமாயும், நூற்றுக்கணக்கான சைவப் பாடசாலைகளாயும் சைவாசிரிய கலாசாலையாயும் பரிணமித்திருக்கிறது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் அதிபரான அப்புக்காத்து, திரு. சு. இராசரத்தினம் அவர்கள், அக்காலத்தில் அருணாசலம் அவர்களின் சைவப் பைத்தியங்களை, இங்கிலிசுப்படுத்திக் கொடுப்பதுண்டு. சங்கதி அதுதான்.

''உனக்கு நான் சொல்லுவதொன்றும் விளங்கவில்லை. உனக்கு ஒரு உபாத்தியாயர்ப் பத்திரம் வேண்டும்'' என்று 1918இல் அருணாசலம் அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். அந்த உபதேசம் பத்து வருஷத்துக்குப் பிறகு என்னிடம் பலித்தது. 1929இல் உபாத்தியாயர்ப் பத்திரத்துடன் வெளிவந்தேன்.

அன்று தொடக்கம் பலவருடங்களாக — சாதாரண பள்ளிக்கூடத்திலல்ல—ஒரு சைவாசிரிய கலாசாலையில் படிப்பித்து வந்தேன். என்னையும் ஒரு ஆசிரியன் என்று சொல்ல வைத்தது இந்த மகான் அன்று ஒருநாள் செய்த உபதேசம்.

ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள், விடியமுன் நாலு மணிக்கு எழுந்து, ஸ்நானஞ் செய்து, சிவபூசை செய்பவர்கள். எழுந்தவுடன் தெருக்கதவைப் போய்த் திறப்பார்கள். திறக்கும்பொழுதெல்லாம் அருணாசலம் அவர்களையே நினைந்துகொண்டு திறப்பதாகச் சொல்லுவார்கள்.

அருணாசலம் அவர்கள் வெகு நேரத்துக்கு முன்னமே, காரைதீவிலிருந்து நடந்து வந்து, தம்முடன் ஏதாவது யோசிப்பதற்கு, கதவு திறக்கும் தருணம் பார்த்து, குந்திக்கொண்டு, பெரும்பாலும் காத்திருப்பார்களாம். நல்லது!

* இப்பெரியாரின் புத்திரர் திரு. கணபதிப்பிள்ளை ஆவர். இவர்கள் இப்பொழுது இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதியில் உயர்தர உத்தியோகஸ்தராக இருந்து வருகிருர்கள்.

சைவ உலகமே, அந்த மகானை நீ நன்றாக மறந்து விட்டாயா! அருணாசலம் அவர்களின் ஞாபகம் எங்கே! சரி நீ நில்.

காரைநகரமே! உனக்கு ஒரு குறையும் இல்லையே! நீ நல்ல செல்வப் பிரபு! உனது கருத்தென்ன!!


உ
சிவமயம்

தம்பி அ. சிவபாதத்துக்கு,

நீ இந்த மீ 10உ எழுதிய கடிதம் பெற்றேன். நான் மிகவும் அசௌக்கியமாயிருக்கிறேன். ஒன்றும் எழுதிக்கொள்ள முடியாது. ஆயினும் ஒன்று சொல்லுகிறேன். உன்னுடைய தகப்பன் எனக்கு நல்ல நண்பன். யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆசிரிய கலாசாலைக்கு முதற் காரணம் ச. அருணாசலமே. பரோபகாரிகளென்று யாழ்ப்பாணத்தில் பிறந்தவருள் இரண்டாவதாக நான் மதித்திருப்பது இவரையே. மூன்றாவதாகச் சொல்வதற்கு ஒருவருமிலர். ஆசிரிய கலாசாலைக்காக தங் காலத்தையும் பொருள்களையும் செலவு செய்து இவர் செய்த முயற்சிகள் மிகப்பல. அப்படிப்பட்ட ஒருவருடைய சரித்திரம் எழுதப்படுதல் நல்லது.

நல்லூர்,
தாதுஸ்ரீ வைகாசி மீ ௬ உ.
19-5-36.

இங்ஙனம்,
த. கைலாசபிள்ளை.



முகாந்திரம் திரு. க. முத்துக்குமாரு.
*(1868 — 1943)*

பத்து ஆண்டுகள் சபைத் தலைவராயிருந்து
தொண்டாற்றிய பெரியார்.



திரு. சி. தம்பிப்பிள்ளை.
*(9.1.1893 — 3.3.1950)*


சபைத் தனாதிகாரியாயிருந்து சபை மண்டபம் அமைப்பதற்குச் சலியாதுழைத்த வீரர்.



**திரு. க. கதிரவேலு J. P.**

*(10.10.1897 — 16.10.1963)*


*1915*இல் காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம்
உண்டாவதற்கு வித்திட்ட தொண்டர்.
இதுவே இப்போதைய சைவமகாசபை.



**பண்டிதர், பிரமஸ்ரீ ச. பஞ்சாட்சரக் குருக்கள்.**


*(20.6.1889 — 8.3.1953)*

பல ஆண்டுகள் உபதலைவர் பதவி வகித்துச்
சபையைச் சிறப்பித்த அறிஞர்.



**பிரமஸ்ரீ கா. சி. மஹேசசர்மா F. R. A. S.**
*(17.5.1892 — 7.12.1965)*

ஆரம்ப அங்கத்தவருள் ஒருவர். பல ஆண்டுகள் நிருவாகசபை உறுப்பினராகவிருந்து சபையை நேரிய வழியில் இயங்கச் செய்த சீலர்.



**திரு. ச. வைத்தியலிங்கம்**
*(6.12.1891 — 25.7.1966)*

சபையில் பேரபிமானமுள்ளவர். பிற பொதுநலப் பணிகளிலும் முன்னின்று உழைத்த பெரியார்.

# தேவர் குறள்

**வித்துவான் கி. வா. ஜகந்நாதன் M. A.**
ஆசிரியர், கலைமகள், சென்னை.

உலகெலாம் போற்ற நின்ற
        ஒருபெரு நூலென் றியாரும்
அலகிலாப் புகழ்சாற் றச்செய்
        அருந்தமிழ் நூலொன் றுண்டு;
நிலையிலா உலகத் தில்வாழ்
        நிறைகுண மக்கள் வாழப்
பலபல நீதி சொல்லும்
        பண்புறு குறள்நூ லாமே.

உள்ளுவார் உள்ளும் உண்மை
        ஓர்ந்துமக் கட்சா திக்குக்
கொள்ளலாம் தகைமை இன்ன,
        கொள்கலா தனவே இன்ன,
நள்ளுமா னிடவர் பூவில்
        நலஅம ரர்க ளாக
விள்ளுவ இவையென் றோதி
        வள்ளுவர் மேன்மை பெற்றார். 2

நூறுநூ றாய கோடி
        நுவல்தரு மக்கள் வாழ்ந்து
பேறுமூ றும்பெற் றேய்ந்த
        பெரும்புவி அவர்தம் உள்ளத்
தூறும் எண்ணம் வாய்ச்சொல்
        உஞற்றிய செய்கை யாவும்
தேறுதல் செய்தார்; வாழும்
        திறமிது வென்று சொன்னார். 3

வானவர் மக்க ளாக
        வருங்கதை புராணம் சொல்லும்
மானவர் அமர ராக
        வளர்திறம் குறளிற் கண்டோம்;
ஞானியர் தம்முள் ஞானி
        நவில் நூற்றுமுப்பான் மூன்றென்
றானநல் லதிகா ரத்துள்
        அமைத்தனர் வாழ்வின் நீதி. 4

இன்னவா றொழுகல் வேண்டும்
எனஅறை தருமச் சான்றோர்
முன்னதா மக்கள் யாரும்
முறையுறத் தெய்வந் தேறி
அன்னவ னடிவ ணங்கி
அன்புசெய் திடுக என்றே
பன்னினன் கடவுள் வாழ்த்துப்
பத்தெனும் குறளா வைத்தான் . 5

உலகுக்கு முதல்வன் ஈசன்;
ஓங்குமன் னோனை எண்ணிக்
குலவுற வாழ்த்தி மெய்யால்
வணங்குதல் கூடின் இங்கே
நலமுறு வாழ்வு வாய்க்கும்;
நண்ணிய பிறவி யாழி
யலைவுறு தினிய வீட்டை
அடையலா மென்றே சொன்னார் 6

இறைவன்வா லறிவன், ஒப்பை
இகந்தவன், வெறுப்பு வேட்கை
பெறலிலான், அறத்தின் ஆழி,
பெருந்தன்மை யுடையா னன்னோன்
திறமுறு புகழே மெய்யாம்;
சிறந்தகல் விப்பேற் றாலே
முறையுற அவனைப் போற்ற
முயலுதல் வேண்டும் என்றார். 7

எண்குணம் உள்ளான்; அன்பர்
எண்ணத்தில் நிற்றற் காக
அண்ணிய உருவம் பூண்பான்;
அவனடி புகலாச் சாரின்
திண்ணிய ராகி ஞாலம்
சேர்தரு பிறப்ப றுத்துப்
புண்ணிய உலகின் மேலாம்
பொற்புவீ டடைவர் என்றார். 8

பிறந்தவர் மீண்டு மிங்கே
பிறவாமை வேண்டல் நன்றாம்;
உறந்தஆ சைவிலங் கால்
உறுமந்தப் பிறவி; ஆசை
சிறந்தமெய் யறிவா லோடும்;
தெய்வத்தின் பற்றி னாலே
செறிந்தபற் றெல்லாம் போகும்;
தெளிகஎன் றுண்மை சொன்னார் . 9

தீயவை செய்தார் துன்பம்
சேர்நர குழல்வார்; நன்மை
ஆயவை புரிந்தார் மேலை
அமருல கடைவார்; பற்றிங்
கோயுமா றறிவு பெற்றார்
உயர்உல கென்றே யோதும்
தூயநல் வீடு பெற்றுத்
துலங்குவார் என்று ரைத்தார். 10

பிறப்புண்டு வினையு முண்டு;
பெரியஅக் கடவு ளுண்டே;
இறப்புண்டு; தெய்வம் ஊழின்
இயல்கண்டு துன்ப இன்பம்
உறப்பண்டை வினைகட் கேற்ப
உறுத்துமால்; எனது யானென்
றிறுக்குமவ் விரண்டு பற்றும்
எரித்தவர் வீட்டைச் சார்வார். 11

உயிருடம் பினிலே நிற்றல்
ஒருபற வைமுட் டைக்குள்
பயில்தர இருத்தல் போலும்;
பாரிலவ் வுடல்விட் டோடல்
இயல்பெற முட்டை நின்றும்
ஏகுதல் போலாம்; அஃது
துயில்பெறல் ஆகும்: சென்மம்
துளங்குற விழித்தல் போலும். 12

கற்றனர் பின்னர் மெய்யாம்
கவின்பொருள் இஃதென் றோர்ந்து
மற்றைய இவையென் றோர்ந்து
மாண்பொரு ளுணர்ந்தால்
[மீண்டும்
உற்றிடு பிறவி சாரார்;
உயர்நிலை யாகும் வீடு
பெற்றினி திருப்பார் என்று
பேசினர் தமிழ்வே தத்தில். 13

இறைவனல் லருளி னாலே
எய்திய பண்பு கூடி
உறையுமெல் லாவு யிர்க்கும்
உளங்கொளும் இரக்கம் பூண்டு
மறையுமிப் பொருள்க ளென்ற
வாய்மையை உணர்ந்து சால்புத்
துறையினில் நிற்றல் வாழும்
தூநெறி என்றார் அன்றே. 14

இல்லறத் தினிலே வாழ்க்கை
யின்றுணை யாகும் இல்லாள்
புல்லுற மக்க ளோடு
போற்றுநல் விருந்தை யோம்பி
நல்லியல் புகளைப் பூண்டு
நானிலம் வாழ்த்த வாழ்வார்
வல்லவர், இன்ப வாழ்வில்
மன்னுவார் என்றார் அன்னோர். 15

மனத்தினால் துறவு பூண்டு
வாஞ்சையை யடக்கி ஓங்கும்
சினத்தினை யோட்டி வாய்மை
தெளிந்துயிர்க் கெல்லாம் நன்மை
நினைத்திடும் அருளைப் பூண்டு
நிலைபெறு பொருளீ தென்றும்
வினைத்திறம் இதுவா மென்றும்
விளங்குறத் துறவோர் நிற்பார். 16

என்னவே சொற்றார் இந்த
எண்ணிலா அறிவுச் சோதி
மன்னிய உலகில் மாந்தர்
வாழுமா றிதுவென் றுன்னிப்
பண்ணிய நூலுக் கீடு
பாரினில் உண்டோ? தேவர்
என்னுநற் பெருமை பெற்ற
வள்ளுவர் இன்பேர் வாழி! 17

# வேதம்

கலாநிதி. கா. கைலாசநாதக்குருக்கள் M. A., Ph. D.
சம்ஸ்கிருத விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்.

வேதம் அறிவுக் கருவூலம். தருமத்தை[1] அறியத்தருவதனுல் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று என்று அறிஞர் கூறுவர்.[2] இவ்வறிவு நூல் எல்லாமாய் அமைந்து மக்களுக்கு வாழ வழி காட்டுவது. இஃது உயரிய குறிக்கோளாகிய வீடு பேற்றினை எய்துவிப்பது; தெய்விகமானது; இறைவனுலேயே அருளிச் செய்யப்பட்டது.

வேதத்தின் சிகரமென விளங்குவன பெருமானின் திருநாமத்தை உருவாக்கும் சிவ என்னும் ஈரெழுத்துக்கள். இவ் வீரெழுத்துக்களால் திருவைந்தெழுத்துக்கள் பொலிந்து விளங்குகின்றன. இவ்வைந்தெழுத்துக்கள் உருத்திராத்தியாயத்தை அணிசெய்கின்றன. இவ்வத்தியாயத்திஞல் யசுர் வேதத்தின் நாலாங்காண்டம் அழகுறுகின்றது. இந் நாலாங் காண்டத்திஞல் யசுர் வேதமே சிறப்படைகின்றது. இருக்கு சாமம் என்னும் இரண்டனின் நடுவே ஒளிரும் இம் மத்திய மணியால் வேதமுழுவதுமே அழகு பொலிந்து விளங்குகின்றது.[3]

வேதம் சைவத்திற்கு அடிப்படைநூல். இதற்குப் பாடிய வடிவில் நின்று பொருளுரைப்பன சிவாகமங்கள்.[4] வேதம் பொது நூல். ஆகமம் சிறப்பு நூல். இவை இரண்டிற்குமிடையே வேறுபாடு காணமாட்டார்கள் பெரியோர்கள்.[5] வேதங்களின் மூலப் பகுதிகள் சங்கிதைகள்.

---

1 ''வேதோகிலோ தர்மமூலம்.''

2 விதந்தி அநேந தர்மம் வேத:

3 ''பஞ்சாக்ஷரீ சிவபதேந விபாதி ருத்ராத்
யாயஸ் தயாஸ்புரதி தேந. சதுர்த்த காண்ட:|
காண்டேந சர்வ யஜுர்ரேவ விபாதி தேந
ரிக் சாம மத்ய மணிநா ச விபாந்தி வேதா:||''

4 சுருதி சாரமய: ச்ரௌத:

5 ''வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே''

''வயம் து வேத சிவாகமயோர்
பேதம் நபச்யாம: வேதோபி சிவாகம:''

பிராமணங்களும் ஆரணியகங்களும் உபநிடதங்களும் இவை உணர்த்தும் உண்மைக் கருத்துக்களைச் சிறிது விரித்து விளக்கந் தருவன. இவ்வாறு உணர்த்தவும் உணரும் ஆற்றலற்ற பாமர மக்களுக்கு வேத நெறிநின்று அவரவர்க்கு ஏற்ற நிலையில் பொருளை விளங்கவைப்பன இதிகாச புராணங்கள். [6]

தேவாரங்கள் வேதசாரமாய்த் திகழ்கின்றன. பெரியபுராணம் ஈறான திருமுறைகள் பன்னிரண்டும், சித்தாந்த நூல்கள் பதினான்கும் வேதத்தை முதனூலாகக் கொள்வன. சாங்கியம் முதலான புறச் சமயங்களுக்கும் வேதமே அடிப்படை நூல். இவை யாவும் வேதத்தின் முக்கியத்துவத்தினை ஒருமுகமாகச் சுட்டி நிற்கின்றன.

இறைவன் திருவருளால் வேத முழுதும் சுருக்க வடிவம் தாங்கிற்று. இச்சுருக்கம் இருபத்துநான்கு அட்சரங்களால் அமைந்து விளங்கும் காயத்திரி ஆகும். ''சூரியனின் நடுவணுறைபவர் சிவபெருமான். அவர் எங்கள் புத்தியைத் தூண்டுபவர். அந்த முக்கியப் பொருளைத் தியானிக்கின்றோம்'' எனச் சிவபெருமானைத் தானுணர்த்தும் பொருளாய்ச் சுட்டி நிற்பது காயத்திரி மந்திரம். [7]

---

வேதங்களில் கூறப்படும் விபூதி, உருத்திராக்கம், பிராசாதம், பஞ்சாட்சரம், பதி, பசு, பாசம் என்பன காமிகம் முதலிய ஆகமங்களில் விரிக்கப்பட்டிருக்கக் காண்கின்றோம். இதனாலே இவை சிரௌதம் எனப்படலாயிற்று. சுருதி சம்பந்தப்பட்டது சிரௌதமாம். சுருதியில் எடுத்துச் சுட்டப்படாதனவான ஆலயவமைப்பு, பிரதிட்டை, உற்சவம் முதலியவற்றை ஆகமங்கள் தாமாகவே கூறுவதனால் இவை சுவதந்திரம் எனப்படலாயின. இதுபற்றியே வேதங்கள், முக்கியமாக உபநிடதங்கள், இதிகாசங்களையும் புராணங்களையும் ஆகமங்களையும் துணைக்கொண்டு விளக்கற்பாலன.

தேவஸ்ய சவிதுர் மத்யே
யோ பர்க்கோ நோ தியः க்ரமாத் ।
ப்ரசோதயாத் தத் வரேண்யம்
தீம ஹீத் யந்வய: க்ரமாத் ॥

வேத நான்கினும் மெய்ப்பொருளாவது..............நமச்சிவாயவே.

நம் என்னும் வினையடிக்கு வளைதல் (வணங்குதல்)என்னும் பொருள் உண்டு. சிவாய நம என்னுந் திருவைந்தெழுத்தின் ஈறுகிய நம என்பது சிவனை நோக்கி வளைதல், வணங்குதல், சாருதல் எனப் பொருளுணர்த்தி மும்மலங்களினின்றும் நீங்கிச் சிவத்துடன் சாரும் சிவாத்துவித நிலையையுணர்த்தும் பெருமைவாய்ந்த மந்திரமாகி, வேதமுணர்த்தும் வீடுபேற்றைச் சுருக்கமாக உணர்த்தி வேதப் பொருளாகிய இறைவனைச் சுட்டிநிற்பது நோக்கற்பாலது.

வேதத்தின் சாரம் பிரணவம். அ, உ, ம் ஆகிய மூன்றெழுத்துக்கள் ஒன்றி விரவ, ஓம் என்னும் பிரணவம் பிறந்தது. இறைவன் இருக்கு வேதத்திலிருந்து அகாரத்தையும். யசுர் வேதத்திலிருந்து உகாரத்தையும் சாம வேதத்திலிருந்து மகாரத்தையும் தேறலாக வடித்தெடுத்து எமக்கு அருளியுள்ளான்.[8] இவ் வொலியினை உபநிடதங்கள் பிரமம் எனச் சுட்டும்.[9] வளர்ந்து விரிந்து வியாபித்து நிற்பது பிரமம்.[10]

இவ்வொலியும் இவ்வாறேநிற்றலால் பிரமம் எனப்படலாயிற்று.ஓம் என்னும் ஒலிக்குள் ஒலியினங்கள் அனைத்துமே அடங்கிநிற்பது நோக்கற்பாலது. ஒலிக்கும் நோக்குடன் வாயை அங்காக்கும்வேளை பிறக்கும் அகரத்தைத் தொடக்கத்திற் கொண்டும்[11] ஒலித்து முடியும் வேளை வாயை மூடும்பொழுது பிறக்கும் 'ம்' என்னும் ஒலியை ஈற்றிற் கொண்டும் அமைவதனுல் பிரணவ ஒலி வாய்திறப்பது முதல் வாய் மூடும் வரை பிறக்கவல்ல எல்லா ஒலிகளையும் உள்ளடக்கியுள்ளது என்பது உய்த்துணரற்பாலது. இதிலிருந்து சப்தபிரபஞ்சம் முழுவதையுமே வியாபித்து விளங்குவது வேதம் என்பது தெளிவாகின்றதல்லவா? ஒலிகள் யாவும் வேதத்துள் அடங்குவனவாதலால், அவையுணர்த்துங் கருத்துக்களனைத்தையும், எனவே எவ்வகைக் கருத்துக்களையுங் கொண்டு விளங்குவது வேதம் என்னும் உண்மையும் உணரப்படுகின்றது.

---

8 அகாரஞ்சாப் யுகாரஞ்ச
மகாரஞ்ச ப்ரஜாபதி:
வேதத் த்ரயாத் நிரதுஹத்.

9 ஏதத் யேகாக்ஷரம் பிரம்ஹ
ஏதத் யேகாக்ஷரம் மஹத்
ஏதத்யேகாக்ஷரம் ஞாத்வா
யோயத் இச்சதி தஸ்யதத் ஓம் இத்யேதத்
ஓமிதி பிரஹ்ம.

10 பிருஹத்வாத் பிரஹ்மணத் வாச்ச
சிவோ பிரஹ்மைவ யோகத: ।
பிரமம் என்னுஞ் சொல் ப்ரம்ஹ என்னும் அடியிற் பிறந்தது. இது ப்ரம்ஹணம் என்னும் வளர்ச்சி வன்மையையும் பிருஹத்வம் என்னும் மேன்மையையும் உடையது.

11 அகரம் தொடங்கும் எழுத்தாய் ஒலிகளெல்லாவற்றுக்கும் அடிப்படையாய் நிற்றல் பற்றியே, ''அக்ஷராணும் அகாரோஸ்மி'' என்றும், ''அகர முதல வெழுத்தெல்லாம்'' என்றும், 'அகர வுயிர்போல்...... இறை நிற்கும் நிறைந்து' என்றும் நூல்கள் கூறுகின்றன.

வேதம் மக்கள் சீராக வாழ வழிகாட்டும்; அவர்கள் பெற விழையும் பெரும் பேற்றை அடைவிக்கும். மக்கள் நிற்றற்குரிய நிலைகள் நான்கு. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவற்றுள் ஏதாவது ஒன்றைப் பற்ருது மக்கள் வாழ்தல் அரிது. இந் நான்கு நிலைகளையுமே கூறும் விஷயமாகக் கொண்ட வேதம் மக்களுக்கு வேண்டிய தனைத்தையுங் கூறும் நூலாயமைந்திருப்பதில் வியப்பென்ன இருக்கின்றது? நெறிகள் நான்கனுள் முதலாவதான சரியை நெறி நிற்பானுக்கு உரியவை சங்கிதைகள். வேள்வி முதலிய கிரியைகளிலே முற்றிலும் ஈடுபடுபவனுகிய கிருகஸ்தனுக்கு உரிய வேதப்பகுதிகள் பிராமணங்கள். கிருகஸ்த நிலையினின்றும் நீங்கிக் காடு நோக்கிப் புறப்பட்ட வானப்பிரஸ்தனுக்கு உரியவை ஆரணியகங்கள். வேதத்தின் முடிவான உபநிடதங்கள் சந்நியாசிக்கு வழிகாட்டுவன. மக்களனைவர்க்கும் அவரவர் தகுதிப்படி நிற்கவல்ல வழியைக் காட்டும் வேதம், எல்லாமாய் வியாபித்து நிற்பது மட்டுமன்றி எல்லோர்க்கும் நிலைக்களனும் விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. பேரும் உருவும் அற்ற இறைவன் மக்களுக்கு அருளவேண்டி ஏற்றருளிய தோற்றங்கள் பல. அவற்றுள் ஓசை ஒலியெலாமாயமையும் வேத சொரூபமும் ஒன்று என்னும் உண்மையை நம் சமய நூல்கள் அழகாக எடுத்தியம்புகின்றன.

ஆகவே, அறிவு மயமாய், சிவ என்னும் திருநாமத்தை நடுமணியாகக் கொண்டு, சிவாகமங்களினின்றும் வேருகாததாய், அவற்றினுல் சிறப்பித்துக் கூறப்படுவதாய், இதிகாச புராணங்களால் விளக்கப்படுவதாய், திருமுறைகளுக்கும் சித்தாந்த நூல்களுக்கும் முதல் நூலாய், சுருக்க வடிவில் காயத்திரியாய், இன்னுஞ் சுருங்கிய வடிவில் பிரணவமாகி ஒலிகளெல்லாவற்றையும் தன்னுள் அடக்கியதாய், எப்பொருளையும் உணர்த்தும் பெற்றியதாய், சரியை நிற்கும் பிரமசாரிகட்கும் கிரியை நெறி மேற்கொள்ளும் கிருகஸ்தருக்கும் இல்வாழ்க்கையைத் துறந்து துறவறம் மேற்கொள்ள விழையும் வானப்பிரஸ்தர்களுக்கும், சந்நியாசிகட்கும் அவரவர் நிற்கவேண்டிய நெறியுறுத்துவதாய் என்றும் விளங்கி நிற்பது வேதம்.

வேதங் காட்டும் சைவநெறி
விளங்குக உலகமெல்லாம்.

# ஆகமம்

வேதாகம பூஷணம் கு. பாலசுந்தரக் குருக்கள் B. A. (Hons)
தலைவர், அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்த சபை.

**முதனூல்கள்**

அநாதி முத்த சித்துருவாகிய இறைவன், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்ந்து கடைத்தேறும் பொருட்டு அருளிச்செய்த முதனூல்கள் வேதம் சிவாகமம் என்னும் இரண்டுமாம்.

சிவபெருமானுக்கு வேதம் அங்கம். சிவாகமம் அங்கியாம். வேதம் துதி நூலாகவும், ஆகமம் விதி நூலாகவும் விளங்கும். வேதத்தை மந்திர சாஸ்திரம் எனவும், ஆகமத்தைத் தந்திரசாஸ்திரம் எனவுங் கூறுப. வேதம் தோத்திர நூல் எனின் ஆகமம் சாத்திர நூலாகும். சைவர்களுக்கு வேதம் பொது நூல்; ஆகமம் சிறப்பு நூல். இதனை,

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்;
.....................................................
.................................
சிவாகமங்கள் சித்தாந்தமாகும்"

என்பதனால் அறியலாகும்.

**இறைமொழிகள்**

வேதாகமங்கள், பரமசிவன் வாய்மொழி என்று சுருதியும், புராணமும், சிவாகமமும் ஓதுகின்றன. பஞ்சப்பிரணவம், பஞ்சாக்ஷரம், பிராசாதம் முதலிய மந்திரங்களும், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும், திருநீற்றின் உத்தூளனம், திரிபுண்டரம், உருத்திராக்ஷம் தரித்தல், சிவலிங்க பூசை முதலிய கருமங்களும் வேதம் சிவாகமம் ஆகிய இரண்டிலும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்லப்படுகின்றன. நீலகண்ட சிவாசாரியர்,

"வயம் து வேதசிவாகமயோர் பேதம் ந பஸ்யாம:
வேதோபி சிவாகம:"

"வேத சிவாகமங்களுக்குப் பேதம் காண்கின்றிலம். வேதமும் சிவாகமும் ஒன்றே" என்றும்,

சிவஞானயோகிகள் "வேதம், பொருள் பலபடத்தோன்றும் சூத்திரமும், சிவாகமம் அதனை அவ்வாறுக வொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும் போலப் பரமசிவனாற் செய்யப்பட்டமையின் அவை முறையே பொது நூல்,

சிறப்பு நூல் எனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும்போல வேறுவைத் தெண்ணப்பட்டன'' என்றும் தங்கள் தங்கள் பாஷ்ய உரைகளிற் கூறியருளியமையினாலும் இதனை நன்குணரலாம். ''ஸர்வாகமமயஃ சிவஃ'' என்னும் சுருதியும் இதற்குச் சான்றாகும்.

**வேதம்** என்னுஞ் சொல் ''அறிதற்கருவி'' எனப் பொருள்பட்டு நால்வேதங்களுக்குக் காரண இடுகுறிப் பெயராயும் சைவாகமங்களுக்குக் காரணக் குறியாயும் வழங்கப்படுகிறது. அங்ஙனமே ஆகமம் என்னுஞ் சொல்லும் பரமசிவன்பால் நின்று வந்தது என்னும் பொருளுடையதாய்ச் சைவாகமங்களுக்குக் காரண இடுகுறியாயும், நால்வகை வேதங்களுக்குக் காரணப் பெயராயும் வடமொழி தென்மொழி நூல்களில் வழங்கப்படுகின்றது. சுவயம்புவான பரமசிவனாற் செய்யப்பட்டது பற்றியும், பசுக்களாகிய புருடராற் செய்யப்பட்டதன்று என்னுங் கருத்துப் பற்றியும், ''சுவயம்பு'' எனவும்,'' ''அபௌருஷேயம்'' எனவும் வழங்கப்படுகின்றது. ஆதலின் அவ்வழக்கே கொண்டு அது இறைவன் வாய்மொழி என்பது பெற்றாம்.

''செய்யா மொழிக்கும்...பொருள் ஒன்றே'' என்னும் வெண்பா, பசுக்களான தேவர் முனிவர் முதலியோராற் செய்யப்படாத மொழி என்னும் கருத்தையே வலியுறுத்தும்.

வேதாகமங்கள், பரமசிவனாற் செய்யப்பட்டு ஏனை நூல் கூறும் பொருளியல்புகள் எல்லாம் தங்கண் அடக்கிக்கொண்டு வியாபகமாய் நிற்றலின் அவை முதனூலாம். முனைவனருளிய முதனூலை ஒன்றாக வைத்தெண்ணாமல் இருவகைப்படுத்தியதற்கு ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் கூறுஞ் சமாதானம், ''முதனூல் மூன்று வருணத்துக்கு உரிமையாதலும் நான்கு வருணத்திற்கு உரிமையாதலும் பற்றி முறையே வேதாகமமென இருபகுதியாக வைத்தெண்ணப்பட்டது என்பதாம். மேலும் ஸ்மிருதி, புராணம், கலைகள் முதலான எல்லாம், வேதாகமப் பொருளை உள்ளவாறுணர்ந்தோர் யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றாங்கு அவற்றைப் பிறர்க்கு இனிது விளக்குதற் பொருட்டு நால்வகை யாப்பினுள் ஒன்றால் வழிப்படுத்திச் செய்த நூல்களாகும். ஆதலின் அவை வழி நூல் எனப்படும்.

**'ஆகமம்' — பெயர்க் காரணம்** (பொது)

இச்சொல்லை நாம் ஆராயின் அதன் பெருமை நன்கு விளங்குவதோடு ஆராய்ச்சியின்பம் பயப்பதுமாம். இது உணர்த்தும் பல்வேறு பொருள்களுள் தோற்றம், வருகை, ஈட்டம், பொருட்பேறு, சாஸ்திரம், சாஸ்திரஞானம், ஆற்று முகத்துவாரம், ஆப்தவாக்கியம், சாக்ஷிப் பத்திரம் என்பன சிறப்பாகக் குறிப்பிட வேண்டியவை. இவையேயன்றி

வியாகரணம், நியாயம் போன்றவற்றிலும் விசேடப்பொருள்களில் வருவது காண்க.

வடமொழி இலக்கியப் பரப்பில், இரகுவமிசம், கிராதார்ச்சுனீயம், நீதிசதகம், பதஞ்சலி மகாபாஷ்யம் என்பவற்றில் மேற்கூறப்பட்ட பல கருத்துக்களிலும் இச்சொல் எடுத்தாளப்பட்டுள்ளது. உதாரணமாகச் சில காட்டுதும்.

இரகுவம்சம் 10ஆம் சர்க்கம் 26ஆம் செய்யுளில்,
''பகுதாப்யாகமைர் பின்ன:
பந்தான: சித்திஹேதவ:'' என்றும்,
1ஆம் சர்க்கம் 25ஆம் சுலோகத்தில்,
''ஆகாரசத்ருசன்... .......சத்ருசாகம'' என்றும்,
14ஆம் சர்க்கம் 50ஆம் செய்யுளில்,
''தாமர்ப்பயாமாஸ..............ததாகமப்ரீதிஷு'' என்றும்

மகாகவி காளிதாசர் ஆகமம் என்னும் சொல்லை, சுருதி, சாஸ்திரஞானம் முதலிய பொருள்களில் பிரயோகித்துள்ளார்.

கிராதார்ச்சுனீயம் 5ஆம் சர்க்கத்து 22ஆம் சுலோகமாகிய
''ஆகமாதிவ தமோபஹாத்த:
சம்பவந்தி மதயோ பவச்சித:'' என்பதிலுள்ள

ஆகமம் என்பது சாஸ்திரத்தையே குறித்து நின்றது.

இலக்கியப் பரப்பிலும், இலக்கணப் பரப்பிலும் நையாயிகர்களது நூல்களிலும் அன்ன பிறவற்றிலும் இச்சொல் பிரயோகிக்கப்பட்டிருக்கு மாற்றை விரிக்கில் இக் கட்டுரை இடந்தராது. விரிவஞ்சி விடுத்தாம்.

**ஆகமம் - பெயர்க் காரணம்** (சிறப்பு)

இது தொன்றுதொட்டுவரும் அறிவு என்னும் பொருளுடைத்தாய் அறிதற்கருவியாகிய சமய நூல்களைக் குறிக்கும். (இதன் சிறப்பு நோக்கி ஏனைய மதத்தினரும் இச் சொல்லை எடுத்தாள்கின்றனர். 'பிடகாகமம்' என்பதை நோக்குக.) இது ஆ–க–ம என்னும் மூன்றெழுத்துக்களாலாகிப் பதி, பசு, பாச இலக்கணங்களை விளக்கும் நூல் எனவிரியும்.

இது இறைவனால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது என்பதற்குச் சான்று வருமாறு:-

ஆகதம் சிவவக்த்ரேப்யோ
கதம்ச கிரிஜாஸ்ருதௌ|
மதம்ச வாசுதேவஸ்ய
தஸ்மாத் ஆகமம் உச்யதே||

இதன் பொருள்:– ''சிவபிரானது ஐந்து திருமுகங்களிலிருந்து வந்தது; மலைமகளுக்குச் செவிப்புலனுயது; அது, வாசுதேவனுக்கும் கருத்தாவது. ஆதலின் அது ஆ–க–ம–ம் என்று அழைக்கப்படுகிறது'' என்பதாம்.

இச்செய்யுளுக்கு

''ஆகதம் பஞ்சவக்த்ராத்து
கதம் ச கிரிஜாநநே''

என்றும் பாடபேதமுண்டு.

ஆகமங்கள் எழுவகை இலக்கணங்களோடு கூடியவை என்பதைப் பின்வரும் சுலோகங்களால் அறியலாகும்.

சிருஷ்டிஸ்ச ப்ரளயஸ்சைவ
தேவதாநாம் ததார்ச்சனம்|
ஸாதனம் சைவ ஸர்வேஷாம்
புரஸ்சரண மேவச|
ஷட்கர்ம ஸாதனம் சைவ
த்யானயோகஸ் சதுர்விதஃ|
ஸப்தபிர் லக்ஷணைர்யுக்தம்
த்வாகமம் தத் விதுர் புதாஃ|

ஆகமங்கள், அவை சிறப்பித்துக் கூறும் மூலமூர்த்திகளை நோக்கப் பல திறப்படும். அவை சைவாகமங்கள், வைஷ்ணவாகமங்கள், சாக்தாகமங்கள் என்பன.

**ஆகமங்கள் 28**

அவற்றுட் சிவாகமங்கள் இருபத்தெட்டாம். அவைதாம், காமிகம் யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அநலம் (அல்லது ஆக்கினேயம்) வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்பன.

ஆகமங்களின் தொகையையும் பெயரையும் ஆகமாந்தத்தைச் சிறப்பித்துக்கூறும் திருமந்திரத்தின்கண்ணே திருமூல நாயனுர் எடுத்தாள்கிருர். இதனை,

''அஞ்சன மேனி யரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள வாகமம்
அஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே''.

என்பது முதலாக வரும் செய்யுள்களால் அறியலாம்.

**உபாகமங்கள் 207**

சிவாகமங்கள் இருபத்தெட்டில் சூக்ஷ்மம் சுப்பிரபேதம், அனலம் என்னும் மூன்றும் தவிர்ந்த ஏனையவற்றுக்கு உபபேதங்களாகப் பல ஆகமங்கள் உள. இவை உபாகமங்கள் எனப்பெயர்பெறும். இவற்றுள் சிவதருமோத்தரம், குமாரதந்திரம், மிருகேந்திரம் என்பவை பிரசித்தி பெற்றவை. உபாகமங்கள் 207 என்பதை

இருபதுமெட்டும் மூலம்; உபபேதம்
இருநூறு மேழும் எனவெண்

— சைவசமயநெறி

என்பதனுலறியலாம்.

**ஆகம வகை:**

ஆகமங்களுட் பத்துச் சிவபேதம் எனவும் எஞ்சிய பதினெட்டும் உருத்திரபேதம் எனவும் வழங்கப்படும். அன்றியும் காமிகம் முதல் அசிதம் வரையுள்ள ஐந்தும் சத்தியோஜாத முகத்தினின்று கௌசிக முனிவர்க்காகவும், தீப்தம் முதல் சுப்ரபேதம் வரையுமுள்ளவை வாமதேவ முகத்தினின்று காசிப முனிவர்க்காகவும், விஜயம் முதல் வீரம் வரையுமுள்ள ஐந்தும் அகோரமுகத்தினின்று பரத்துவாஜ முனிவர்க்காகவும், இரௌரவம் முதல் முகவிம்பம் வரையுமுள்ள ஐந்தும் தத்புருட முகத்தினின்று கௌதம முனிவர்க்காகவும், புரோற்கீதம் முதல் வாதுளம் வரையிலுள்ள எட்டும் ஈசான முகத்தினின்று அகத்திய முனிவர்க்காகவும் அருளிச் செய்யப்பட்டவை.

**உபதேசக்கிரமம்:** (குருபரம்பரை)

சதாசிவ மூர்த்தியானவர் ஆகமங்களை அனந்ததேவருக்கு உபதேசித்தருளினுர். அனந்ததேவர் ஸ்ரீகண்டருத்திரருக்கும், ஸ்ரீகண்டருத்திரர் திருநந்திதேவருக்கும், திருநந்திதேவர் சனற்குமார முனிவருக்கும், சனற்குமாரமுனிவர் பரஞ்சோதி முனிவருக்கும், முறையே குருபரம்பரைக்கிரமமாக உபதேசித்தருளினர். ஆன்மாக்கள் தம்மை வழிபட்டுய்ந்து கடைத்தேற வேண்டும் என்னும் பெருங்கருணைத் திறத்திஞலே ஒவ்வொருகற்பத் தொடக்கத்திலும் வேதசிவாகமங்களைத் தோற்றுவிக்கும் இறைவன் திருவருளால், பரஞ்சோதி முனிவரும் ஆகமங்களின் ஞான பாதப்பொருளை மெய்கண்டதேவ நாயனுருக்கு உபதேசித்தருள, அவர் சிவஞான போதப் பொருளைத் தமிழிலே சாத்திரமாக ஆக்கித் தந்தருளினுர்.

**ஆலய சேவை:**

ஆலய சேவைக்கு ஆதாரநூல்கள் சிவாகமங்களே. அது கர்ஷணுதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் என்னும் முப்பெரும் பிரிவினுள் அடங்கும், எனவே, ஆலய

நிர்மாணம், மண்டபங்கள், பிராகாரங்கள் அமைப்பு, மூர்த்திகள் பிரதிட்டை, நித்திய நைமித்திகங்கள், மகோற்சவவிதிகள், பல்வேறுவருணத்தவரும் நின்று சேவிக்க வேண்டிய தானங்கள், விதிகள், செய்யப்பட வேண்டிய பிராயச்சித்த வகைகள் என்னும் இன்னோரன்ன பலவற்றையும் விளக்குவன சிவாகமங்களேயாம்.

**ஆகமங்கள் அறிவுக்கருவூலங்கள்:**

சிவாகமங்கள் அறுபத்துநாலு கலைஞானங்களையும் தம்மகத்தே கொண்டுள்ளன. அவை சைவசித்தாந்தச் செம்பொருள் விரிப்பவை. மக்களுக்கு அவரவர் தரத்துக்கேற்றவாறு ஆன்மஈடேற்றம் பெற உதவுவதோடு அவர்தம் உடனலம் பேண உதவும் சிறந்த சுகாதார நூல்களாகவும் விளங்குகின்றன. இன்றைய உலகு மதிக்கும் பொறியியல் முதலாம் விஞ்ஞானத் துறைகள் எத்துணையாண்டு கழியினும் கனவு காண முடியாப் பல்வேறுநுட்பங்களைத் தம்மகத்தே கொண்டு மிளிர்பவை. இன்றைய தாவரவியல், விலங்கியல் எனப்பலப்பல இயல்கள் கூறும் உண்மைகள் எல்லாம் ஆகமங்களுக்குப் பிற்பட்டவையே. விரிக்கிற் பெருகும். இரண்டொன்று விளக்குதும்.

**ஆகமங்களும் சைவசித்தாந்தமும்:**

வடமொழிச் சாஸ்திரங்களுக்கு வேதாகமங்கள் முதலாய் நிற்றல் போலத் தென்மொழிச் சாஸ்திரங்களுக்குத் தமிழ்வேதங்கள் முதலாய் நிற்பன. சிவாகமங்களிற் கூறப்படும் பதி, பசு, பாச இலக்கணங்கள் எல்லாம் சைவசித்தாந்த சாத்திரத்தின் நான்கு பாதங்களையே தெளிவாகக் காட்டுகின்றன என்பதைக் காரணம், காமிகம், வாதுளம், பௌஷ்கரம், சுப்பிரபேதம், முதலிய ஆகமங்களிலிருந்து நன்கறியலாம். வேதத்திற் கூறப்படும் கருமகாண்டத்துக்கு இன்றியமையாத பொருள்களையும் வேதசிரசுகளாகிய உபநிடதங்களின் பொருள்களையும் இனிது விளக்குவன சிவாகமங்களேயாகும். ஆதலின் சிவாகமம் **சித்தாந்த சாத்திரம்** என்று வழங்கப்படும். இச்சித்தாந்த ஆகமங்கள் பதினான்கு என்பதும் சிவாகமங்கள் இருபத்தெட்டென்பதும் ஒப்பு நோக்கி ஆராய்தற்பாலது. இச்சித்தாந்த சாத்திரங்கள், சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு பாதங்களை உடையனவாம். விரிக்கிற் பெருகும்.

**ஆகமங்கள் சிற்ப நூல்கள்:**

காமிகாகமம் ஐம்பதாவது பூமிலம்பனவிதிப் படலத்திலே ஆலயத்தைச் சுற்றியிருக்கவேண்டிய வீடுகளின் நீளம், அகலம், உயரம் முதலியன கூறப்படுகின்றன. பூமிலம்பனமென்றால் பூமியானது சற்சதுரமாக இருத்தல் வேண்டுமென்பது கருத்து. அங்ஙனமின்றி முழங்களினளவு கூடியும் குறைந்தும் இருக்கலாம்.

இவ்வையேயன்றி வீடுகள் ஓரடுக்கு முதல் பதிஞேரடுக்கு வரையிருக்கலாம் எனவும் அவற்றுக்குப் பிரமாணங்களும் கூறப்பட்டுள்ளன. இவை முதலாயின வெல்லாம் இக்கால கிருகநிர்மாணம் பட்டின நிர்மாணம் முதலிய துறைகளில் ஈடுபட்டுள்ளோர்க்குப் புதியனவாம்.

காமிகாகமம் எழுபத்தோராவது பிராகாரலக்ஷண விதிப்படலத்திலே ஆலயம் முதலில் ஆக்கத்தக்க இடம், பரிவாராலயங்கள், பரிவார தேவதைகள் என்பனவாதிய விடயங்கள் கூறப்படுகின்றன. அவற்ருேடு ஒரு பிராகாரம் இரண்டு பிராகாரம், மூன்று பிராகாரம், நான்கு பிராகாரம், ஐந்து பிராகாரம் உடைய ஆலயங்களுக்கு அளவுகள் கூறப்படுகின்றன.

ஆலயத்தில் ஸ்தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தின் உத்தம, மத்திம, உயரங்களும் துவார அகலங்கள், கோபுர நிலேயங்களின் அகலங்க்ள் என்பனவும் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கோபுரத்தினுடைய அத்திவாரம், ஒன்று முதல் பதினேந்து வரையுமுள்ள ஸ்தூபிகளின் நியாசம், கோபுரப்பிரதிட்டை முதலியன அளவை விதிகளுடன் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய கொண்டல்சேர் கோபுரங்கள் இக் காலத்துப் பொறியியல் நிபுணர்களுக்கு அதிசயமூட்டுவனவாம். விஞ்ஞானத்தையே மெய்ஞ்ஞானமாகக் கொண்டொழுகும் மேலேத்தேய நிபுணர்கள் தென்னிந்திய கோபுரங்களேக் கண்டு வியப்படைந்தனரெனில் ஆகமங்கள் தம்முள் பொதிந்துள்ள உண்மைகளே யாவரே போற்ருதிரார்.

**ஆகமங்கள் சுகாதார நூல்கள்:**

சைவர்களுக்கு இன்றியமையாதனவாகிய சிவ சின்னங்களின் பெருமையை எடுத்துக்கூற இக் கட்டுரை இடந்தராது. இவற்றின் பெருமைகளே எடுத்துப் பொதுவாகவும், சிறப்பாகவும் விதந்து பேசும் நூல்களேயும் வரையறுத்துக் கூறுதல் எளிதன்று. சமண மதத்தவருங்கூட விபூதியின் பெருமையைப் பலபடக் கூறியுள்ளார்கள்எனின் இதன் பெருமை சொல்லத்தக்கதோ. சூடாமணி நிகண்டார்கூட விபூதியின் பெருமையைக் கூறுமிடத்து, "திருநீறே பற்பம் – பொடியொடு விபூதி காப்பாம் புண்ணிய சாந்தஞ் சாணி" என்று சிறப்பித்துள்ளார்.

வைணவரைப் போல சமணர்களும் திருமண் தாரணம் செய்வது வழக்கமாகவும் அவரதைச் சிறப்பித்துக் கூருது விபூதியையும் அதற்குக் காரணமாகவுள்ள சாணத்தையும் சிறப்பித்துக் கூறிய உண்மையை அறிவுடையோர் உய்த்துணர வேண்டும்.

இதன் பெருமை பஸ்மஜாபால உபநிடதம் முதலிய பல்வேறு உபநிடதங்களிலும், சிவாகமங்கள் இருபத்தெட்டிலும், அவற்றின் பிரிவுகளாகிய குமாரதந்திரம், மகுடோத்தரம், ஸ்ரீமுகம், சிவசாசனம், நந்தி

கேஸ்வரம், சிவதர்மோத்தரம் என்னும் உபாகமங்களிலும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

விபூதி ருத்திராக்கங்களை மெய்யன்போடு மந்திரத்தாற்றரிப்ப வரைச் சிவபெருமான் நீங்காது நிற்பர் எனச்சிவாகமங்கள் கூறும். அவற்றால் சர்ப்பம், சூரியன் முதலிய கிரகங்கள், நக்ஷத்திரங்கள், கொடு நோய்கள் முதலியவற்றால் வரும் துன்பங்கள் அணுகமாட்டா. சிவாகமங்க ளுக்கு இலக்கிய நூலாக விளங்கும் கந்தபுராணம் பின்வருமாறு கூறும். '' வேதசிவாகமங்களில் விதிக்கப்பட்ட திருநீற்றையும் உருத்திராட்சத் தையும் பிராமணனாயினும், அத்தியாச்சிரமியாயினும் அணியாது விடுவனேல் அவன் பதிதனாவான்'' என்பதாம்.

சமயரீதியாக இதன் மகிமை இவ்வாறாக இன்றைய சுகாதார அடிப்படையிலும் அதுபெருஞ் சிறப்புடைத்து, இது மேனிமேலயணியப் படுவதோடு, உட்கொள்ளும் மருந்துமாம் என ஆயுர்வேதம்கூறும். இதனாலன்றோ '' வருத்தந் தணிப்பது நீறு, ஏல உடம்பிடர் தீர்க்கும் இன் பம் தருவது நீறு'' என்றருளினார் ஆளுடைய பிள்ளையாரும். திருநீறே யன்றி அது உண்டாக்குதற்குக் காரணமாய கோமயமும்பசுக்களுமே சிறப் புடையன.

உண்ட எச்சில் நீக்கவும் ஜனனசௌச மரணசௌச நிவிர்த் திக்கும், பஞ்சகவ்வியத்துக்கும், பயிர்களுக்குச் சிறந்த உரமாகவும், மருந்து களைப் புடமிடவும் பசுவின் சாணம் பயன்படும்.

**அபிஷேகக்கிரமம்:**

இனி, அபிஷேகக்கிரகம் பற்றியும் நாம் நுணுகி ஆராயின் மக்களின் உடல்நலம் பேணும் எத்தனையோ பொருள்கள் வகைப்படுத்தப் பட்டிருத்தலை அறிஞர் காண்பர். ஆனால் அவை இறைவனால் விதிக்கப் பட்ட தூய சுகாதார முறைக்கேற்ப அனுசரிக்கப்படுவதில்லை.

**உளநூல் முடிபு:**

மூர்த்திவிசேடம், தலவிசேடம் தீர்த்தவிசேடம் என்பன மக் களை நன்னெறிப்படுத்துவதற்குப் பெரிதும் உதவுவன என்பதே உள நூலாராய்ச்சி முடிபு. உலகத்தில் இதுவரை மக்களால் சிந்திக்கப்பட்ட எண்ண அலைகளும் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களின் அலைகளும் ஆகாயத்தில் பரந்திருத்தல் உண்மை. திரிகரணசுத்தியோடு கூடிய, சான்றோர் வாழ்ந்த, சேவித்த தலங்கள், ஸ்நானமாடிய துறைகள், முத்தியடைந்த இடங்கள் யாவும் சிறந்தனவாய் மதிக்கப்படுதற்குக் காரணம் அவர்களது சிந்தனை அலைகளும், வாக்கலைகளும் அவ்விடங்களில் அணுக்கதிர்களாக விளங்குவதினாலேயாம். இதனாலன்றோ '' றேடியோ மென்டாலிஸம் '' (Radio Mentalism) என்னும் ஆங்கில நூலின் ஆசிரிய

ராகிய இரட்டையர் (Treating Conditions) என்னும் அதிகாரத்தில், நாம் ஒருவருடைய வீட்டை வாடகைக்கு எடுத்தாலோ அல்லது இரவற்பொருளை உபயோகிக்கும் பொழுதோ அவற்றை முதலில் எமக்குபயோகத்துக் கேற்றவாறு சுத்தி செய்த பின்னரே அவற்றை நாம் உபயோகிக்க வேண்டும்'' என்றார். உதாரணமாக நாம் குடிபுகும் இடத்தில் வாழ்ந்த குடும்பம், நோய்வாய்ப்பட்டிருந்து இருக்கலாம்; வறுமையுட்பட்டிருக்கலாம்; நாய் பூனை வாழ்வு வாழ்ந்திருக்கலாம். அத்தகைய குறைபாடுகளை வேண்டாதயாம் இயன்றளவு அவ்விடங்களில் முன்னைய தீய எண்ணம், தீயசொல், தீயசெயல் என்பவற்றின் அலைப்பதிவுகள் இல்லாதிருக்கச் செய்ய முயலவேண்டும்.

காமிகம் முதலிய ஆகமங்களிலே சிவபக்தப் பிரதிஷ்டா விதி படலம் என்பன அருளிச்செய்யப்பட்டமை, இறைவன் உண்மையடியார்கள் திருவுருவங்கள் ஆலய சேவைக்கும் மக்கள் நன்னெறிப் பண்புக்கும் மிகமிக இன்றியமையாதன என்பதை வலியுறுத்தவேயாம்.

முடிபுரை:

இதுகாறும் கூறியவற்றால் வேதசிவாகமங்கள் சைவ சமய முதனூல்கள் என்பதும், அவற்றைத் திருவாய் மலர்ந்தருளியவர் சிவபிரானே என்பதும், அவை உமையம்மை கேட்க இறைவன் அருளியவை என்பதும் அவை அறுபத்து நான்கு கலைஞானங்களையும் தம்மகத்தே கொண்ட அறிவுக் கருவூலமாம் என்பதும், அவற்றைச் சிவதீக்ஷை பெற்றோரே கற்றற்கு உரித்துடையர் என்பதும், அன்னபிறவும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

---

தொகுத்தவனருமறை யங்கமாகமம்
வகுத்தவன் வளர் பொழிற் கூகமேவினன்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவனுறை விடந்திருவிற் கோலமே.

— சம்பந்தர் – திருவிற்கோலம்

அஞ்செழுத்துங் கண்டீரரு மறைகளாவனவு
மஞ்செழுத்துங் கற்க வணித்தாகு - நஞ்ச வித்த
காளத்தியார் யார்க்குங் காண்டற் கரிதாய்ப்போய்
நீளத்தே நின்ற நெறி.

– பதினொராந்திருமுறை

---

# திருநான் மறைமுடிவு

## (உபநிடதம்)

வியாகரண சிரோமணி தி. கி. சீதாராமசாஸ்திரிகள்
விரிவுரையாளர், பரமேஸ்வரக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

சைவசமய குரவர்கள் நால்வருள் மூவர் பாடிய தேவாரங்கள் வேதசார மென்பதும், மணிவாசகப் பெருமான் பாடிய திருவாசகம் உபநிடதசாரமென்பதும் சைவசமயப் பெரியார்கள் கண்ட உண்மை யாகும்.

இறைவனுடைய குணங்கள், இறைவனை வழிபட வேண்டிய முறைகள், இறைவனின் உருவத்திருமேனிச் சிறப்புக்கள், இறைவனே எல்லா உயிர்களுக்கும் தலைவன், இறைவனுடைய சரித்திரங்கள், இறைவனை வழிபடுவதனால் அடையும் பெறுபேறுகள், இறைவனுடைய சின்னங்கள், அவைகளின் பெருமைகள் முதலாயின மூவர் தேவாரங்களில் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

இறைவனுடைய ஸ்வரூபலக்கணம், ஆன்மாவுக்கும் இறைவனுக்கு முள்ள தொடர்பு, சகல உயிர்களிலும் மறைந்தும் சார்ந்தும் சாராமலும் நின்று அருள்புரியுந்தன்மை, பஞ்சமாபூதங்களில் பரவியிருக்கும் தன்மை, அவைகளின் குணமாய் விளங்குந் தன்மை, ஒடுங்கும் காலத்தில் ஒருவனாய் நின்றும், விரிந்து பரந்து இயங்கும் காலத்தில் பலவடிவம் தாங்கியும் ஆன்மாக்களுக்கு அருளுந்தன்மை, என்னும் இவைகளை உபநிடதங்கள் எடுத்து விளக்குகின்றன. இக்கருத்துக்களை மணிவாசகப் பெருமான் அங்கங்கு ஒவ்வொரு வாசகத்தால் குறிப்பிட்டிருக்கின்றார்.

உபநிடதங்களிலிருந்து சில பகுதிகளை ஆராய்வோம்.

ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஜடசரீரம் இறைவனால் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தத்தம் வினைக்கேற்றவாறு பிறவி பெற்று நல்வினை, தீவினைகளை அனுபவிக்கின்றனர். அப்பிறவிகளுள் மானிடப்பிறவி மிக உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. பகுத்தறிவு என்ற சாதனம் மானிடப் பிறவிக்கே உரியதாக அமைந்தது. அந்தப் பகுத்தறிவின் துணை கொண்டு இறைவனைப்பற்றி அறிய வேண்டும் என்ற அவா உண்டாகிறது. அந்த அறிவை நேர்வழியிற் செலுத்திப் பிரகாசத்தை உண்டாக்கிவைப்பவர் குருவாவார். அந்த அறிவைப் பெறும் பொழுது சடமான உடல், நலம் பெற்றதாக இருக்க வேண்டும். பகல் இரவு என்ற காலங்களாலோ, வெப்பம் பனி குளிர் முதலிய பருவங்களாலோ உடல் நலம் பாதிக்கப்படலாம். உடல் நலம் பாதிக்கப்பட்டால் அறிவு பலம் என்னும் இவைகளுக்கு

வலிவு குறையலாம். இக் குறைபாடுகளால் குருவினிடமிருந்து பெற வேண்டியவற்றை முற்றிலும் பெறமுடியாதவனுகின்றான். ஆகவே, இக்குறை பாடுகளை நீக்க வல்ல தேவர்களைக் குறித்துப் பிரார்த்தனை செய்துகொள் ளுகின்றான். ஒருவனுகிய இறைவன் அந்த அந்தத் தேவர்களிடம் அதிட் டித்து நின்று அவரவர்க்குரிய ஆற்றலை அருளுகின்றான் என்பதே இவனது பிரார்த்தனையின் உட்கருத்தாகும். அல்லாவிடில் யாவற்றையும் ஒருவனி டமே பிரார்த்தனை செய்து கொண்டால் போதுமானது. தன்னுடைய நலத்தை மட்டிலும் தேவர்களிடம் பிரார்த்தனை செய்து கொள்ளவில்லை. தனக்கு அறிவு புகட்டும் குருவின் உடல் நலத்தையும் பேணிக்காக்க இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றான். தான் மட்டிலும் உடல் நலம் பெற்று அறிவைப்பெற ஆற்றல் மிக்கவனும், இருந்து என்ன பயன்? குருவும் உடல்நலம் பெற்றவராக இருந்தாற்றானே நல்லறிவைப் பெற முடியும். ஆகவேதான் குருவின் உடல் நலத்தையும் கருதி இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொள்ளுகின்றான்.

'' தைத்திரீய உபநிடதம் ''

'' முதலாவது அனுவாகம் ''

''சன்னோ மித்திர: + + + + அவதுவக்தாரம்'' பகலுக்கும் பிராண வாயுவுக்கும் அதிதேவதையான மித்திரன், பிராணவாயுவினுலும் பகலினுலும் வரும் இன்னல்களை நீக்கி நற்சுகமளிக்கட்டும். இரவுக் கும் அபானவாயுவுக்கும் அதிதேவதையான வருணன், துன்பம் நீக்கி இன்பத்தை அளிக்கட்டும். எல்லாக்கோள்களுக்கும் தலைவன் சூரியன், அந்தச் சூரியனுக்கு அதிதேவதை அர்யமா. அந்த அர்யமா என்ற தேவனும், உடல் வலிமைக்கு அதிதேவதையான இந்திரனும், அறிவுக்கு அதிதேவதையான பிரகஸ்பதியும், சகல ஆதாரங்களுக்கும் அதிதேவதை யான நாராயணனும் சுகத்தை அருளட்டும். பலவாகத்தோன்றி அவைக ளில் அதிட்டித்து நின்று அருள் செய்பவராயிருந்தும் முடிவில் ஒன்றாகி விளங்கும் பரம் பொருளுக்கு வணக்கம். அருவமும் உருவமுமாகி விளங்கும் அநாதிப் பரம்பொருளே! எல்லா உயிர்களுக்கும் ஆதாரமாகிப் பிராணவாயுவிற் கலந்து நின்று எல்லா உயிர்களையும் இயக்கிக் கொண் டிருக்கின்றீர் அல்லவோ.

அந்தப் பிராணவாயுவில் மறைந்து நின்றருளும் பரம்பொரு ளுக்கு வணக்கம். இந்தப்பிராண வாயுவையே நேரில் காணும் கடவு ளாகக் கருதுகின்றேன். எங்கள் உயிர்களையெல்லாம் பிராணவாயு வடிவ மாகி நின்று இறைவனே இயக்கி வருகின்றார் என்ற உண்மையையும் உலகுக்கு எடுத்துக் கூறுவேன். முற்றிலும் உண்மை என்று கூறுகின்றேன். விதந்து கூறவில்லை. உறுதியாகத் தீர்மானிக்கப்பட்ட உண்மையையே கூறுகின்றேன் இறைவனுடைய சொரூப ஞானத்தை அறிய ஆவல்

கொண்டுள்ள என்னையும் இறைவன் காத்தருளட்டும். அந்தச் சொரூப ஞானத்தைப் போதிக்கவரும் குருவையும் காத்தருளட்டும். இவ்வாறு இருமுறை வேண்டி மும்முறை அமைதி அமைதி என்று கூறிமுடிக்கின்றான்.

முதலாவது அனுவாகம் இறைவனிடம் பிரார்த்தனை ரூபமாக அமைந்துள்ளது. ஒன்றாயும் பலவாயும் நின்று அருளுகின்றார் என்ற உப நிடதக்கருத்தை மணிவாசகப்பெருமான் " ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க" என்று சிவபுராணத்திற் குறிப்பிட்டுள்ளார்.

தைத்திரீயம் ஆறாம் அனுவாகம் ஸோகாமயத + + + ஸத்திய மித்தியாசக்ஷதே. இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்துப் பலரூபம் பெற்றவனுவேன், பல வடிவத்தைப் படைப்பேன் என்று ஒரு சமயம் பரம்பொருள் கருத்திற் கொண்டு சிந்தித்தது. இங்கே காணப்படும் உலகத்தைப் படைத்து அதனுள் மறைந்து கொண்டது. அப்பொழுது மாறி மாறி வருகின்ற உருவப் பொருளாகவும், எப்பொழுதும் ஒரேநிலையில் அருவப் பொருளாகவும், சாதி தொழில் குணம் இவைகளால் பெயர் கொண்டதாகவும், சாதி குணம் தொழில் இவை இல்லாமையால் பெயர் கொண்டழைக்க முடியாததாகவும், ஆதாரமுள்ளதாகவும், ஆதாரமற்றதாகவும், தானே பிரகாசிக்கும் தன்மையுடையதாகவும், பிறர்க்கு வெவ்வேறு பொருளாகத் தோற்றமளிப்பதாகவும், விகாரமில்லாது உண்மை வடிவமாகவும், விகாரம் பெற்றுப் பொய்த்தோற்றமுடையதாகவும் அப் பரம்பொருள் விளங்கியது. அப்பரம் பொருள் சத்திய வடிவமானது என்றும் ஞானிகள் கூறுவார்கள்.

இவ்வாறு உபநிடதம் பரம்பொருளின் வியாபகத்தை எடுத்துக் கூறுகின்றது. இதனையே மணிவாசகப் பெருமான் " பார்பதமண்டமனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப்பரப்பே " என்று ஒரு வாசகத்தால் விளக்கியுள்ளார். " விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் " என்றும் மற்றோரிடத்தில் விளக்கியுள்ளார். உபநிடத சாரத்தை அங்கங்கு எடுத்து அழகாகக் குறிப்பிட்டிருப்பதைக் காண உள்ளம் பேரானந்தமடைகின்றது.

தைத்திரீயம் 8-ம் அனுவாகம்

பீஷாஸ்மாத்வாத: பவதே + + + அகாமஹதஸ்ய. பரம்பொருளின் ஆஞ்ஞைக்குக் கீழ்ப்படிந்து காற்று வீசுகின்றது; கதிரவன் உதிக்கின்றான்; இந்திரன் அக்நி முதலியோர் தம் கடமைகளைச் செய்து வருகின்றனர்; இயற்கைப் பொருள்கள்யாவும் அவன் ஆஞ்ஞைக்கு உட்பட்டு வளர்ச்சி பெறுகின்றன; இளைஞன் காளைப்பருவம் பெறுகின்றான்; பல கலைகளைக் கற்றுத் திறமைசாலியாகின்றான்; திறமை பெற்றவனுக்கு இந்த நிலம் எல்லாச் செல்வத்தையும் அளிக்கின்றது; வெளிப்

பற்றை நீக்கிப் பற்றற்ருன் தாளை நினைத்துப் பரமானந்தத்தை அனுப விக்கின்ருன். இவ்வாறு பரம்பொருளின் பெருமையை இந்த மந்திரம் விளக்குகின்றது. இதனையே மணிவாசகப்பெருமான் சில வாசகங்களால் திருவாசகத்தில் எடுத்து விளக்கியிருக்கின்ருர்.

அருக்கனில் சோதி அமைத்தோன்
திருத்தகுமதியில் தண்மை வைத்தோன்
திண்திறல் தீயில் வெம்மை செய்தோன்
பொய்தீர் வானில் கலப்பு வைத்தோன்
மேதகுகாலின் ஊக்கம் கண்டோன்
நிழல்திகழ்நீரில் இன்சுவை நிகழ்த்தோன்
வெளிப்பட மண்ணில் திண்மை வைத்தோன்

உபநிடதமும் திருவாசகமும் ஒரே நோக்குடன் இறைவன் பெருமையைக் காண்கின்றன.

தைத்திரீயம் நாராயணவல்லி
முதலாம் அனுவாகம். **10ம்** மந்திரம்
நஸந்திருசே + + + தேபவந்தி

எங்கும் வியாபகமாய்ப் பரந்து விளங்கும் பரம்பொருள் கண் பார்வைக்குஉரியதாகின்றதில்லை. அவனுடைய உருவத்தை யாரும் கண்ணுல் பார்த்ததில்லை. பக்தியும் உறுதியும் முயற்சியும் கொண்டுதான் அவனை அறிய முடியும். இவ்வாறு அவனை அறிந்தவன் பிறவாத நிலையை அடைகிருன் என்று இந்த மந்திரம் இறைவனை அடைவதற்குரிய வழியைக் காட்டுகின்றது.

மணிவாசகப் பெருமான்
உள்ளத்துணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனுல் காட்சியும் இல்லோன்
விண்முதற்பூதம் வெளிப்பட வகுத்தோன்
..............................................................
ஊற்றிருந்து உள்ளம் களிப்போன்.
என்ற வாசகங்களால் பக்தியினுல் இறைவனை அறியலாம் என்பதை விளக்கியுள்ளார்.

தைத்திரீயம் **6**ம் பிரச்னம்
முதலாம் மந்திரம்
அம்பஸ்ய பாரே + + + சரதிகர்பே அந்த:

கரைகாணமுடியாத நீரிலும், மண்ணிலும், விண்ணிலும், ஆகாசவெளியிலும், உள்ளிலும், புறத்திலும் பேரொளி வாய்ந்த பரம்பொருள் வியாபித்து நின்று இரவியில் தன்னொளி பரப்பி அதனூடாக எல்லா

உயிர்களுக்கும் நாயகனுகி, உயிருக்குயிராகி விளங்குகின்ருன் என்று உபநிடதம் பரம்பொருளின் வியாபகத்தை உணர்த்துகின்றது. மணிவாசகப்பெருமான்

வானுகி மண்ணுகி வளிஆகி ஒளிஆகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய், என்ற சொற்றொடரால் உணர்த்துகின்ருர்.

பிரகதாரண்யகம் 4ம் அத்தியாயம்
3ம் பிராமணம்.
த்வேவாவ + + + + தியச்ச

பரம்பொருளின் உருவம் இரண்டு என்பது தெளிவு. அருவம் உருவம் என வழங்கப்படும். அருவமானது நித்தியமாயும், எங்கும் பரந்தும், கண்ணுல் காணமுடியாததாகவும் அமையும். உருவமானது அடிக்கடி மாறுபாடு உடையதாகவும், ஓரிடத்தில் உள்ளதாகவும், கண்ணுக்குத் தெரியக் கூடியதாகவும் அமையும். பஞ்சபூதங்களில் வாயுவும் ஆகாயமும் அருவமானவை. அவைகளில் அருவமாகவே மறைந்து அருளுகின்ருர். மற்றைய நீர், நிலம், தீ இவைகள் உருவமானவை. இவைகளில் உருவமாகவும் அருவமாகவும் நின்றருளுகின்ருர். மற்றைய நீர், நிலம், தீ என்பன விகாரம், இடம், பிரத்தியக்ஷம் (நேரில் தோற்றம்) முதலியவற்றை உடையன. இவற்றின் ஸாரமாக அமைந்து (நீர், நிலம், தீ இவற்றின் நிலேபேற்றுக்குக் காரணமாகவிளங்கும்) பிரத்தியட்சமாக விளங்குபவன் சூரியன் என்று உபநிடதம் விளக்குகின்றது. இறைவன் பஞ்சபூதங்களில் உருவமாயும் அருவமாயும் விளங்குகின்ருன் என்பதை இந்த மந்திரம் எடுத்து விளக்குகின்றது. மணிவாசகப்பெருமான் இதே கருத்தை.

''நிரந்த ஆகாயம், நீர், நிலம், தீ, கால் ஆயவை அல்லேயாய்
ஆங்கே கரந்ததோர் உரு'' என்று சுருக்கமாக ஒரு
வாசகத்தால் எடுத்து விளக்கியுள்ளார்.

ஈசாவாஸ்யம் 17 ஆவது மந்திரம். ''வாயுர நிலம் + + + கிருதம்ஸ்மர'' இவ்வுடல் சாம்பலாகும் தன்மையை முடிவாகக் கொண்டது. இந்த ஜீவான்மா பேரின்பமயமான பரமான்மாவை அடையட்டும். இறக்கும் தறுவாயில் பிரணவத்தை உச்சரித்துக் கொண்டு சங்கல்பரூபியான பரம்பொருளே நினைப்பாயாக என்று இந்த மந்திரம் விளக்குகின்றது. இக்கருத்தையே கீதையில் கண்ணபிரானும் எடுத்துக் காட்டியிருக்கின்ருர் (8-13) பரம்பொருள் வாசகமாகிய ஓம் என்னும் பிரணவத்தை உச்சரித்துக் கொண்டு என்னேச் சிந்தித்துக் கொண்டே உடலே விடுகின்றவன் உயர்ந்த கதியை அடைகின்ருன்.

சங்கல்பரூபியான பரம்பொருளே! உடலை விட்டு என்னுயிர் பிரியும் பொழுது என்னை நினைப்பீராக என்று பொருள் கொள்வாரும் உண்டு. இக்கருத்தையொட்டியும் வராஹ புராணத்தில் விளக்கம் காணப்படுகின்றது. மரமும் கல்லும் போன்ற உடல் மண்ணோடு மடிந்து போகும் பொழுது என்பக்தனை நான் நினைக்கின்றேன், மேன்மையான கதிக்கு அழைத்துச் செல்லுகின்றேன். இரண்டாவதாகக் கூறிய கருத்தையே வராஹ புராணம் சிறப்பித்துக் கூறியிருக்கின்றது.

சங்கல்ப ரூபியான பரம் பொருளே! எனது உடலை விட்டு ஆன்மா பிரியும்நேரம் உன் திருவடியை நினைப்பிப்பீராக என்றும் பொருள் கொள்ளலாம். இக்கருத்தை யொட்டிப் பெரியார் ஒருவரின் வசனம் காணப்படுகின்றது.

''எய்ப்பெண்ணை வந்து நலியும் போது
அங்கேதும் நானுன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கிப் போதே சொல்லி வைத்தேன்.''

இப்பெரியார் மிகவும் முன் கவனம் எடுத்து இறைவனிடம் அந்திம நிலையில் தன்னை நினைப்பிக்குமாறு வேண்டுகின்றார். துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய்நீ என்பதையும் இங்கே சிந்திக்கலாம்.

மணிவாசகப் பெருமானின் திருவாசகத்திலிருந்து இக்கருத்தையொட்டிய இருபாட்டையும் ஆராய்வோம்.

கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ
தேறும் வகை நீ திகைப்பும் நீ தீமை நன்மை முழுதும் நீ
வேறோர் பரிசு இங்கு ஒன்றில்லை மெய்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகை என்சிவலோகா திகைத்தால்தேற்றவேண்டாவோ.

தேறும்வகை நீ திகைப்பும் நீ என்றும் உடன் பாடாயும் எதிர்மறையாகவும் கூறி உண்மை யறியாது திகைக்கும்கால் உண்மையைக்காட்டித் திகைப்பை நீக்கவேண்டியது உன்பாரமன்றோஎன்றுகுறிப்பிட்டிருக்கின்றார்.

வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.

யாவும் உனது அருளால் நடைபெறுகின்றன. யான்வேண்டுவது ஒன்று உண்டாயின் அது உடலை விட்டு உயிர்பிரியும் நேரம் உன்னை நினைப்பதுவே..

அதுவும் உன் கருணையினுல் நடைபெற வேண்டுமேயல்லாது என்விருப்பத்திற்கு நடைபெறக் கூடியதல்ல. ஆகவே உடலை விட்டு உயிர்பிரியும் பொழுதும் நினைப்பிப்பதும் உன் அருளே என்ற உபநிடதக் கருத்தை அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றுர். மணிவாசகப் பெருமான் திருவாக்கில் உதித்த திருவாசகம், வேதப் பொருளாகவும் வேதாந்த சாரமாகவும் அமைந்துள்ளது. தமிழ் மறைகள் கூறுவனயாவும் மெய்ப் பொருளாம் சிவபரம் பொருளையே குறிப்பனவாகும்.

யோ வேதாதௌ ஸ்வர: ப்ரோக்த:
வேதாந்தேச பிரதிஷ்டித:
தஸ்ய பிரகிருதிலீனஸ்ய
ய: பரஸ்ஸ மஹேசுவர:

வேதத்தின் ஆதியிலும் வேதத்தின் முடிவிலும் எந்தப் பிரணவம் கூறப்படுகின்றதோ, வேதாந்தத்தில் எந்தப் பிரணவம் சிறப்பாக எடுத்து வர்ணிக்கப்பட்டுள்ளதோ, அந்தப் பிரணவம் பரம்பொருளின் உடலாக அமையும். அந்தப் பிரணவத்திற்கு [வாச்சியமாக] பொருளாக விளங்குபவன் மகேசுவ்ரன் ஆவான்.

✶


# லேடன்

**யாழ் நகரமக்களைக் கவர்ந்தது**
சிறந்த தயாரிப்புகளுக்கு (LEYDEN)

**லேடன்!**

லேடன்
★ **பெனியன்கள்** ★ **சேட்டுகள்**
★ **ஸ்ப்போட் சேட்டுகள்** ★ **கால்மேசுகள்**

**தரத்தில் உயர்ந்தவை! விலையில் குறைந்தவை!!**
எங்கும் கிடைக்கும்.

ஒரு தரம் உபயோகித்துப் பாருங்கள்
உண்மை விளங்கும்.


லேடன் என்று கேட்டு வாங்குங்கள்.
**லேடன் இண்டஸ்றீஸ் லிமிட்டெட்,**
7, ஆஸ்பத்திரிவீதி, **யாழ்ப்பாணம்.**


# START THE DAY ON THE RIGHT FOOT

*in*

# Ceynit

**S-T-R-E-T-C-H Nylon Socks**




**Ceynit S-T-R-E-T-C-H Nylon Socks are smart and durable. You can choose from a wide variety of self and shot colours. Begin your day well and look your very best in hard-wearing and durable Ceynit S-T-R-E-T-C-H Nylon Socks.**

Sole Distributors;

**CASSIMS**


220, 2nd CROSS STREET, PETTAH.

Manufactured by

**CEYLON KNITWEAR INDUSTRIES LTD.**

84, Reclamation Road,
Colombo 11.

GRANTS 8




## எவ்வாறு

# சன்லைட்

## மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

### வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது, இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர். மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிறார்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம், இதுதான்—ஏனெனில், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

ஒரு லீவர் உற்பத்தி

JWT/S/1X54




(IMPORTERS & STOCKISTS OF FACTORY, MARINE & ESTATE REQUISITE)

*For all your requirements in*

Manilla Ropes
Wire Ropes
Ship Tackles
Engineering Bolts &
Nuts, Screws and Nails
Boiler Packings
Cotton & Rags wastes
Ripes &
Fittings G I. & B I.
RUBBER
INSERTIONS
SHEETS
etc etc.

**353, Old Moor Street, Colombo-12**



தொலை பேசி இல: **657**



# V. M. சண்முகம் & பிறதர்

## மொத்த வியாபாரிகளும் கமிஷன் ஏஜெண்டும்

47, கே. கே. எஸ். வீதி, கிராண்ட்பஜார்,
**யாழ்ப்பாணம்.**

கிளை: சிற்றி அரிக்கநட் கொம்பனி
இல. 74, பழைய சோனகதெரு, கொழும்பு.

---

Telephone No. 657

# V. M. SHANMUGAM & Bro.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

Branch:
**CITY ARECANUT COMPANY**
No. 71, Old Moor Street.
**COLOMBO.**
Telephone: 2860

47. K. K. S. Road,
GRAND BAZAAR, JAFFNA.

தந்தி: ரோகிணி
தொலைபேசி: 296

ஸ்தாபிதம். 1929

# S. R. S.

## ஜவுளி மாளிகையில்

★ C. W. E. ஜவுளிகள்;
★ கைத்தறிப் புடவைகள்;
★ லங்காமில் உற்பத்தி திரவுசுகள்;
★ மற்றும் உள்ளூர் தயாரிப்பிலான
★ பட்டு பருத்தி துணிகள்;

யாவும்

வியாபாரிகள் மொத்தமாகவும் - சில்லறையாகவும்
எங்களிடம் நிதான விலைகளில் பெறலாம்.

## எஸ். ஆர். செல்லத்துரை.

அங்கீகாரம் பெற்ற C. W. E.
மொத்த, சில்லறை, விற்பனையாளர்

216, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.



உ

அன்பளிப்பு

## சிவபாலன் பீடிக் கம்பெனி

83, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12

தொலைபேசி:
அலுவலகம்: 4929
வாசஸ்தலம்: 83783

# சம்பந்தர் செந்தமிழ்

**வித்துவான் பொன். முத்துக்குமாரன்** B. O. L.
தமிழ் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்.

சைவசமயம் தளர்ச்சியுற்ற காலத்தில் அதனைக் காத்து வளர்த்து நிலைநிறுத்திய பெரியார்கள் சைவசமய குரவர்கள் என்றும் சைவசமய ஆசாரியர்கள் என்றும் கூறப்படுவர். அவர்கள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வருமாவர். இவர்களில் முதல் மூவரதும் வரலாறுகள் பெரிய புராணத்திலும், மாணிக்கவாசக சுவாமிகளின் வரலாறு திருவாதவூரடிகள் புராணம் திருவிளையாடற் புராணம் ஆகியவற்றிலும் கூறப்பட்டுள்ளன. அவர்களைப்பற்றிப் புராணங்ளில் கூறப்பட்ட வரலாறுகள் அவர்களது தடத்தலக்கணத்தையே பெரும் பாலும் கூறுவனவாம். அவர்களது சொரூப லக்கணத்தைக் கூறுவன மெய்கண்ட சாத்திரங்கள் என்னும் சைவசித்தாந்த சாத்திரங்களேயாம். ஆகவே, ஆளுடைய பிள்ளையார் முதலாகிய சமய குரவர்களின் உண்மையியல்பு யாது என்பதை அறியவிரும்பின் நாம் சித்தாந்த சாத்திரங்களையே நாடிக்கற்றல் வேண்டும். திருக்களிற்றுப் படியார் என்னும் ஞானப்பனுவலை ஆராய்வோமாயின் அதன்கண் அவர்களது உண்மையியல்பு தெளிவாகக் கூறப்பட்டிருத்தலைக் காண்போம். அந்நூலில் அவர்களது சொரூப நிலையைப்பற்றிக் கூறிய பாடலுள் ஒன்று பின்வருமாறு:

''பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன்றேவிக் கராங்கொண்ட – பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம் போலல்லாமை காண்.''

இதன் பொருளை நோக்குமிடத்து, திருஞானசம்பந்தர் முதலியோர் சிவமாந்தன்மை எய்தியவர்கள் என்பதும், அவர்களது மனமொழி மெய்களின் செயல்கள் சிவன்செயல்கள் என்பதும் தெளிவாகும். எனவே, திருஞான சம்பந்தப் பெருமானார் அருளிய பாடல்களை ஆராய்வோர் அவை அருள் வாக்கு என மனத்திற் கொண்டே ஆராய்தல் வேண்டும். காப்பியங்களும் பிரபந்தங்களும் பாடிய புலவர்களின் வாக்குக்களோடு ஒப்ப நோக்கின் அது பசுப்பாலையும் கள்ளிப்பாலையும் ஒப்ப நோக்குதல் போலாகும்.

மூவகையான்மாக்களுட் சகலருட் பக்குவமுடையாருக்கு ஞானோபதேசஞ் செய்தற் பொருட்டுத் திருவருள் நேர்முகமாக வாராது சிவ

7

மாந்தன்மை யெய்திய சீவன்முத்தர் ஒருவரிடமாய் நின்று அருள்செய்யும் என்பது சைவசாத்திரங்களுட் கண்டது. அவ்வாறேதான் திருவருளானது திருஞானசம்பந்தரது வாக்கில் நின்று ''தோடுடைய செவியன்', என்று தொடங்கும் துதிப்பாடல் முதலாகிய தேவாரங்களை அருளிச் செய்தது என்று நாம் தெரிதல் வேண்டும்.

வேதம் இறைவனால் அருளப்பட்டது. அது வடமொழியிலேயே உள்ளது. அந்தணர்களாலேயே ஓதப்படுவது, எழுத்து வடிவம்பெருது குருசீடப் பரம்பரையில் ஓதப்பட்டவாறே நிலைபெற்று வந்தமையால் அது எழுதாக்கிளவி என்னும் பெயரையும் உடையது. தமிழும் தமிழ் மக்களும் செய்த அருந்தவப் பயனுய்த் திருஞானசமபந்தர் சீர்காழியில் அவதரித்தலும், வடமொழியிலேயே இருந்த வேதம் அவரது வாக்கில் நின்று திருநெறிய தமிழ்த்தேவாரப் பதிகங்களாக உருப்பெற்று வெளிப் படுதலும் நிகழலாயின. எனவே, இருக்கு, யசுர், சாமம் என்னும் வேதங்கள் இத்தன்மையன என்பதையும், அவை கூறும் பொருள் இது என்பதையும் அவ்வேதங்களை அறிந்தாரும் அறியாதாரும் எளிதிற் றெரிந்து கொள்ளுதற்குப் பெருந்துணை புரிவன ஆளுடைய பிள்ளையார் அருளிய தேவாரங்களேயாகும். இது, '' தெருளுமெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தையிருள் நீங்கவும் **எழுது சொன்மறை** அளிப்பவர் '' ''வண்தமிழால் **எழுதுமறை மொழிந்த பிரான்**'', ''புதிய செந்தமிழ்ப் **பழமறை மொழிந்த பிரான**'' எனவரும் சேக்கிழார் பெருமான் திருவாக்குக்களால் தெளியப்படும்.

திருஞானசம்பந்தப்பெருமான் அவதரித்தற்குமுன் சில நூற்றாண் டுகள் தமிழ் நாடு சமணமதத்தவரின் ஆதிக்கத்தில் இருந்தது. அவர்கள் தம்சமயக் கொள்கையைக் கடைப்பிடிக்குமளவோடு நில்லாது தமிழ் மக்கள் தொன்றுதொட்டுக் கைக்கொண்டு வந்த சைவக் கொள்கை யைக் கண்டித்தலும் சிவனை நிந்தித்தலும் செய்யலாயினர். அந்நிலையில் சிவபாதவிருதயர்க்கும் பகவதியார்க்கும் அருந்தவப் புதல்வராய் அவ தரித்து மூன்றுவயதில் சிவஞானம் பெற்ற அப்பிள்ளையார், தாம் பெற்ற மெய்ஞ்ஞானத்தால் தாம் முத்தியெய்தும் வழியில் நிற்றலோடு தம் காலத்துத் தமிழ் மக்களுக்குச் சைவக்கொள்கையை வலியுறுத்தலும், சிவனது அருட்பெருமையை தெளிவுறுத்தலும் செய்யத் திருவுள்ளங் கொண்டனர். ஆதலினுலேயே சமயகுரவர்களில் ஏனையோரது அருட் பாடல்களைப்போலல்லாமல் திருஞானசம்பந்தப் பெருமானுரது செந்தமிழ் சிவபிரானுரதுதடத்த லட்சணத்தினையும்,சொரூப லட்சணத்தினையும்,சகள நிட்களத் திருமேனிகளையும், அவர் அடியார்க்கு அவ்வக்காலத்தில் அருள் செய்த சிறப்புக்களையும், அவரை அடியார்கள் வழிபட்டுய்ந்த வரலாறு களையும், அவரை வழிபடும் முறைகளையும் பெரும்பாலும் பதிகந்தோறும்

விரித்துக் கூறுவனவாயுள்ளன. அதுமட்டுமன்றி, ஆளுடைய பிள்ளையாருடைய பதிகங்கள் ஒவ்வொன்றினதும் இறுதியில் அப்பதிகத்தை நம்பித் தெளிந்து ஓதுதலை நியதியாகக் கொண்டவர்கள் எய்தும் பயனும் கூறப்பட்டுள்ளது. அவ்வளவில் அமையாது, பிள்ளையார் சிறப்பாக நான்கு திருப்பதிகங்களில் ' ஆணை நமதே' என அறுதியிட்டுக் கூறுவதும் நோக்கத்தக்கது.

இவற்றால், சம்பந்தர் செந்தமிழ் திருவருள் வாக்கென்பதும், வேதத்தின் தமிழ் வடிவம் என்பதும், சைவக் கொள்கைகளையும் சிவ பரத்துவத்தையும் பெருமபாலும் பதிகந்தோறும் எடுத்து விரித்து அறிவுறுத்துவ தென்பதும் புலனும்.

---


எ. ஆர். எஸ். மில்ஸ்

கைத்தறி (கான்ட் லூம்)

சாரி, சாரம், வேட்டி, துவாய்

பெட்சீட் வகைகளுக்கு

A. R. S. மில்ஸ்

48, புளூம்மெண்டால் வீதி,

கொழும்பு - 13க்கு

விஜயம் செய்யுங்கள்.

# அப்பர் பெருமான் அருள் வாக்கு

'சம்பந்தன்.'

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகி
லொருநாவுக் குரைசெய்ய வொண்ணாமை யுணராதேன்.

—சேக்கிழார்

ஓதுவார்க்குங் கேட்பார்க்கும் அன்பை வளர்த்து, கருங்கல் மனமுங் கரைந்துருகச் செய்யும் பெருஞ்சிறப்பினதாகி விளங்குந் தேவாரம் அப்பர் அருளியது.

— நாவலர்

வாகீச மகரிஷியே அப்பர் பெருமானாய் அவதரித்தார். திருவருளின் கருத்தை யறியாது காட்டிய கருணையே அதற்கு ஏதுவாயிற்று. வாகீசருக்கு, திருவருட் கருத்தை யுணர்ந்தே செயற்பட வேண்டுமென்பது தெரியாததன்று. அவர் பெருங்கருணைக்கடலாகிய ஆன்மநாயகரது திருவடி நீழற் பேரானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைத்தவர். தக்கதை அறிந்து செயற்படுவது அவருக்கு முடியாததன்று. ஆயினும் அவர் மறந்தவர் போலானார். நம்மை யெல்லாங் கரைசேர்க்கவேண்டு மென்னுந் திருவருட்கருத்து அவருக்கு மறதியை ஊட்டியது போலும்.

திருவருள் கட்டளையிட்டது. வாகீசர் அவதரித்தார். ஆயினும் அவர் பெற்ற பேரானந்த அனுபவங்கள் அவரால் மறக்கத்தக்கனவல்ல.

''ஆணவ மலபரிபாகத்தினாலே தீவிரதரசத்திநிபாதம் உண்டான போது, கருணாநிதியாகிய சிவன், தமது திருவருளினாலே சிவஞானத்தை யுதிப்பித்து, சிவானந்தம் அனுபவிப்பித்து, மேல்வரும் பிறப்புக்கேதுவாகிய சஞ்சித ஆகாமியங்களைக் கெடுத்து எடுத்த சரீரத்திலே பிராரத்தம் புசிக்கும்படி சீவன் முத்தனாக வைத்து தேகாந்தத்திலே பரமுத்தியைக் கொடுத்தருளுவர்'' என நாவலர் பெருமான் சீவன்முத்தர் நிலையை விளக்குவர்.

அப்பர் பெருமான் சீவன்முத்தர். ஆயினும் அவர் அவதரித்த போது பிரபஞ்சமயக்கம் அவரையும் மறைப்பது போலக் காட்டியது. அவரை மேலுந் தயார் செய்யத் திருவருள் கருதிய கருத்தும் அதுவே போலும்.

''நீரிற் பால்போல நிற்கின்ற நீர்மையது'' திருவருள் என்பர் திருமூலர். இடையீடின்றி நீங்காது பிரவாகிக்குந் திருவருள் பக்குவநிலை

யெய்தியதும் ஆட்கொள்ளுமாறு அவரை ஆட்கொண்டது. உடனே ''திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர்'' திருவாய் மலர்ந்தருளினர். அவைதாம் ஈடும் இணையுமற்ற–அருட்பெருங் கடலாகிய சிவபெருமானது திருவடிகளைச் சரணடைய உலகுபெற்ற–அமுதின் அமுதான அப்பர் தேவாரங்களென்ற அழிவற்ற அருட் செல்வம்.

4ம், 5ம், 6ந் திருமுறைகளெனச் சான்றோர் முறை செய்து வைத்த பெருநிதியமும் அவைகளே.

''வேதத்தின் ஞானகாண்டப் பொருளைச் சிவாகமத்துக்கு மாறு படாவண்ணம் உள்ளபடி யறிவிக்குந் தமிழ் வேதங்கள் தேவாரம் திரு வாசகம் என்னும் இரண்டுமாம்'' என்பர் நாவலர் பெருமான்.

நித்தியரும், சர்வவியாபகரும், அநாதிமலமுத்தரும், சர்வஞ்ஞ ரும், சர்வகர்த்தாவும், நித்யானந்தரும், சுவதந்திரருமாய் உள்ளவர் சிவபெருமான். ''பூங்கமலத்தயனொடுமாலறியாத நீதி''யாய், எனமணி வாசகப் பெருமானும், ''உரையற்ற வொன்றாய்'' எனத் திருமூலரும், ''மனம் வாக்கினிற்றட்டாது நின்ற வொன்றாய்'' எனத் தாயுமானவரும், ''குற்றமறுத்தார் குணத்தினுள்ளார்'' எனச் சம்பந்தப் பெருமானும், ''ஒருமேக முகிலாகி யொத்துலகந் தானாய் ஊர்வனவும் நிற்பனவும் ஊழிகளுந்தானாய் பொருமேவு கடலாகிப் பூதங்களைந்தாய்ப் புனைந்தவன்'' எனச் சுந்தரரும் கண்ட பெருங்கருணைக்கடலை ''இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே'' என்று அப்பர் பெருமான் காட்டுகிறார்.

உரையற்ற வொன்றைப்பற்றிய வுரைகளே தேவாரங்கள். உரைப்பார், உரையுகந்து உள்கவல்லார், அவர்தம் உச்சியான், இவர்கள் நம்போலியர் உணர்வுக்கு எட்டாத உயர்வுடையர்,

திருவருளின் திறனுணர்ந்த சீவன்முத்தர்கள் உரைத்தவைகளைப் பற்றி, உள்ளபடிபார்த்தால் நமக்கு ஒன்றுமே சொல்லத் தெரியாது. மயக்கத்தால் சொல்லத்துணிவது ஈசுரத்துரோகமே.

திருவருட் சம்பந்தத்தை மார்ச்சாரசம்பந்தம் மற்கடசம்பந்தம் என இருவகைப்படுத்துவர் சான்றோர். பூனை குட்டியைத் தானகவே எடுத்துச் செல்வதுபோலச் சீவன்முத்தருட் சிலர் ஆட்கொள்ளப்படுவர். சிலரோ குரங்கைக் குட்டியானது பற்றிக் கொள்வதுபோல இறைவனை விடாது பற்றிக் கொள்ள ஆட்கொள்ளப்படுகின்றனர்.

''நீங்காதென் னுள்ளத் திருந்தாய்''

''நோயவை சாருமாகில் நோக்கி நீயருளுவாயே''

"தில்லையுளாட வெடுத்திட்ட பாதமன்றே வென்னை யாட்கொண்டதே"

என இங்ஙனம் வருவனவற்றை நோக்கும் போது மார்ச்சார சம்பந்தமும்,

"இரவும் பகலும் பிரியாது வணங்குவன்"

"படைக்கலமாகவுன் நாமத் தெழுத்தைந்தென் நாவிற கொண்டேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறணிந்துன்னடைக்கலங் கண்டாய்"

"நின்னலாற் களைகண் ஆரே"

என இங்ஙனம் வருவனவற்றை நோக்கும்போது மற்கட சம்பந்தமும் பெற்று அப்பர்பெருமான் ஆட்கொள்ளப்பட்டார் என்பது புலனாகின்றது.

உரையாற்ற வல்லவராகிய மகான்கள் திருவருட் பேற்றின் திறனை — இறையுண்மைகளைப் பேசியன ஒன்றிலொன்று வேறாகாமலே அமைந்திருக்கின்றன.

"ஆரலுமென்னை யமட்ட வொண்ணுதினிச்
சீரார்பிரான் வந்தென் சிந்தை புகுந்தனன்"
'நமன்வரின் ஞானவாள் கொண்டே யெறிவன்." — திருமூலர்

'நாமார்க்குங் குடியல்லேம் நமனையஞ்சேம்"
'என்றும் நாம் யாவர்க்கு மிடைவோமல்லேம்
இருநிலத்தி லெமக்கெதிரா வாருமில்லை
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றேம்"
"தென்றிசைக்கோன் தானேவந்து கோவாட்டிக் குற்றேவல்
செய்கென்றாலும் குணமாகக் கொள்ளோம்" — அப்பர் பெருமான்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுரவாயில்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் கான மணிவிளக்கே. — திருமூலர்

"காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமையவாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே. — அப்பர்பெருமான்

"அருள்வழி காட்டுவதஞ் செழுத்தாமே"
"அஞ்சிலிறை வனருள் பெறலாமே"
"அருவினை தீர்ப்பது மஞ்செழுத்தாமே" — திருமூலர்

"பாவத்தை நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே"
"நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே"
"நல்லக விளக்கது, நமச்சிவாயவே"
"நன்னெறியாவது நமச்சிவாயவே" — அப்பர் பெருமான்

"இருதலைக் கொள்ளியினுள் ளெறும்பொத்து" —மணிவாசகப் பெருமான்

"இருதலை மின்னுகின்ற கொள்ளிமேல் எறும்பென்னுள்ளம்"
—அப்பர் பெருமான்

இங்ஙனம் சீவன் முத்தர்களாகிய மகாத்துமாக்களின் திருவுளக் கருத்துக்கள் எல்லாமே யொன்றி முடிந்தவை.

"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயாய் எரிகொள இருந்து நோக்கி"
—இறைவன் கழலடி கண்ட செல்வர் அப்பர் பெருமான்.

"மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையு மன்றே"
என்பதை அனுபவத்திற்கண்ட சீவன்முத்தர் அப்பர் பெருமான்.

அவருடைய அருள்வாக்கு இத்தகையது என வரையறை செய்ய எண்ணுவதே அபசாரம்.


தந்தி: வைரம் தொலைபேசி: 7199

**பொ. அம்பலவாணர்**



**தங்க, வைர நகை வியாபாரம்**

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

**தங்கப்பவுண் வைர நகைகள்**
**எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்**



Branch:
**Sovereign Jewellery Stores**
114, Sea Street, COLOMBO 11.
T. Phone: 5662.

# சுந்தரர் தேவாரம்

வித்துவான் க. கார்த்திகேசு B.A.
விரிவுரையாளர், காட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

சொற்பதப் பொருள் இருளறுத்தருளும் தூயசோதியாகிய சிவபெருமான், ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, எப்பொழுதும் வேத மோதிய வண்ணம் இருக்கின்றனர். அவர், வேதமோதுகின்றபடியாற்றான் சிருஷ்டிகள் ஞானநாட்டமுடையனவாயிருக்கின்றன. ஞானோதயமும் அதனூடாக முத்திப்பேறும் இறைவனுடைய இக்கிருத்தியத்தாற்றான் ஏற்படுகின்றன. சமயகுரவர் நால்வரும் எம்பெருமான் வேதமோதுவ தைப் புகழ்ந்து பாடினர். திருப்பழனப் பதிகத்தைச் சம்பந்தர் ''வேத மோதி'' என்று தொடங்கினர். ''வேதமோதும் விரிசடை அண்ணலார்'' என அப்பர் ஏத்தாநின்றார். ''வேதமோதி வெண்ணீறு பூசி'' என்று சுந்தரர் பாடினர். ''வேத மொழியர்'' என மணிவாசகர் அன்னைப் பத்தைத் தொடங்கினர். இறைவன், தாம் வேதமோதுவதோடு நின்று விடவில்லை, அறங்குன்றி மறமோங்கும் பொழுதெல்லாம் அவதார புருடர் களை அனுப்பி, அவர்கள் வாயிலாகவும் வேதத்தை ஆன்மாக்களுக்குப் புகட்டினர். எம்பிரான், எம்மீது கொண்ட கரையிலாக் கருணை காரண மாகவே சமயகுரவர் நால்வரையும் தந்தருளி, வேதசாரம் நிறைந்த தேவாரத்தையும் திருவாசகத்தையும் பாடுவித்தார்.

சுந்தரர் தேவாரத்தைப் பற்றி இக்கட்டுரையிற் சில குறிப்புகள் தரப்படுகின்றன. பொதுவாகத் தேவாரத்தைப்பற்றிக் கட்டுரை எழுதுதல் இலகுவான காரியமன்று. தேவாரம் ஒவ்வொருவர் மனத்திலும் நாவிலும் ஊர்வது; தேடித்தேடொணாத் தேவனை எம்முள்ளே தேடிக்கண்டு கொள்வதற்குச் சாதனமாகவுள்ளது. துஞ்சியும் பிறந்துஞ் சிறந்துந் துயக்கறுத மயக்காகவுள்ள வாழ்க்கையை ஒழித்தற்குத் தொண்டரீயன பாடும் வண்ணம் சுந்தரர் புத்தி கூறுகின்றார். அவ்வாறு பாடுந் தொண்டு தான் தேவாரம். திருவலஞ்சுழிவாணனை வாயாரப் பாடிவழிபடும் புண்ணியத்தைச் செய்தவர்களாகிய சைவர்கள், அந்தியும் நண்பகலும் தேவாரத்தைப் பாடவேண்டும். அது மருந்தும் மந்திரமுமாகவுள்ளது; இம்மையில் வந்து மூடும் முன்னைச் செய்வினையைப் போக்கவல்லது. அறி தற்கரிய மறைகளைத் தேவாரமாகத் திரட்டி எமக்கருளினர் சுந்தரர். அத்தகைய பெருமைவாய்ந்த தேவாரத்தை நாம் நன்கு பயின்று நாவால் நவின்று, முக்கணான் அடிசேர முயல வேண்டும். அவ்வாறு செய்யத்தவறியவர்கள் காக்கைக்கே இரையாகிக் கழிவரே.

தேவாரம் பாடிய மூவருள் சுந்தரருடைய வாழ்க்கையே எம் வாழ்க்கை போன்றது. சம்பந்தர் இளமையிற் சோதியுட் கலந்தார். அப்பர் துறவு பூண்டு முத்தியடைந்தார். சுந்தரரோ இல்லறத்திற் புகுந்து, மனை வாழ்க்கை மகிழ்ந்து, சுந்தரவேடங்களால் துரிசு செய்த தொண்டனுய்த் திகழ்ந்தார். அவருக்குப் பொன்னும் போகங்களும் வேண்டியிருந்தன. அவர் சாதாரண மக்கள்போல நோயால் வருந்தினர். அவருக்குத் துன்பங்களும் ஏற்பட்டன. போகியும் யோகியுமாயுள்ள இறைவன் போகிக்கு எடுத்துக்காட்டாகச் சுந்தரரை எங்களுக்குத் தந்தார்போலும்.

கல்விகற்று, தொழிலிலமர்ந்து, குடும்ப வாழ்க்கை நடத்தி, பிள்ளைகளை ஒருவழியில் விட்ட பின்னர்தான் ஒருவர் கடவுளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பது சாதாரண மக்கள் கருத்து. அதாவது கடவுள் வழிபாடு அறுபது வயதுக்குப் பிந்தியது எனச் சுருக்கமாகக் கூறிவிடலாம். இக்காலத்திலல்ல எக்காலத்திலும் இவ்வெண்ணம் மக்களிடையே இருந்து வந்திருக்கிறது. சுந்தரர் காலத்தவரும் அப்படியே எண்ணினர்.

தேகபலம் மனேபலம் இளமையிற்முன் உண்டு. வயது வர இவை குன்றிவிடும். உடலானது நோய்வாய்ப்பட்டுத் தளர்ந்து எதையும் செய்ய முடியாத நிலையை அடைந்துவிடும். மற்றக்கருமங்களைச் செய்தற்கு இளமை பொருத்தமாயிருப்பதுபோல, கடவுளை வழிபடுதற்கும் அதுதான் பொருத்தமானது. ஆனபடியால் கடவுளைத் தேடுவதற்கு அறுபது வயது வரை காத்திருத்தல் தப்பிதம்; இளமைதான் அதற்கு மிக உகந்த காலம். சுந்தரர் இவ்வுண்மையை மேல்வரும் தேவாரத்தில் விளக்கியிருக்கிமுர்.

> ''புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்துநீயுரை யால்தளர்ந்
> தறம்புரிந்து நினைப்பதாண்மை அரிதுகாண்இஃ தறிதியேல்,
> திறம்பியாதெழு நெஞ்சமேசிறு காலைநாமுறு வாணியம்,
> புறம்பயத்துறை பூதநாதன் புறம்பயந்தொழப் போதுமே.

''நெஞ்சமே'' என்று சொல்லும்பொழுது அவர் எங்கள் ஒவ்வொருவரையுஞ் சுட்டுகின்முர். கடவுளைத் தேடுதல், நாம் சிறு காலையில் [இளம் பராயத்தில்] செய்யவேண்டிய வாணியம் [வாணிபம்] என்ற பாடத்தை எங்களுக்குக் கற்பிக்கின்முர். இவ்வுண்மையைச் சுந்தரருடைய வாழ்க்கையும் உணர்த்துகின்றது. கல்வியும், தொழிலும், பிள்ளையும் எம்பிரயாணத்தில் தோன்றும் காட்சிகள்.

வாழ்க்கையில் எங்களுக்கு அனேக தேவைகளுண்டு. கல்வி, பணம், தேகாரோக்கியம் ஆதியவற்றைப் பெறுதற்கு நாங்கள் ஒவ்வொரு

வரும் முயலுகிறோம். இவற்றை யாரிடமிருந்து பெற முயலுகிறோம் என்பதைச் சிந்திப்போம். எங்களைப் போலத் தேவைகளுள்ளவர்களும், நாங்கள் கேட்பதைத் தருதற்குத் தகுதியில்லாதவர்களுமாய பிற மனித ரைத்தான் கேட்கிறோம். நோய் பீடித்தவுடன் ஒரு வைத்தியரிடம் ஓடுகிறோமேயன்றி, எல்லாந் தர வல்லவராகிய இறைவனை நாங்கள் எண்ணுவதில்லை. சுந்தரர் தமக்குக் கஷ்டங்கள் ஏற்பட்ட பொழுது, இறைவனிடமே முறையிட்டார். பொன் வேண்டிய பொழுதும் இறை வனிடமிருந்துதான் பொன்னைப் பெற்றார். பெண்ணையும் இறைவனைத் தூதனுப்பித்தான் பெற்றார். அவருக்கு வேண்டிய சகல தேவைகளையும் சிவபெருமானிடம் முறையிட்டே பூர்த்தி செய்தார். இவ்வாறு நாங்கள் ஒவ்வொருவரும் மனிதரிடமின்றிக் கடவுளிடமே முறையிட்டு எங்களுக்கு வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டுமெனச் சுந்தரர் விரும்பினர். வேண்டுவார் வேண்டுவன வெல்லாம் ஈயும் கருணை வள்ளலிடமே நாங்கள் வேண்டுதல் செய்யவேண்டுமென்ற கருத்தடங்கிய திருப்புகலூர்ப் பதிகத்தை நோக்குவோம்.

''தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும் சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதரும் சோறுங்கூறையும் ஏத்தலாம்இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற் கியாதும்ஐயுற வில்லையே.''

இத்தேவாரம் மாத்திரமல்ல, இப்பதிகத்திலுள்ள எல்லாத் தேவாரங் களையும் நாங்கள் பன்முறையும் படிக்க வேண்டும். கடவுளையே எங்கள் புகலிடமாகக் கொள்ளப் பழகவேண்டும். புகலூரில் எழுந்தருளிய ஈசனைப் பாடினல் இம்மையிலும் அம்மையிலுமுள்ள சகல போகங்களையும் நாம் எளிதிற் பெறலாம். பொய்ம்மையாளரைப் புகழ்வதால் நாங்கள் எவ்வித நன்மையையும் அடையப்போவதில்லை. சுந்தரர் இவ்வுண்மையை எங்களுக்குக் கற்பிக்கின்றார்.

இறைவன் பிழை செய்பவர்களுடைய பிழைகளைப் பொறுத்து, அவர்களுடைய குற்றங்களைக் குணமாகக் கருதும் தன்மையுடையவர். ஒருவன் எவ்வளவு பாவஞ் செய்தவனுயிருந்தாலும், '' எம்பெருமானே! என்னைக்காத்தருள வேண்டும்'' என்று அவருடைய திருவடிகளை வணங் குவானுகில், அவனுக்கு வீடுபேற்றையே அளித்துவிடுவார். சுந்தரர், தாம் ஒரு பாவி என்றே கருதினர். ''அழுக்கு மெய்யுடையவன்'' என்றும் ''கொடியவன் என்றும்'' ''பலபொய்யேயுரைப்பவன்'' என்றும் தம்மைக் கூறிக் கொண்டார். எனினும்,

''அடியேன், புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம் போற்றி
போற்றி என்றன்பொடு புலம்பி,
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவடுதுறை ஆதிஎம் மானே''

தாம் பாவியாயிருந்தாலும், தமக்குக் கட்டாயம் வீடுபேறு தரவேண்டுமென்று இறைவனோடு வன்மை பேசினர். அவ்வாறு தான் கேட்பதற்கு நியாய மென்னவெனில்—

''நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன் நாவினுக் கரையன் நாளைப்போ
[வானும்,
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி கண்ணப் பன்கணம் புல்லனென்
[றிவர்கள்,
குற்றஞ் செய்யினும் குணம்எனக் கருதும் கொள்கை கண்டுநின்
[குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும் பொய்கை சூழ்திருப் புன்கூர்
[உளானே''

சுந்தரருடைய இவ்வேண்டுதல் கர்மிகளாகிய எங்களனைவருக்கும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் மனவுறுதியையும் தருகிறது. சுந்தரரை இத்தகைய சூழலிலமர்த்தித் தம்மை இவ்வாறு கேட்கும்படி செய்த சிவபெருமானுடைய திருவிளையாடல் ''என் அடியார்கள் பஞ்சதுட்டராயிருந்தாலும் அவர்களுக்கு முத்தியளிப்பேன்'' என்ற பான்மையை விளக்குகிறது. மேல்வரும் திருநாவுக்கரசர் கூற்றும் இச்சந்தர்ப்பத்திற் குறிக்கற்பாலது—

''பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாயன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே.''

சுந்தரருடைய திருவடிகளை வணங்கி அடியார்க்கும் அடியவராகிய அவருடைய தேவாரத்தைத் தினமும் பாராயணஞ்செய்து, அவர் பெற்ற பேற்றைப் பெற முயலுவோமாக.

# முனி மொழி

வேதாகம பூஷணம் கு. பாலசுந்தரக் குருக்கள், B. A. (Hons)
விரிவுரையாளர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னுகம்.

''தேவர் குறளும் திருநான்மறை முடிபும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.''

என்பது ஔவைவாக்கு.

இதன் பொருள்:- தேவர் குறள் முதலாகக் கூறப்பட்டன யாவும் தம் முள் ஒத்தகருத்துடையன; ஒன்றுக்கொன்று மாறுபாடுடையனவல்ல என்பதாம், ''முனி மொழி'' என்பதற்கு ''முனிவனுகிய மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய'' என்றும் கூறுவர். ஆனுல் முனிவனுகிய வேதவியாசர் அருளிச்செய்த பிரம்மசூத்திரங்கள் என்பதே பண்டைய வழக்கு. ஆதலின் அக்கருத்தே கொண்டு எமது வியாசத்தையும் தொகுப்பாம்.

**வியாசர்: பெயர்க்காரணம்:**

வியாசர் என்றுல் தொகுப்பாளர் அல்லது விரிவுரையாளர் என்பது பொருள். அனேக சாகைகளாகப் பரந்துகிடந்த வேதங்களை அவற்றின் தன்மை, பொருள் முதலியன நோக்கி அவற்றை நான்காக வகுத்தான் ஒரு வியாசன். அதனுல் அவன் வேத வியாசன் எனப்பட்டான். கொடுக்கப்பட்ட தலைப்புக்களில் விஷயங்களை விரித்து, விளக்கி எழுது வதற்கும் வியாசம் எழுதுதல் என்று இக்காலத்து வழங்கப்படுதல் கண்கூடு. இக்கருத்தை நாம் ஊன்றி நோக்கின் ''சத்யம் வத'', ''தர்மம் சர'' என்றற்றொடக்கத்து வேத உண்மைகளைப் பொதி பொருளாகக் கொண்டு அவற்றைப் பாமரமக்களும் எளிதில் விளங்கத்தக்க விதமாகப் புராணங்கள் ரூபமாக விரித்துத் தந்தானும் வியாசன் எனப்பட்டான். பதினெண் புராணங்களைக் கட்டுரைத்தமையால் புராண வியாசர் ஆனுர். இதிகாசங் களை விரித்துரைத்தமையின் இதிகாச வியாசர் ஆனுர். ஆதலின், எப்பொருள் யார் யார் தொகுத்தார் அல்லது விரித்தாரோ அவ்வவர் அத்துறை வியாசராகக் கொள்ளற்பாலர்.

**வியாசர் யார்?**

வியாசபகவான் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரம். ''முனிவருள் நான் வியாசர்'' என்று பகவத்கீதையில் பகவான் குறிப்பிடுகிருர். இவர்

பராசரமகர்ஷிக்கும் சத்தியவதிதேவிக்கும் தவப்புதல்வராக அவதரித்தவர். இவரை இந்தியாவின் போஷக முனி என்றுகூடக் கூறலாம். இவர் பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய எல்லா ஆச்சிரமிகளாலும் பூசிக்கப்பட வேண்டியவர். பிரமசாரிகளும், இல்லறத்தார்களும் தினமும் பிரம்மயக்ஞத்துக்குப்பிறகு செய்யும் தர்ப்பணத்தில் வியாசர் முதலான முனிவர்களுக்குத் தர்ப்பணம் செய்கிறார்கள். வருடந்தோறும் ஆவணியவிட்டத்தன்று வேதவியாசரை ஒரு கும்பத்தில் ஆவாகனம் செய்து பூசை செய்தபிறகுதான் வேதாரம்பம் நிகழும். இவரது நினைவு நாள் ஆடி (ஆஷாட) மாதத்தில் வரும் பூரணையாகும். இதற்குக் ''குருபூர்ணிமா'' அல்லது ''வியாசபூர்ணிமா'' என்று பெயர். இது சனாதனதர்மத்தைச் சேர்ந்தவர்களால் மட்டுமன்றிப் புத்த மதத்தவர்களாலும் கொண்டாடப்படுவதொன்றாம்.

வேதவியாசர் விழா வான்து மற்றைய ஆச்சிரமத்தினரைவிடச் சந்நியாசிகளாற்றான் மிகவிசேடமாகக் கொண்டாடப்படுகின்றது. இதற்கு விசேடகாரணமும் உண்டு. இக்குருபூர்ணிமை வரும் ஆடிமாதம் பொதுவாக மழைக்காலத் தொடக்கமாகும். துறவிகள் அஹிம்சா விரதத்தை மிக நுணுக்கமாகக் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள். இதனாற்றான் தேவரும் தம் குறளில் ''கொல்லாமை'' முதலிய அறங்களைத் துறவறத்தின்கண் அமைத்தார். மழைக்காலத்தில், பூமியில், பூச்சி புழுக்களின் உற்பத்தியும், நடமாட்டமும் பெருகும். எனவேதான் துறவிகள் இக்காலத்தில் ஒரே இடத்திற்றங்கிச் ''சாதுர்மாஸ்ய'' விரதம் அனுட்டிப்பர். அவர்கள் இவ்விரதத்தை அனுட்டிப்பதற்கு வேறொரு காரணம், இவரது சூத்திரங்களை அவர்கள் நன்றாகக் கற்றுணர வேண்டிய கடப்பாடு இருத்தலேயாம். ஏனெனில் வியாச பகவான் எழுதிய சூத்திரங்களுக்கு ''பிக்ஷுசூத்திரம்'' என்ற பெயரும் வழங்குகின்றது.

### ஆறங்கம் - நால்வேதம் ஆனாய் நீயே!

இக்கட்டத்தில் நால்வேதங்களைப் பற்றியும் அவற்றின் உபாங்கங்களைப்பற்றியும் குறிப்பிடுவது பொருத்தமானது. வேதப்பகுதிகள் மூன்று காண்டங்களைக் கொண்டவை. அவை பின்வருவனவாம்.

(1) கர்மகாண்டம் – வேள்விகளையும் கிரியைகளையும் பற்றிக் கூறுவது.
(2) உபாசனா காண்டம் - வணக்கமுறைகளைப் பற்றிக் கூறுவது.
(3) ஞானகாண்டம் - கடவுள் அல்லது பிரமம் என்று விதந்தோதப் படும் பரமார்த்மாவைப் பற்றிய அறிவை விளக்குவது.

இம்மூன்று காண்டங்களையும் முறையே உடல், இருதயம், மூளை என்பவற்றுக்கு ஒப்பிடலாம்.



10

**ஆறு தரிசனங்கள்.**

வேத உண்மைகளை உலகினர்க்குத் தெரிவிப்பதற்கு முயன்ற ஞானிகள் அறுவகைத் தத்துவங்களை அருளிச் செய்துள்ளார்கள். இப்புராதன உண்மைக் காட்சிகளையே ''தரிசனங்கள்'' அல்லது ''வேதக் காட்சிகள்'' என்பர். அவை பின்வருமாறு:-

1. கௌதம முனிவரது நியாய தரிசனம்
   (இது தர்க்கம் எனவும்படும்)
2. கணடமுனிவர் இயற்றிய வைசேடிக தரிசனம்
   (இதைத் தருக்க முடிபு எனலாம்)
3. கபிலமுனிவரது சாங்கிய தரிசனம்
4. பதஞ்ஜலி முனிவரது யோக தரிசனம்
   (இது இராஜயோக நூல் எனப்படும்)
5. மகர்ஷி ஜைமினி எழுதிய பூர்வமீமாம்சை
   (இது வேதத்தின் கர்ம காண்டத்தை ஒழுங்காக விளக்குவது; சம்ஹிதைகளிலும் பிராம்மணங்களிலும் கூறப்பட்டமுறைகள் இறையும் வழுவாது வேதவேள்விகளையும் கிரியைகளையும் செய்யுமாற்றை விளக்குவது.)

6. வியாசமுனிவர் எழுதிய **உத்தரமீமாம்சை** (இது தத்துவ ஞானத்தைத் தம்மகத்தே கொண்ட ஆரணியகங்கள் உபநிடதங்கள் என்பவற்றை விளக்குவது. இது வேதங்களின் சிரோமணியாக விளங்குவதால் வேதாந்தம் எனவும் படும்.)

இவ்வறுவகைத் தரிசனங்களும் ஒருடலின் **ஆறுறுப்புக்களையே** நிகர்க்கும். உத்தரமீமாம்சை எனப்படும் பிரமசூத்திரம் ஏனைய எல்லாவற்றினதும் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பிரமசூத்திரத்துக்குக் கீதையானது இருதயமாகவும் உபநிடதங்கள் மூளையாகவும் கொள்ளப்படும். கீதை, உபநிடதம், பிரமசூத்திரம் என்னும் இம்மூன்றும் **''பிரஸ்தானத்திரயம்''** என ஆன்றோரால் வழங்கப்படுகின்றன.

வேதங்களை நான்காக வகுத்தவராகிய வியாசமுனிவர் அவற்றை, சுமந்து, பைலாசர், ஜைமினி, வைசம்பாயனர் என்னும் தமது நான்கு உத்தம சீடர்களுக்கு அருளிச்செய்தார். வேத சிரசுகளாகிய உபநிடதங்களின் சாரத்தை-ஸ்ரீகிருஷ்ணனால் அருச்சுனனுக்கு உபதேசம் செய்யப்பட்ட கீதை வடிவத்தில்-வடித்துக் கொடுத்தவரும் இம் முனிவரேயாவர். அதற்கு முன்னரேயே வேதாந்த சாரமாகப் பிரமசூத்திரங்களை ஆக்கித் தந்துள்ளார்கள். கீதை பிரமசூத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. ஆதலின் இது முந்திய நூலாகவே இருக்க வேண்டும். இந்நூல் வேத

உண்மைகளை வன்மையாகக் கண்டிக்கும் சமணர்கள், மிண்டிய மாயா வாதிகளாகிய சார்வாகர்கள் என்போர்க்குச் சவால் விடுவது போன்றது.

## இந்திய தத்துவஞானத்தின் அடிக்கல்.

இந்நூல் இந்தியதத்துவஞானத்துக்கு அடிக்கல்லாக அல்லது மூலைக்கல்லாக அமைந்துள்ளது என்பது அறிஞர் கருத்து. இதை மைய மாகக்கொண்டே எல்லாத்தத்துவ நூலாசிரியர்களும் தத்தம் கடைகளை விரித்துள்ளனர். மூலநூல் ஒன்றே யெனினும் பாடபேதங்கள் பலவாயின. இந்நூற்குப் பாஷ்யம் எழுதினேரும் பலர். அவர்தாம் போதாயனர், சங்கரர், யாதவப்பிரகாசர், பாஸ்கரர், இராமானுஜர், மாதவர், வல்லபர், நிம்பர்க்கர், நீலகண்டர் முதலியோர்.

## அறுவகைத் தத்துவங்கள்.

முனிமொழியை அடிப்படையாகக் கொண்டு எழுந்த தத்துவத் துறைகள் முக்கியமாக ஆறும். அவை பின்வருவனவாகும்.

1. சங்கராசாரியர் கண்ட **சரீரக பாஷ்யம்**
   (இது ஏகான்மவாதம் அல்லது கேவலாத்துவிதம் எனப்படும்,
2. இராமானுஜாசாரியர் கண்ட **ஸ்ரீபாஷ்யம்**
   (இது விசிஷ்டாத்துவிதம் எனப்படும்)
3. மாதவாசாரியர் எழுதிய **துவைதபாஷ்யம்**
4. வல்லபாசாரியர் கண்ட **அனுபாஷ்யம்**
   (இது சுத்தாத்துவிதம் எனப்படும்)
5. நிம்பர்க்காசாரியர் எழுதிய **பாரிஜாதசுரபம்**
   (இதை பேதாபேத அத்துவிதம் என்பர்)
6. நீலகண்ட சிவாசாரியர் எழுதிய **மஹேசுவரபாஷ்யம்**
   அல்லது **சித்தாந்த பாஷ்யம்**

முனிமொழியை ஒட்டி எழுந்து, வளர்ந்து விரிந்துள்ள பாஷ் யங்கள் யாது கூறுகின்றது என்பதை அறிவது பொருத்தமானது. இப் பாஷ்யங்கள் ஆறனுள் சங்கராசாரியருடைய பாஷ்யம் மட்டுமே ஆன்மா வைப்பற்றிய தத்துவ விசாரணையை உள்ளவாறு எடுத்தாள்வது. ஏனைய ஐந்தும் பெரும்பாலும் பக்தி முறையில் அமைந்தவை. ஸ்ரீஅப்பைய தீக்ஷிதருடைய "பரிமள வியாக்கியானம்" சங்கரருடைய பாஷ்யத்தைத் தெளிவுபடுத்துவதாயுள்ளது.

## பாஷ்யங்களின் உட்பொருள்.

1. "ஏகம் சத்" என்னும் உண்மையைத் தன்னகத்தே கொண் டதாகிய சங்கராசாரியருடைய சரீரகபாஷ்யம் எல்லாம் வல்ல பரம் பொருளைச் சச்சிதானந்த ரூபியாகக் காண்கிறது.

2. இராமானுஜருடைய ஸ்ரீபாஷ்யம் சத்தியாகிய இலக்குமியோடு கூடிய ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்றும் பிரகிருதிக்கும் புருஷனுக்கும் அவனே தலைவன் என்றும் கூறும்.

3. மாதவாசாரியர் தமது துவைதபாஷ்யத்தில் உயிர், உலகு, கடவுள் (ஜீவன், ஜகத், ஈசுவரன்) ஆகிய மூன்றும் வேறு வேறு என்பர். அவர், ''கடவுள் யாவற்றுக்கும் தலைவன். அவர் எல்லாவற்றிலும் வியாபித்துள்ளார். எனினும் இவை மூன்றும் வேறு வேறே. ஆன்மா ஒருபொழுதும் கடவுள் ஆகாது. ஆன்மா இறைவனுக்கு மீளா அடிமை'' என்பர்.

4. நிம்பர்க்கரோ உலகத்தின் பலம்பொருந்தியதும் உருப்படியானதும் ஆகிய காரணமே ''பிரமம்'' என்கிறார். எங்ஙனமெனில் தயிருக்குக் காரணமானது பால். எனினும் பால் பால்தான்; தயிர் தயிர் தான். அங்ஙனமே கடவுளின் ஓரம்சமே உயிர். கடலின் ஓரம்சமே அலையாதற் போல என்க.

5. வல்லபருடைய சுத்தாத்துவிதத்தின்படி உலகு, உயிர், பிரமம் என்னும் மூன்றும் ஒன்றேயாம்.

6. நீலகண்ட சிவாசாரியருடையசித்தாந்தப்படி கடவுள், ஆன்மா, உலகு ஆகிய மூன்றும் வெவ்வேறே. இவை மூன்றும் **உள்பொருள்கள்.** இவைகள் எல்லாம் மாயை என்னும் கருத்தை இது வன்மையாகக் கண்டிக்கிறது.

**பிரமசூத்திரங்கள்.**

வியாச முனிவர் அருளிச் செய்த பிரமசூத்திரங்கள் என்னும் நூல் 564 சூத்திரங்களைக் கொண்டது. இது 4 அத்தியாயங்களாகவும் ஒவ்வொரு அத்தியாயமும் 4 பாதங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் 223 அதிகரணங்களையும் கொண்டது. (119 அதிகரணங்கள் எனவும் கூறுப) ஒரு அதிகரணம் என்பது ஒரு விஷயத்தை விசாரித்து முடிப்பதாம். அதில் ஒரு சூத்திரமும் இருக்கலாம். பல சூத்திரங்களும் இருக்கலாம். வேத சிரசுகளாகிய உபநிடத வாக்கியங்களிலுள்ள சந்தேகங்களை அகற்றி நிர்ணயம் செய்வதே பிரமசூத்திரத்தின் வேலையாம்.

முதலாவது அத்தியாயம் தன்னேரிலாத பரம் பொருளை அல்லது பரப்பிரமத்தைப்பற்றிக் கூறுவது. இதற்குச் சமன்வாய அத்தியாயம் என்று பெயர்.

இரண்டாவதாகிய அவிரோத அத்தியாயம் புத்தும் முதலாகிய வேறு தத்துவதரிசனங்களை மறுத்துரைத்து அத்துவிதமாகிய தன் கோள் நிறுவுவது.

மூன்றாவதாகிய சாதனாத்தியாயம் பிரமஞானத்தை அடைவதற் குரிய சாதனைகளை விளக்கிக் கூறுவது.

நான்காவதாகிய பலாத்தியாயம் ஆத்மஞானத்தின் பயனைக் கூறுவது.

ஒவ்வொரு சூத்திரமும் அளவான, குற்றமற்ற தூய மணிபோல் வது. இச் சூத்திரங்கள் பரப்பமைந்து கற்கப்படின் விளங்குவதற்கு மிக இலகுவானவை.

பரம்பொருளாகிய பிரமமே எவ்விடத்தும் வியாபித்துள்ளான் என்பது சித்தாந்த உண்மையாம். ''விறகில் தீயினன்'' முதலான யாவும் இப்பொருள் பற்றியவையே. பொன்னுக்கு வேறு வேறு உருவமும் பெய ரும் கொடுக்கப்படுவது போன்று, நாமங்கள் ரூபங்கள் அடைகள் என்பன யாவும் மனிதனுடைய கற்பனையில் அமைந்தனவே. ''ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க'' என்பனவாய பல்லாயிரக்கணக்கான அடிகளும் ஒரு வாசகம் குறிப்பவையே.

### மனித வாழ்வின் இலட்சியம்.

பரம்பொருளை அடைவதே பலநோக்குடைய மனிதனின் இலக்ஷி யம் ''அவனை யொழிந்தெங்கின்றும்'' என்றாங்கு அப்பொருளையடைந்து இன்புறுவதே முத்தியாகும். தாடலை போற்கூடும் இன்பக் கலப்பே ஏகம் என்பர் பெரியோர்.

கடவுளை அல்லது பிரமத்தை அல்லது பரம்பொருளை மறந்து செய்யும் அறங்கள் எல்லாம் வீண்செயல்கள். கடவுளைமறந்து வாழும் வாழ்வு பயனற்றது. அது துக்கத்தையே கொடுக்கும். கவலையும் துன்பமும் பரம்பொருளிலிருந்து பிரிவதன் மூலம் பெறப்படுபவை.

உயிர் அழிவில்லாதது; தெய்வத்தன்மை பொருந்தியது; மானிட வரம்புகளாகிய சாதி, குலம், தேசம், இனம் என்பவற்றுக்கு அதீதமானது. உலகம் பரம்பொருளின் ஆலயம் போல்வது. அது மாறி மாறிவருவது. அது நிரந்தரமானதன்று.

பரம்பொருளை நாடுவோன் ஆறு அறங்களைப் பயில வேண்டும். அவை ''ஷட்சம்பத்'' எனப்படும். அவை பின்வருவனவாம்.

| | | | |
|---|---|---|---|
| (1) | சமம் | — | மனவடக்கம் |
| (2) | தமம் | — | புலனடக்கம் |
| (3) | உபரதி | — | பொறிகளிற் பற்றின்மை |
| (4) | திதிக்ஷா | — | சுக–துக்கங்களைச்சகித்தல் |
| (5) | சிரத்தா | — | விசுவாசம், சிரத்தை |
| (6) | சமாதானம் | — | அக நடுநிலை |



11

எம்மை நாமறிதற்குக் கருவியாயுள்ள சாதனைகள் இவ்வாறும் ஆம்.

### இறையுணர்தல்.

இறையுணர்வுக்கு வேண்டிய பரிசுத்தம் நால்வகைப்படும். அவை குணத்தூய்மை, அகந்தூய்மை, புறந்தூய்மை, உளந்தூய்மை, என்பனவாம்.

இந்நிலை சைவசித்தாந்தத்திற் கூறப்பட்ட இயமம், நியமம், பிராணயாமம், பிரத்தியாகாரம், முதலிய அட்டாங்க யோகங்களினாலே பெறப்படும்.

பூர்வமீமாம்சையானது ''அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா'' என்று தொடங்கி, வேதம் இறைவனாலாக்கப்பட்டதெனவும் மனிதனாலாக்கப் படாததெனவும் விளக்கும். இவ்வுண்மையே சைவசித்தாந்தத்துக்கு இலக்கிய நூலாகவிளங்கும் கந்தபுராணத்தின்கண்ணே கச்சியப்ப சிவாசாரியரால் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> ''தருமமென்றொருபொருருளது; தாவிலா
> இருமையிலின்பமும் எளிதினுக்குமால்
> அருமையில்வரும் பொருள் ஆகும்; அன்னதும்
> ஒருமையினோர்க்கலாதுணர்தற் கொண்ணுமோ.''

இங்ஙனமே உத்தரமீமாம்சையும் கூறுகின்றது. எங்ஙனமெனில், வேதங்களையும், அவற்றின் சாகைகளையும் கற்றுணர்ந்து, அவற்றின் மூலம் பெற்ற அனுபவத்தால் ஞானம், ஞாதுரு, ஞேயம் என்னும் மூன்றும் ஒருமைப்பட்டு அத்துவிதமாய் நிற்கும் நிலையையே இம் முனிமொழி விளக்கும்.

''அதாதோ பிரம்மஜிஜ்ஞாஸா'' என்று தொடங்கும் முனிமொழி பிரம விசாரணை செய்யத் தொடங்கி, பிரமம் என்றால் என்ன? நான் பிரமமா? நான் எங்ஙனம் பிரமம் ஆக முடியும்? பிரமத்தை அடைவதெப்படி? என்றெல்லாம் விசாரணை செய்து, தன்னை இறைவனிடமிருந்து பிரித்து வைத்துள்ள உலக பந்தங்களிலிருந்து விடுவித்தற் பொருட்டு ஒரு சற்குருவை நாட வழிகாட்டுகின்றது. அச் சற்குரு கடவுளை நோக்கி அவனைச் செலுத்துகின்றார். அதன் பெறுபேறாகச் சீவன் சிவமாகி, காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்னும் மூன்றும் ஒன்றாய தன்மையில் முயங்கும் நித்தியானந்தப் பெருவாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கும்.

# திருக்கோவையார்

தலையாளி, திரு. வ. கந்தையா.
[ ஓய்வு பெற்ற கணக்குப் பரிசோதகர் ]

ஆத்மஞானிகளுள் ஒருவராய மாணிக்கவாசக சுவாமிகளே திருக்கோவையாரை இயற்றியவராவர். மாணிக்கவாசகசுவாமிகள் இருந்த காலம் வரகுணபாண்டியன் (கி. பி. 792-835) காலம் என்பர் T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் (பாண்டியர் வரலாறு, 1950, பக். 63).

அதனால் திருக்கோவையார் மிகப் பழைய நூல்களுள் ஒன்றன்று என்று பெறப்படும். மிகப் பழைய நூலன்றாயின், அதன் பெருமை குன்றுமா? காளிதாசன் தானியற்றிய மாளவிகாக்னி மித்திரீயத்தில் இப்பொருளை அழகாக ஆராய்ந்துள்ளான். அவன் கூற்றைக் கொற்றவன் குடி உமாபதிசிவாசாரியார் இங்ஙனம் மொழிபெயர்த்துளார்:

தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா துணிந்த
நன்மையினர் நலங்கொள்மணி பொதியுமதன் களங்கம்
நகையாகா தெனஉண்மை நயந்திடுவர் நடுவாந்
தன்மையினர் பழமைஅழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினர் பலர்புகழில் ஏத்துவர்ஏ திலருற்
றிகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கென வொன்றிலரே.

இது மூலஞ் சிதையாமல் வந்த மொழிபெயர்ப்பு (சிவப்பிரகாசம் 12).

இத் திருக்கோவையாரில் வேதத்தின் ஞான காண்டப் பொருளும், தமிழ் மொழிக்குச் சிறப்பாகவுடைய அகப்பொருளும், ஒருங்கிணைந்து வந்துள்ளன. இதனை அறியாதார் அகப்பொருள் ஒன்றனையே அதன்கண் காண்பர். திருப்பாடல்தோறும் சைவசித்தாந்த தரிசன நுண்பொருள் வருதலை நுணுகிப் படிப்பார் காண்பர்.

காளிதாசரும், வேதப்பொருளை ஸ்மிருதிநூல்கள் அனுசரித்துச் செல்லும் என்பர். ஸ்மிருதிகள் போல ஆகமங்களும் வழிநூல்களும் வேதப்பொருளைவிட்டு விலகிச் செல்லாமல், தழுவிச் செல்வனவாகும். அதனாற்றான், சைவ சித்தாந்தமும் வைதிகமதம் எனப்படும். இதனை விளக்குவதற்கே நீலகண்டாசாரியாரும் பிரமசூத்திரத்திற்குப் பாடிய மியற்றி சைவவேதாந்தம் எனப் பெயர் தந்தனர்.

பகவத் கீதைபோலவே, திருக்கோவையாரும் திருவாசகமும் வேதப் பொருளை விளக்கிச் செல்வனவாகும். பகவத்கீதை அப் பொருளைப் பாரத யுத்தத்தில் வைத்து விளங்கச் செய்தது. திருக்கோவையார் திருமணத்தைப் பொருளாகக் கொண்டு விளங்கச் செய்தது. அதனைச் சில உதாரணங்களால் விளக்குகின்றேன்.

''யோவா ஏதத் அக்ஷரம், கார்கி, அவித்வா
அஸ்மாத் லோகாத் பிரைதி ஸ கிருபண:''

''ஓ கார்க்கி!, எவன் இந்த அழிவில்லாப்
பொருளை அறியாமலே இவ்வுலகத்தினின்றும்
போகின்றானோ அவன் கீழ்மகன்.''

என்று பிருகதாரண்யக உபநிடதம் (5–8–10) ஆகிய சுருதி சொல்லுகின்றது.

இதன் பொருளை மணிவாசகப் பெருமான் திருக்கோவையாரில் ''உட்கோள்'' கூறுமிடத்து (5) விளக்குகின்றார். அந்தப் பாட்டின் பொருளை யாவரும் விளங்கிக் கொள்ளுமாறு வசனத்தில் தருகின்றேன்.

''இப் பெண்ணின் இடை ஒடுங்கிச் சிறுத்து அசைவதுபற்றி மின்னலையும் பாம்பையும் போல் இருக்கின்றது. இவளின் தோள்கள் பருத்து இருக்கின்றன. இவளின் கண்கள், படைக்கலங்கள் பகைவர் மேற்சென்று வருத்தஞ் செய்வதுபோல எனக்கும் வருத்தஞ் செய்யும் தன்மையுடையன. இந்தக் கண்களோ பிறழ்ந்து பிறழ்ந்து பார்க்குந் தோறும் எனக்கு நோயை வருவிக்கின்றன. இந்த நோய் எப்படி இருக்குமெனில், நெஞ்சே! சொல்லுகின்றேன், கேள்.

''எனக்கு ஆபரணமும், தேவ அமுதமும், என் உயிர்போல் சிறந்ததும், ஆகியவன் சிதம்பரத்தின்கண் உள்ள சிவன். அவன், சிந்தாமணி போல, தன்பால் அன்புவைத்து வழிபட்டார்க்கு அவர்கள் வேண்டிய வரங்களைக் கொடுப்பவன். தன்னிடத்து அன்பு வையாத இந்திரன், திருமால், பிரமன் போன்ற தேவர்களும் அறிய முடியாத கடவுள் அவன். அவனுடைய பாதங்களைப் போற்றித் துதியாதவர்கள் பெறும் பிணி எப்படி இருக்குமோ, அப்படியிருக்கும் இவள் கண்களால் நான் அடைந்த பிணியும். ஆயினும், இவள் கண்களில் ஒரு சிறப்பும் உண்டு. என்மீது கொண்ட காதலைக் காட்டும் கருத்துடன் நாணி என்னைப் பார்க்கும் பார்வையானது முன் எனக்கு வருவித்த துன்பத்தையெல்லாம் துடைக்கும் மருந்தும் ஆகின்றது.''

உளமாம் வகை உய்யவந் தாண்டு சென்றும்பர் உய்யக்
களமாம் விடமமிர் தாக்கிய தில்லைத் தொல்லோன் கயிலை (22)

இதனை வசனமாக்குகின்றேன். "நாம் சமாதியிலிருக்கும் பொழுது இறைவனின் திருவடி நீழலில் உள்ளோம். சமாதி கலைந்த பொழுது அவன் நீழலில் இல்லோம் ஆகி, பிறவித் துன்பத்தில் உழல்கின்றோம். அவ்வண்ணம் மாறி மாறி வாராமல், எப்போதும் ஒரே தன்மையில் தன்னுடன் உள்ளோம் ஆகும்படி, இப் பிறவித் துன்பத்தினின்றுந் தப்பிக்க, தானே நம்பால் வந்து, நம்போல் வாரை அடிமையாக்கிக் கொண்டவன். தேவர் எல்லாரையும் அவன்பால் சென்று உய்ய வைத்தவன். அவன் யாரென்றால், தொண்டையில் இருத்திய நஞ்சை அமிழ்தம் ஆக்கிய சிவபெருமானே. அவன் தில்லைக்கண் உறைகின்றவன்; மிகப் பழையவன். அப் பெருமானுடைய கைலை மலையிலுள்ள ........"

இந்த உதாரணத்திலும் ஞானக் கருத்து இருப்பதனை உணர முடியாதார் யார்? ஞானிகள் முயல்வது முதலில் சமாதிகூடுதற் பொருட்டும் (சமாதி-ஸ்த:) பின் முத்தி அடைதற் பொருட்டும். (முக்த:) உடம்புள்ள பொழுது சமாதி. உடம்பில்லாத பொழுது முத்தி. அசம் பிரக்ஞாதா சமாதி, சம்பிரக்ஞாதா சமாதி எனச் சமாதி இரண்டு பெரும் வகைகளுடையது. சம்பிரக்ஞாதா சமாதியிற்றான் ஞானியானவன் உடலுணர்ச்சியோ பிறவுணர்ச்சியோ இன்றி, ஆன்மக் காட்சி பெற்று (சாக்ஷாத்காரம்) இறைவனின் திருவடி நீழலில், சிறுநேரமோ சில நாட்களோ, இருத்தல் ஆகும். (பதஞ்சலி யோகசூத்திரம் சமாதிபாதமும் அதன் பாடியங்களும்) இப்படிச் சிறுகாலம் இருக்காமல், எக்காலமும் இருக்கவே, சிவனை வேண்டித் தலைவன் வரம்பெற்றான்.

இங்கே "மாறி மாறி வாராமல்" என்று மணிவாசகப் பெருமான் சொன்னது யாது? ஒருகால் திருவடி நீழல், மறுகால் உலக இன்பம். இது வெளிப்படை. இதில் தருக்க முரண் உண்டு. ஆசையை அறுத்தவழி உண்டாவது பேரின்பம்—திருவடி நீழலில் இருத்தல். பேரின்பம் எய்தியவழி உண்டாவது அவாவறுத்தல். இதில் அன்னி யோன்னிய ஆசிரய—ஒன்றையொன்று பற்றிநிற்றல்—என்னும் தோஷம் உண்டு.

இஃது அறுமாறு எங்ஙனம்? ஒரோருகால் சமாதியிலிருக்கின்ற வனுக்கு அறிவு உதயமாக, பருமனாக இருக்கும் அவா (gross desire) அறும். சமாதி நீடிக்கச் சூக்குமமாக இருக்கும் அவாவும் (subtle desire) அறும். அஃதாவது அறிவு முதிர முதிர நிலைத்த அறிவுடையவன் (ஸ்திர பிரக்ஞன்) ஆவான். ஆகையால் இதில் தோஷம் எதுவுமில்லை.

இன்னும் ஓர் உதாரணம். "அந்தியின்வாய் எழில் அம்பலத்து எம் பரன்" [99] இதன் பொருளை விரிப்போம். "மாலைப் பொழுதிற் பிறக்கும் சிவந்த வானத்தைப் போன்ற செந்நிற வனப்பை உடையவன்

சிவன். அவன் தில்லையம்பலத்தில் வாழ்பவன். அவன், மக்கள் தேவர் என்பாரின் மனம் முதலியவற்றால் அறியப்படாதவன். ஆகையால் கருவி கரணங்களுக்கு அப்பால் உள்ளவன். காட்சி, அளவை முதலியவற்றுக்கு உட்படாதவனாகையால் புவன போகங்களுக்கும் அப்பால் உள்ளவன். ஆகவே எல்லாப் பொருளையும் கடந்து நிற்பவன்.''

கடோபநிடதம் 3ஆம் வல்லியில் ''பொறிகள் குதிரைகளாகும். புலன்கள் பொறிகளுக்கு மேய்நிலங்களாகும்'' இவை நிலையாத இன்பத்தைத்தருவன. நிலைத்த இன்பம் வேண்டுபவர்கள் நிலையாத இன்பம் தரும் இந்திரியங்களைத் துணைக்கொள்ளலாகாது. அதனால் இந்திரியங்களை வென்றவர்க்கே சிவன் அணித்தாயுள்ளவன். இங்ஙனம் உதாரணங்களைப் பெருக்கலாம்.

திருமணத்தை ஏன் பொருளாகக் கொண்டனர் மணிவாசகப் பெருமான்? ஞானக் கருத்தை விளக்குவதற்கு வேறு துறைகளைக் கையாள முடியாதா? இதற்கு விடை இருவகையாகும். ஒரு வகை முந்துநூல் கண்டு முறைப்பட வகுத்தலாகும். மற்ற வகை, சுவாமிகள் தாம் வாழ்ந்த காலத்தை அனுசரித்து, அதன்படி அமைத்தலாகும்.

முதல்வகை வருமாறு:- இறைவன் பிரபஞ்சத்தை உண்டாக்கி, அதன்கண் ஒழுங்கு இருத்தல் வேண்டிப் பிரஜாபதிகளைப் படைத்தார். அவர்கள், உயிருள் பொருள்கள் எல்லாவற்றுக்கும் தலைவர்கள். மரீசி முதலானோர்களே அவர்கள். இறைவன் அவர்களுக்குப் பிரவிருத்தி தருமத்தை அனுட்டிக்கும்படி ஆணைசெய்தார். அந்தத் தருமமாவது உலகியலில் அழுந்தி, உலக வியவகாரங்களை ஏற்று, இறைவனை மறவாது ஒழுகி வருதலாம். இஃது இல்லறம் என்றுஞ் சொல்லப்படும்.

பின்னர் இறைவன் சனகன், சனந்தனன், சனத்குமாரர் முதலானோரைப் படைத்தார். இவர்கள் என்றுமே குமாரர்களாய், யௌவனப் பருவத்தினராய், பாவமே இன்னதென்று அறியாதவர்களாய், தூயராய் இருப்பவர்கள். இவர்கள் உலகியலின் இச்சைகளை வெறுத்து, தம் பொறிகளைப் புலன்வழி போகாமல் தடுத்து, நிலைத்த ஞானத்தில் [ஸ்திரபிரக்ஞா] நாட்டங்கொண்டு நிற்பவர்கள். இது நிவிருத்தி தருமம் எனப்படும். துறவறமும் இதுவேயாகும். இதனைத் திருவள்ளுவர் வகுத்து விளக்குதல் காண்க. திருவள்ளுவருக்குக் காலத்தால் முன்னிருந்த ஆதி சங்கராசாரிய சுவாமிகள் தாமியற்றிய பகவத்கீதை பாடியத்தில், முன்னுரையிற் சொல்லியிருத்தலையுங் காண்க.

இந்த முதல் வகையில் பிரவிருத்தி மார்க்கத்தில் வரும் நல் வாழ்வு உயர்மக்களுக்கு ஒரு கடமையாகும். அதனால் அது தருமம் என்றோ, அறம் என்றோ, கொள்ளப்பட்டது. பகவத்கீதைக்குக் களம்

போர்க்களம். அர்ச்சுனன் மேற்கொண்டது போர். அவன் க்ஷத்திரியன். போர் செய்தலே அவன் கடன். 'அக் கடனை அறத்தின்வழி நின்று ஆற்றுவாய்' என்பதே கிருஷ்ண பரமாத்மாவின் உபதேசம்.

அங்ஙனமே திருக்கோவையாருக்குக் களம், இல்வாழ்க்கை நடத்தும் இடங்கள். இல்வாழ்க்கைக்கு இஃதோர் கடன். எல்லாரும் நிவிருத்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்துத் துறவிகளானால், பிரமசாரி, வானப்பிரஸ்தன், முற்றத் துறந்த முனிவன் என்னும் இயல்புடைய மூவர் கடனும் செய்வார் யார்? மேலும், பிதிரர் கடனும் உண்டே; அது செய்வதற்கும் எவரும் இலராவர். ஆகவே படைப்பின் நெறி தவறும். ஆகையால் பிரவிருத்திமார்க்கமும் வேண்டற்பாலது.

பிரவிருத்தி மார்க்கம் வெறும் இல்வாழ்க்கையன்று. வெறும் இல் வாழ்க்கை அறம் எனப்படாது. அது கடவுள் வழிபாட்டுடன் செயற் பாலது. பகவத்கீதை, ஞான நெறிகள் சொல்ல எழுந்த நூலன்று. "நீ போர் செய்ய வந்துள்ளனை, அதனைச் செவ்வனே செய்," என்று சொல்லவே எழுந்த நூலாகும். இதனைச் சங்கர பாடியத்தினுலுணர்க. இது கர்மயோகமாகும். இதனையே மாணிக்கவாசகரும் திருக்கோவை யாரிற் சொன்னூர். இல்வாழ்க்கை நடத்த முன்வந்துள்ளோர் அதனைச் செவ்வனே நடத்துதல் வேண்டும்.

இரண்டாவது வகை. மாணிக்கவாசகர் சரித்திர சம்பந்தமாகத் தாம்பெற்ற சொத்தைத் தந்தனர். வைஷ்ணவ ஆழ்வார்கள் அவர்கள் இயற்றிய திருவாய்மொழி முதலிய திருப்பாசுரங்களில் அகப் பொருள் விரவிவர நூல் செய்தனர். இதனைப் பெரியவாச்சான்பிள்ளையின் உரைகளால் தெளிக. மாணிக்கவாசக சுவாமிகளும் அங்ஙனஞ் செய் தனர் என்று கொள்ளுதல் சாலும்.

இத் திருக்கோவையார் மிகவும் கடினமான நூல். அதற்கெழுந்த பேராசிரியர் உரையும் சிக்கலுடையது. பாட்டினையும் உரையையும் எளிதாக்கும் பொருட்டு, புலவர் சிவங் கருணலயபாண்டியனுரைத் துணைக் கொண்டு, 'திருக்கோவையார் வசனம்' என்னும் நூலினைப் பாகம் பாக மாய் இயற்றி, ஈழகேசரியில் வெளியிட்டேன்.

அப்போது எனக்கு எழுந்த ஐயங்களுள் இரண்டனைச் சொல்லு கின்றேன். ஒன்று: நம் தமிழ்நாட்டுத் தலைவன் தலைவியர், மேல்நாட்டுக் கன்னியர் காளையர்போல் காதலுற்றுக் கூடித்திரிந்து (Courtship) விவாகஞ் செய்தனரா? அன்றேல், மகப் பேற்றுக்கேதுவாகிய உடற்சம்பந்தத்தில்— மெய்யுறுபுணர்ச்சியில் - ஈடுபட்டுப் பின்னர் மணஞ்செய்தனரா?

இந்த ஐயத்தை நீக்குதற்குக் குருசிஷ்ய முறையிற் பாடங்கேட் டாரேவல்லார். அதனுல் ரா. ராகவையங்கார், மு. ராகவையங்கார்,

சுவாமி வேதாசலம், மகாமகோபாத்தியாயர் சாமிநாதையர், சி. கணேசையர் என்பார்க்கு எழுதினேன்.

சுவாமி வேதாசலம், சாமிநாதையர் இருவருமே விரைந்து விடைதந்தனர். இவர்கள் புலமையே புலமை. மெய்தொட்டுப் பயிறல் முதலியவற்றால் உடலுறவு உண்டென்பதே தம் கொள்கை என்று சுவாமி வேதாசலமவர்கள் எனக்கெழுதினார்கள். மகாமகோபாத்தியாயரவர்களும் தலைவன் தலைவியருக்குக் களவுப் புணர்ச்சிக் காலத்தில் உடற்புணர்ச்சி நிகழ்ந்துள்ளதென்றே தாம் கொண்டுள்ளதாக எழுதினார்கள். இவ் விளக்கத்தை வைத்துக்கொண்டு திருக்கோவையாரையும் பழைய அகத்துறை நூல்களையும் படித்துத் தெளியுங்கள்.

இரண்டாவது ஐயம். திருக்கோவையார் 76ஆம் பாடலுரையில், தலைவன் மடலேறுகையில், தன் வடிவத்தையும் தன் தலைவியின் வடிவத்தையும் சித்திரங்களாகத் தீட்டி, அப் பலகையை எல்லாரும் காணத் தன் கையிற்கொண்டு பனைமட்டையாற் செய்த குதிரையின் மேலிருப்பான் என்றுள்ளது. தலைவனே மடன்மாவிலிருக்கும்போது அவனுடைய ஓவியம் எதற்கு என்பது என் வினா?

மகாமகோபாத்தியாயர் சாமிநாதையர் தந்த விடையை அவருடைய கடிதத்திலேயே வைத்துக் காண்க.

Triplicane, 27-2-1941.

அன்புள்ள ஐயா,

தாங்கள் இம்மாதம் 14ஆம் தேதி எழுதிய கடிதமும், அனுப்பிய ஈழகேசரிப் பத்திரிகையும் கிடைத்தன. அப்பத்திரிகையின்கண் தாங்கள் எழுதிய திருக்கோவையார் வசனத்தின் ஒரு பகுதியைக் கண்டேன். 76ஆம் பாட்டுக் குறிப்பில் மடலேறுதல் பற்றிய சில செய்திகளைத் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்.

திருக்கோவையார், 76ஆம் பாடல் மூலம், இருவர் படங்களையும் எழுதும் மரபையே தெரிவிக்கின்றது. பேராசிரியர் அப் பகுதிக்கு வேறுவிதமாக விசேட உரை எழுதினாலும், மூலத்திற் கிடந்தவாறு பொருள் கொள்வதே நன்றென்பது என் அபிப்பிராயம். மயூரகிரிக் கோவையில்,

''திடம் பெற்ற காசினியோர் யானு மங்கையுஞ்
சித்திரஞ்சேர், படம் பெற்றிருக்கிலன்றோ
திருமா லெனப் பாவிப்பரே'' (149) என்னுஞ்

செய்யுட் பகுதியில் இக் கருத்தே அமைந்துள்ளதை நோக்குக.

சொக்கப்ப நாவலர் எழுதியுள்ள மடலேற்ற வரலாறு கர்ண பரம்பரையில் வந்ததாகத் தோற்றுகின்றது.

எனக்குள்ள தேகத் தளர்ச்சியால் எதையும் ஊன்றிக் கவனித்து ஆராய்வதற்குரிய மனநிலையும் ஓய்வும் கிடைப்பதில்லை. அதனாற்றான் தங்கள் கடிதத்திற்கு விடையெழுத இவ்வளவு தாமதம் ஆயிற்று.

தங்கள் தமிழன்பையும் உண்மையை உணர்வதில் இருக்கும் ஊக்கத்தையும் பாராட்டுகிறேன்.

இங்ஙனம்,
அன்புள்ள,
வே. சாமிநாதையர்.×

இத்தகைய விளக்கத்தைப் பெரும்புலவரன்றி வேறு யார் தரவல்லார்?

---

×இக்கடிதத்தின் மூலத்தை நான் பார்த்துள்ளேன். ஆ-ர்.

---

உள்நாட்டு உற்பத்தியின் உயர்ந்த சாதனையான

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
ONE-DOLLAR
DOLLAR BRAND

டொலர் அலுமினியம்

உற்பத்தியாளர்களின் அன்பளிப்பு

திருவாசகம்

# கண்ணாரமுதன்

செந்தமிழ்க் கலைமணி, பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்
விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, பலாலி.

தக்கன் ஒரு பெரு வேள்வி செய்தான். தன்னுடைய மேன்மைகளுக்கெல்லாம் காரணமாய பரம்பொருளை மறந்து, தன்னை மிகப் பெரும் பொருளாக மதித்து, தன் செல்வாக்கை உபயோகித்து நடாத்தினன் அப் பெரு வேள்வியை. பாவம்! தேவர்களெல்லாம் தக்கப்பிரபு தங்களுக்குப் போதியளவு தருவார் என நினைத்து அவன் வேள்வி மண்டபத்தை அடைந்து அவனுக்குத் தங்களால் இயன்ற போற்றுதல் செய்தனர். வீரபத்திர சிவன் அந்த வேள்வி மண்டபத்தை அடைந்து, ஆண்டானை மறந்த தேவர்களைத் தழலென விழித்தார். பாவம்! தேவர்கள் பட்ட பாட்டிற்கோ எல்லையில்லை! பல்லுத் தீர்ந்தவர், முகந் தேய்ந்தவர், மாறு உருவங் கொண்டு மறைந்தவராக இத்தகைய தண்டனைகளை அனுபவித்தனர். தக்கன் தலைக்குப் பதில் ஆட்டுத்தலை கிடைத்தது. உலகிற்கு ஒளிதரும் சூரியனோ பல் இழந்து முகத்தொளி குன்றிப் படாத பாடெல்லாம் அனுபவித்தான். அன்று தொட்டுப் பரசிவ இறை வீற்றிருக்கும் பேரொளிதரும் மலைப் பக்கங்களைக் கண்டக்கால் பெரு நடுக்க மெய்தினன் பகலவன்.

வானுழை வாளம் பலத்தரன் குன்றென்று வட்கிவெய்யோன்
தானுழை யாவிரு ளாய்ப்புறம் நாப்பண்வண் டாரகைபோல்
தேனுழை நாக மலர்ந்து திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றுங்கெழில் காட்டுமொர் கார்ப்பொழிலே.

[திருக்கோவையார் – 116]

அம்பலத்து அரன் குன்றென்றதனால் அப்பொழிலின் புறப் பக்கத்திற் கூடப் பிரகாசிக்க முடியாது கூச்சமடைந்து கதிரைச் சுருக்கிச் சாய்ந்து ஒடுங்கிச் சென்றானும் சூரியன். தலைமகளைப் பகற்குறியிலே சந்தித்தற்குத் தலைமகனுக்கு உற்ற இருள் தோய்ந்த பொழில் அஃதேயாகும். மரச் செறிவால் இயற்கையிலேயே இருள் நிறைந்த இச் சோலையை மணிவாசகனார் தம் குறிப்பையு மேற்றிச் சூரியன் சிவனுக்கு அஞ்சிக் கதிர் வீசக் கூசுதலால் அகமும் புறமும் இருள் சூழ்ந்த பொழில் என அழகு திகழக் கூறுகின்றார்.

சிவன், ஒரே பேரொளி தரும் அக்கினிப் பிழம்பாக நின்ற மலை அண்ணாமலை. பிரம விஷ்ணுக்களின் ஆணவத்தை ஒடுக்க, அவர்கள் சிவத்தை வழிபட்டார்கள். அச்சிவம் அருளிய ஒளித்திரளாகிய மலை தரும்

தோற்றத்தை அடிகளார் திருவெம்பாவைத் திருப்பாடலில் நமக்குப் பின்வருமாறு காட்டுகின்ருர்.

''அண்ணு மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணேர் முடியின் மணித்தொகை வீறற்ருற்போல்
கண்ணூர் இரவி கதிர்வந்து கார் கரப்ப.''

கார் காலம் வந்ததும் கனத்த கரிய முகில், சூரியன் ஒளியைத் தன்னுள்ளே புதைத்து விடுகின்றது. அஃது எதுபோலுமெனின், திருவண்ணுமலையான் திருவடித் தாமரையை அடைந்த விண்ணவர் மணிமகுடம் தன்னெளியை இழப்பது போலாம். விண்ணேர் மகுடம் பொன்னுலாகி மாணிக்கம் பதிக்கப் பெற்று ஒரே ஒளித்திரள் சொரிவது. எனினும் அண்ணுமலையார் திருவடிக் கமலத்தின் முன் மணிமகுடமும் மகுடத்திலுள்ள மணியும் அப்படியே ஒளியிழந்து பெருமை குன்றிவிடுகின்றனவாம். மார்கழி மாதக் காலைக் காட்சிக்கு நல்லுவமை காட்டுகின்ருர் மணிவாசகஞர். அதன்மேல் அந்தத் திருவெம்பாவைப் பாடலைத் தொடர்ந்து படிக்கும்போது ஈற்றடி நம்மைக் கவருகின்றது. மகுடத்தை ஒளிகுன்றச் செய்த அந்தத் திருவடித் தாமரையுடையான் 'கண்ணு ரமுதமுமாய் நின்ருன்' என்று மணிவாசகஞர் காட்டுகின்ருர். ஒளியமைந்த மேனியாயினும் அதன் கவின், கண்ணிற்குப் பெருவிருந்தாகிறதாம். அது சாதாரணமாக நாமுண்ணும் பெருவிருந்தன்று. திருத்தமான அமுதத் திரளாக அஃது அமையும். வைத்த கண் வாங்காது பார்க்க வேண்டிய குளிரொளி அது. எத்துணை காலம் பார்க்கினும் தெவிட்டாத தெள்ளமுதாமகி விடுகின்றது அது. கண்ணை அத்திருமேனியினின்றும் புறத்தே திருப்பிய பின்னரும்அதனுள்ளே அத்திருவுரு நிறைந்து தோன்றுகின்றதாம், இனிய குழலிசை ஓய்ந்த பின்பும் செவிக்கண் அஃது ஒலித்தல் போல

தேவருக்கும் எட்டாத — அவர் அணுக வொண்ணுத — இந்த மலை, மணிவாசகஞருக்கு மிக்க அண்மையிலுள்ள மலையாகின்றது. அது கண்ணிற்குத் தரும் பெருவிருந்தைப் பல இடங்களிலும் மணிவாசகர் விண்டுரைக்கின்ருர்.

''அண்ணு மலையெம் அண்ணு போற்றி
கண்ணூர் அமுதக் கடலே போற்றி.''

அதன்கண் எஞ்ஞான்றும் அகலாதிருக்குமவனை அப்பெருமாஞர் 'அண்ணு' என்கிருர். அண்ணன் நமக்கு மிக்க அண்மையிலுள்ளவன். விண்ணேர்க்கு அவன் சேயன். ஆஞல் மணிவாசகர் போன்ற பக்த மாமணிகளுக்கோ அவன் மிக மிக அண்மையிலுள்ளவன். அத்துடன் அவன் கண்ணுக்கும் அமுதமாகின்ருன். வெறும் சிற்றளவு கொண்ட அமுதமன்று அது. பெருங் கடல் போல் நீண்டு பரந்து கிடக்கின்றதாம் அந்த அமுது. பிறிதோரிடத்தி

லும் அடிகளார் 'மாலமுதப் பெருங்கடலே' என விளித்தலை நோக்குக. தமக்குக் காட்டியருளிய அருள் உருவான அத் திருமேனியைப் பற்றிக் குறிப்பிடும்போது மணிவாசகர் கண்ணுக்குக் களிதருதலைக் கவினுற ''வழியடியோம், கண்ணகத்தே நின்று களிதருதேனே கடலமுதே கரும்பே விரும்படியார் எண்ணகத்தாய்'' (திருப்பள்ளி எழுச்சி- 9) என்றியம்புகின்றார் அடைக்கலப் பத்திலே ஏழாம் திருப்பாடலில்,

''என்கணிலே அமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும்

அங்கணனே'' எனப்பிரானை விளிக்கின்றார். அவன் அருட் கண்ணாகிய அங்கணனாகையினால் பிறர் கண்ணுக்குத் தன்திருமேனி அமுதமாம் பான்மையிலே தோற்றங் கொடுக்கின்றான். உள்ளத்திலேயும் அமுதச்சுவை ஊட்டுகின்றான். உலகியற் சுவைகள் அழிந்தொழிகின்றன. ஆகவே, மேலே பாவம்பற்றாது ஆன்மாவைக் காக்கும் அப்பிரானைப் பிழைக் கிரங்கும் அங்கணன் என்று உளங்குளிரப் போற்றுகின்றார்; விரும்படியார் எண்ணகத்தாய் என விளிக்கின்றார். இப்படியெல்லாம் ஆகமமாகி அண்ணித்து, அமுதமாகி உளத்திலே தித்தித்து, கண்ணாரமுதமுமாகக் காட்சி தருமவனை மணிவாசகர் திருவாக்கிலே கண்டு பிறவிப் பெரும் பயனைப் பெற்றுய்வோமாக!

அன்பளிப்பு.

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ஜவுளி இறக்குமதியாளர்கள்

மொத்த, சில்லறை

புடைவை விற்பனையாளர்கள்.

டெலிபோன்: 7169 தந்தி: கணேசன் டெக்ஸ்

# கருவூர்த்தேவரின் கவிதைகள்*

செஞ்சொற் கொண்டல்,
வித்துவான், சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.
மொழியியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பிறவிக்கடலில்:

இந்தப் பிறவியெனும் பெருங்கடலில் விழுந்து கிடக்கும் எளியேனுக்கு, என்னுடன் பிறந்த ஐம்பொறிகளும் என்வயப்படுவது இல்லை; அவர்களால் ஆட்டப்பட்டு ஆழ்கின்றேன் நான்.. அவர்கள் எம் பகைவர்கள். இவ்வேளையில் 'ஆர் துணை?' என்று அலறுகின்றேன் நான். 'அஞ்சேல்' என்று ஒரு குரல் கேட்கின்றது. அக்குரல் என் உயிர்ப்புள் உயிர்ப்பாய், உணர்வுள் உணர்வாய் ஒலிக்கிறது திருச்சிற்றம்பலம் என்னும் திருத்தலத்திலிருந்து அக்குரல் வருகிறது. ஆழ்ந்து போகும் அடியேனை மீளத் தன் கருணைக் கரங்களால் எடுக்கும் வள்ளலின் இனிய குரல் என்னை வாழ்விக்கிறது. தில்லைச் சிதம்பரத்திலே மற்றொரு காட்சி. வயல்களில் செஞ்சாலிப் பயிர்களோடு களைகள் — ஆம்; நீலமலர்ச் செடிகளே எனினும் அவை பயிரை நோக்கக் களைகள் தாமே! — வளர்ந்து கிடக்கின்றன. உழத்தியர் களையெடுக்கும்போது அந்நீலமலர்களைப் பறித்து எறிகிறார்கள்; அவை வயலுக்கு ஓரமாக உள்ள வரப்பின்மீது விழுகின்றன. அங்கும் அவை நீர்வளத்தால் காய்ந்து கருகாது அரும்பிக் கிடக்கின்றன.

இக்காட்சியும் என் வாழ்வுடன் பெரிதும் ஒன்றிய நிலையில் உள்ளது. என் உயிரெனும் பயிர்க்குக் களையாய் முளைத்தன ஐம்பொறிகள். அவ் 'வைம்புலவேடரின் அயர்ந்து வளரும்' என்னை, இறைவனும் அஞ்சேல் என்று கூறிக் கருணை புரிந்து, அவற்றின் ஆற்றலை யொடுக்கி இனிது வாழ்விப்பான்.

இக் கருத்துக்களை யெல்லாம் உள்ளடக்கி நிற்கின்றது, சைவத் திருமுறைகளுள் ஒன்பதாவதாக விளங்கும் திருவிசைப்பாவினுள் கருவூர்த் தேவரின் ஒரு திருப்பாட்டு.[1] கருவூர்த் தேவரின் காதல் கனிந்த கவிதை நெஞ்சம் அளிக்கும் இந்த அற்புதமான கவிதைக் கனிதான் எத்துணைச் சுவையை உள்ளடக்கி நிற்கின்றது!

---

* இக்கட்டுரையிற் காட்டப்பெறும் திருவிசைப்பாப்பாட்டு எண்கள் திருப்பனந் தாட் காசிமடம் (ஜூன் 1949) முதற்பதிப்பு ஒன்பதாம் திருமுறையில் உள்ள படிக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. திருவிசைப்பா — பா. 81

**பாடல்நெறி:**

வாழ்வின் உயிர்த்துணை, — வாழ்முதல் — பரம்பொருளைத் தவிர வேறு இல்லை என்பதை அநுபவத்தில் அறிந்த அருளாளர் பாட்டுச் சிந்திக்கச் சிந்திக்கச் சுவை பயப்பதுடன் நம் வாழ்வையும் திருத்தி ஆட்கொள்ளும் அருமை உடையது. அத்தகு அருட்பாட்டால் இறைவனைப் போற்றுவதையும் ஒரு வழிபாடு என்றே கொள்ள வேண்டும். 'பாடல்நெறி' என்று திருமுறை தெளிவுறுத்துவது இதுவேயாகும்.[1] இந்தப் 'பாடல்நெறி' 'பாடல் சான்ற புலனெறி வழக்கம்' என்று சங்க காலத்தே, தொல்காப்பியர் காலம் தொடங்கி, வளர்ந்து முறுகி முகிழ்க்கும் ஒன்றே என்றுகூடக் கூறலாம்.

**பாடல் வடிவம்:**

கருவூர்த்தேவரின் கவிதைகள் நூற்றிரண்டு, ஒன்பதாம் திருமுறையில் ஒளிர்கின்றன.[2] அவற்றுள் ஒன்றே இங்குத் தொடக்கத்திற் சிந்தித்த தூயபாடல்; அவ்வழகுப்பிழம்பு அடியில் வருவது ஆகும்:

"இவ்வநம் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனம் குழைத்த செஞ்சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற் றம்பலமே."

முற்கூறியவாறு, 3ஆம், 4ஆம் வரிகளிற் கூறப்பெறும் இயற்கை வருணனைத் திறம் ஆழப் பொருள் உடையது.

**சான்றோர் மரபு:**

பெரியோர் வாக்குகள் மேம்போக்காகப் பார்த்தற்குரியன அல்ல; அவை ஆழ்ந்து ஆழ்ந்து செல்லற்கு உரியவை; அப்போதுதான் அவர்கள் பெற்ற அநுபவம் நமக்குப் புலனும். அந்த அநுபவத்தின் எல்லையினை அணுகாத வரையில் நம் 'பாடல் நெறி' பண்பட்டதெனக் கூறவியலாது. இக் கவிதையின் முதல் இருவரிகள், 'புலன் ஐந்தும் பொறி கலங்கி' எனத் தொடங்கும் ஆளுடைய பிள்ளையார் அருட்பாடலை நினைவு கூர்வித்தல்

1. Introduction to the Tamil translation of 'Sivananta lahari' by Prof. J. P. Meenakshisundaranar. (1941)
2. திருவிசைப்பா— பா. 80 to 182

அறிந்து இன்புறத்தக்கது ஆகும்.[1] அதனுடன் அருளாளர் 'ஒருநெறி யுணர்வை'யும் நம் உள்ளத்தே தோற்றுவிப்பதாகும். 'பிறவிப் பௌவம்' என்ற உருவகம், தனியனேன் பெரும் 'பிறவிப் பௌவத்து'[2] என்றற் றொடக்கத்துத் திருவாசகப் பகுதிகளை நினைப்பிப்பது ஆகும். அவ்வாறே 'ஐவரும் பகையே' என்ற குறிப்பு, அப்பரடிகள் ஐம்புலன்களான் வரும் அல்லல்களை விரித்துரைக்கும் அனைத்துப் பகுதிகளை யும் நினைப்பிப்பது எனலாம்.[3] 'திருவளர் திருச்சிற்றம்பலம்' என்ற தொடர், 'சென்றடையாத திரு' முதலிய[4] திருமுறை வாக்குக்களைக் கருத்திற் கொணர்விப்பதாகும்.

**பிழைத்தவை பொறுத்தல்:**

திருக்களந்தை யாதித்தேச்சரம் உடைய பிரானை வழிபடும் மற்றொரு பாடற் பகுதியும் இங்கு நினைத்தற் குரியது.[5] கருவூர்த்தேவர் இதனுள், இறைவன் தொண்டர்க்கு எளியவன் என்பதனை விளக்குகின்றார். ஆனால் அத்தொண்டர் பழைமை உடையராதல் வேண்டும் என்பது அவ் வருளாளர் குறிப்பு. மாறுபட்டு நிற்பவர்க்கு இறைவன் அரியவனே ஆவன். எங்கே எளிமையும், அன்பும் கனிந்த இதயம் உண்டோ, அங்கே அவன் தோன்றுவான். 'மற்றவர் அறியா மாணிக்க மலை' என்பதும் உணரத்தக்கது.[6] ஆதலின் 'மிண்டர்க்கு அரியவன்' ஆகவும் அவன் உள்ளான். பிழை பொறுத்தருளும் பெருங்கருணையே இறைவன் பண்பாகும். இப்பெருந்தகவை எடுத்துப் பேசாத அடியார் உலகச் சமயங்களிலேயே இல்லை எனலாம். அன்றியும், அப்பரடிகள் உலகிற்கு வழங்கும் செய்தி இப் பெருங்கருணையே ஆகும். சைவம் சார்ந்து முதற்பதிகம் மொழிந்தருளும் நிலையில், 'முதல்வன் கருணைக் கடல் மூழ்கினரே' என்பர் சேக்கிழார்.[7] அக்கடலில் மூழ்கி எழுந்து வழங்கிய இன்றமிழ்ப் பாடல்களைக். 'கருணைக் கனிகள்' எனிற் பிழையும் உண்டோ? தாம் விரும்பிச் சொல்ல முற்படுவது 'இறைவன் கருணைச் செய்தி' ஒன்றுமே என்பதை எடுத்துக் காட்டற்கே பதிகந்தோறும் இராவணனை அப்பரடிகள் நினைவு கூர்ந்து பாடுகின்றனர்.

இத்தகு இறைவனைப் 'பித்தன்'[8] 'அழகன்'[9] என்கின்றார்

1. திருஞானசம்பந்தர் தேவாரம்
2. திருவாசகம்
3. அப்பர் தேவாரம்
4. திருஞானசம்பந்தர் தேவாரம்
5. திருவிசைப்பா — 94
6. திருவிசைப்பா — 47
7. அப்பர் புராணம்
8. திருவிசைப்பா — 94, 140
9. ,, — 94

கருவூர்த்தேவர். பின்னே 'கங்கை கொண்ட சோழபுரத்து'ப் பதிகத்தில் 'பித்தன் என்று ஒருகாற் பேசுவரேனும் பிழைத்தவை பொறுத்தருள் செய்வான்' என்று தேவரே பாடுவது[1] தம்மையும் கருதியதாகலாம்; சுந்தரரையும் குறித்ததாகலாம். சேந்தனார் பாடும் திருப்பல்லாண்டும் 'பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே' என்றே பாடுகிறது.[2] திருஞானசம்பந்தரும் அப்பரடிகளுங்கூடப் பிரானைப் பித்தன் என்று போற்றும் இடங்களும் உண்டு.

பிழைத்தன பொறுக்கும் பெருங்கருணையை, இவ்வாசிரியரே 'பிரியுமாறு உளதே, பேய்களோஞ்சி செய்த பிழை பொறுத்தாண்ட பேரொளியே' எனப் பாடுவர் பிறிதோரிடத்தும்.[3]

இவ்வழகிய திருப்பாடல் அடியில் வருவதாகும்:

''பழையராந் தொண்டர்க் கெளியரே மிண்டர்க்கரியரே
பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத் தருளாப்
பிச்சரே நச்சரா மிளிரும்
குழையராய் வந்தென் குடிமுழுதாளுங் குழகரே
ஒழுகுநீர்க் கங்கை
அழகரே யாகில் அவரிடங் களந்தை
அணிதிகழா தித்தேச்சரமே.''

**ஏனையபாடல்களில் இறைநிலை:**

இவ்வாறே கருவூர்த்தேவர் பாடும் கவிதைகள் அனைத்தும் அருஞ்சிறப்புடையவை. திருமுகத்தலைப்பதிகம் மிக அரும்பெருஞ்சிறப்புடையது. 'புவனநாயகனே' எனவரும் பாடல், உணர்ந்துணர்ந் தோதத் தகுவதாகும்.[4] 'பாவியேன் ஆவியுள் புகுந்தது என்ன காரணம்?' என வினவும் எழிலும்,[5] என் 'வினைபடும் உடல் நீ புகுந்து நின்றமையால் விழுமிய விமானம் ஆயினதே' என இறுமாக்கும் பொற்பும்[6] உணரத் தக்கவை. திரைலோக்கிய சுந்தரத்துப் பதிகப்பாடல்கள் அகப்பொருள் நெறியில் பரம்பொருளை நெஞ்சிற்பதிப்பவை.[7] அன்பொடு தன்னை அஞ்செழுத்தினல் வழிபடுவோர்க்கு எல்லாப் பேறும் தரும் இறைவன் அற்

1. திருவிசைப்பா — 140
2. திருப்பல்லாண்டு —289
3. திருவிசைப்பா —118
4. திருவிசைப்பா — 112
5. ,, 114
6. ,, 117
7. ,, 122 to 132

புதத்தெய்வம் ஆவன்' என்றும்[1] 'அன்னமாய் விசும்பு பறந்து அயன் தேட அங்ஙனே பெரியநீ, சிறிய என்னை ஆள்விரும்பி என் மனம் புகுந்த எளிமையை என்றும் நான் மறக்கேன்' என்றும்[2] 'கருதுவோர் கருதும் உருவமாம்' என்றும்,[3] 'பெண்கள்மேல் வைக்கும் காதலில் நூறுயிரத்துள் ஒரு கூறு உன்கண் வைத்தாற்போதும், என்னும்[4] மங்கையோடிருந்தே யோகுசெய்வான்' என்றும்[5] வரும் கங்கை கொண்ட சோளேச்சரப் பதிகக் கருத்துக்கள் மறக்கவியலா மாண்பு உடையவை. 'பன்னெடுங்காலம் பணி செய்து பழையோர் தாம்பலர் ஏம்பலித்திருக்க, என்னெடுங்கோயில் நெஞ்சு வீற்றிருந்த எளிமையை என்றும் நான் மறக்கேன்' எனத் தஞ்சை இராசராசேச்சரத்திறைவனைப் போற்றுவர்.[6] திருவிடை மருதூர்ப்பிரான் 'மன்னிடை நுணுகி நுணுகி உள்கலந்தோன்'[7] 'மழலையாழ் சிலம்ப வந்து அகம்புகுந்தோன்'[8] 'கண்ணிற் கண்மணி யனையான்'[9] என்று போற்றுவர் தேவர்.

போற்றிப்பாடல்: திருச்சாட்டியக்குடியில் தேவர் இறைவனைப் போற்றும் திருப்பாடல் நம் அன்றாட வழிபாட்டில் கூறி அநுபவம் பெறத் துணை நிற்பது ஆகும்; அத்திருப்பாடல் பின்வருவது:[10]

'செங்கணா போற்றி! திசைமுகா போற்றி!
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி! அமரனே போற்றி!
அமரர்கள் தலைவனே போற்றி!
தங்கணான் மறைநூல் சகலமும் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணாயகனே போற்றி! ஏழிருக்கை
இறைவனே போற்றியே! போற்றி!

---

1. திருவிசைப்பா 135
2. ,, 133
3. ,, 137
4. ,, 140
5. ,, 143
"மங்கையைக் கெழுவின யோகினர்" — அப்பர். 98
— சமாசப் பதிப்பு. (1941)

6. திருவிசைப்பா 169
7. ,, 175
8. ,, 179
9. ,, 181
10. ,, 159



15

**பண்ணிசைக் குறிப்பு:**

புறநீர்மை, பஞ்சமம், காந்தாரம் ஆகிய மூன்று தமிழ்ப் பண்களில் இவ்விசைப் பாடல்கள் நூற்றிரண்டும் அமைந்துள்ளன. இவற்றுள், ''தீந்தமிழ் மாலை''[1] 'தமிழ் மாலை'[2] 'மணி நெடு மாலை'[3] 'அமுதுறழ் தீந் தமிழ் மாலை'[4] 'சொல் மாலை'[5] 'பாவணத் தமிழ்கள்'[6] 'தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை'[7] என்றதொடர்களால் இவற்றை ஆசிரியரே பாராட்டியுள்ளமையும் இவ்விடத்து அறிதற் குரியதாகும். ''காந்தாரப் பண்ணில்'' திரைலோக்கிய சுந்தரப்பதிகம், ஆசிரியராற் பாடப்பட்டிருக்க வேண்டும் என்ற குறிப்பு அகச்சான்று ஒன்றாற் புலன் ஆகின்றது; மற்றையவை இவ்விரு பண்களிற்றான் பாடப்பட்டன என்று அறிய ஆசிரியர் வாக்கில் அகச்சான்று இல்லை. முன்னையதற்குப் பின்வரும் வரிகள் சான்றாம்.[8]

'பூரணத்தால் ஈரைந்தும் போற்றிசைப்பார் காந்தாரம்
சீரணைத்த பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே'

**மற்றோர் மரபு:**

இனி, 'கருவூர்'[9] 'கருவூரன்'[10] 'பித்தனேன்'[11] கருவூரனேன்'[12] என்றசொற்களால், இவ்வாசிரியர் தம்மைப் பதிகந் தோறும் வரும் திருக்கடைக்காப்புச் செய்யுட்களில் கூறுதல், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய சமயச் சான்றோரது பாடல் நெறியை இவ்வாசிரியர் பின்பற்றி நிற்பவர் எனற்குத் தக்க சான்றாக அமையும் எனலாம். தம்மை ஆரணம் பிதற்றுபவராகவும்[13] மறை தெரிபவராகவும்[14] தேவர் கூறுதல், இவர் வேதநூற் பயிற்சி உடையவர் என்பதனையோ, அன்றி மறையவர் குலம் சார்ந்தவர் என்பதனையோ விளக்குவது என்று கூறலாம். முதலாம்

1. திருவிசைப்பா 90
2. ,, 100, 13?
3. ,, 111
4. ,, 121
5. ,, 143, 161
6. ,, 151
7. ,, 182
8. ,, 132
9. ,, 90, 100, 121, 143
01. ,, 132
11. ,, 111
12. ,, 151
13. ,, 111, 100, 132
14. ,, 151

இராசராசச் சோழர் காலத்து வாழ்ந்த இவ்வருட் பெருங்கவிஞர் திருப் பாட்டுக்கள் அக்கால நிலையை இனிது விளக்குவனவாகவும் அமைந்திருத்தல் வரலாற்றுராய்ச்சியாளர்க்கு இறும்பூது பயப்பது ஒன்றுகும்.

**யாப்புக்குறிப்பு:**

பதினொரு பாடல்கள் கொச்சகக் கலிப்பா அமைப்பிலும்[1] ஏனையவை எழுசீர் விருத்தங்களாகவும் அமைந்துள்ளன. இவ்வரும் பாடல்கள் அனைத்தினுள்ளும் வரும் எல்லா நலங்களையும் எடுத்துரைத்தல் இங்கு நோக்கம் அன்று; எனினும், ஒன்பதாம் திருமுறையில் ஒருபகுதியாக விளங்கும் இவ்வுயர் பெருங் கவிதைகளை அறிமுகப் படுத்தி, நலம்பேணலே கருத்தாகும்.

**கவிதைத் திருக்காட்சி:**

கருவூர்த்தேவரது கவிதைகள் முழுதும் பொதுநோக்கிற் பார்க்குங்கால் அருட்சித்தராக விளங்கிய அவ்வருளாளரது அநுபவப்பிழிவாக உள்ளன எனலாம். அவை சொற்பொருட் காட்சியால் விளக்கும் கருத்தினும், அவற்றைக் கடந்த மெய்ப்பொருட் காட்சியால் விளக்குவது எழுத்தில் எழுதிக் காட்டொணு ஒன்று என்று அமையலாகின்றது. இங்குக்காணும் காட்சி, கவிதைக் காட்சி. பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் அவர்கள் நக்கீரரை யொட்டிக் கூறுவது போன்று, ''உலகிற்கும் உலகவாழ்விற்கும் இடைப்பட்ட நம்மை யெல்லாம், அவை கடந்த அப்பாலைக்கும் அப்பாலைக்கு, – புராண இதிகாசங்களாற் கூறப்பட்ட ஒருமைப்பாட்டின் உயர்நிலைக்கு, — ஈர்த்துச் சென்று அப்பரம்பொருள் இன்பத்தில் திளைக்கச் செய்யும்'' – திருக்காட்சியாக உள்ளது என்று கூறலாம்.[2]

இறைவனை நினைந்து, மனம்கனிய, அழுது உருக, இவ்வாசிரியரே கூறுவது போன்று 'அழுவது நின்திறம் நினைந்தே அதுவன்றே பெறும் பேறு'[3] என்று இறுமாக்கக் கருவூர்த்தேவர் கவிதைகள் துணைபுரியும் என்பது உறுதி. அவ்வுறுதி சமய உலகில் நிலைக்க வேண்டும் என்பதே அறிஞர் கருத்துரை எல்லாம்.

---

1. திருவிசைப்பா 122 to 132
2. 'A Seminar on saints' – [1960] Edited by Dr. T. M. P. Mahadevan - P. 35
3. திருவிசைப்பா – 127

# திருமூலர் சொல்

திரு. க. சிற்றம்பலம்
தலைமையாசிரியர், தமிழ்வித்தியாலயம், பளை.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென்னுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல ஞகின்ற வங்கணனே.

திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றுள் திருமூலர்சொல் பத்தாவது திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. இது திருமந்திரம், மந்திர மாலை என்னும் பெயர்களையுடையது. திருக்கயிலையில் சிவயோகத்திருந்த சித்தர்களுள் ஒருவர், பொதிகைமலைக்கு வரும்போது திருவாவடுதுறைக்குச் சமீபமாகப், பசுநிரை மேய்ப்பான் மூலன் என்பவன் இறந்துபட, அப்பசுக்கள் படும் துயரத்தைக் கண்டு, அவன் உயிர் பெறினன்றி அவை துயர் நீங்காவென்பதை உணர்ந்து, தமது யோகப்பயிற்சியால் மூலன் உடலிற் புகுந்து திருமூலர் ஆயினர். பின்னர் திருவருட்கருத்தையுணர்ந்து, திருவாவடுதுறைச் சிவாலயத்தை அடைந்து அதன் ஒருபுடை சிவயோகத்தமர்ந்திருந்து ஆண்டொன்றிற்கு ஒரு மந்திரமாக அருளிச் செய்யப்பட்டதே திருமந்திரம். திருமூலர், தாம் இங்கு வந்த காரணத்தை,

''மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே'' என்றும்,
''அந்தி மதிபுனை யரனடி நாள்தொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே'' என்றும் கூறியருளுவதினல் வேதசிவாகமக் கருத்துக்களைத் தென்தமிழ் மொழியில் அருளித் தமிழ் நாட்டை உய்விக்கவே வந்தார் என்பது தெளிவு.

''சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்'' என்றும்

''வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தின்
ஓதத்தகும் அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் ருர்களே'' என்றும்

வருவனவாதித் திருவாக்குக்களால் வேதச் சிறப்பும், வேதத்தைவிட்டு எதுவும் இல்லையென்பதும், வேதத்தோடு பொருந்திய சைவம் வைதீக

சைவத்தின் உயர்வும் பெறப்படும். வேதாகமங்கள் என்று கூறப்படுவன வடமொழியிலுள்ள இருக்காதி நான்கு வேதங்களும், காமிகாதி இருபத்தெட்டுச் சிவாகமங்களுமேயாம். பிறகூற்றுக்களெல்லாம் ஒருவித அபிமானத்தாற் பிறந்தவையே என விடுக்க. திருமூலர்பெருமான்,

''ஆரிய முந்தமி ழும்உட னேசொலிக்
காரிகை யார்க்கும் கருணை செய்தானே'' எனவும்

''தமிழ்ச்சொல் வடசொல் எனுமவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணர லு மாமே'' எனவும் அருளியதை உன்னி ஓர்க. இதனைச் சம்பந்தன் செந்தமிழ்,

''மந்திபோல்திரிந் தாரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலா
அந்தகர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே'' எனக் கூறியருளுவதாலும் தெளிக.

ஒவ்வொரு வேதமுடிவிலும் ஒவ்வொரு மகா வாக்கியம் உண்டு. அவ்வாக்கியங்கள் வேதாந்தம் எனப்படும். சாமவேதமுடிவில், ''தத்துவமசி'' என்னும் மகாவாக்கியம் உள்ளது. 'அது நீ ஆகிறாய்' என்பது அதன் பொருள். (தத் — அது, துவம் – நீ, ஆசி – ஆகிறாய்) இவ்வாறு பொருள்படவே, அது என்கிற முதல்வனும், நீ என்கிற ஆன்மாவும், ஆகிறாய் என்பதனால் ஆதற்குரிய முயற்சியும், அம் முயற்சியால் விலகும் தடையும் ஆதியன பெறப்படும். இதனைத் திருமூலர் பெருமான்,

''தொம்பத மாயையுள் தோன்றிடும் தற்பதம்
அம்பரை தன்னில் உதிக்கும் அசிபதம்
நம்புறு சாந்தியில் நண்ணுமவ் வாக்கியம்
உம்பருரை தொந்தத் தசிவாசி யாமே'' எனவரும்

மந்திரத்தில் (தொம்–துவம்) தொம்பதப் பொருளாகிய உயிர், மாயை பற்றுக் கோடாக அஞ்ஞானத்துட் கிடப்பதும், தத்பதப் பொருளாகிய சிவம் திருவருளிடமாகத் (பரை) தோன்றுவதும், அசிபதப் பொருள் சாந்தியாகிய ஒடுக்கத்தின்கண் அமைவதும் ஆகிய விஷயங்களை விளங்க அருளுகின்றார். ஆகவே, அசிபதம் இறைவனுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பை – கலப்பைக் காட்டுவ தென்னலாம். அத்தொடர்பு அத்துவிதம் என்று வேதங்களிற் சொல்லப்படும். இரண்டு பொருள்கள் ஒன்றாகக் கலந்திருக்கும் கலப்பே அத்துவிதம். அது ஏகனாகிய இறைவன் உலகுயிர்கள் தோறும் கலந்து ஒன்றாகியும், வேறாகியும், உடனாகியும் நின்று உபகரிப்பதைக் குறிக்கும் என்பர். இவற்றை,

16

''விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா வானந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே'' என்றும்,

''கண்காணி யில்லா விடமில்லைக் காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானே'' என்றும்

வருவனவாதித் திருவாக்குக்களால் உணரலாம்.

''விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணாரமுதமுமாய் நின்றான்'' என்பது மணிவாசகம்,

வேதங்கள் ''ஏகம் பிரமம்'' என்றுகூற ஒருசில சமயவாதிகள் ''அத்து விதம்'' என்ற வார்த்தைக்கு இரண்டல்ல எனப் பொருள் கொண்டு இறைவன் ஒருவனேயுளன், மற்றை உயிரும் உலகமுமாகியவை எல்லாம் பொய்த் தோற்றமே என்பர். அவர்களுக்கு நல்லறிவு கொளுத்துவாராகி,

''ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தானைந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே''

''பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு
பசுத்தன்மை நீங்கியப் பாசம் அறுந்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே''

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே'' எனக் கூறியருளு

கின்றார்கள். இவற்றின் விரிவைச் சிவாகமங்களினும் மெய்கண்ட சாத்திரங்களினும் காண்க. ஆளுடையபிள்ளையார், ''யாமா மாநீ யாமாமா'' (யாம்+ஆமா+நீ+ஆம்+ஆம்) என்று வரும்பகுதியில், யாம் – ஆன்மாக்களாகிய யாம், நீ ஆமா - பிரமமா? என்று வினவி, நீ ஆம் ஆம் – நீ பிரமமென்றால் முற்றும் தகும், தகும், என விடை இறுப் பதையும் சிந்திக்க.

மலமறைப்புண்டு கிடக்கும் உயிர், திருவருளால் மல மறைப்பு நீங்கி, திருவருள் வழிநடத்தத் திருவருள் தாரகமாகப் பதியைச் சென்றடையும். முறுகிய பேரன்பினாலே திருவருள் கிட்டும்.

''அன்பு சிவமிரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.''

''ஆர்வம் உடையவர் காண்பார் அரன்றன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி'' என்பனவாதி திருவாக்குக்களால் அன்பின் இன்றியமையாமையை வலியுறுத்தியருளுகின்றார். பேரன்பின் முதிர்ச்சியினாலே நீ அது ஆகிறாய் (தொந் தத்தசி) என்றபாவனை, அது நான் சிவோகம் பாவனையாக, குருபரனது பேரருளினாலே ஆன்மா சிவமாகி முடிவிலா ஆனந்தமெய்தும் என்பதனை,

''நீயது வானாய் எனநின்ற பேருரை
ஆயது நானானேன் என்னச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரருள்
ஆயது வாயனந் தானந்தி யாமே'' எனக் கூறியருள் வதனால் உணர்க. இப் பெரும் பேற்றைப் பெற அன்பு செய்வதற்கு வழியாக, திருமந்திரம்,

''பத்தர் சரிதை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்
சுத்த இயமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே'' எனச் சரியை, கிரியை. யோகம், ஞானம் என்ற சாதனைப் படிகளை வகுத்து அவ்வவற்றில் தவறாதொழுகிவரக் கட்டளை இடுகின்றது. சரியை முதலான நெறிகளிற் சரிப்போர் நியமமாக ஓதவேண்டியது ஸ்ரீபஞ்சாட்சரம். ஆளுடைய நம்பிகள்,

''அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தியெ ழும்பழைய வல்வினை மூடாமுன்'' எனவரும் திருவாக்கில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை அஞ்சுபதம் என்று குறித்தருளுகின்றார். ஐந்தெழுத்துக்களும் ஐந்துபதங்களாய் அமையுமாற்றையும், அவற்றின் பொருள் விரிவையும், சிவாகமங்கள், மெய்கண்டநூல்கள் பரக்கக் கூறுகின்றன. இக்கருத்தைத் திருமந்திரம்,

''ஐம்ப தெழுத்தே யனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்தே யனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்தபின்
ஐம்ப தெழுத்தே யஞ்செழுத் தாமே''.

''சிவனரு ளாய சிவன்திரு நாமஞ்
சிவனருள் ஆன்மாத் திரோத மலமாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ ஞமே''

''சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய நாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே'' என்று வருவன

வாதித் திருவாக்குக்களால் ஸ்ரீபஞ்சாட்சரம் சத்தப்பிரபஞ்சமாக விரிந் திருப்பதையும், ஐந்துபதங்களின் பொருளையும், அவற்றை ஓதுமுறை நிற்குமுறை முதலானவற்றையும் விரித்துரைக்கின்றது.

''ஈரெழுத்தாலே இசைந்தங் கிருவராய்'' என்று திருமூலர் பெருமான் குறிக்கின்ற ஈரெழுத்தொரு மகாமந்திரம் யசுர் வேதத்தின் நடுப்பகுதியில் பேசப்படுகின்றது.

''வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே'' என்ற மந்திரத்

தால் வேதசிவாகமங்கள் சத்தியம்; இறைவனூல்கள்; பொது நூலாகவும், சிறப்பு நூலாகவும் உள்ளவை; வேதாந்தம், சித்தாந்தம் எனப்படுபவை; அவை ஒன்றோடொன்று பேதமுடையனவென்று சிறியோர் கூறுவர். ஞானிகளாகிய பெரியோர் அவற்றில் பேதங்காண்கிலர் என்னும் உண்மையை விளக்கியருளுகின்றார்.

இவ்வாறு திருமந்திரம் வேதசிவாகமக் கருத்துக்களைக் கொண் டிருப்பதைத் தாலிபுலாக நியாயம்பற்றி ஒரு சிறிது கண்டோம். திரு மந்திரம் ஒன்பது தந்திரங்களும் காரணம், காமிகம் முதலான ஒன்பது ஆகமக் கருத்துக்களைக் கொண்டதென்பர். உலக நீதிமுதல் உயர் யோகம் ஞானம்வரை பல கருத்துக்கொண்ட சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் உள்ளது. ஆழ்ந்த சிந்தனைக்குரியது. பலகாலமாகத் தொடப் படாமல் கிடந்ததை, திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானம் திருமந்திர மகாநாடு, திருமந்திரக் கட்டுரை நூல் திருமந்திர உரை முதலியவற்றால் சைவத்தமிழுலகம் தேடிச் சிந்திக்கவைத்த அரும்பெரும் செயல் போற்றற் குரிய தொன்றாகும்.


''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'' - நம்பிகள்

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் — அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்குந் தற்பரமே தான்.



**Dr. ச. கணபதிப்பிள்ளை (ஈப்போ)**

சபை மண்டபத்திற்குக் கிழக்குப் பக்கத்திலிருக்கும்
நிலத்தை 1953ஆம் ஆண்டில் வாங்கிச் சபைக்கு
உதவிய பெருவள்ளல்.



**ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர்**

சபைத் தலைவராகவும் பரிபாலன மன்ற உறுப்பினரா
கவுமிருந்து பெரும்பணியாற்றிய அறிஞர்.
40 ஆண்டுகளாகச் சபையின் சமயப் பிரசாரகராக
இருந்து வருபவர்.



**திரு. மு. ஆ. கந்தையா**

1950ஆம் ஆண்டு தொடக்கம் 15 ஆண்டுகளாகச்
சபையின் பல பதவிகளிலும் அமர்ந்திருந்து
உயிரூட்டியவர்.

# பதினோராந்திருமுறை

பண்டிதர் மு. கந்தையா B. A.
விரிவுரையாளர், இந்துக்கல்லூரி, மானிப்பாய்.

சாஸ்திர நூல்களுக்கு ஒத்தியலும் தோத்திர நூல்களைக் கொண்டுள்ளது நமது சித்தாந்த சைவம். நமது சைவத்திருமுறைகள் பன்னிரண்டாக வழக்கிலுள்ளன. சித்தாந்த சாஸ்திர நூல்களில் முதலாகிய சிவஞானபோதமும் பன்னிரண்டு சூத்திரங்களாலமைந்துள்ளது. அதன் ஒவ்வோர் சூத்திரமும் வரையறுக்கப்பட்ட தனியான பொருளமைதியோடு கூடியுள்ளது. அன்றியும், சிவஞானபோதச் சூத்திரங்கள் எண்ணொழுங்குமுறையிற் பெயர்பெற்றவாறே திருமுறைகளும் எண்ணொழுங்கு முறையிற் பெயர்பெற்றுத் திகழ்கின்றன. புறவமைப்பிற் காணும் இவ்வொப்புமைப் பண்புகளுக் கிணங்க இவற்றின் அக அமைப்பிலும் அதாவது, பொருளமைப்பிலும் நேருக்குநேர் ஒப்புமையுண்டா? இதுபற்றி அறிஞருலகம் சிந்தித்து வருகின்றது. இந்த அறிஞர் மரபினைப் பின்பற்றிப் பதினோராந் திருமுறையின் இயல்பினைச் சிறிது கவனிப்பாம்.

''காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்
**அயரா அன்பின் அரன்கழல் செலுமே.**'' என்பது சிவஞான போதத்துப் பதினோராஞ் சூத்திரம்.

முன் பத்தாஞ் சூத்திரத்தில், 'ஏகனுகி இறைபணி நிற்றல்' என்னும் சிவத்தை யணுகும் பண்பு உணர்த்தப்பட்டது. அதன் தொடர்பாக அங்ஙனம் இறைபணி நிற்றலின்பயன் இன்னது என இச் சூத்திரத்தால் விளக்கப்படுகின்றது. ஏகனுகி இறைபணி நிற்றலின் பயன், சிவப்பேறு கூடுதலாகிய நிட்டையின் இயல்பை அடைதலாம். அது, இச்சூத்திரத்தில், 'அயரா அன்பின் அரன்கழல் செலும்' என்னும் வாக்கியத்தால் இனிதுணர நிற்கின்றது. அத்துடன், அயரா அன்பின் அரன்கழல் செல்லுதற்கு இன்றியமையாத ஏதுவும் முன்னிரண்டடிகளால் விளக்கப்பட்டுள்ளது. இதன் விரிவினை மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிய இச்சூத்திரப் பொழிப்புரையிற் காணலாம்.

இறைவன் என்றென்றும் உயிருக்கு அறிவித்துத் தானும் அறிந்து நிற்குந் தன்மையன். 'ஏகனுகி இறைபணி நிற்கும்' நிலைபெற்ற ஓருயிர் அத்தன்மையை அறியும் வாய்ப்புள்ளதாகும். அங்ஙனம் அறியும் புது விளக்கம் பெற்ற மாத்திரத்தே அது — அயராத — மறவாத பேரன்பு

நிலையைப் பெறும். அதன் பேருக, தடையின்றி அரன்கழலிற் செல்லுதல்— நிட்டையின் இயல்பை அடைதல் — ஒன்றே அது செய்யத்தக்கது; வேறு பிறிதில்லை. குறித்த சூத்திரத்திலிருந்தும் அதன் பொழிப்புரையிலிருந்தும் நாம் உணரவருங் குறிப்புக்கள் இவையாகும்.

பதினொராஞ் சூத்திரத்தின் பொருள் நிலை இது. இனி, பதினொராந் திருமுறையின் பொருள் நிலைக்கும் இதற்குமுள்ள தொடர்பினை அவதானிப்போம்.

பதினொராந் திருமுறையில் முதலில் இடம்பெறுவது காரைக் காலம்மையாருடைய பிரபந்தப்பகுதி. அம்மையார் பெற்றிருந்த சிவாநு பவநிலை எத்தகைய தென்பதைத் தெய்வச் சேக்கிழார் வாக்கில் முதலிற் காண்போம். திருக்கைலாசத்தில் தலையினால் நடந்தேறிச் சிவபெரு மானைத் தரிசித்து நிற்கும் அம்மையார், அவ்விடத்தில் விடுத்த வேண்டு கோள் பின்வருமாறு:

''இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்மீண்டும் பிறப்புண்டேல் நின்னையென்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போதுன் **னடியின்கீ ழிருக்கவென்றார்.**''

இதில், 'மறவாமை வேண்டும்' என வருந்தொடர் 'அபரா அன்பின்' என்ற சூத்திரத் தொடர்க்கு விளக்கமாகின்றது. 'உன்னடியின் கீழிருக்க' என்னுந் தொடர், 'அரன்கழல் செலும்' என்ற சூத்திரத் தொடர்க்கு இலக்கியமாகின்றது. இது, சேக்கிழார் காட்ட, அம்மை யார் அநுபவநிலை பதினொராஞ் சூத்திரப் பொருள்நிலைக்கு ஒத்திருக்கு மாற்றை, யாம் கண்டவாறு. மேல், அதனை, அம்மையார் தம்வாக்காற் காட்ட இனிக்காண்போம்.

அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் இரு வெண்பாக்கள் இங்கு நம் கவனத்தை ஈர்க்கின்றன.

**''அறிவானுந் தானே அறிவிப்பான் தானே**
**அறிவா யறிகின்றான் தானே** — அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாச
மப்பொருளுந் தானே யவன்'' என்பது அவ்வெண்பாக் களிலொன்று. 'காண உள்ளத்தைக் கண்டுகாட்டல்' என்ற சூத்திரப் பொருள் இவ்வெண்பாவில் தானே விளங்கிக்கிடக்குந் திறம் வியக்கற் பாலதாம். இனி,

''இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறிபணியா ரேனும் — சுடருருவின்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவற்கு'' என்பது குறித்த வெண்பாக்களிரண்டில் ஏனையது.

''எம்மீது சிவபெருமான் எவ்வளவுதான் பராமுகமாயிருக்கினு மிருக்கட்டும். ஆனால், நம்முடைய நெஞ்சமோ அவர்பால் அயரா அன்பு செய்துகொண்டிருக்கும் நிலையில் அணுவளவும் பிசகாது'' என்பது இதன் சுருக்கமான பொருள். **அயரா அன்பின் சுவரூபத்தைத் தொட்டுக் காட்ட இதனினும் மேலாக என்ன விளக்கம் வேண்டியிருக்கிறது நமக்கு!** உண்மையாகவே பராமுகம் பண்ணுங் குறிப்போடிருந்திருப்பாராகில், நிச்சயமாக வெட்கித் தலைகுனிந்திருப்பார் சிவபெருமான் இந்த அன்பின் முன்!

அம்மையாரளித்த பிரபந்தத்தின் பொருள்நிலை இவ்வாறாக, இனி அடுத்து வரும் பட்டினத்தார் பிரபந்தத்தின் பொருள்நிலையைச் சற்று நோக்குவோம். தாம் 'அயரா அன்பின் அரன்கழல் சென்ற' மையைத் தாமே தம்வாக்கா லுணர்த்தி அதுபற்றி விளைந்த தமது உள்ள வெறுக்கையி னியல்பைப் பட்டினத்தடிகள் உதிர்த்துக் கொட்டும் பகுதியொன்று அவர்பாடிய கோயினான்மணிமாலையில் வருகின்றது.

''ஏனோ ரென்னை யாளுது விரும்பி
நல்ல னெனினு மென்க; அவரே
அல்ல னெனினு மென்க; நில்லா
திருவொடு திளைத்துப் பெருவளஞ் சிதையா
தின்பத் தழுந்தினு மழுந்துக; அல்லாத்
துன்பந் துதையினுந் துதைக; முன்பி
னிளமையோடு பழகிக் கழுமுப்புக் குறுகா
தென்று மிருக்கினு மிருக்க; அன்றி
இன்றே யிறக்கினு மிறக்க;ஒன்றினும்
**வேண்டலு மிலனே; வெறுத்தலு மிலனே;**
[இதுவெல்லாம் விளைந்தது எப்படி எனில்,]
ஆண்டகைக் குரிசில்நின் னடியரொடுங் குழுமித்
தெய்வக் கூத்துநின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வங் கிடைத்த லானே'' என்பது அவர்

பாட்டுப்பகுதி. ஒரு துறவுள்ளத்தில் வேண்டாமை வீறு எங்ஙனங் கொலுவிருக்கும் என்பதற்கு இனியதோர் எடுத்துக்காட்டு இது.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றார் திருவள்ளுவர். இவர் அம்மையாரை அகக்கண்ணுற் கண்டுகொண்டுதான் சொல்லுகின்றாரோ என எண்ணத் தோன்றுகின்றது அதனருமை. இனி, அப்பிறவாமை எதனுற் சம்பவிக்குமெனில், 'அது வேண்டாமை வேண்டவரும்' என்கின்றார். இவ்வாக்கியத்தால் திருவள்ளுவர் பட்டினத்தடிகளின் மனநிலையையே தொட்டுணர்த்துகின்றார் போலிருக்கின்றது. ஆனல், 'வேண்டாமை வேண்டுதல்' என்பது சும்மா வந்துவிடுமா? எந்த ஒரு அநுபவச்சூழ் நிலையில் அதுலபிக்கும்? திருவள்ளுவர் உய்த்துணர வைத்து விட்டார்; பட்டினத்தார் வெட்ட வெளிச்சமாக விளக்கியே விட்டார்,

'தெய்வக் கூத்தும்நின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வங் கிடைத்த வரனே'. என. 'பாதம் அடைய்வும் அணுகவும் பெறுதல்' - பதிஞெராந்திருமுறைப் பட்டினத்தார் வாக்கு. 'அயரா அன்பின் அரன்கழல் செலும் — பதிஞெராஞ் சூத்திரப் பகுதி.

அரன்கழல் சார்ந்தமையால், 'வேண்டும் வீறு' பெற்ற அம்மையார் நிலை அது. அதனல், 'வேண்டாமைவீறு' பெற்ற அடிகள் நிலைஇது. இவை இவ்வாருக இனி, இத்திருமுறையின் நடுநாயகமாய் விளங்கும் திருமுருகாற்றுப்படையின் பொருளியல்பைக் கவனிப்போம். இதன் ஆசிரியராகிய நக்கீரதேவநாயனர் இதன்கண் சீவன்முத்தனுகிய ஒருவனை முருகப்பெருமானிடம் முத்தியின்பம் பெறுதற்கு ஆற்றுப்படுத்துகின்றார். அவ்வகையில், அவ்வின்பப் பேற்றுக்கு இன்றியமையாத தகுதிப்பாடு அவன்பாலுண்மையைச் சில அடிகளில் தெரிவிக்கின்றார்.

**'எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்**
**சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு**
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்துறையும்
செலவு' என்பது அப்பகுதி.

சுப்பிரமணிய சுவாமியினுடைய திருவடிகளைச் சிந்திக்கும் தலைமை பெற்ற உள்ளத்துடனே புண்ணியங்களை விடாது செய்யுங் கோட்பாட்டினலே விளையாநின்ற மெய்ஞ்ஞானத்தைச் சாதித்து, அத்திருவடிக்கீழ் இருக்கும் நெறி'. என்பது நாவலர் பெருமான் அதற்கு வரைந்த உரை இப்பாடற்பகுதியும் இவ்வுரைப்பகுதியும் நாம் வேண்டும் முடிவிற்கேமுற்றிலும் ஒத்தியல்கின்றன.

'ஒருபானைச் சோற்றுக்கு ஓரவிழ்பதம்' என்பது பெருவழக்கு. பதிஞெராம் திருமுறை பதிஞெராஞ் சூத்திரப் பொருண்மைக்கொத்தது என்று எனக்காட்ட இச்சில உதாரணங்களே போதுமானவை.

இத்தகைய இப் பதினொராந் திருமுறை தன் பாடல்களின் தன்மையாலும், கவிதைநயம் பொருணயம் சொன்னயம் ஆதியவற்றாலும் சங்கவிலக்கிய ரீதிக்குஞ்சரி, சமயவிலக்கிய ரீதிக்குஞ்சரி, சற்றும் இளைக்காத பெருமையுடையது. பிற்காலத்துப் பெருஞான மேதைகளாகிய குமரகுருபர சுவாமிகள், சிவஞான சுவாமிகள் போன்றோர் அருளிய பிரபந்தங்களின் நடைக்கெம்பீரத்திலும், பொருணயச் செவ்வியிலும், கவிதாசாமர்த்திய வீற்றிலும் இப்பிரபந்தம் நிழலாடுவதை இலக்கியக் கண்ணால் இனிது கண்டு இன்புறலாம். அன்றியும், முன்னைய திருமுறைகளில் அருகித் தோன்றும் விநாயக பரத்துவச் சிறப்பு இதன்கண் பரக்கச் செழிக்க இடம்பெற்றுள்ளது. திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாருக்கு இது இன்றியமையாத ஒரு மூலநூலாக நின்றுதவியிருக்கின்றது. இதன் கண்ணுள்ள, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி பெரியபுராண விரிக்கு வகைநூலாக உதவியுள்ளது. அவர்தம் ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, திருவந்தாதி என்பனவும் பட்டினத் தடிகளின் திருக்கழுமல மும்மணிக்கோவையும் திருஞானசம்பந்தர்பற்றிய செய்திகள் பலவற்றைச் செழிப்பாக அள்ளித்தந்துள்ளன. இன்னும், கண்ணப்பர், சாக்கியர், சண்டீசர் வரலாற்றின் உயிர்த்தத்துவமான கருத்துக்களுக்கும் இப்பிரபந்தமே தாயகமாய்த் திகழ்கின்றது.

கல்லாலெறிதல் முத்திசாதனமாவதெப்படி என்பது எவர்க்குமே புரியாத புதிராகும், **'கல்லா லெறிந்த பொல்லாப் புத்தன் நின்னினைந் தெறிந்த அதனால்—அன்னவன் தனக்கும் அருள் பிழைத்தின்றே'** என இப் பிரபந்தம் இப்புதிருக்கு ஒரு சூசகம்பண்ணிவிட, இதன் வழியுணர்ந்தே சேக்கிழார்,

> ''அன்றுபோய்ப் பிற்றைநாள் அந்நியதிக் கணையுங்கால்
> கொன்றைமுடி யார்மேல்தாம் கல்லெறிந்த குறிப்பதனை
> நின்றுணர்வார் **எனக்கப்போ திதுநிகழ்ந்தது அவரருளே**
> **என்றதுவே** தொண்டாக என்றுமதுசெய நினைந்தார்''

என்று, அப்புதிரை அழகாக அவிழ்த்துக் காட்டியுள்ளார். இந்த அம்சத்தைக்கூட விபரித்தற்கு இடமின்மையின் ஒழிகின்றோம். மன்னிக்க.

'கடுகு சிறிதெனினுங் காரம் பெரி'தென்பர். அளவிற் சிறிதாயினும் இத்திருமுறையின் விறலுஞ் செறிவும் மிகமேலானவை. இதன் பண்பும் பயனுஞ் சைவத்திற்கு என்றைக்கும் இன்றியமையாதவை யெனலாம்.

---

# சேக்கிழார் சிந்தனைக்கதிர்கள்

திரு. மு. ஞானப்பிரகாசம் B. A., B. Sc.
துணை – அதிபர், பரமேஸ்வராக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

**தமிழகத்தின் பொற்காலம்**

தொன்றுதொட்டுத் தமிழ் மக்களிடத்தில் நிலவிவந்த சமயக் கருத்துக்களும், அரசியற் கருத்துக்களும் பூரண மலர்ச்சி பெற்ற காலம், தமிழ் நாட்டின் பொற்காலம் எனப்படும். கி. பி. 6ஆம் நூற்றுண்டளவில் ஆரம்பித்த அக்காலம் கிட்டத்தட்ட, 700 ஆண்டுகளுக்கு நிலைத்திருந்தது எனக்கூறலாம். சமயத் துறையிலும்சரி, தத்துவத்துறையிலும் சரி, அரசியற்றுறையிலும்சரி உண்மைப் பெரியார் பலர் தோன்றி, ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையும் அன்பும் உடையராய்த் தொண்டுகள் பலபுரிந்து தமிழரின் பெரும் பண்பாட்டை உருவாக்கி வைத்தகாலம் அதுவே. தெய்வமெய்த்திருவும், அரசியற்றிருவும், உலகியற்றிருவும் ஒருங்கே கைவரப் பெற்ற தெய்வ உல்லாசப் பெரியோர் பலர், தமிழ் நாடெங்கணும் நடமாடித்திரிந்து தமிழகத்தைத் தெய்வத்தமிழகமாக அமைத்த காலமும் அதுவே. அக்காலத்தில் உலகமறியாத அற்புதங்கள் பல தமிழகத்தில் நிகழ்ந்தன. சிவனடியார்களுட் பலர், பேரரசராகவும் சிற்றரசராகவும் திகழ்ந்தனர். அரசர்களுட்பலர், புலமைசான்ற அறிஞராகவும் பண்டிதராகவும் விளங்கினர். புலவர்களுட்பலர், தனம் படைத்த செல்வர்களாகவும், வள்ளல்களாகவும், பொலிந்தனர். இவ்வாறுன அபூர்வ நிகழ்ச்சிகள் தோன்றி எழுந்த அக்காலத்தில், அடியாருடைய பத்தி வெள்ளமும், அரசருடைய சத்தி வெள்ளமும், பொதுமக்களுடைய அன்பு வெள்ளமும் ஒன்று சேர்ந்து கரைபுரண்டு ஓடியதனுல், தமிழ் மண்ணிலும் தமிழ்க் கல்லிலும் இருந்து எழுந்து உயர்ந்த வானளாவிய கோயில்கள் எத்தனை? கலைக்கூடங்கள் எத்தனை? அறச்சாலைகள் எத்தனை? மருத்துவ நிலையங்கள் எத்தனை? என்பதைக் கணக்கிட்டுக் கூறமுடியுமா? எல்லா வகையிலும் உச்ச உயர்முகடேறி வாழ்ந்த அக்காலத் தமிழகம் ஒரு பூலோக கைலாசமாகும்; ஒரு இலட்சிய உலகமாகும். அந்த உலகிற்கு எம்மையெல்லாம் ஆற்றுப்படுத்தும் ஒரு ஆசிரியர் பெருந்தகை உண்டெ னில், அவர் பெரிய புராணக்காவ்யம் பாடியருளிய சேக்கிழார் சுவாமி களாகும்.

**சேக்கிழார் எங்கள் ஆசிரியர் பெருமான்**

சைவசமயிகளாகிய நாங்கள், உலகிற்கு முழுமுதலிறைவன் சிவபிரானென்றும், அவருடைய பிரபாவங்களைப் பாமாலைகள் மூலம் உணர்த்த வந்தவர்கள் சமயாசாரியர்கள் என்றும், அவர்களையே நாங்கள் வணங்கி

வருகின்றோம் என்றும் பறைசாற்றுகின்றோம். பறை சாற்றுவது வேறு; வணங்குவது வேறு, அநுபவப்பேறு பெற்ற பெரியோர்கூடச் சிவபிரானையோ, சமயாசாரியர்களையோ வணங்குதற்கு வேண்டிய தகுதியும் மனோவிந்தமும் உலகிலிருந்து விடுதலை பெற்ற நிலையும் தமக்குப் போதாதென்பர். பெரியோர்கள் நிலைமையே அங்ஙனமெனில், கால உணர்ச்சி, மொழி உணர்ச்சி, சரித்திர உணர்ச்சி, முதலிய அபிமானங்கள் வசப்பட்டிருக்கும் எம்போலியர் அந்த மூர்த்திகளை வணங்குதற்கு எம்மாத்திரம்? காலத்தோடும், மொழியோடும் தொடர்புடைய ஒரு சரித்திர புருஷர்—அதுவும் தமிழகத்தின் பேரமைச்சராய் விளங்கிய ஒருவர்—சமயச்சால்புகளையும் அடியார் செய்கைகளையும்—பொது மக்களின் நல்லியல்புகளையும் செய்கைத்திறன்களையும், 'படம்பிடித்து'க்காட்ட வல்ல தெய்வப்புலவராய் அமைந்தாரெனில், அவரே எங்கள் உள்ளத்தைத் தம்வசப்படுத்தும் தகைமை வாய்ந்தவராவர். அத்தகைமை வாய்ந்த ஒருவரே சேக்கிழார் சுவாமிகள். அவர் முதலில் எங்களுக்குத் தமிழகத்தை அறிமுகப்படுத்துவார். பின்னர் அங்குநிகழும் இயற்கையோடிசைந்து வாழும் வாழ்வு நிலைகளையும், அந்த வாழ்வு நிலைகளில் பொங்கித்ததும்பும் அன்புப் பெருக்கையும், அந்த அன்பு காரணமாக எழும் வேலைத்திறன்களையும் ஒன்றன்பின் ஒன்றாய்க் காட்டியருளுவார். அதன் பின்னர் இத்தனை சாதனைகளுக்கும் ஊற்றம் தரும் தெய்வ சக்தி நிலையங்களாய் ஆங்காங்கு வதிந்து உலாவும் அடியார்பால் எம்மை அழைத்துச் செல்லுவார். அடியார்களுக்கு அருகே அழைத்துச் சென்று, அவர்கள் தொண்டின் திறன்களையெல்லாம் உணர்த்தி, அவர்களுக்கு வேறில்லாத இறைவனின் தண்ணிழலிற் பொருந்திப் பலவாறு நின்று தொழும்பு புரியும் வண்ணம் கடைசியில் எம்மை அமைத்தும் விடுகின்றார். இங்ஙனம் படிமுறையாக இறைவன்பால் எம்மை அழைத்துச் செல்லும் வித்தையில் சேக்கிழார் நிகரற்ற ஞானாசிரியராகவும் விளங்குகின்றார்.

### பெரிய புராண அரங்கேற்றம்

சேக்கிழார் சுவாமிகள், தமிழ்ச் சான்றோர்க்குப் பெயர்பெற்ற தொண்டைநாட்டிலே, மிகச் சிறந்த தமிழ்ச் சைவப்பரம்பரையிலே தோன்றியவர். பல்லவசோழ அரச பரம்பரைகளின் நல்லியல்புகளையெல்லாம் நன்குணர்ந்தவர். உத்தமசோழப் பல்லவன் என்ற ஒரு பட்டமும் பெற்றவர். திருவாரூர்த்தலத்தைத் தமது ஆத்மீகத்தலமாய் அரசாண்ட அநபாயன் என்னும் சோழப் பேரரசனுக்கு முதல் அமைச்சராய்த் திகழ்ந்தவர். அந்த அரசனின்பொருட்டு 'இகபரவாழ்வுக்கு'ச் சிறந்த சாதன நூலும் சாத்திய நூலுமாகிய பெரியபுராணத்தை அருளியவர். அதனால் அந்த அரசனையே முழுவதும் தன்பால் ஈர்த்து, அவனது ஞானாசிரியப் பெருந்தகையாகவும் மேம்பட்டவர். அந்த அரசன் சைவராசதானியாகிய சிதம்பரத்தில், பெரியபுராணத்தை அரங்கேற்றிய நிகழ்ச்சி சைவவரலாற்றில்

பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதொன்ரும். பல்லாயிரக்கணக்கான அந்தணர்களுக்கும் அடியார்களுக்கும் பெரியபுராண அரங்கேற்றத்தைப்பற்றிய செய்தி அனுப்பப்பட்டது. அரசன் ஒரு சுபதினத்தில் பெரியபுராணத் திருமுறையை நடராசர் சந்நிதியில் வைத்துப் பூசித்துப் பட்டுப்பீதாம்பரத்தாற் சுற்றிப் பொன்கலத்தில் வைத்து யானைமீது ஏற்றினன். தில்லைவாழ் அந்தணர்கள் வேதமோத, தொண்டர்கள் தூப தீபமேந்த, அடியார்கள் சிவநாம ஒலி எழுப்ப, அரசன் அந்த ஒலியின் மத்தியில் நின்றுகொண்டு, தன்னுள்ளத்தில் அன்புபொங்க, ஞாஞசிரியனைத் தன்கரத்தால் தழுவி அணைத்து யானைமீது ஏற்றினன். தாமும் கூட ஏறிப் பின்புறம் அமர்ந்து, தமது இரண்டு கரங்களாலும் இரண்டு வெண் சாமரைகளை வீசும் பணிவிடை செய்துகொண்டு, 'இதுவன்ருே யான் செய்த தவப்பயன்' என்று முகமெல்லாம் கண்ணீர்வார, மனம் உருகிக் குழையும் கோலத்தோடு சிதம்பரத்திலுள்ள வீதியை வலம் வந்தான். முடிவில், திருவம்பலம் முன்பு திருமுறையை யாவரும் வணங்கி நிற்ப, அரசன் தனது ஆசிரியப் பெருமானுக்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற சிறப்புப்பட்டம் சாத்தி, ஞானமுடி சூட்டி, அவரை நடுநாயகராய் மண்டபத்தில் அமர்த்தி, அவர் பாத கமலங்களில் விழுந்து வணங்கினன். அரசன் வணங்கவே, அனைவரும் விழுந்து வணங்கினர். இந்நிகழ்ச்சி, சைவ சமய சரித்திரத்தில் எக்காலத்திலாயினும் நடைபெருத ஒரு தனிப்பெரு நிகழ்ச்சி என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்ருேம். ஏனெனில், இந் நிகழ்ச்சியின் பின்னரே சைவசமய சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தம் ஏற்படுகின்றது. 'அடியார் வணக்கம்' என்ற உன்னதமான சாதனையே, சைவசமயத்தின் உயிர்நாடி என்பது தெளிவாய் உணரப்படுகிறது. தமிழ்நாட்டுக் கோயில்களிலே 63 நாயன்மார்கட்கும் விக்கிரகங்கள் ஏற்படத்தொடங்கின. நாயன்மார் விழாக்கள் பெருகின. சைவசமயம் புதிய செழிப்புடன் வளர்வதாயிற்று. சேக்கிழார் சுவாமிகள் திருக்கடைக் காப்புச் செய்யுளிற் கூறிய 'மின்றுளார் அடியார் அவர் வான் புகழ் நின்றது—எங்கும் நிலவி உலகெலாம்' என்ற திருவருள்வாக்கும்—தமிழர் பண்பாட்டின் தணிப்பெருஞ்சிகரமாய் — சரித்திரரீதியில் — தமிழ்ப்பெரு நாட்டில் பலிதமுற்று நிலைபெறுவதாயிற்று.

**சைவ சமய அடிப்படைக் கொள்கைகள்**

சைவசமயக் கொள்கைகளுள் மிக முக்கியமானதும் முதலிடம் பெறவேண்டியதும் 'இறைவன் உலகங்களுக்கு அப்பாற்பட்டவன்' என்பது. சேக்கிழார் சுவாமிகளும் அக் கொள்கையையே முதலிற் கூறுபவர். 'உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்' என்று கூறிக்கொண்டு பெரிய புராணத்தைப் பாடத் தொடங்கினர்.

சைவசமயத்தின் அடுத்த முக்கியமான கொள்கையாதெனில் 'இறைவன் அங்ஙனம் அப்பாற்பட்டவனயினும் அவன் சாந்நித்தியம்

உலகு, உயிர்களில் மிக மிக உண்டு என்பதாகும். இந்தக் கொள்கையை உணர்த்தும் சேக்கிழார் சுவாமிகள், 'அகத்திலே தன்னறிவாகிய பெருவெளியிலும், புறத்திலே சிதம்பரத்திலுள்ள சிற்றம்பலத்திலும் இறைவனின் இயக்கநடனம் நடைபெறுகின்றது' என்று கூறுவார்போன்று 'அம்பலத்திலே ஆடுகின்றான் மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' எனத் தொடர்ந்து பாடுகிறார்.

சைவசமயத்திலே கூறப்படும் மூன்றாவது முக்கியமான கொள்கை 'தன்னறிவாகிய பெருவெளியிலே நிகழும் அற்புதத் தனிப்பெருங் கூத்தை மறவாது வாழ்த்துவதும் வணங்குவதுமன்றி, வேறொன்றும் 'நாம் அறியோம்' என்பது. இந்த உண்மையை முடித்துக்காட்டும் ஆசிரியர், 'வணங்கி வாழ்த்துவாம்' என்று காப்புச் செய்யுளைப் பூர்த்தி செய்கின்றார். இந்த மூன்று கொள்கைகளையும் நிதர்சனமாகத் தம்மறிவில் தரிசித்த பெரியோர்கள் எவர்கள் எனில், அவர்களே அடியார்கள்.

அவர்கள் அநந்தம் எண்ணிக்கையினர்; பலவேறு உலகங்களில் பலவேறு தேசங்களில், பலவேறு காலங்களில், பலவேறு மரபுகளில் தோன்றியவர்கள்; பலவேறு நெறிகளைக் கடைப்பிடித்தவர்கள். அவர்களுள் ஊர்பேர் தாங்கியவர்கள் பலர். ஊர்பேர் தாங்காத சஞ்சாரிகளும் மிகப்பலர். இப்படி ஓர் அடியார் கூட்டத்தை வைத்துப் பாடவேண்டும் என்ற விருப்பம் சேக்கிழார் சுவாமிகளின் தமிழ்ப்பெரும் உள்ளத்தில் ஏற்படலாயிற்று.

இங்ஙனம் அடியார்களைத் தனித்தனியாகவும், கூட்டங் கூட்டமாகவும் வைத்து வணங்கும் வழக்கம் தமிழகத்தில் வாழையடி வாழையாக இருந்து வந்திருக்கிறது. ஒரு தனிப்பட்ட மஹானையோ, ஒரு சரித்திர சந்தர்ப்பத்தில் தோன்றிய அவதார புருஷனையோ வணங்குவதும் அவரைச் சுற்றிக் கதைகள் பல புனைந்து, உலகம் கண்டிராத மஹான் என்று அவரைச் சிருஷ்டித்து விடுவதும் தமிழ்மக்களுக்கு இன்றுஞ்சரி, என்றுஞ்சரி விளங்க முடியாத பெரும் புதிர்களாகும். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், தன்னை அறிய முயலுபவர்கள், தன்னுள் நின்று ஆடும் தலைவனை உணர முயலுபவர்கள், அந்தத்தலைவனை வணங்குபவர்கள் ஆகிய ஆத்மீக புருஷர்களே எப்போதும் பெரியோர்கள். அவர்களை வணங்குவதும் பாடுவதும் புகழ்வதுமே தமிழ் மக்கள் இவ்வுலகிற் கண்ட உயர்ந்த இலட்சியங்களாக இருந்து வந்திருக்கின்றன. தேசீயத் தலைவர்களையோ, புரட்சிவீரர்களையோ, வெறும் மனோசக்தியைச் சாதித்த சரித்திர புருஷர்களையோ பெரியவர்களாகக் கொண்டாடும் மரபு தமிழுலகிற்குப் புதிய தொன்றாகும்.

இனி, அடியவர்களை வணங்கும்பொழுதுகூட, தனிப்பட்ட ஒருவரையோ, அல்லது தனிப்பட்ட முறையில் பலரையோ போற்றி,



19

அவர்கள் கதைகளைக் கூறுவதனாலும், தமிழ்ச் சான்றோரின் உள்ளம் அமைதி பெறுவதில்லை. தொகையடியவர்களையும், அதுவும் பலவேறு முறைகளை அநுசரித்துப் பலவேறு சாதனைகள் செய்தொழுகிய தொகை யடியவர்களையும் ஒருங்கே சேர்த்து வணங்கிவரும் தன்மையினர் எங்கள் தமிழ்ச்சான்றோர்கள். தற்கால அரசியல் நூல்வல்லார், தனியார்துறையும் பொதுவார்துறையும் பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று கலந்து இயங்கு வதனாற்றான் ஒரு பூரணத்துவமான அரசியல் நிலை ஏற்படும் எனக் கூறுவர். அங்ஙனமே எங்கள் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் தனி அடியார்களையும் தொகையடியார்களையும் ஒருங்கு சேர்த்து வணங்கு வதனாற்றான் ஒரு பூரணத்துவமான தெய்வாநுபவ நிலை வந்து வாய்க்கும் எனக்கருதினார்கள் போலும்; அல்லது தமிழ் மக்களின் உள்ளம் எக்காலத் திலும் பரந்து அகன்று வியாபித்து விளங்குதல் வேண்டும் என விரும் பினார்கள் போலும். எங்கள் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணப் பாயிரச் செய்யுளில் 'அளவில்லாத அடியார் புகழ் கூறுகேன், அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்' எனக் கூறுவதைக் காண்க.

**திருமலை**

அடியார்கள் சிறப்பாக நிறைந்துறையும் தமிழகத்திற்கு எம்மை ஆற்றுப்படுத்தும் சேக்கிழார் சுவாமிகள், முதலில், உலகத்திலே சிவ சாந்நித்தியத்துக்கும், பேரமைதிக்கும், நிலைக்களனாயுள்ளதும், மிகமிக உயர்ந்த மலைச்சிகரமாய்த் திகழ்வதும், பண்டுதொட்டுத் தமிழ் மக்களின் ஆத்மீகப் பெருந்தொடர்பும், சரித்திரப் பெருந்தொடர்பும், யாத்திரைப் பெருந்தொடர்பும் பெற்றதுமாகிய திருக்கைலாசமலைக்கே அழைத்துச் செல்கின்றார். விருத்த வடிவந்தாங்கி, மிகுந்த அகற்சியும், மிகுந்த உயரமும் பெற்றுத் திருநீற்றுக்காப்பணிந்த பெரும் அருட்கோலத் துடன் எல்லையில்லாத அமைதியின் மத்தியில், அனைத்தையும் ஊடுருவி வீறி எழுந்துநிற்கும் அந்தத் திருக்கைலாசமலையே தன்னை யார்க்கும் அறிவரிய எங்கள் சிவபிரானாரின் யதாஸ்தானமாகும். அங்கு வதிந்தருளும் உபமன்ய மஹாமுனிவர்எழுந்துநின்று, தென்திசை நோக்கித் தமிழகத்தைக் கைகூப்பி வணங்குகின்ற ஒரு அற்புதக் காட்சியைக் காட்டி, அந்த முனிவர் பிரானார் தம் மாணவர் குழாத்திற்குத் தமிழகத்தின் பெருமைகளை யெல்லாம் உணர்த்தி நிற்கும் ஓர் ஒப்பற்ற நிகழ்ச்சியையே எங்கள் மனக்கண்முன் கொண்டுவருகின்றார் சேக்கிழார் சுவாமிகள்.

தமிழகத்திற்கும் திருக்கைலைக்கும் உள்ள தொடர்பு சரித்திர காலத்திற்கு முற்பட்டது. திருக்கைலையிலிருந்து தமிழகத்திற்கு வந்த முனிவர்கள் பலர், தமிழகத்தில் இறைவனைப் பூசித்தற்குரிய தட்பவெப்ப நிலைச்சூழலும், ஏனைய வசதிகளும் நிறைந்திருப்பக்கண்டு தங்கள் கைலாச நாதனைத்தாபித்து, பலவேறு தலங்களில் பூசித்து வந்திருக்கின்றனர்.

உபமன்யமுனிவர் தமிழகத்தின் பெருமையைக் கூறும்பொழுது, திருக் கைலாசபுரவாசிகளாகிய நந்தியெம்பெருமான், புலிக்கால் முனிவர் முதலியோர் தமிழகத்துச் சூழலாற் கவரப்பட்டு அங்கு இறைவனை எழுந் தருளுவித்துப் பூசித்த செய்திகளையும் கூறுகின்ருர். அந்த மலைச்சாரலில் எழுந்து நின்று அந்தமுனிவர்பிராஞர் தமிழகத்தைக்கைகூப்பிவணங்கி, அது ''மாதவம் செய்த தென்திசை'' என்றும் 'பேசில் அத்திசை ஒவ்வா பிற திசை' என்றும் மனம் உருகி உருகிக் கூறுவதை எவர்கள் மறந்தாலும் தமிழ் மக்களாகிய நாங்கள் எந்த யுகத்திலும் மறக்கமுடியாது.

**தமிழ்த்திருநாடு**

தமிழ்த்திருநாட்டின் பெருமைகளை உபமன்யமுனிவர் வாயிலாக உணர்த்தி, எங்கள் மனத்தை வளம்படுத்திய பின்னரே, ஆசிரியர் சேக்கிழார், சோழப்பேரரசர்க்கு உரிமைப்பட்டிருந்த அந்தத் திருநாட்டுக் குள் எம்மை அழைத்துச் செல்கின்ருர். அந்தத் திருநாட்டைச் சுற்றி வளைந்தும் தாழ்ந்தும், வணங்கியும் தண்ணிய தன் நீர்மைகளையெல்லாம் எங்கணும் பரப்பிக் கொண்டு 'பொன்னிநதி' என்ற பெயரையுடைய ஒரு தெய்வநதி ஓடுகின்றது. அந்த நதியிற் பிரவாகித்துவரும் நீர், பல வாய்க்கால்கள் வழியாக ஓடி, நாடு முழுவதும் நீர் வெள்ளத்தைப் பரப்புகின்றது. நீர்த்தேக்கங்கள் ஆங்காங்கு முறையாக அமைக்கப்பட் டுள்ளன. தேங்கிய நீரை, ஆரவாரத்துடனே கைதட்டி, எதிர்கொண்டு அவற்றின் அணைகளை உடைத்து, அயராது உழைக்கும் இயல்புடைய உழவர்கள், தம் வயல்களை வேண்டிய அளவுக்கு வளம்படுத்துகின்றனர். தமிழ்த் திரு நாட்டுக்குப் பொலிவினைத்தரும் நீர்வளமும் வயல்வளமும், வயலில்வாழும் உழவர் உழத்தியர்களின் வாழ்வு வளமும் சொல்லும் தரத்தனவல்ல

மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை யார்செய் உழுந ரொழுக்கமும்
காதல் செய்வதொர் காட்சி மலிந்ததே என்று

ஆசிரியர் சேக்கிழார் கூறுவதைக் காண்க. காண்பார்க்கு ஆசை உண் டாக்கும் காட்சிகளே அந்நாடு எங்கும் மலிந்திருந்தன. பொன்னிநதி உண்மையில் உயிர்களை வளர்க்கும் ஒரு செவிலித்தாயாகும். இல்லை, அன்னை பராசக்தியின் கருணை ஒழுக்கின் வடிவமாகும். தமிழ்த்திருநாட் டில் வாழும் குடிகள், தாம் வயலிடத்திலே பெற்ற விளைவுகளில் ஆறில் ஒரு பங்கை அரசுக்குச்செலுத்தி மிகுதிகொண்டு கடவுட்பூசை முதலிய அறங்களைப் பேணுவர். தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஆன்ருேர் நியதியின்படி அறங்களைச் செய்து ஒழுகுவர்.

தமிழ்த்திருநாடே எங்கள் கண்கண்ட தெய்வம் என்பதை உணர்ந்து அதனை மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்கி உய்தி அடைவோமாக.

# மெய்கண்ட சாத்திரங்கள்

சைவப்புலவர் சி. செல்லத்துரை
விரிவுரையாளர், இராமகிருஷ்ண வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

உண்மைப் பொருளாகிய தம்மைத் தெளிந்த அறிவினுலே உணர்ந்து கலந்து, ஆன்மா ஈடேறுவதற்கு இறைவனுல் அருளப்பட்ட நூல்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று வேதம்; மற்றது ஆகமம்.

ஒருவன் தன்னைத்தான் காதலனுய் விலக்கியன ஒழித்து விதித்தன காத்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறைமையை விளக்குவது வேதம். அங்ஙனம் வாழ்ந்து பக்குவமுடையனுயினுன் இறைவழிப்பட்டு ஒழுகவேண்டிய முறையைப் படிமுறையே உரைப்பது ஆகமம். வேத வழிப்படுதலை வைதிகம் எனவும், ஆகமவழிப்படுதலைச் சைவம் எனவுங் கொண்டு எமது சமயத்தை வைதிகசைவம் எனப் பெரியோர் கூறுவர்.

வேதம் ஆகமம் என்னும் இரண்டும் முறையே சிறந்து பயனடைவிக்கும் ஒழுங்குபற்றி வேதத்தைப் பொது நூலாகவும் ஆகமத்தைச் சிறப்பு நூலாகவுங் கொள்ளுவது மரபு.

வைதிகசைவத்தின் சிறப்பு நூல்களாகக் கொள்ளப்பட்ட சிவாகமங்கள், வேதங்களின்இறுதியில் அறுதியிட்டுரைக்கப்பட்ட ஞானகாண்டப் பொருளை உரைப்பன. இவ்வேதாந்தத்தின் உட்கிடையாகிய சிவாகமங்களைத் தமிழிலே விளக்கவெழுந்த நூல்கள் பதினுன்கு.

> ''உந்தி, களிறு, உயர்போதம், சித்தியார்
> பிந்திருபா, உண்மை, பிரகாசம் — வந்தவருள்
> பண்புவினு, போற்றி, கொடி, பாசமிலா நெஞ்சுவிடு,
> உண்மைநெறி சங்கற்ப முற்று''

என அந்நூல்கள் பதினுன்கையும் இவ்வெண்பா குறிப்பிடுகின்றது.

இறைவன் ஒருவன் உளனென்றும், அவன் சிவனே என்றும், அவனை அடைந்து இரண்டறக் கலந்து பேரின்பம் அநுபவித்தற்காய் உயிர்கள் எண்ணிறந்தன உளவென்றும், அவ்வுயிர்கள் அங்ஙனம் நல்வாழ்வு பெறுதற்காக இறைவனுலே தோற்றுவிக்கப்பட்ட தநு கரண புவன போகங்கள் உளவென்றும், ஆன்மாக்களை அநாதியே பற்றிநிற்கும் ஆணவமல நீக்கத்தின் பொருட்டு, தநுகரண முதலியவற்ருேடு திரோதான சத்தி ஆன்மாவைப் பொருத்தி, ''விடிவாம் அளவும் விளக்கு'' என நின்று துணைபுரியும் எனவும், இவ்வுதவிகளையெல்லாம் தமது ஒப்பற்ற

சிற்சத்தியாகிய பேரருளினுலே வழங்கியருளுகின்ற இறைவனை நன்றியறித லுடன் மனமொழி மெய்களினுல் வழுத்திச் சிவபுண்ணியங்களாகிய சரியை, கிரியை, யோகம்,ஞானம் என்னும் படிகளிலே முறைதவருமல் நிற்றலினுல் அவ்வான்மாக்கள் ''தாடலை'' போல் அத்துவித முத்திபெற்றுய்யு மெனவும் அந்நூல்கள் முடிந்த முடிபாக அறுதியிட்டுரைக்கும். இங்ஙன முரைக்கும் அவற்றை, ''வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்......'' எனவும் மெய்கண்ட சாத்திரம் எனவும் கூறுப.

மெய்கண்ட சாத்திரம் பதினுன்கனுள் திருவுந்தியாரும் திருக் களிற்றுப்படியாரும் காலத்தால் முந்தியவை. பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளின் இலக்கணத்தைக் கூறும் பொதுப்பகுதி இந்நூல்களுட் குறிப்பாகவே அறியக்கிடக்கிறது.

**திருவுந்தியார் :** திருவியலூர் உய்யவந்த தேவநாயனுரால் அருளிச்செய்யப்பட்டது. உந்தி என்பது, தலைவி தலைவனை அடைந்து அவ னிடத்துப் பெற்றுக்கொண்ட ஆனந்த அநுபவ மேலீட்டால் அவனுடைய அன்பு,ஆற்றல்,அவனுலாம் பயன் முதலியவற்றைப் பாடிக் கைகளை இரு பக்கமும் நீட்டிப் பறவை பறப்பதுபோல மேலுங் கீழும் அசைத்து ஆடும் ஆட்டம் என்ப. இத் திருவுந்தியாரில், ஆன்மாவாகிய தலைவி சிவனுகிய தலைவனை அணைந்து பெற்ற இன்பாநுபவத்தை உந்தி என்னும் ஆட்ட மாடிப் பாடித் தெரிவிப்பது போல, இறைவனை அணையும்நெறி, அணைந் தோர் தன்மை, பயன் என்பவற்றைக் கூறும் நாற்பத்தைந்து கலித் தாழிசைப் பாடல்கள் உள.

**திருக்களிற்றுப்படியார் :** திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனுரால் அருளிச்செய்யப்பட்டது. இந் நூலாசிரியர் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனுரின் மாணவரின் மாணவராவர். திருக்களிற்றுப்படியார், திரு வுந்தியாரிற் கூறப்பட்ட உண்மைகளை விரித்துரைப்பதோடு இன்றியமை யாதவிடங்களில் மேற்கோளுந் தந்து தெளிவுபடுத்தும் ஒப்பற்ற சிறந்த நூல். இந் நூலில், நாயன்மார் அறுபத்துமூவரிடத்தும் விளங்கிய அற்புத நிகழ்ச்சிகளுக்குக் காரணமான வல்வினை மெல்வினைகளைப் பற்றிய விளக்கமும் அமைந்துள்ளது. இந் நூல் பொன்னம்பலத்திலே உள்ள திருக் களிற்றுப்படியிலே வைக்கப்பட்டபொழுது அப்படியிலே உள்ள களிற்றின் துதிக்கை, அதனை எடுத்துச் சிவபெருமானின் திருவடியிலே வைத்தது. அக்காரணம் பற்றி இந் நூலுக்குத் திருக்களிற்றுப்படியார் என்பது பெய ராயிற்று.

**சிவஞானபோதம் ;** ஸ்ரீமெய்கண்ட தேவநாயனுரால் அருளிச் செய்யப்பட்டது. இந்நூல் இருபகுதிகளை உடையது. முதற்பகுதி முப்பொரு ளின் உண்மையையும், இலக்கணத்தையும் கூறும் பொதுப் பகுதியாகும். இரண்டாம்பகுதி வீடுபேறடைதற்குரிய நெறியையும், அந்நெறி நின்றேர்

பெறும் பயனையும் கூறும் சிறப்புப்பகுதியாகும். முதற்பகுதி பிரமாணவியல் இலக்கணவியல் எனவும், இரண்டாம் பகுதி சாதனவியல் பயனியல் எனவும் நான்கியல்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வோரியலுக்கும் மும்மூன்று சூத்திரங்களாகப் பன்னிரண்டு சூத்திரங்கள் இந் நூலில் உள. ஒவ்வொரு சூத்திரத்துக்கும் கருத்துரையும், அச் சூத்திரப் பகுதிகளுக்குக் காரண வுதாரணங்களோடு கூடிய அதிகரணங் களும், அவ்வதிகரணங்களை விளக்கும் வெண்பாக்களும் உள. இந் நூல் பதியுண்மை, பாச உண்மை, பசு உண்மை, பசுவின் பொது இலக்கணம், பாச இலக்கணம், பதி இலக்கணம், பசுவின் சிறப்பிலக்கணம், உயிர்கள் ஞான முணரும்வகை, ஆன்மசுத்தி ஐந்தெழுத்தாற் பெறப்படுதல், அது பற்றுக் கோடாகப் பாசநீக்கம் ஏற்படும் வகையும் பயனும், சிவப்பேற்றின் அடைவு, சிவப்பேறு பெற்ற சீவன்முத்தர்கள் இருக்குந் தன்மை என்பன பரிபூரணமாக விளக்கப்பட்டுள்ள தலைசிறந்த முழுமுதல் நூலாகும். இந் நூலின் பெருமையை மறைமலையடிகள் மேல்வருமாறு கூறுவர் :

''கடவுள், உயிர், மலம், மாயை, வினை, வீடுபேறு என்னும்ஆறன் இயல்பு களையும் அளவையியல் பிறழா ஆராய்ச்சி முறையில் வைத்து, வினுவிடை யுள்ளுறுத்துத் திட்பநுட்பஞ் செறிய நன்கினிது திறம்பட விளக்குந் தனிப் பெருஞ் சிறப்பின் மிக்க விழுமிய முழுமுதல் நூல் சிவஞானபோதத்தைத் தவிர வேறு பிறிதெதுவும் எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் இல்லை. திருக்குறளினும் பார்க்கப் பன்மடங்கு சுருங்கியதாய்ச் சிறந்த மாட்சி மிக்கதாய் நிலவுவது சிவஞானபோதம் ஒன்றேயாம்.''

**சிவஞானசித்தியார்** என்னும் நூல், மெய்கண்டாரின் மாணவராய அருணந்தி சிவாசாரியாரால் அருளிச்செய்யப்பட்டது. இது சிவஞான போதத்தின் வழிநூலாய் அமைந்தது; புறச்சமயங்களின் தன்மையை அளவிடும் பரபக்கம், சித்தாந்த சைவத்தின் உண்மையைத் தெளிவு படுத்தும் சுபக்கம் ஆகிய இரண்டு பகுதிகளை உடையது. பரபக்கம், சிவஞானபோத அவையடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. சுபக்கம் அந்நூலின் பன்னிரு சூத்திரப் பொருளைப் பன்னிரண்டு அதிகாரங்களில் விரித்து விளக்குமுகமாக அமைந்தது. பரபக்கத்துள் முந்நூற்றுப் பதினொரு திருவிருத்தங்களும், சுபக்கத்துள் முந்நூற்றிருபத் தெட்டுத் திருவிருத்தங்களும் உள. இந்நூலின் சிறப்பு மேல்வரும் செய்யுட் பகுதிகளால் உணரத்தக்கது.

''பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர் விருத்தப் பாதிபோதும்''

''பாதிவிருத்தத்தால் இப்பார் விருத்தமாக வுண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாரும்நாள் எந்நாளோ?'

**இருபாவிருபஃது :** மெய்கண்டதேவநாயனரைத் துதிக்குமுகத்தால் சித்தாந்த உண்மைகளையும் தமது சிவாநுபவத்தையும் விளக்கி அருணந்தி சிவாசாரிய சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது ; வெண்பா, ஆசிரியப்பா ஆகிய இருவகைப் பாக்கள் பப்பத்தாக இருபது பாக்களைக் கொண்டது.

**உண்மை விளக்கம்** என்னும் நூல், மெய்கண்டதேவநாயனருடைய மாணவர் மனவாசகங்கடந்தார் என்பவராலருளிச்செய்யப்பட்டது; சைவசமயி அறியவேண்டிய உண்மைப் பொருள்களை இரத்தினச் சுருக்கமாக (—சங்கிரகமாக) அமைவுபடுத்தி வரையறை செய்துகொண்டு, மாணவனுடைய வினவுக்கு ஆசிரியர் உரைக்கும் விடையாக அமைத்து இயற்றப் பெற்ற ஐம்பத்தைந்து வெண்பாக்களை உடையது ; சைவசித்தாந்த சங்கிரகமாய்—சித்தாந்த அரிச்சுவடியாய் அமைந்தது.

**சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்** என்னும் எட்டு நூல்களும் உமாபதிசிவாசாரிய சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டன. இவை எட்டையும் சித்தாந்த அட்டகம் எனவும் கூறுப. இவற்றுட் **சிவப்பிரகாசம்**, சிவஞானபோதத்துப் பன்னிரு சூத்திரப் பாகுபாட்டுக்கமைந்த சார்புநூலாய், பொதுவுஞ் சிறப்புமென இருபகுதியதாய், நூறு விருத்தப் பாக்களை உடையதாய் இருக்கிறது. இது, முதனூலின் இன்றியமையாத பகுதிகளை நன்கு விரித்து விளக்கும் இயல்பினது.

**திருவருட்பயன் :** திருவள்ளுவர் நூல்போலக் குறள் வெண்பாக்கள் நூறு கொண்டதாய், பப்பத்து வெண்பாக்கள் கொண்ட பத்து அதிகாரங்களை உடையதாய், பதிமுது நிலை, உயிரவைநிலை, இருண்மலநிலை, அருளுருநிலை, அறியுநெறி, உயிர்விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருணிலை, அணைந்தோர் தன்மை என்பவற்றை விளக்குவதாய் அமைந்துள்ளது.

**வினாவெண்பா** என்னும் நூல், பதின்மூன்று வெண்பாக்களாலானது. இந் நூலாசிரியர் தமது குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் சித்தாந்த சாத்திரவுண்மைகள் சிலவற்றை வினவி விடைபெறும் பாவனையில் இந்நூலை அமைத்துள்ளார்.

**போற்றிப்பஃறொடை** என்னும் நூல், ஆன்மா தொழிற்படுமுறைமையை உணர்த்தும் வாயிலாகத் தமக்குச் சிவஞானமீந்து சிவாநுபவமளித்தருளிய தங்குருமூர்த்தியை வாழ்த்திப் பாடிய பஃறொடை வெண்பாவை உடையது.

**கொடிக்கவி** என்னும் நூல், சிதம்பரத்தில் ஏறுது நின்ற கொடியை ஏற்றுதற்காக அருளிச்செய்யப்பட்டது. அக்காரணம்பற்றி இந்நூலுக்குக் கொடிக்கவி என்னும் பெயர் இடப்பட்டது. அன்றி, இந்நூலின் உள்ளிடுபொருள்—உட்கிடை ஆன்மாவின் தாழ்ந்த நிலையாகிய மலபந்த நிலையிலிருந்து மேலே உயர்த்தி என்றும் வீழாமல் நிறுத்துதலாகிய முத்திநிலையைக் குறிப்பதாதலின் அவ்வுண்மையை விளக்க எழுந்த கவி, 'கொடிக்கவி' என்றுரைப்பினும் அமையும். இந்நூல் நான்கு பாடல்களால் ஆனது. முதலாம்பாடல் கட்டளைக்கலித்துறை. ஏனைய மூன்றும் நேரிசைவெண்பாக்கள். முதலாம் பாடல் மாயாதீதனாகிய இறைவன் ஆன்மா பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்புகளையும் உண்மையினையும் உரைக்கும். மூன்றும் பாடல் இறைவன் மாயாதீதனைவன் என்பதை வலியுறுத்தும். இரண்டாம்பாடல் அவ்விறைவன் நாமமாகிய சூக்கும பஞ்சாக்கரப் பொருள்களையும், நான்காம்பாடல் தூலசூக்கும அதிசூக்கும பஞ்சாக்கரங்களை உச்சரிக்கும் முறை, சிந்திக்கும்முறை, அவற்றாலாம்பயன் என்பவற்றையும் உணர்த்தும். நான்கு பாடல்களுள் இரண்டுபாடல்கள் பஞ்சாக்கரத்தைப்பற்றி உரைத்தலால் அப்பொருளின் மிகுதிபற்றி இந்நூலைப் பஞ்சாக்கரப்பாசுரநூல் என்பாருமுளர்.

**நெஞ்சுவிடுதூது** என்னும் நூல், மறைஞானசம்பந்தரான தம் மாசிரியர்பால் மாலை வாங்குமாறு தூது விடுமுகமாக அருளிச்செய்யப்பட்டது. இது பன்னூற் பொருளையும் இனிது விளக்குவது; கலிவெண்பாவானியன்றது.

**உண்மைநெறி விளக்கம்:** தத்துவரூபம், தத்துவக் காட்சி, தத்துவசுத்தி, ஆன்மவடிவம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் தசகாரியங்களை விளக்கும் ஆறு விருத்தப்பாடல்களை உடையது.

**சங்கற்பநிராகரணம்** என்னும் நூல், மாயாவாதி, ஐக்கியவாதி, பாடாணவாதி, பேதவாதி, சிவசமவாதி, சங்கிராந்திவாதி, ஈசுர அவிகாரவாதி, நிமித்தகாரணபரிணாமவாதி, சுத்தசைவவாதி ஆகிய அகச்சமயவாதிகளின் கொள்கைகளைக் கூறி, அவற்றைச் சித்தாந்தப்பார்வையான் மறுத்து உண்மை தெரிவிப்பது; இருபது அகவற்பாக்களால் ஆனது.

இம்மெய்கண்ட நூல்கள் பதினான்குமேயன்றித் திருமூலர் திருமந்திரமும், பன்னிரு திருமுறைகளும், திருக்குறளும் சைவசித்தாந்த உண்மைகளை உள்ளிடுபொருளாக்கொண்டு அருளிச்செய்யப்பட்டவை. இந்நூல்கள் கூறும் உண்மைகளை உள்ளபடி அறிந்து தெளிந்து சைவ நாற்பாத நெறிநிற்கும் சித்தாந்த சைவர், சிவபுரத்துச் செல்வனடியிணைக் கீழ்ச் சிறப்புற்று வாழ்வர் என்பது ஒருதலை.

எங்கள் ஸ்தாபனத்தில்

சிறந்த கைதேர்ந்த பொறியியல்
வல்லுநர்களின் உதவியால்
உருவாக்கப்படும்

**THORN** மார்க்
**முட்கம்பிகளையும்,**

# "வைத்திலிங்கம்ஸ்"

**இரும்பு - பித்தளை மர ஸ்குரூ ஆணிகளையும்**
**நீங்கள் வாங்கும்போது**

ஒரு சிறந்த உறுதியான பொருளை
வாங்குகின்றீர்களென்பதோடு உள்
நாட்டின் தேசிய செல்வத்தையும்
பேணுகின்றீர்கள் என்பதையும்
மறவாதீர்கள்.

தயாரிப்பாளர் :-

## என். வைத்திலிங்கம்
அன்
## கம்பனி லிமிட்டெட்

*450, பழைய சோனக தெரு,*
**கொழும்பு, 12.**
தொலைபேசி எண் :- **7143, 2029, 7488**

**Donated by**

# Sterling Products Ltd.,

**COLOMBO.**

ஈழத்திலுள்ள

வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள்,

கைத்தொழில் உற்பத்தியாளர்கள்

ஆகியோரும்,

சிறப்பு மலர்களும்,

இலக்கிய ஏடுகளும்,

வெளியிடுவோரும்

விரும்பிச் செல்லும் அச்சகம்.

இரஞ்சனா அச்சகம்,

98, விவேகானந்த மேடு,

கொழும்பு-13

தொலைபேசி எண்: 2221

# S. V. பொன்னம்பலம் அன் சன்ஸ்

345, பிரதான வீதி, கொழும்பு.

★ சாய்ப்புச் சாமான்கள்

★ மொத்தமாகவும் சில்லறைக்கும்

★ குறைந்த விலையில் பெறக்கூடிய இடம்.

வீட்டுப்பெண்கள் விரும்புவது

**'எவர் சில்வர்' பாத்திரங்கள்.**

சமையல் அறையை அலங்கரிப்பது

**'எவர் சில்வர்' பாத்திரங்கள்.**

உங்கள் விருந்தாளிகளைக் குதூகலப்படுத்துவது

**'எவர் சில்வர்' பாத்திரங்கள்.**

எவர் சில்வர் பாத்திரங்களுக்கு:-

**S. V. பொன்னம்பலம் அன் சன்ஸ்,**

15, செட்டியார் தெரு,

கொழும்பு.

# கமலா பீடித் தொழிற்சாலையும்

## தலைமைக் காரியாலயமும்.

15, சங்கமித்த மாவத்தை,

**கொழும்பு, 13.**

தொலைபேசி எண்: 6522

# "ஒருவாசகமென்றுணர்"

புலவர் பாண்டியனார்

கொழும்பு.

"ஒருவாசகமென்றுணர்" என்ற இத் தலைப்புக் கேட்டலுமே இளம்புலவர்க்கும் எண்ணத்திலே,

> "தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
> மூவர் தமிழு முனிமொழியுங் — கோவை
> திருவா சகமுந் திருமூலர் சொல்லு
> மொருவா சகமென் றுணர்"

என்ற மூதுரைப்பாடலெழும்.

செவ்வி தலைப்பட்ட நன்மக்கட்கு வீடுபேற்றைக் குறிக்கு மெய் யுணர்வு நூல்களையெடுத் தெண்ணித் தொகுத்து, இவை தம்முள் வேறு வேறு வாசகமாயினுங் கருத்தொருமைப்பாடுடையனவெனக் கூறுமுகத் தால் இவற்றுள் ஒவ்வொன்றற்கும் பொருள் கொள்ளுங்கால் ஏனையவை துணைநிற்பன வென்பது போதர, வடமொழி முதனூலாகிய திருநான் மறை முடிவொடு நேரொக்குந் தமிழ்மொழி முதனூல்களிவை யென் பதூஉம், அதனால் வடமொழியுந் தமிழ்மொழியுந் தம்முளொத்த சிறப் புடையன வென்பதூஉ மிப்பாடற்குக் கருத்தாம். தமிழில் இல்லாத திருநான்மறைமுடிவு கூறியதனால் இவ்வாறு கருத்துக்கொள்ளல் வேண்டிய தாயிற்று.

கருத்தொருமைபற்றி வேறு வேறு வாசகங்கள் ஒரு வாசகமெனப் பட்டன. இங்ஙனஞ் சொல்லுதல், ஓரமைப்புடைய இருபொருளை இதுவு மதுவு மொன்றென்று சொல்லுதல் போல்வது. வாசகமென்னும் வட சொற்குச் சொற்றொடர் அல்லது சொற்றொடர்க் கோவையாகிய கட்டுரை யென்பது பொருள். இங்கு வாசகமெனப்பட்டவையெல்லாம் அவை யிரண்டுமல்லாத செய்யுட் பிழம்பேயாயினுஞ் செய்யுளாவது "சொல்லின் ஈட்ட"மெனத் தொல்காப்பியனார் 'எச்சவியலி'ற் கூறினாராதலால் செய்யுள், வாசகத்தின் வேறன்றென்பது பெறப்படும். மறைமொழிக ளொவ்வொன்று மொவ்வொரு சொற்றொடராகிய கிளவியேயாயினும் அவ்வவற்றின் எழுத்துத்தொறுந் தனித்தனிக் குறிப்புடைமைபற்றி அவை ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்தென் றின்னபலவாக வழங்கப்படுமாறுபோல மேற்காட்டிய பன்னூலுஞ் செய்யுளேயாயினும் அவையெல்லாம் வாசகந்தொறும் நயமுடைமைபற்றி ஈண்டு வாசகமெனப் பட்டன வெனினுமமையும். அக்கருத்துப்பற்றியே 'திருவாசகம்' 'திரு மொழி', 'திருவாய்மொழி', 'திருமூலர் சொல்', என்பனவுமெழுந்தன.

இக்குறியீடுகளை ஆகுபெயரென்பாருமுளர். நுனித்துணரின் இவை ஆகு பெயரல்ல, இயற்பெயரேயாமென்பது பெறப்படும்.

ஒருவாசகமென்றுணர் என்பதற்கு, ஒருவாசகமென்று துணிந்து, அவற்றின் பொருளொருமை கருத்தொருமைகளை நினதுள்ளத்து நுகர்ச்சிக் கண் வைத்தறிந்துகொள் எனச் செவ்வி மாணவனை நோக்கி நல்லாசிரியன் கூறியதாகப் பொருள் கொளல் வேண்டும்.

இனி, ஒருவாசகமென்பதற்குச் சகம் ஒருவா எனக்கொண்டு, உலகம் நீக்காது தழுவி, ஒரு தலையாகக் கற்றுராய்ந்து தெளியற்பாலன என்றவாறுகப் பொருள் கோடலுமொன்று. சகத்திஞெலொருவப்படாதன வென்பது சகமொருவாவெனத் தொகைச் சொல்லாகும். இப்பொருட்கு ஒருவா வென்பது அஃறிணைப் பன்மை யெதிர்மறைச் செயப்பாட்டு வினை முற்றுச் சொல்லெனப்படும். இங்ஙனந் தனிமொழியுந் தொடர் மொழியு மாய்நின்று பொருள்படுஞ் சொல்லைப் ''பொதுமொழி'' யென்பர் நன்னூலார். சகமென்பது அஃறிணைப் பாற்பொதுப்பெயராகலின் ஒருமைக்கேயன்றிப் பன்மைக்குமாகும். ஆகலின், ஒருவா வென்னும் பன்மை வினைக்குச் சகமென்பது ஈண்டுப் பன்மைப் பெயராயெழுவா யாகும். உலகங்களொருவா வென்பதற்கு, இவ்வுலகமு மேலுலகமு மொருவா வெனப் பொருள் கொள்ளல் வேண்டும். வேண்டவே, தேவர் குறள் முதலாகவெடுத்தோதிய ஏழ்பனுவல்களும் பொருளால் இந் நிலவுலகிற்கும் உம்பருலகிற்கும் பொதுப்பனுவல்களாயினவென்பது பெறப்படும். தமிழ்மொழியும் ஆரியமொழியுமென்னு மிவ்விரு சார் மொழியு மொருங்கு வானவர் மொழியு மாந்தர் மொழியுமாயுள்ளன வென்பதூஉம் பெறப்படும். இனிச் சகமென்பதனை ஆகுபெயரால் இவ் வுலகத்து நாடுகளெனக் கொண்டு அவ்வேழ்பனுவல்களும் பொருளால் உலகப் பொதுநூலாகற்பாலவாய்ச் சிறந்தனவெனக் கருத்துக்கோடலு மமைவுடைத்தாம்.

இங்கெண்ணித் தொகுத்தவற்றுள்ளே தேவர் குறளென்றது தெய்வப் புலமைத் திருவள்ளுவஞரருளிய முப்பாலை. திருநான்மறை முடிவு: வடமொழியுபநிடதம். மூவர்தமிழ்: தேவாரம். முனிமொழி: திருவாய்மொழி. திருமூலர் சொல்: திருமந்திரமாலை. கோவை: திருச் சிற்றம்பலக் கோவை. கோவை திருவாசகமென்பது உம்மைத் தொகை. அவையிரண்டும் ஒருவருடைய வெளியீடாகலின் அவ்வாறுடனெண்ணப் பட்டன. நம்பியாண்டார் நம்பி தொகுத்த பதினொரு திருமுறையுள்ளும் அவையிரண்டும் எட்டாந் திருமுறையென ஒருங்கு தொகுக்கப்பட்டன.

திருவாய்மொழி செய்தருளிய நம்மாழ்வாரென்னுங் காரி மாறஞர், திருக்குருகூரிலே தாம் பிறந்தவுடன் ஏனைக் குழந்தைகள்போல

அழுதலுந் தாய்ப்பாலுண்ணுதலு முறங்குதலு மொழிந்து, சின்னளிலே தவழ்ந்து சென்று, ஆண்டொருமருங்கு நின்ற புளியமரப் பொந்தினுட் புக்கிருந்து வாய்வாளாது பதினறகவைகாறும் நொசிப்பி (சமாதியி) லிருந்து கடவுளது திருவருளேயே காதலித்து நினைவு நீடி வதிந்து வந்தமை பற்றி முனியெனப்பட்டார். மோனைத் தொடையின்பத்தை நோக்கியுஞ் செய்யுள் சிதையாமை நோக்கியுந் திருவாய்மொழி முனிமொழியெனப் பட்டது. இது நாதமுனியென்னும் பெரியாரால் வெளிப்படுத்தப்பட்டது.

முனிமொழியென்றதற்கிவ்வாறு பொருள் கொள்ளாது, வடமொழி முனிவனுகிய வேதவியாச முனிவனது மொழியாகிய உத்தரமீமாஞ்சை யெனப்படும் பிரமசூத்திரமென்பாரும், மாணிக்கவாசக முனிவன் மொழிந்தவெனக் கோவை திருவாசகங்களுக்கு அடையாக்குவாரும், முனி மொழியெனப் பெயரியதொரு நூலென்பாருமென வேறு வேறு பொருள் கொள்வார் பலருளர்.

பிரம சூத்திரமென்னும் வடமொழிநூல் வேதாந்தமாகிய உபநிடதச் சொற்பொருளை யாராயுங் கருவிநூலாவதன்றித் தேவர் குறள் முதலாயின போலப் பொருணூலன்றாய்த் திருநான்மறை முடிவின்பாற்படும். அதனைக் கிளந்தெடுத்தோதல் வேண்டா. அதனைக் கிளந்தெடுத்தோதுங் கருத்தின ராயின் அச்செய்யுளுடையார் சூத்திரமென்பதன் பொருள் இனிது விளங்க முனிநூலுமெனக் கூறியிருப்பர்மன். இதுபோலவே வடமொழிப் பகவற்கீதையும் உபநிடதமென்பதன்கணடங்குவதாம். அதனுல் அது கிளந்தெடுத்தோதப்படாதாயிற்று.

செய்யுட் போக்கிலே முனிமொழியுமென்னு மும்மை சார்புபற்றி எண்ணும்மையெனவே துணியக்கிடத்தலானும், பெயரெச்சத்து உம்மிறுதி நிலை, எதிர்கால நிகழ்காலங்களைக் குறிக்குமன்றி இறந்தகாலத்தைக் குறியாமையானும், அடைமொழியாக்குவார் எண்ணுப் பொருளொடு மயங்கவையா திறந்த காலத்தாற் கூறக்கடவராகலானும் அதனை உம் மீற்றுப் பெயரெச்சமாகக் கோடலும் அச்செய்யுளுடையாரது கருத்தன் றுதல் பெறப்படும். அல்லதூஉம், மொழியுமென்பதனைப் பெயரெச்ச மாகக் கொள்வார்க்குத் திருமூலர் சொல்லு மொருவாசகமென்னு மிடத்தும் பெயரெச்சங் கோடலமைவுடையதாமென மறுக்க.

முனிமொழியெனப் பெயரிய நூல் பழையதன்று. மூதுரைப் பாடலெழுந்தபின் மிகப்பிற்றை ஞான்று இதன்பாற் கண்ட இப்பெயரை யிட்டுச் செய்ததொரு சிறுநூலாம். இது; நூலென்றற்குத் தகுதியுடைய தன்றாய்ச் சிறப்பில்லதாமெனக் கூறியுள்ளார் ஆசிரியர் சாமிநாதையர்.

தேவர் குறள், மூவர்தமிழ், திருமூலர்சொல்லென அவ்வந் நூலுடையார் பெயரான் இன்ன நூலென்பது விளக்கப்பட்டது. கோவை

திருவாசகமென்னு மியற்பெயர்களானே அந்நூல்கள் இன்னவென்ப தினிது விளங்கும். மொழியென்பது நூற்பெயரன்றாயின் முனிமொழி யென்பதின்ன நூலென்பது பெறப்படாது. எனவே, திருவாய்மொழி யென்னு மியற்பெயரே செய்யுளிற் குறைத்து வழங்கப்பட்டதென்பது தோன்ற முனிமொழி யென்றலின், முனிமொழி திருவாய்மொழியே யென்பது துணியப்படும். மூவர் தமிழைச் சாரவைத்ததனாலும் அது திருவாய்மொழியேயாதல் வேண்டும். அன்றியுந் திருவாய்மொழியை யெடுத்தோதாமை குன்றக்கூறலாய் முடியும். தலைமைபற்றித் திருவாய் மொழியைக் கூறவே ஏனை மூவாயிரந் திருமொழிகளுமடங்கும்.

இதுகாறுங் கூறிப்போந்தவாற்றானே தேவர்குறள் முதலாய ஏனை நூல்களுந் திருவாய்மொழியு மொருவாசகமென்றுணர்க வென்பதாயிற்று.

இனி, இவற்ற தொருமைப்பாடாமாறு நோக்குதும்.

அடக்க வொழுக்கங்களை விடாது மேன்மேற் பெருக்கி வருத லானே மேன்மேல் வளர்ந்து பெருகுமறிவு மன்பு முதிர்ந்து பரந்து எல்லாவுயிருமாயிருக்கு மிறைவனிடத்து நிலைபெற, அதனாற் பற்றுவிட் டிறைவனொடிரண்டற வொன்றுபட்டவுயிர், எங்கு மெல்லாம் தானொரு வனே யுளனாகி மன்னிநின்று ஆராவின்பத்திலே திளைத்துக் களித்துயர் வுற்று அமைதியுறு மென்பதே தேவர்குறள் முதலாக எடுத்தோதிய முத னூல்கட்கெல்லாமொத்த பொருண் முடிவென்பது அறிவுவளம் பெற்ற ஆன்றோரெல்லார்க்கு மொப்ப முடிந்தது.

எல்லாவுயிரும் இறுதியிற் பெறற்பாலது வீடுபேறல்லதில்லை யென்பதூஉம், அதற்குமேற் பெறற்பால தொன்றுமில்லை யென்பதூஉம், அதனைப் பெறுவதற்குரிய நேர்வழியும் படிவழிகளும் வீடுபேற்றினியல்பும் பிறவுமெல்லாம் இவ்வேழ் நூல்களும் வேறுபாடின்றிக் குறிப்பாலாயினுங் கூற்றாலாயினுந் தொகுத்தாவது விரித்தாவது முடிப்பனவேயாம்.

தேவர் குறளின் முதற்பத்தாகிய கடவுள் வாழ்த்து முதல் அறத்துப்பால் முழுதினையும் பெருப்பித்துக் காட்டுங் கண்ணாடிபோல் வனவே மூவர்தமிழ் முதலாயின. ஒருவாசகமாகிய ஏழ்நூல்களுந் திரண் டொன்றாகிக் குறுகிய பிழம்பே தேவர் குறளின் முதலாவதாகிய

"அகர முதல வெழுத்தெல்லா மாதிப்
பகவன் முதற்றே யுலகு"

என்னுங் குறுவெண்பாட்டு. இதனுள் எடுத்துக்கொண்ட பொருளுக்கு எடுத்துக்காட்டிய உவமைபோலப் பொருத்தமும் விளக்கமுமுடைய உவமை வேறொன்றுமில்லை. இவ்வுவமையைத் திருவள்ளுவனார் எடுத்தாளுதற்கு முன்னர் வேறு தமிழ்ப் புலவரும் வடநூன் முனிவரும் எடுத்தாண்ட

தில்லை. எந்த வேதத்திலுமில்லாதது இவ்வுவமை விளக்கம். இச் சிறப்புப் பற்றியே ஒருவாசகமெனப்பட்ட ஏழ்நூலுள்ளு முதற்கண் வைக்கப் பட்டது தேவர்குறள். இவ்வுவமையைப் பிற்காலத்திலே சிவஞானபோதஞ் செய்தருளிய மெய்கண்டாரும், சிவஞானசித்தி செய்தருளிய அருணந்தி சிவாசாரியரும், பிறரும் எடுத்தாண்டுள்ளார்கள். சிவஞான போதத்துக்குப் பேருரை கண்ட மாதவச் சிவஞான முனிவர், தாம் உரைதொடங்கு முன் இம்முதற் குறட்பாடலை யெடுத்தோதிக் கடவுளை வழிபடுவதனி னின்று மூவர்தமிழ் முதலாயின தேவர் குறளோடொத்த கருத்துடைமை முனிவரது துணிபாதல் இனிது விளங்கும். தேவர் குறளோடு திருவாய் மொழியுந் திருநான்மறைமுடிவுங் கருத்தொருமை யுடையனவென்பது பரிமேலழகரது துணிபாதல் அவருரையால் விளங்கக் கிடக்கின்றது.

ஒருதனி முதற்பொருளியல்பையே தேவர்குறள் படர்க்கையிடத்தில் வைத்தும், திருநான்மறைமுடிவு தன்மையிடத்தில் வைத்தும் ஏனை மூவர் தமிழ் முதலாயின முன்னிலையிடத்தில் வைத்தும் விளக்கிக் கூறுவன வாம். இவையெல்லாமொருங்குகூறு மொருவாசகங்கள்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார
ரிறைவ னடிசேரா தார்" என்றவாறே

திருவடித்துணை, திருவடி வணக்கம், திருவடியன்பு, திருவடியுணர்வு, திருவடிப்பேறு என்பனவேயாம். இவையெல்லாம் ஓம் என்னுமொரு தனிவாசகமாயடங்கும்.

"ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயி ரீருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கு மம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றுதுமுற் றுதிவ் வணிநலமே"

—திருக்கோவையார் – 307

Always insist on Quality products of

**REGINA**

555 "EAU-DE-COLOGNE" BATH POWDER
535 "EAU-DE-COLOGNE"
MOON & STAR HAIR DYES AVAILABLE EVERYWHERE

**Regina Perfumery & Co,**

26, Dam Street, COLOMBO.
Phone: 4994 Cable: GAIELY

# அத்வைதம் யாத்த இணைப்பு

டாக்டர். டி. எம். பி. மஹாதேவன் M. A., Ph. D.
தத்துவ சாஸ்திரப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

இணைப்பு அல்லது இணக்கம் என்பது இருவகைப்படும். ஒன்று. பலவற்றை ஒன்முய்ச் சேர்ப்பது; மற்றது, பலவற்றுள் ஒன்றைப் பார்ப்பது. அத்வைதம் போதிப்பது இரண்டாவது வகை இணைப்பு. உள்ள பொருள் ஒன்றே. அது உபநிஷதங்களில் 'ஆத்மா' என்றும், 'பிரஹ்மம்' என்றும் குறிப்பிடப்படுகின்றது. வேறு வேருக அமைந்த உலகம் உண்மையன்று; தோற்ற மாத்திரமாய் உள்ளது. நாம் ஒவ்வொருவரும் வேறு வேமுன உயிர் என்று எண்ணுகின்ருேம். இதுவும் அஞ்ஞானத்தாற்ருன் உண்டானது. உண்மையில் நாம் எல்லாம் ஒன்றே. மயக்கத்திஞல் வேற்றுமை தோன்றுகின்றது. மாயை என்ற மயக்கம் மெய்ஞ்ஞானத்திஞல் அழிபடும் போது, இரண்டற்ற ஒன்றையே காண்போம். இந்த அனுபவமே மோக்ஷம் அல்லது வீடு எனப்படுவது. இது அத்வைதம் கண்ட உண்மை.

வேறு வேறு என்பது வாஸ்தவமாஞல், அவற்றை எவ்வளவு தான் சேர்த்துப் பிடித்தாலும் அமைதி ஏற்படாது. வேற்றுமைப் புத்தியிலிருந்துதான் பயம் உண்டாகின்றது. பயத்திஞல் துக்கம் ஏற்படுகின்றது. எவனெருவன் வேற்றுமையைப் பார்க்கின்ருனே, அவன் மரணத்திலிருந்து மரணத்தையடைகின்ருன் என்று ஓர் உபநிஷத வாக்கியம் கூறுகின்றது.

மிருத்யோ: ஸ மிருத்யுமாப் நோதி
ய இஹ நாநேவ பஸ்யதி ।

'எப்பொழுது ஒருவன் அத்ருச்யமாயும், அருபமாயும், வாக்குக்கு எட்டாததாயும், நிராதாரமாயும், பயமற்றதாயும் உள்ள பரம்பொருளை அடைந்தானே, அப்பொழுதே அவன் பயமின்மையை அடைந்தவன் ஆவான்.'

'எப்பொழுது ஒருவன் பரம்பொருளில் ஒரு சிறு வேறுபாட்டைச் செய்கிருனே, அப்பொழுது அவனுக்குப் பயம் உண்டாகின்றது' என்று மற்ருெரு வாக்கியம் புகல்கின்றது.

யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்த திருஸ்யே அநாத்ம்யே அநிருக்தே அநிலயனே அபயம் ப்ரதிஷ்டாம் விந்தே । அத ஸோ அபயம் கதோ பவதி । ,யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுதரம் அந்தரம் குருதே । அத தஸ்ய பயம் பவதி ॥

வேற்றுமை உள்ளவரையில் சாந்தியும் ஆனந்தமும் உண்டாகா; ஆகையால், வேற்றுமை அகலவேண்டும் என்று அத்வைதாச்சாரியர்கள் உபதேசிக்கிருர்கள்.

அத்வைதத்தைப் பொறுத்தவரையில் எதிர்ப்பு, மறுப்பு முதலியவற்றிற்கு இடமில்லை என்று ஆதிசங்கரரின் பரமகுருவாய்க் கருதப்படும் கௌடபாதாசாரியர் கூறுகின்ருர். அவர் இயற்றிய மாண்டூக்ய காரிகையில் ஒரு சுலோகம்.

ஸ்வஸித்தாந்த வ்யவஸ்தாஸு த்வைதிநோ நிஸ்சிதா திருடம், பரஸ்பரம் விருத்யந்தே தைரயம் ந விருத்யதே ||

இதன்பொருள்: துவைதிகள் தங்கள் தங்கள் சித்தாந்தங்களை விடாமற் பிடித்துக்கொண்டு ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்கின்றனர். ஆனல், அவர்களோடு எமக்கு விரோதமில்லை.

சங்கரர், இதற்குத் தாம் எழுதிய உரையில், ''எவ்வாறு தனக்கும் தனது கை கால்களுக்கும் விரோதம் இருக்கமுடியாதோ, அதுபோல, அத்வைதம், ஒன்றுன ஆத்மாவையே பார்க்கும் தரிசனமாகையால் பிற தரிசனங்களினின்று வேறு பிரிந்ததன்று; அவற்ருேடு அதற்கு விரோதமுமில்லை'' என்று விளக்கங் கொடுக்கிருர்.

ஸர்வா னன்யத்வாத் ஆத்மைகத்வ தர்ஸ நபக்ஷா ந விருத்யதே | யதா ஸ்வஹஸ்த பாதாதிபி: ||

இயற்கையான, நித்தியமான ஒற்றுமையை, அத்வைத தரிசனத்தின்மூலம் மக்களிடையே பரப்பியவர்களுள், தலைசிறந்தவர் ஆதி சங்கரர். அவர் கம்பீரமான தெளிவான தமது பாஷ்யங்களிலும், மற்றத் தத்துவ நூல்களிலும் அத்வைத உண்மையை ஐயம் திரிபுகளுக்கு இடமேயில்லாமற் போதித்திருக்கின்ருர்; சைவம், வைஷ்ணவம், சாக்தம் முதலிய சமயங்களுள் சச்சரவுகளுக்கு இடமேயில்லை என்பதையும் வற்புறுத்தியிருக்கின்ருர்; ஒரே தெய்வம் பல உருவங்களில் வழிபடப்படுகின்றது என்பதைப் புகட்டுவதற்குப் பல தோத்திரப் பாடல்களையும் இயற்றியிருக்கிருர்; சேது முதல் இமயம் வரை பாதசாரியாய்ப் பன்முறை சென்று, பாரத நாட்டின் அடிப்படையான ஒற்றுமையை வளர்க்க அநேக வழிகளை வகுத்துள்ளார். அவரைப் பின்பற்றி, அவருக்குப் பிறகு தோன்றிய பெரியோர்கள், நம் நாட்டின் எல்லா மொழிகளிலும் அத்வைத நூல்கள் இயற்றியுள்ளார்கள். இந்நூல்களின் வாயிலாக மக்களிடையே இணைப்பு எண்ணம் பரவி வந்திருக்கின்றது.

தமிழ் நாட்டில், தொன்றுதொட்டு அத்வைத தரிசனம் போதிக்கப்பட்டு வந்திருப்பதை, நாம் காணலாம். மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்திலும் அத்வைதக் கொள்கையிருப்பதாக, அதற்கு உரை எழுதிய நச்சிஞர்க்கினியர் கூறுகின்ருர். இதேபோன்று சங்க நூல்களிலும், திருவாசகத்திலும் அவர் அத்வைத போதனையைக் காண்கின்ருர். ஆழ்வார்களின் பாசுரங்களிலும், நாயன்மார்களின் பாடல்களிலும்

அத்வைதபரமான பல கருத்துக்கள் உள்ளனவென்று பெரியோர்கள் மதிக்கின்றனர். தத்துவராயர் திரட்டிய சிவப்பிரகாசப் பெருந்திரட்டில், அநேக அத்வைத நூல்கள் இடம்பெற்றுள்ளன. ஞானவாசிஷ்டம் முதலிய ஞானநூல்கள், இனிய தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, மக்களிடையே அத்வைத உண்மையைப் பரப்பிவந்துள்ளன. சித்தர் பாடல்களிலும், நாடோடிப் பாடல்களிலும், அத்வைதாநுபூதி வழங்கப் படுவதைக் காணலாம்.

தமிழில் உள்ள அத்வைத நூல்களில் தலைசிறந்தது கைவல்லிய நவநீதம். 'பஞ்சதசீ' என்ற சம்ஸ்கிருத பிரகரணமும், விசார ஸாகரம் என்ற ஹிந்தி மொழி நூலும் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ளனவோ, அவ்வளவு உயர்ந்தது தாண்டவராய சுவாமிகளின் கைவல்லிய நவநீதம். அத்வைதபரமான பல நூல்கள் தமிழில் எழுந்தமையால், எண்ணற்ற மக்கள் அத்வைத வாசனையைப்பெற வழி ஏற்பட்டுள்ளது.

சாதிச் சண்டைகளும், சமயப் பூசல்களும் ஒருவாறு குறைவதற்கு இந்நூல்கள் பெரிதும் உதவி வருகின்றன. வைஷ்ணவத்தையும் சைவத்தையும், வேதாந்தத்தையும் ஒன்றுபடுத்தியும், சைவத்தையும் வேதாந்தத்தையும் இணைத்தும் சமரசத்தை அநுபவிக்க மகான்கள் வழி காட்டியிருக்கின்றார்கள். தாயுமானவர், இராமலிங்கசுவாமிகள் முதலிய பெரியோர்களின் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், சென்னையில் எழுந்தருளியிருந்த கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் என்ற மகான், ஆயிரத்து எழுநூற்றுக்கு அதிகமான பக்கங்கள் கொண்ட 'வேதாந்த மனன சிந்தாமணி' என்ற நூலில், அத்வைதபரமான செய்யுள்களைத் திரட்டி அருளியுள்ளார். அவற்றுட் சிலவற்றை இங்கு ஞாபகப்படுத்துவோம்.

சொரூப உந்தியார் என்ற நூலிலிருந்து சில செய்யுள்கள்.

ஆத்தும தத்துவ மாந்தன்னைக் கண்டபின்
கோத்து நிறைந்தென் றுந்தீபற
குறையவர்க் கில்லையென் றுந்தீபற.

ஏக நிராமய மென்றறி ஞானிக்குத்
தாகமி ராதுபின் னுந்தீபற
தன்னனு போகமென் றுந்தீபற.

மிச்சமாய் நின்ற வெளிசிவ மாக்கண்டோர்க்கு
அச்சம் பின்னேதங்கே யுந்தீபற
ஆகார மற்றதென் றுந்தீபற.

வள்ளலார் சாத்திரத்தில், 'அதிரகசியம்' என்ற தலைப்பிற் காணப்படும் இரண்டு பாக்களில், குலகோத்திர அபிமானம் ஆகாது என்றும், உண்மைச் சமயம் எதுவென்றும் உணர்த்தப்படுகிறது.

பறைய ரென்பதும் பண்டித ரென்பது (ம்)
(ஆ) மறையு மிந்த மலினவு டலையே
பறையர் தம்முளும் பண்டிதர் தம்முளு (ம்)
(அ) மறிவ னேகமென் ருரறித் தோர்களே.

சமயமே பரமென் னுஞ்சமத் தராய்ச்
சமய சாத்திரங் காட்டுஞ் சழக்கர்கள்
சமய மென்னுஞ் சத்தார்த்த முணர்கிலீர்
சமய மென்பது தன்னை யறிதலே.

சச்சிதானந்த சுவாமிகள் இயற்றிய 'உத்தம வாதம்' என்ற நூலின் முதற் செய்யுள் பின்வருமாறு:—

அறிவின் ஸ்புரிப்பே யளவில் மதங்கள்
அறிவே நமது மதமாயின் — வெறியுண்டோ
அங்கே யதைவணங்கி யங்கே யதுவாவோம்
எங்குந் துணைவே றிலை.

இந்த நூற்றுண்டில், பல பெரியோர்கள் அத்வைதாநுபூதியைத் தீந்தமிழில் வழங்கியிருக்கிருர்கள். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வேதாந்தப் பாடல்கள் பிரசித்திபெற்றவை. அவருடைய தேசீய கீதங்களுக்குக்கூட ஆதாரமாயுள்ள உண்மை, அத்வைதம் என்று கூறலாம். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டியது தேசீயமும், மக்கள்பால் அன்பும் அத்வைதத்துக்குப் புறம்பானவை அல்ல என்பதே. உண்மையான அன்பு அத்வைதக் காட்சியினுலேதான் ஏற்படும்.

பாரதியார், "நந்தலாலா" என்ற பாட்டில், கண்ணனை எங்குங் காண்கிருர்; கண்டு அவனுடைய சர்வாத்ம பாவத்தை யனுபவிக்கின்றுர்

காக்கைச் சிறகினிலே நந்த லாலா! — நின்றன்
கரியநிறந் தோன்றுதையே, நந்த லாலா!
பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்த லாலா! — நின்றன்
பச்சை நிறந் தோன்றுதையே, நந்த லாலா!
கேட்கு மொலியி லெல்லாம் நந்த லாலா! — நின்றன்
கீத மிசைக்கு தடா, நந்த லாலா!
தீக்குள் விரலை வைத்தால் நந்த லாலா! — நின்றன்
தீண்டு மின்பந் தோன்றுதடா, நந்த லாலா!

"ஜயபேரிகை கொட்டடா" என்று தொடங்கும் பாட்டிலே, அத்வைதாநுபவத்தினுல் பயமின்மையும், சமநோக்கும் சித்திக்கும் என்பதைப் பார்க்கின்றேம்

பயமெனும் பேய்தனை யடித்தோம் – பொய்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்.
வியனுலக னைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.

காக்கை, குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும், மலையும் எங்கள் கூட்டம்,
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை,
நோக்க நோக்கக்களி யாட்டம்.

இரண்டற்ற பரம்பொருளைக் கண்டவர்க்குப் பகைமை இல்லை என்பதை, 'பகைவனுக்கருள்வாய்' என்ற கவிதையிற் காண்கின்றோம்.

புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே – நன்னெஞ்சே!
பூமியிற் கண்டோமே

பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் – நன்னெஞ்சே!
பரமன் வாழ்கின்றான்.

தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய் – நன்னெஞ்சே!
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய் – நன்னெஞ்சே!

பகைவனுக் கருள்வாய்.

யாழ்ப்பாணத்தில் சைவத்தையும் அத்வைதத்தையும் மக்களுக்குப் புகட்டிவந்த பெரியார் யோகர்சுவாமிகள். அவர் இயற்றிய 'நற்சிந்தனை' என்ற நூலிலிருந்து இரண்டு பாட்டுக்கள்:

ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள் காணும் தம்பிமாரே
ஓதி யுணரவேண்டுந் தம்பிமாரே
உய்யவழி யதுகாணுந் தம்பிமாரே
சாதி சமய பேதம் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே.

தத்துவம் யாவும் சடமென்று காட்டியென்
சித்தத்துள் நின்றானென் றுந்தீபற
தேவாதி தேவனென் றுந்தீபற.

ஆதாரத் தாலே நிராதாரஞ் சென்றபின்
பாதார விந்தமென் றுந்தீபற
பலித்தது பூசையென் றுந்தீபற

அல்லும் பகலும் அறிவாகி நிற்கவோர்
சொல்லைத்தந் தானென் றுந்தீபற
தோன்றாத் துணைவனென் றுந்தீபற.

சிவன் சிவனென்று தேறித் தெளிந்தார்க்கு
அபாய மில்லையென் றுந்தீபற
அன்பே சிவமென் றுந்தீபற.

ஐம்பது ஆண்டுகளுக்குமேல் குருமூர்த்தமாய்த் திருவண்ணாமலையில் வீற்றிருந்து, உலகின் பலபாகங்களிலுமிருந்து வந்தவர்க்கெல்லாம் மௌனத்தாலும், சொல்லாலும் ஆத்மாநுபூதியை வழங்கிய மகான் ரமண மகரிஷிகள். அவர் முன்னிலையில், சாந்தி நிலவியது; சமாதானம் ஸ்புரித்தது; சங்கைகள் நிவிர்த்தியாயின. எழுதவேண்டுமென்பதற்காக அவர் எழுதவில்லை. சாதகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர் பாடிய பாட்டுக்களும், போதித்த உரைகளும் அத்வைத தத்துவத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாக விளக்குகின்றன. 'ஏகான்ம பஞ்சகம்' என்ற நூலில் வரும் இரண்டு பாக்கள் :-

பொன்னுக்கு வேருகப் பூடணமுள்ளதோ
தன்னை விடுத்துத் தனுவேது - தன்னைத்
தனுவென்பா னஞ்ஞானி தானகக் கொள்வான்
தன்னையறிந்த ஞானி தரி.

எப்போது முள்ளதவ் வேகான்ம வத்துவே
யப்போதவ் வத்துவை யாதிகுரு - செப்பாது
செப்பித் தெரியுமா செய்தன ரேலெவர்
செப்பித் தெரிவிப்பர் செப்பு.

ஐயேயதி சுலபம் - ஆன்ம வித்தை
ஐயேயதி சுலபம்.

என்ற பல்லவியோடு ஆரம்பிக்கும் பாட்டில், தன்னை யறிவதே வேதாந்தத்தின் முடிவு என்று கூறுகின்றார்.

தன்னை யறிதலின் றிப் பின்னையெ தறிகிலென்
தன்னை யறிந்திடிற் பின்னென்னை யுளதறிய
பின்ன வுயிர்களில் பின்ன விளக்கெனுமத்
தன்னைத் தனிலுணர மின்னுந்த னுளான்ம —
ப்ரகாசமே; அருள் விலாசமே;
அகவிநாசமே; இன்ப விகாசமே.

அத்வைதாநுபூதி பெற்றோர்க்குத் தேசம், காலம், பொருள் முதலியவற்றால் ஏற்படும் வேற்றுமைகள் கிடையா.

அவர்கள் நித்தியமாயுள்ள இணைப்பைக் காண்பவர்கள். ஆதி சங்கரர் தாம் இயற்றிய, 'ஆத்மபோதம்' என்ற நூலின் இறுதியில் இவ்வாறு கூறுகின்றார்.

திக்தேச காலாத்யனபேக்ஷ்ய ஸர்வகம்
ஸீதாதி ஹ்ருந்நித்ய சுகம் நிரஞ்ஜனம் I
யஸ்ஸ்வாத்ம தீர்த்தம் பஜதே விநிஷ் க்ரிய
ஸ ஸர்வவித் ஸர்வகதோ அம்ருதோ பவேத் I

ஆத்ம தீர்த்தத்தைச் சேவித்தவன் நித்திய சுகத்தைப் பெறுகிறான்; எல்லாம் உணர்ந்த, எங்கும் பரவிநின்ற ஞானியாய்த் திகழ்கின்றான்; அமிர்த நிலையை எய்துகின்றான். அவனுடைய காட்சிக்கு ஆன்மாவைத் தவிர வேறொன்றும் இல்லை. இதுவே உண்மையான இணைப்பு.

# தன்னை அறிதல்

நவாலியூர், வித்தியாரத்தினம் சோ. நடராசன் B. A.
அத்தியட்சகர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் அனுபூதிமானாய் விளங்கிச் சென்ற ஆண்டில் மகாசமாதியடைந்த யோகர் சுவாமிகளின் ''நற்சிந்தனை'' என்ற அனுபூதிப் பாசுரங்களிலே ஒரு வெண்பா உண்டு.

''கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்
வருத்த மெலாந்தீர்க்கும் வடிவேல் – திருத்தலத்தில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடா நீ என்றான் அவன்''

அடுத்த பாசுரத்தின் கடைசிவரி,

''தேரடா வுள்ளென்றான் சிரித்து'' என்பதாம்.

இவ்விரு மகாவாக்கியங்களும் இந்திய தத்துவ தரிசனங்களின் சாரமென்றே கூறிவிடலாம்.

ஓதி ஓதி உணர்வதுந் தன்னையே.........
தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே.........
சிவத்தை நோக்கித் தெளிவதுந் தன்னையே.........

என்று மற்றொரு பாசுரத் தொடரில் இந்த உண்மையைச் சுவாமிகள் பன்னிப் பன்னிக்கூறுகிறார். நற்சிந்தனை நூல் முழுவதும் இழையோடிக் கொண்டிருக்கும் மகாமந்திரமும், குறிக்கோளும், இலட்சியமும் இதுவாகவேயிருப்பதை அறியலாம். இந்த மூலமந்திரத்தின் தாற்பரியமென்ன? ''தவத்தையாற்றி அறிவதுந் தன்னையே'' என்று சுவாமிகள் ஓயாமற் கூறிக்கொண்டிருக்கும் வார்த்தைகளின் பொருள் என்ன?

கருத்துக்களும், வார்த்தைகளும் உருவகங்கள். காட்சிகள், கிரியைகள், விழாக்கள், கடவுள் வடிவங்கள் எல்லாமே உருவகங்கள்; அன்றாட வாழ்க்கையில் நாம் அனுசரிக்கும், பழக்கவழக்கங்களும் உருவகங்களே. இவையெல்லாவற்றுக்கூடாக அதீதமானதொரு பேருண்மை, நிழல்விட்டுக் கொண்டிருக்கிறது. பலபட உரைக்கப்படுவதும், உரைக்கடங்காததும், பல உருவங்களில் காட்டப்படுவதும், முற்றாய்க் காட்ட முடியாததுமானதொரு தாற்பரியத்தின் கோலங்களே இந்த உருவகங்களுக்கூடாகத் தோற்றமளிக்கின்றன. இந்த உருவகங்கள் உண்மையை மனத்திலே பதிப்பதற்குப் பயன்படுவனவன்றி அவையே உண்மைகளல்ல.

சாத்திரங்கள் மூலமாகவும், அனுபூதிமான்கள் மூலமாகவும், காலத்துக்குக்காலம் வெளிப்படும் உண்மைகள் அவ்வக்காலத்துக்கு ஒளி கொடுப்பன. மற்றக்காலத்துக்கு அவை புதிதாக மகான்கள்மூலம் உயிருள்ள அனுபவத்தைப் பெறவேண்டும். இல்லாவிட்டால் அவற்ருல் வாழ்வு சிறக்கமாட்டாது. அந்த வகையிலேதான் யோகர் சுவாமிகள் கூறிய பழம் பெரும் உண்மை, இன்றைய நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் ஆன்மானுபவத்துக்கும் பொருளுடையதாகிறது.

எனவே, அனுபூதியென்பது சொந்த அனுபவத்தின் விளைவாக உண்டாகவேண்டியது. மற்றவர்களுடைய அனுபவம் நமக்குப் பொருளுடையதாகவேண்டுமானுல், அது சொந்த அனுபவமுத்திரையைப் பெற வேண்டும். பரம்பொருளின் அனுபவத்தை நாம் கடன் வாங்கமுடியாது; கைம்மாற்ருகப் பெற்றுப் பரிவர்த்தனைசெய்யவும்முடியாது. நமக்குள்ளேயே அந்த அனுபூதி வளரவேண்டும். அந்தப் புதிய அவதார விளைவு நமது செம்புலத்திலே நடைபெறவேண்டும். மற்றப் புலங்களில் உண்டான விளைவு அதற்கு ஆதரிசமாக, எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும்; அசுரரால் தீங்குவிளையும்போதும், தருமம் அழிந்து அதருமம் தலையெடுக்கும்போதும், வாழ்வு நிலைகலங்கி எல்லாம் சிதறி அவலமடையும் போதும் பரம்பொருளை நாடி, ''ஐயனே, துன்பத்தைக் கொன்று நன்மையளிக்க உருவெடுத்தருளுக'' என்று பிரார்த்திக்கிருேம். எல்லையில்லாத பரம்பொருள் தன்னை நாமரூபங்களில் தோற்றச் செய்கிறது.

பிரகிருதி சக்திகளால் மறைக்கப்பட்டு, வெளிப்படாது அடங்கியிருக்கும் அந்த மெய்ப்பொருட் காட்சியை நமது சேதனத்திலே வெளிப்படச் செய்வதே இந்திய தரிசனங்களின் முக்கிய நோக்கமாகும். இயற்கையின் இரகசியங்களை ஆராய்ந்து விளக்குவது விஞ்ஞானத்தின் கோட்பாடு; மெய்ஞ்ஞானம் அந்தரியாமியாய் நிற்கும் ஆன்ம விலாசத்தை மெய்யுணர்வினுல் காண்பது. ''அஜோ, நித்ய: சாஸ்வதோயம், புராணோநஹன்யதே, ஹன்யமானே சரீரே.'' சரீரம் ''அழியும்போது, தான் அழியாமல் பழையதாய், என்றுமுள்ளதாய், நிலைபெற்றதாய்ப் பிறப்பற்றதாயுள்ள'' ஆன்மாவை அறிந்துகொள்வதே மேலான நிட்டை; அதுவே பிறவிப்பயன் என்பர். பலவற்றினிடையே ஒன்ருயும், அழியும் மாலைத்தாகிய பொருள்களிடையே அழிவற்றதாயும்; அறிவில்லாதவற்றிடையே அறிவுள்ளதாயுமுள்ள தன்னை அறியவேண்டும். அதுவே சாந்தியும் சுகமும். இதுவே இரண்டாவது சன்மம்; உயிர்த்து எழும்புதல் என்ற கிறித்தவக்கோட்பாடு. இதனை விளக்கச் சாத்திரங்களிலே பல உருவகமான கதைகளுண்டு.

ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர் அழகியதொரு கதையைச் சொல்லுகிருர். புலிக்குட்டியொன்று ஆட்டு மந்தைகளிடையே வளர்கிறது. அது

பிறந்ததும் அதன் தாய்ப்புலி இறந்துவிடுகிறது. கருப்பத்திலே அந்தக் குட்டியைத் தாங்கிவந்த புலி, பல பகல் இரையின்றி அலைந்து திரியும் போது ஓர் ஆட்டு மந்தையைக் கண்டது. கொடும்பசி கொண்ட அது மிகவேகத்தோடு பாய்ந்தபோது பிரசவவேதனையுற்றுக் குட்டியை ஈன்றதும் இறந்துவிடுகின்றது. பயந்து ஓடிய ஆட்டு மந்தை திரும்ப ஒன்றுசேர்ந்த பொழுது, புலிபாய்ந்து இறந்த இடத்திலே சிறியதொரு புலிக்குட்டி தேம்பியழுதுகொண்டிருப்பதைக் கண்டு, பரிவினால் அதை எடுத்துப் பாலூட்டி வளர்த்தது. பின்னர் அந்தப் புலிக்குட்டி ஆட்டு மந்தையில் தானும் ஓர் ஆடாக வளர்ந்தது. அதனுடைய கோரத் தன்மையெல்லாம் மாறிற்று. ஆரம்பத்திலே புல்லைத் தின்பதற்கு அதற்குச் சிறிது கஷ்டமாயிருந்தது. கூரிய அதன் பற்கள் நாளடைவிலே புல்லைத் தின்னக்கூடிய தன்மையை அடைந்தன. தாவரங்களை உண்டதனால் அதன் இயல்பும் தானாகவே மாற்றமடைந்தது. புலி விடலையாயிற்று.

ஒருநாளிரவு கிழப்புலி ஒன்று மறுபடியும் அந்த ஆட்டு மந்தையிற் பிரவேசித்தது. ஆடுகளெல்லாம் பயந்து கலங்கி ஓடிவிட்டன. புலிக்குட்டி அசையாமல் நின்றது. தன்முன் நின்ற கொடியபுலியை ஏற இறங்கப் பார்த்து அதிசயமடைந்தது; பின்னர் ஆட்டைப் போலக் கதறிற்று; பக்கத்திலேயுள்ள புற்றளிரிலே ஒரு கடிகடித்து அசைமீட்டிற்று. கிழப் புலி பார்த்து அதிசயமடைந்தது. ''இந்த ஆட்டு மந்தையில் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? நீ அசைபோட்டுக்கொண்டிருப்பது என்ன?'' இவ்வாறு கிழப்புலி கேட்டதும், குட்டி மறுபடியும் ஒரு கதறல் போட்டது. கிழப்புலிக்குக் கோபம் வந்துவிட்டது. ''ஏன் இந்த ஆட்டுக் கதறலைப் போடுகிறாய்?'' என்று சொல்லிக்கொண்டே அதைக் கழுத்திலே பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கிற்று. பின்னர் குட்டியைக் கவ்விக்கொண்டு காட்டுக்குள் ஓடி, ஒரு குளக்கரையில்விட்டு, நீரிலே வெண்ணிலவிலே தோன்றிய அதன் நிழலைப் பார்க்கச் செய்தது. ''சிறு குட்டியே, பார் உன்முகத்தையும் என்முகத்தையும். இரண்டும் ஒன்றுபோலத் தெரியவில்லையா? நீ ஏன் உன்னை ஆட்டுக்குட்டியென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்? ஏன் இந்த மாதிரி அலங்கோலமாகக் கதறுகிறாய்? போயும் போயும் புல்லை ஏன் தின்னுகிறாய்'' என்று கேட்டது.

குட்டிக்கு அதிசயமாயிருந்தது. அது ஒன்றும் பேசவில்லை. கண் மூடாமற் பார்த்துக்கொண்டிருந்தது. பின்னர் மறுபடியும் கதறிற்று. கிழப்புலி அதை மறுபடியும் கவ்வியெடுத்துக்கொண்டு தனது குகைக்குள் பிரவேசித்தது. அங்கே இரத்தம் வடியும் இறைச்சித்துண்டொன்றை எடுத்து அதன் முன்னாலிட்டது. குட்டி அருவருப்போடு நடுக்கங் காட்டிற்று. ''எடு, சாப்பிடு, விழுங்கிவிடு'' என்று சத்தமிட்டது கிழப்புலி. குட்டி அப்படியே நின்றுவிட்டது. கிழப்புலி அந்த இறைச்சித்துண்டைக் குட்டியின் வாயிலே திணித்துவிட்டுப் பார்த்துக்கொண்டு

நின்றது. குட்டி மெதுவாக அதைச் சுவைத்தபின்னர் இரத்தச் சுவை அதற்குப் புதியதொரு அனுபவத்தை உண்டாக்கியதும் மிக்க ஆவலோடு சாப்பிட்டது. உடனே அதற்குப் புதியதொரு தென்பு உண்டானது. இதழ்கள் சுவைப்புக் கொட்டின. உடனே அது எழுந்து, நித்திரையால் எழும்புபவர்போல ஒரு கொட்டாவிவிட்டது. உடம்பெல்லாம் தினவு கண்டது. கால் நகங்களை விரித்து நீட்டிற்று. வாலை நிலத்தில் அறைந்தது. வாயிலிருந்து புலியின் கர்ச்சனை பிறந்தது.

கிழப்புலி மிகத் திருப்தியோடு இதைப்பார்த்து ரசித்துக்கொண்டு நின்றது. குட்டி புதிய பிறப்பையடைந்துவிட்டது. கர்ச்சனை முடிந்ததும் கிழப்புலி ''இப்போது தெரிகிறதா நீயார் என்று'' எனக் கேட்டுவிட்டு ''வா, என்னோடு, காட்டுக்கு வேட்டையாடப்போவோ'' மென்றது. புலிக்குட்டி **தன்னையறிந்து கொண்டது.**

இதேவிதமானதொரு கதை சிவஞானபோதத்திலும், அதன் வழிநூலாகிய சிவஞானசித்தியாரிலுமுண்டு.

> ''ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
> தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
> டந்நிய மின்மையி னரன்கழல் செலுமே.
>
> (சிவஞானபோதம் 8ஆம் சூத்திரம்)

அரசன் மகனான நீ, மலை வேடர் கையிலே அகப்பட்டு வளர்ந்துவிட்டாய்; உன்னை நீ உணரவில்லையெனப் பரம்பொருள் குருவாகிவந்து இந்த உணர்வை (தன்னையறியும் உணர்வை) வழங்கியபின் அவன் அரசகுமாரன் என்பதை உணர்த்த, அவன் மலைவேடரைக் கைவிட்டு அரசனுக்குந் தனக்கும் வேற்றுமையில்லாதது கண்டு அரசனை அடையும்'' என்பது சூத்திரத்தின் தாற்பரியம். இக் கருத்தையே சிவஞான சித்தியார் விபரமாகப் பின்வருமாறு விளக்கும்:

> மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
> வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
> பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
> பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோற்
> றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
> துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
> மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
> மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்

இதன் பொருள் வெளிப்படை. இத்தகையதொரு கதைசாங்கிய சூத்திரத்திலும் காணப்படுகிறது. சாங்கியதரிசனமும் தன்னையறிதலையே வீட்டின்பமாகிய கைவல்லியம் என்று கூறும். அதாவது புருடன், தான்

பிரகிருதியிலும் வேருனவன் என்ற விவேகத்தைப் பெறுதலே முத்தி யின்பம் எனும் இக்கோட்பாடு, ஒருவகையிலே ஜைனருடைய சித்தாந் தத்துக்கும் ஒப்புடையதாயிருக்கிறது. இந்திய தத்துவ தரிசனங்களின் அடிப் படைக் கோட்பாடு இதுவே. ''போதி சரியா'' அதாவதுமெய்யுணர்வு பெறு தல். யோகசூத்திரங்களும் இதையே கூறும். அதனை, அவை கைவல்ய சுகம் என்ப. உள்ளேயிருக்கும் அந்தரான்மாவை அறிதல்; அதற்குக் கடவுள் அருள் செய்யும் கர்த்தாவாகவே யிருக்கிருர் என்கிறது யோகம். அங்கே கடவுளுக்கு இரண்டாம் இடந்தான். வேதாந்தம் பிரமத்தோடு ஆன்மா அத்வைதமாயிருக்கும் நிலையையே குறிக்கோளாகக் கூறும். பௌத்தம் ஞான ஒளி பெறல் (போதி) எனக் குறிப்பிடும். களங்கமடைந்து, அழுக் குப்படிந்து தற்காலிகமாகச் செயலற்று, மறைந்து, மலினமாகி, பேரொ ளியை இழந்து தன் எல்லையற்ற பலத்தையும், அனந்த சக்தியையும் அடக்கிவைத்திருந்த ஆன்மா அதன் சுதந்திரநிலையை அடைகிறது. இது மணியைக் கடைந்து பட்டந்தீட்டும் சம்பிரதாயம். பேதி கொடுத்துப் பின்னர் ஔடதம் கொடுக்கும் வைத்தியமுறை. அழுக்குப்படிந்த கண் ணுடியின் மலினத்தைத் துடைக்கும் நெறி. கயிற்றைப்போட்டுக் கடைந் ததும், மறையநின்ற மாணிக்கச் சோதி வெளிப்படும். அப்போது யோகர் சுவாமிகள் கூறுகிருர்:

காலமுமில்லைக் கட்டுமில்லை
மூலமுமில்லை முடிபுமில்லை.
ஞாலமுமில்லை நமனுமில்லை
சால அறிந்த தவத்திஞேர்க்கே.

தன்னையறிந்தவர் தத்துவாதீதரே.........
இது, ஓதி உணர்ந்தவர் உறுதிமொழி.......
இது மகா சுகம்.

இங்கே இந்திய தத்துவ தரிசன வரலாற்றிலே ஒரு விடயத்தை நாம் கருத்திற் கொள்ளலாம். அண்டத்தை நோக்கி ஆங்காங்கே இந் திரன், வருணன், அக்கினி, வாயு என்றெல்லாம் தேவதைகளை வகுத்து, அவற்றைப் பிரீதிப்படுத்தும் கருமங்களில் முனைந்தது வேதப் பண்பாடு; பின்னர் அண்டத்தை விட்டு, பிண்டமாகிய இந்த உடம் பையே கோவிலாக இதயத் தாமரையில் வைகும் பரம்பொருளை நாட வேண்டுமெனக் கண்டது வேதாந்தமான உபநிடதம்; அண்டத்தை நோக்கிய ஆராய்ச்சி பிண்டத்திலுறையும் ஆன்மவிலாசத்தை நோக் கிற்று. புறத்தேயுள்ள பரம்பொருளை அகத்திலே யோகத்திஞலும், தியானத்திஞலும் பக்தியிஞலும் அடையலாமென்ற ஆராய்ச்சி பிறந்தது.

காயமே கோயிலாகக் கடிமண மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை ஈசனுர்க்குப் போற்றவிக் காட்டிஞேமே. (தேவாரம்)

இஃது உபநிடதகாலந்தொட்டு, புத்தர் பகவானால் ஆராய்ந்து ஆரிய அட்டாங்க மார்க்கமாக விதிக்கப்பட்டு(இங்கே கூறப்படுவது ராஜமார்க்கம்; அரசவீதி ; அப்பெருந் தெருவில் வந்து பலதிசைகளிலுமிருந்துகூடும் அகப் புற வழிகளைக் கருத்திற்கொள்வதற்கு அவகாசமேது) யோகசாங்கிய வேதாந்தங்களாக விரிந்து சென்றது. புத்தர் கூறிய நடுவழியே பகவத் கீதையிலும் பேசப்படுவது. உடலை வாட்டவும் வேண்டாம்; அதைப் போஷிக்கவும் வேண்டாம். பிற்காலத்தில் போகத்தையே யோகமுமாக்கிக் கொண்டு ஆனந்தமயியான பராசக்தியிடம் சரணடையுமாறு ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சரும், சாக்த நெறியினரும் வற்புறுத்தினர். வெளியே யுள்ளதுதான் உள்ளேயும் சாந்தாகாரமாக அமைந்திருக்கிறது. துரிய நிலையிற் காணும் அந்தப் பரம்பொருள்தான் வெளியேயும் விரிந்திருக் கிறது. அதுதான் ஆன்மா. அதை அறிதலை யோகர் பெருமான் நற் சிந்தனையில் குறிப்பாகப் பன்னிப் பன்னிச் சொல்லுகிறார்.


நகைகளுக்கு



யப்பான்
ஜுவெல்லர்ஸ்

64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி :
518

தந்தி :
யப்பான்

# சக்தி வழிபாடு

வித்துவான் மு. சபாரத்தினம்
விரிவுரையாளர், இந்துக்கல்லூரி, சாவகச்சேரி.

'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி
பின்னமிலா னெங்கள் பிரான்'

என்று திருவருட்பயன் நூலாசிரியராகிய உமாபதி சிவாசாரியர் சக்தியின் இயல்பையும், இறைவன் எவ்வாறு சக்தியோடு இரண்டறக் கலந்துள்ளான் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். இத்தகைய சக்தி வழிபாடு தமிழகத்தில் மிகப் பழங்காலத்திலேயே இருந்திருக்கிறது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள. வைதீக சமயங்களில் ஒன்றாகிய சாக்த சமயம் என்பது சக்தியை உலக முதல்வியாகக் கொள்ளும் சமய மாகும்.

"ஒன்றாய் அரும்பிப் பலவாய்
விரிந்திவ் வுலகெங்குமாய் நின்றாள்"

என்று அன்னை பராசக்தியின் அளப்பரிய ஆற்றலைப் போற்றுகிறது ஒரு தமிழ்ப் பாடல். 'ஆதியில் இருந்த ஒரே பொருள் அருள்மயமான பராசக்திதான். அவளிடமிருந்துதான் சராசரங்கள் யாவும் தோன்றின. தேவரும் மூவரும் அவளுடைய குழந்தைகளே' என்று தேவி உபநிடதங்களும், தேவி பாகவத புராணமும், மந்திர தந்திர நூல்களும், பல சாக்த கிரந்தங்களும் பறையறைகின்றன. மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள் என்பதாலேயே தெய்வத்தாயை மகாதிரிபுரசுந்தரி என்று கூறி வணங்குகின்றோம்.

உள்ளன யாவுமாகி அவற்றையெல்லாம் வியாபிக்கும் அன்னை, பக்தர்களின் பொருட்டுப் பலவிதங்களில் உற்பவிக்கின்றாள். பக்தர்களின் மனப்பக்குவத்திற்கு ஏற்பவும், துட்டர்களின் தீவினைகளுக்கேற்பவும் எண்ணற்ற வடிவங்களில் தோன்றி அருள்புரிந்திருக்கின்றாள் அம்பிகை. துட்டர்களை அழிப்பதற்காக அவள் ஏந்திய ஆயுதங்களே நல்லவர்களைப் பாதுகாக்கும் படைக்கலங்களுமாயின.

"அன்புவடிவாகி நிற்பள்; துன்பமெல்லாம் அவள் இழைப்பள்" என்று தேசியகவி பாரதியார் பாடியுள்ளார். அன்னை துன்பந் தருவது நம் உள்ளக் கோணல்களை நிமிர்த்துவதற்காகவே என்பதுதான் அப் பாடலின் கருத்தாகும்.

மனிதன் முதன்முதலாகக் கடவுளைத் தாய் உருவிலேயே வழிபடத் தொடங்கியுள்ளான் என்பதையே சக்திவழிபாடு வற்புறுத்துகிறது.

'பால்நினைந்தூட்டும் தாயின்' அன்பைக் கசிந்துருகிப் பாடிய மணிவாசகப் பெருமான் மேலும் இறைவன் அருளை நினைந்து,

> "தாயாய் முலையைத் தருவானே
> தாராது ஒழிந்தால் சவலையாய்
> நாயேன் கழிந்து போவேனோ"

என்று இரங்கி வருந்துகின்றார். ஞானப்பாலை உண்ட சம்பந்தரும் "தோடுடைய செவியன்" என்று தந்தையாரிடம் தமக்குப் பால் தந்தவரையே முதலில் வைத்து உருகிப் பாடினார். இன்னும் திருநாவுக்கரசரும்,

> "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்
> உடன் தோன்றினராய்"

என்றும், மற்றொரு பதிகத்தில்,

> "தாயவன் காண் உலகிற்குத்
> தன்னொப்பிலாத தத்துவன் காண்"

என்றும் பாடிப் பாடி மகிழ்கின்றார். ஏன்? சுந்தரமூர்த்திசுவாமிகளும்,

> 'அன்னே! உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே'

என்று திருமழபாடியில் வீற்றிருக்கும் இறைவனை வேண்டுகின்றார். இவ்வாறு தாயான தத்துவமாகவே இறைவழிபாடு மனித உள்ளத்தில் எழுந்திருக்கிறது. "பேசரிய உயிரை எல்லாம் பெரும்போகம் சுவை அளித்து ஆக அகலும் அடியர் உள்ளத்து அப்பனுடன்" இருக்கும் அன்னையைக் கண்டு தொழாத கவிஞன் இல்லை. கசிந்து பாடாத பக்தன் இல்லை.

ஆதியில் உண்டு உடுத்து உறங்கக் கற்றுக்கொண்ட மனிதனது வாழ்வு, அவைகளில் மட்டும் நிறைவு பெறவில்லை. இன்ப உணர்வுக்கு ஏங்கித் தேடியலைந்த மனிதன், ஓங்கி உயர்ந்த மலையைக் கண்டு அதனுடைய அழகையும், தோற்றத்தையும் பார்த்து ரசித்தான். அகன்று பரந்த கடலைக் கண்டு,அந்தக் கடலில் விளையும் முத்தையும் பவளத்தையும் பார்த்து, அந்தக் கடல் அலைகள் எழுப்பும் இன்னிசையில் ஈடுபட்டான். முன்னமேயே இறைவனைத் தாய்மை உருவிற் கண்டு தொழக் கற்ற இந்த மனிதன் மலையையும் அலையையும் உருவகப்படுத்தி, மலைமகளாக, அலைமகளாக அந்த அன்னையை நினைத்திருக்கின்றான். இந்த மலைமூலமாக, அலைமூலமாக ஆரம்பித்த சக்திவழிபாடு, அவன் உள்ளத்தில் எழுந்த அழகுணர்ச்சி காரணமாக அந்த அன்னையையே உலகுக்கு அன்போடு அறிவையும் நல்கும் நல்ல கலைமகளாகவும் உருவகப்படுத்தியிருக்கின்றது. இப்படித்தான் மலைமகள், அலைமகள், கலைமகளாக அவன் எண்ணத்திலே சக்தி தோன்றியிருக்கின்றாள். மூவரையும் ஒருவராகக் காண முயன்று முத்தொழிலுக்கும் அடிகோலும்பராசக்தியைஎண்ணிஅவன் வழிபட்டான்.

"மூவர்க்கும முதற் பொருளாய்
முத்தொழிற்கும் விததாகி
நாவிற்கும மனததிற்கும்
நாடறியப பேரறிவாய்
தேவர்ககும் முனிவாக்கும்
சிததர்ககும நாகர்க்கும்
யாவர்க்கும தாயாகும்
எழிற்பரையை வணங்குவாம"

என்ற பாடல் அதனுலேயே எழுந்தது. இந்தப் பராசக்தியாம் அன்னை தான் எண்ணற்ற திருப்பெயர்களோடு, எழில் நிறைந்த எத்தனையோ உருவங்களில், தமிழ்நாட்டில் உள்ள கோவில்களில் எழுந்தருளி அருள் புரிகின்ருள். மதுரையில் மீனுட்சியர்கவும், ஆனைக்காவில் அகிலாண்ட நாயகியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும, காசியில விசாலாட்சி யாகவும் அழைக்கப்படும் அன்னையை நாமும் வழிபட்டு உய்வோமாக.

நாவிற்கு ருசியான மிகச் சிறநத

சுவையான சைவ உணவுகள்

ஆரியபவான்

சுத்தமான நெய்யினுல் தயாரிக்கப்பட்ட
இனிப்புப் பலகாரங்கள், காரங்கள்,
எம்மிடம் கிடைக்கும்
ஆடர்களும் உடன் கவனிக்கப்படும்.

ஆரியபவான்

புறக்கோட்டைப் பகுதியில் எனறும் மறக்கமுடியாத
சுவையான சிற்றுணடிகளுக்குப் புகழ்பெற்ற இடம்.

ஆரியபவான்

79, இரண்டாம குறுககுத்தெரு,
கொழும்பு-11
போன்: 2410




## தேவார வகுப்பு

1965ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வருவது. ஆசிரியர் சம்பளம் உதவுபவர் சிவபுண்ணியச் செல்வரும், பிரபல வர்த்தகப் பிரமுகருமாகிய திரு. க. சி. நடராசா அவர். அன்னாரின் பரோபகாரம் மிக மிக வியந்து பாராட்டுதற்குரியது,




**தற்போதைய (1967) பரிபாலன மன்றத்தினர்**

அமர்ந்திருப்பவர்கள்: (இடமிருந்து) திருமதி வி. பாக்கியம், திருவாளர்கள் அ. நாகலிங்கம் (துணைத் தலைவர்), ஆ. முருகேசு (தனதிகாரி), ச. சபாபதி (தலைவர்), பிரமஸ்ரீ க. ரா. ஹரிஹர சாஸ்திரிகள், பிரமஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் (பொன்விழா மலர் ஆசிரியர்).

நிற்பவர்கள்: (இடமிருந்து) திருவாளர்கள் மு. வைத்தியலிங்கம் (துணைத் தலைவர்), சோ. அம்பலவாணர், வை. சுந்தரமூர்த்தி, மு. ஆ. கந்தையா, சு. இராசசேகரம் J. P., அ. தேவராசா (உப செயலாளர்), அ. சிவபாதம் (செயலாளர்).

NOW AVAILABLE

PLASTIC WALL TILES

IN A RANGE OF PASTEL SHADES

C. V. BHATT

No. 45, Dam St, Colombo-12

*For All Your Requirements In*

★ Building Materials
★ 'Grundig' Radios
★ 'Miltone' Musical [Instruments Etc.,

VISIT

St. Anthony's Hardware Stores Ltd.,

516, SKINNER'S ROAD SOUTH,
COLOMBO - 10

*For all your Requirements*

*In*

* GENERAL HARDWARE
* WATER SERVICE
* BATHROOM FITTINGS
* ESTATE SUPPLIES
* DRAINAGE
* ABYSSINIAN PUMPS

and

*BOLTS and NUTS*

Please Contact

**Malayan Trading Company**

14, QUARRY ROAD,

**Colombo - 12**

T' Phone: 78013　　T' Grams: MALAYAN

ஆய்ந்து ஆராய்ந்து பார்க்கும்

மக்கள் எப்பொழுதும்

**பெட்டா பார்மஸி லிமிடெட்,**

**23, டாம் வீதி, கொழும்பு.**

என்ற விலாசத்தாரிடமே

தேவையான

சிறந்தரக - சுததமான - புததம்புதிய

**மருந்துகளையும் ரசாயனப் பொருட்களையும்**

**பெறச் செல்லுவார்கள்**

தேர்ச்சிபெற்ற மருந்து கலப்பாளர்களால், உங்கள் டாக்டர்கள் வழங்கும் அனுபான சீட்டுக்கு இசைய மருந்து கலக்கிக் கொடுக்கப்படும்.

FOR

**The Ultimate In**

**PRINTING**

**The**

**Kumaran Press**

201, Dam Street,

COLOMBO - 12

Phone: 2085

With Best compliments From

**The Indo-Ceylon**

**Textile CO.**

142, Second Cross Street,

COLOMBO-11

**Aluminium,**

**Brass and ropes**

**Materials are**

Cheaply aviable at

**S. K. CHELLIAH**

No 2, Dam, Street,

COLOMBO

With the best Compliments

from

A. THIRUNAVUKKARASU

49, Wolfendhal Street,

**COLOMBO - 13**

*With the best compliments*

*from*

**INTERNATIONAL IMPORT & EXPORT Co.**

No. 5, CONSISTORY BUILDINGS,
Front Street,
PETTAH, COLOMBO.

*MANUFACTURERS OF GILETS CONFECTIONERY*

BE WISE
INVEST IN A

**CELINS FAN**

**CELINS** - GUARANTEE YOUR SATISFACTION

**Siedles Cineradio,**

9, CONSISTORY BLDG.
FRONT STREET, COLOMBO-11

# சிவநெறி

அருள் மொழி அரசு, அமுத மொழிக் கொண்டல்,
திருமுருக. கிருபானந்தவாரியார்.
சென்னை.

உலகம் பலவிதம் என்பது பழமொழி. இதற்கு என்ன பொருள்? உலகம் பலவிதம் என்று பதச்சேதஞ் செய்து, உலகம் பலவிதமாக இருக்கின்றது என்று பொருள் செய்கின்றார்கள். அது அத்துணைச் சிறந்த பொருளன்று; ஏன்? உலகம் ஒருவிதமாகத்தானே இருக்கிறது? மக்களைப் பெறுவது பெண்கள்தானே? உண்பதும் உறங்குவதும் ஒன்றுபோலத் தானே? பல விதம் இல்லை யல்லவா?

உலகு அம்பலவிதம் என்று பதச்சேதஞ் செய்தல் வேண்டும். அம்பலத்திலே இறைவன் ஆடுகின்றான். உலகம் இனிது நடைபெறுகின்றது.

கண்ணாடியில் தெரிகின்ற நிழலை அசைக்கும் பொருட்டுத் தான் அசைவது போல், அகில உலகங்களும் அசையும் பொருட்டு இறைவன் அசைகின்றான்.

இவ்வாறு இறைவன் ஆடத் தொடங்கிய காலம் எது என்று ஆராய்வோருக்கு அறிவுரை கூறுவார்போலச் சேக்கிழார் பெருமானார்,

> "மாதொரு பாகம் நோக்கி மன்னுசிற் றம்பலத்தே
> ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத்தாடும்
> நாதனார்..... ........."

என்கின்றார்.

இறைவனுடைய ஆனந்தக் கூத்துக்கு ஆரம்பமும் இல்லை; அந்தமும் இல்லை. அத் திருநடனத்தால், ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐம் பெருந் தொழில்களும் நடைபெறுகின்றன.

நம்முடைய இதய கமலத்திலேயுள்ள தகராகாயத்திலே ஒரு அசைவு நடைபெறுகின்றது. அதனால் இந்த உடம்பு அசைகின்றது. இதயத்தின் உள்ளசைவு இல்லையானால் உடம்பு அசையாது. அசையாத உடம்பை நான்குபேர் சேர்ந்து அசைத்துவிடுவார்கள்.

இவ்வாறு உயிர்கள் தோறும் நின்று அசைந்து அசைக்கின்ற பொருள் சிவம் எனப்படும். சிவம் இல்லையானால் சவம் எனப்படும்.

சிவம் என்பது மங்கலம் எனப்படும். சிவத்துடன் தொடர்புடையது சைவம்.

தில—எள். திலத்தின் தொடர்புடையது தைலம்.
சிலா—கல். சிலாவின் தொடர்புடையது சைலம்.
சிவ—மங்கலம். சிவசம்பந்தமுடையது சைவம். இதனை உணர்ந்தவன் சைவன்.

''நின்றதுவும் சரிப்பதுவும் சைவமே யாய்"

என்பார் திருஞானசம்பந்தர்.

சிவம் பேரொளிப் பிழம்பாகத் திகழ்கின்றது. ஒளி மேல்நோக்குந் தன்மையது. அதனால் அக்கினி மேல்நோக்கி எரிகின்றது.

மேல்நோக்கித் திகழ்வது சிவ சோதி.
அதைச் சூழ்ந்துள்ளது அருட் சோதி.
அது ஆன்ம சோதியில் தங்கியுள்ளது.

இந்த மூன்றும் ஒன்று சேர்ந்த ஒரு அருள் அமைப்பே சிவலிங்கம்.

சிவலிங்கத்தின் மேல்நோக்கிய வடிவம் சிவசோதி. அதனைச் சூழ்ந்து ஆன்மாவையே நோக்கியுள்ள ஒன்று அருட்சோதி. அடியில் உள்ள வட்டமான வடிவம் ஆன்மசோதி.

''சோதியுட் சோதியுட் சோதி"

என்று அருட்பிரகாச வள்ளலார் பாடுகின்றார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே

என்பது திருமந்திரம்.

பிரமன், திருமால், உருத்திரன், மகேச்சுவரன் இந்த நால்வரும் உருவத் திருமேனியினர்.

சிவம், சக்தி, நாதம், விந்து இந்த நான்கும் அருவத் திருமேனிகள்.

சதாசிவம் என்ற சிவலிங்கம் அருவுருவத் திருமேனியாகும்.

இந்த ''நவந்தரு பேதங்கொண்டு நடிப்பவன் நாதன்தானே'' என்று சிவஞான சித்தியார் கூறுகின்றது.

ஆதலால் சிவலிங்க வழிபாடு செய்வது இன்றியமையாதது. சிவலிங்கத்தை வழிபட்டோர் எல்லா நலன்களும் எளிதிற் பெறுவார்கள்.

சிவபூசைக்குச் சிறந்த சாதனங்கள் திருநீறு, உருத்திராட்சம், ஐந்தெழுத்து.

கறுப்பு என்ருல் யாருக்கும் வெறுப்பாக இருக்கும். வெண்மையான ஒரு பொருளை நெருப்பில் இட்டால் கரியாகிவிடும். கரிய சாணத்தை நெருப்பில் இட்டால் வெண்மையாகின்றது.

எனவே, திருநீறு அணிந்தால் உள்ளம் வெண்மையாகப் பால் போல் மாசற்றுத் திகழும். திருநீற்றை முறைப்படி ஐந்தெழுத்தோதியணிவாரை நோயும், பேயும் தீண்டமாட்டா.

திருநீறு தரித்துச் சிவபூசை செய்யாதார் ஏன் பிறந்தார்? என்று வினவுகின்ருர் அதிவீரராம பாண்டியர்.

> **சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்**
> **தவநிலையாஞ் சைவநெறி சாரார்—அவனிதனில்**
> **கான்பரந்த பச்சைக் களாநிழலைக் கைதொழார்**
> **ஏன்பிறந்தார் மானிடராய் இன்று.**

உமையம்மையார், காஞ்சி முதலிய திருத்தலங்களிற் சிவலிங்க வழிபாடு செய்தார். விநாயகர் சிவபூசை செய்த தலம் திருச்செங்காட்டங்குடி. முருகவேள் வழிபட்ட தலம் திருமுருகன் பூண்டி. திருமால் சிவபூசை செய்து சக்கராயுதம் பெற்ருர்; அத்தலம் திருவீழிமிழலை. பிரமா வழிபட்ட தலம் பிரமபுரம். இந்திரன் மதுரையில் வழிபட்டான். முத்தரும், சித்தரும், முனிவர்களும், இமையவர்களும் இப்பூதலத்தில் வந்து சிவலிங்கத் திருமேனியை அருச்சித்து அருள்பெற்ருர்கள்.

மைந்தனுகிய அபிமன்யு மாண்ட அன்றிரவுகூட அர்ச்சுனன் சிவபூசை செய்தான் என்று மகாபாரதம் கூறுகின்றது. இராமர் சிவபூசை செய்தார் கிருஷ்ணர் சிவபூசை செய்து வழிபட்டார். இராமேஸ்வரமும், சோமநாதமும் சான்று பகர்கின்றன.

ஐந்தெழுந்தை ஓதுவார் உள்ளத்தில் ஞான ஒளி வீசும்; ஓதாதார் உள்ளம் மருண்டு இருண்டு பாழ்படும்.

> **"..................................................அரன்**
> **அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்**
> **நெஞ்சம் என்ன இருண்டது நீண்டவான்"**

என்கின்ருர் சேக்கிழாரடிகள்.

சிவா சிவா என்பார் காலன் வயப்படார். பிராணவாயு வாசி எனப்படும்

அது பன்னிரு அங்குலம் வெளிப்படுகின்றது. எட்டு அங்குலந்தான் உள்ளே புகுகின்றது. ஆதாயம் எட்டு. விரயம் பன்னிரண்டு

வா. சி. வா—எட்டு அங்குலம். சி—நான்கு அங்குலம்.

வாசி வந்து நான்கு அங்குலம் விரயமாகின்றது. பன்னிரு அங்குலமும் உள்ளே செல்ல வேண்டுமாயின் சிவா என்று செல்லும்.

"விட்ட எழுத்தை விடாத எழுத்தால்
கட்ட வல்லார் காலனைக் கட்ட வல்லாரே"

என்கின்றார் திருமூலர்.

விட்ட எழுத்து சிகாரம்; விடாத எழுத்து வகர ஆகாரம். வாசி என்று வந்து, சிவா என்று திரும்புதல் வேண்டும்.

**ஐந்து உறுதிப் பொருள்கள்:**

கிருஷ்ணன் என்ற சொல்லுக்குக் கரியவன் என்று பொருள் கூறுபவர் பலர். அது சிறந்த பொருளாகாது.

கிருஷ்—தோண்டுவது. ஆகுபெயராக நிலத்தைக் குறிக்கின்றது. ந—நலம்.

எனவே, கிருஷ்—நிலம்; ந—நலம். நிலத்துக்கு நலம் செய்கிறவர் கிருஷ்ணர். துவாபரயுக முடிவிலே கிருஷ்ணவதாரம் நிகழ்ந்தது. கிருஷ்ணர் பூபாரந் தீர்த்து, பன்னிரு சோதிலிங்கங்களுள் ஒன்றான சோமநாதத்தை வழிபட்டு, மேல்கடலின் அருகில் இரண்ய நதிக் கரையில் ஒரு அரச மரத்தின்கீழ் சிவயோகத்து அமர்ந்தார். பகவான் வந்த வேலையை முடித்துக்கொண்டு புறப்படுகின்றார் என்பதையறிந்த முனிவரர்கள், ஆன்றோர்கள் அனைவரும் திரண்டு, கிருஷ்ணரை வணங்கி, "எம்பெருமானே! நீர் இப்போது வைகுண்டம் போகின்றீர்; இனி வரும் செம்மையில்லாத, வெம்மையான கலியுகத்தில் நாங்கள் எவ்வாறு உய்வு பெறுவோம்? நாங்கள் கடைத்தேறும் வழியாது? அருள் செய்யும்" என்று வேண்டி நின்றார்கள்.

அப்போது கிருஷ்ணமூர்த்தி, முனிகணங்களைப் பார்த்துத் தமது கடைசி உபதேசமாகக் கூறியருளினார். "முனிவர்களே! நீங்கள் ஏன் அறிவில்லாதவர்களைப்போலப் பெரிதும் அல்லற் படுகின்றீர்கள்? கருணையுடன் கொன்றையையும், பிறைமதியையும் தலையிற் சூடிய சிவபெருமானுடைய பாதமலர் உண்டு; அப்பாத மலரை அர்ச்சிக்க மலர் உண்டு; திருமஞ்சனம் புரியக் குளிர்ந்த நீர் உண்டு; வேத இதயமாகிய திருவைந்தெழுத்துண்டு; ஐந்தெழுத்தோதி அணியத் திருநீறு உண்டு. இந்த ஐந்து பொருள்களும் உங்கட்கு 'அரண் புரியும்' அஞ்சன்மின்" என்று அருளிச் செய்தார்.

திங்களங் கண்ணிப் புத்தேள் சேவடிக் கமலமுண்டு;
கொங்கவிழ் மலருமுண்டு; குளிர்தரு புனலுமுண்டு;
தங்கும் அஞ்செழுத்து முண்டு; தவளவெண்ணீறு முண்டு;
வெங்கலிக் குடைவதென்னை வெளிற்றறி வுடைய ரேபோல்?

ஆதலால், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பஞ்சாக்கரம் ஓதி, வெண்ணீறு பூசிச் சிவவழிபாடு செய்வோர் கலிக்கு அஞ்சவேண்டியதில்லை.

யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கின்ற நிமலன் சிவலிங்கத் திருமேனியில் விளங்கித் தோன்றுகின்றான். பசுவின் உடம்பெங்கும் பால் பரவி நின்றாலும் மடியில் அப் பால் வெளிப்படுமாறுபோல என்றுணர்க.

எல்லா உயிர்களிலும் இறைவன் பாலிற் படுநெய்போல் மறைய நின்றுளான். அப் பரமபதியை நினைந்து நினைந்து, நெக்கு நெக்கு உருகி வழிபடும் அடியாரது திருவுள்ளத்தில், கடைந்த தயிரில் வெண்ணெய்போல் விமலன் வெளிப்பட்டு நிற்பன். அதனால் ஆலயங்களையும், அடியாரையும் அரனாகவே வணங்குதல் வேண்டும்.

"மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்கின்றது சிவஞான போதம்.

திருக்கோயிலிற் சென்று இறைவனைக் கண்டவர் முத்தி கண்டவராவார்.

பண்டனைப் பண்டனையோது பெம்மானைப் பனிவரைகோ
தண்டனைத் தனைடனைத் தண்டனைச்செய்யுமுத் தண்டனைமு
தண்டனை யண்டர்தொழுந் திருமாற்பே றமர்ந்தமணி
கண்டனைக் கண்டனை யாயின்நெஞ்சே முத்திகண்டனையே.

ஆதலால், மனிதப் பிறவியை எடுத்த நாம் அனைவரும் அவநெறியிற் செல்லாது, சிவநெறியைக் கடைப்பிடித்து, திருக்கோயில் வழிபாடு, பாராயணம், ஜெபம், தியானம், மனவொடுக்கம் முதலிய சாதனங்களைச் செய்து உய்வு பெறுவோமாக.

**எதிர்பாருங்கள்.**

**வித்துவான் எவ். எக்ஸ். ஸி. நடராசா அவர்களால் எழுதப்பெற்ற**

**'காரைநகர் மான்மியம்' என்னும்**

ஆராய்ச்சி நூல் வெளிவரவிருக்கிறது.

வெளியிடுபவர்கள்:

**காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர்.**

# அப்பர் வாக்கில் மிளிரும் அத்துவிதக் கொள்கைகள்

திரு. க. இராமச்சந்திரன்.
சமயமஞ்சரி (ஆங்கிலம்) ஆசிரியர், ஜயந்திபுரம், தலங்கமம்.

'அத்துவிதம்' என்ற பதத்தைக் கேட்டதுமே மாயாவாதப் போரில் இறங்கும் சைவசித்தாந்தப் புலவர்கள் சிலர் இன்னும் உளர். எனவே, இக் கட்டுரையின் தலையங்கம் அச்சிலர்க்கு மயக்கங் கொடுக்கக் கூடும். நமது புத்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களை மனத்தினுற் சிந்திக் கும்போது, அல்லது வாக்கினுல் வாதிக்கும்போது, பேதங்கள் எழவே செய்யும். ஆனுல், உண்மையில் துவிதத்திற்கும் அத்துவிதத்திற்குமிடையே யுள்ள வித்தியாசம் மிகச்சிறிது. சுவாநுபூதியில் அறிந்துகொள்ள வேண்டிய உண்மை அது. பிரம்மவாதிகளான அத்துவித மார்க்கத்தி னரை மாயாவாதிகளென்று அழைப்பது தவருகும். அந்தப் பெயர் சாங்கியர்கட்கே ஒரு காலத்திற் பொருத்தமாய் இருந்திருக்கலாம்.

பதினேழாம், பதினெட்டாம் நூற்ருண்டுகளில் வாழ்ந்த தனித் தமிழ்ச் சைவப்புலவர்களும், சித்தாந்த சரபங்களும், வாய்வேதாந்திகளும் மாயாவாதப் போரிற் பெரிதும் ஈடுபட்டு வீண்காலங் கழித்தனர். சாத னையில்லாச் சாஸ்திரப் படிப்பால் நேர்ந்த இழுக்கு அது. இந்தச் சந் தர்ப்பத்தில், தாயுமானவர் தோன்றி, எளிய இனிய நடையில், உள் ளத்தை உருக்கும் தோத்திரப் பாடல்கள் மூலம் தம்முடைய அநுபவக் கருத்துக்களை விளக்கி, வேதாந்த—சித்தாந்த சமரசப் பாலம் அமைத் தனர். வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர் கணத்தைச் சேர்ந்த திருமூலர் மரபில்வந்த மௌனகுருவே, அவரது உப தேச குருவென்பதை இங்கு வாசகர்கட்கு நினைவூட்ட விரும்புகின்றோம். அதுமாத்திரமன்றிக் குருமரபின் வணக்கப் பாடல்களில்,

"பொய்கண்டார் காணுப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ"

என்று அத்துவித நெறிக்கு எடுத்துக்காட்டாகச் சிவஞானபோத ஆசிரிய ரைப் போற்றியிருக்கும் அற்புதமுறையும் நமது நினைவில் இருக்கவேண் டிய விஷயமாகும்.

முத்தியானது, பரமுத்தி அபரமுத்தியென இருவகைப்படும். இந்த இரண்டனுள் முந்தியதையே மோக்ஷம் அல்லது வீடு என அழைக்கின்றோம். ஜீவாத்ம—பரமாத்ம ஐக்கிய மென்பதும் அதுவே. ''இறைவனே! உன்னி

டம் பக்தி எனக்கிருந்தாற் போதும்; மோக்ஷம் வேண்டாம்; உன்னுடன் இரண்டறக் கலக்கும் அத்துவித நிலையும் எனக்கு வேண்டாம்'' எனக்கூறும் பக்தர்களும் பரமுத்தியடையும் நாள் வந்தேதீரும். இந்த உண்மையைத் தாயுமான மஹரிஷிகள், தாம் அருளிய ''வேதமுடனுகம புராண மிதிகாசமுதல்'' என்னும் பாடலில் மிகவும் அருமையாக விளக்கியுள்ளார். அப்பாடலில் வரும், ''ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தையுண்டுபணும் ஞானமாகும்'', ''உன்னை நானென்று பாவிக்கின் அத்துவித மார்க்கமுறலாம்'' என்ற இருவரிகளை உற்றுநோக்குக. முக்கண்ணுடைய முதல்வனை வழிபடுமாறு வற்புறுத்தும் 'திரியம்பக' மந்திரமானது வெள்ளரிப்பழத்தைத் திருஷ்டாந்தமாகக் கொண்டு நிரூபிப்பது இந்தவித அத்துவித மோக்ஷத்தையேயாம்.

''உலகத் தோற்றத்தை நம்பாதீர்கள். அது உண்மையன்று'' என்பது அத்துவித சித்தாந்த அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று. இந்தக் கருத்தடங்கிய பாடல்களை அப்பர் தேவாரங்களில், முக்கியமாகத் திருத்தாண்டகங்களில், அதிகமாகக் காணலாம். சைவர்களின் உதட்டில் சதா வந்துகொண்டிருக்கும்,

> ''தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
> தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
> வந்தவா றெங்ஙனே போமா றேதோ
> மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டாம்''

என வரும் திருத்தாண்டகத்தை உதாரணத்திற் கெடுக்கலாம்.

''ஒன்றான பரம்பொருளே எல்லாமாய்த் தோன்றுகிறது'' என்பது அத்துவித சித்தாந்தத்தின் பிறிதோர் முக்கிய கொள்கை. இதற்கும் அனேகசான்றுகள் அப்பர் பாடல்களில் உள. ''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே, உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே'' எனவும், ''எல்லா உலகமுமானாய் நீயே'' எனவும் ஆரம்பிக்கும் திருவையாற்றுத் திருத்தாண்டகங்கள் நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

''பரம்பொருளானது ஞானரூபமாயும் ஞானத்தால் ஏற்படும் முத்தியாகவும் இருக்கிறது'' என்பது அத்துவித உபதேசம். இதற்கு ஈடும் இணையுமற்ற உதாரணம்,

> ''உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
> மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
> இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
> கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே''

எனவரும் தனித்திருநேரிசை விருத்தம்.

இறுதியாக, ஜீவப்—பிரம்ம ஐக்கிய சித்தாந்தத்தை எடுத்தாராய்வோம். ''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி'' என்ற திருத்தாண்ட

கத்தின் மூன்றும் வரியில், ''பிறருருவுந் தம்முருவுந்தாமேயாகி'' என இக்கொள்கை வற்புறுத்தப்பட்டுள்ளது. பிறிதோர் திருத்தாண்டகத்தில் நாவுக்கரசர் இக்கருத்தை ''அளக்கலாகாத் தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும் ஆகின்ற தன்மையனை'' என மேலும் வற்புறுத்தியுள்ளார்.

சோபான மார்க்கமாகக் கருதப்படும் பழைய சுத்தசைவ நெறியின், முதற்படியான சரியையைத் தமது வாழ்க்கையாலும் வாக்காலும் விளக்க அவதரித்தவராகப் போற்றப்படும் அப்பர் சுவாமிகள், இறுதிப்படியான ஞான மார்க்கத்திற்கு ஏறிய வரலாற்றினை அவரது சொந்தப் பாடலினாலேயே விபரித்து இக் கட்டுரையை முடிக்கின்றோம்.

''ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாலுனை நானுந் தொழுவனே''.

(5 ஆந் திருமுறை; தனித் திருக்குறுந்தொகை)

உ

தற்கால நாகரிகத்திற் கேற்ற நாகரிகமான
எல்லாப் புடைவை ரகங்களும்,
மிகச்சிறந்த உயர்ரக நூலால் தயாரித்த
கைத்தறிச் சாறி வகைகளும்,
இந்தியன் பிறிண்டெட் வயில் சாறிகளும்,
இலங்கை பட்டர் நைலோன், சற்றின் நைலோன்
வகைகளும்,
இன்னும் பல வகைகளும்,
ஆண்களுக்கேற்ற சூட்டிங் சேட்டிங்
வகைகளும்,
குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கையின் விசேஷ ஸ்தாபனம்
செல்லமுத்தாஸ்
130, இரண்டாங் குறுக்குத்தெரு, கொழும்பு.

# இறைவனும் ஆன்மாவும் ஒன்ரு? வேரு?

ஸ்ரீ. கி. லக்ஷ்மணன் M. A.
அத்தியட்சகர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

இந்து சமயத்திலே பல உட்பிரிவுகள் உள. அவற்றுள் முக்கியமானவை யாவும் இறைவன் ஒருவன் உளன்; ஆன்மா என ஒன்றுண்டு என்ற இரு அடிப்படை உண்மைகளை ஒப்புக்கொள்வன. இறைவனுக்கும் ஆன்மாவுக்குமிடையிலுள்ள தொடர்பு எத்தகையது என்பதற்கு அவ்வுட்பிரிவுகள் அளிக்கும் விடைகளிலேதான் அப்பிரிவுகளுக்கிடையேயுள்ள வித்தியாசம் முழுவதும் தங்கியுள்ளது.

பொதுவாக இறைவனும் ஆன்மாவும் வேருகக் கருதப்படினும் அடிப்படையில் இறைவனும் ஆன்மாவும் ஒன்றே என்பது ஒரு சாரார் கொள்கை. இவர்களது கொள்கைப்படி அடிப்படையிலுள்ளது ஆக ஒரேயொரு ஆன்மா மட்டுமே. அதுவே பரம்பொருள். அதுவே பரமாத்மா. அந்தப் பரமாத்மாவே மாயை காரணமாகக் கட்டுண்ட நிலையில் பல ஜீவாத்மாக்களாகக் காணப்படுகின்றது. அடிப்படையில் உள்ளது ஆக ஒரேயொரு ஆன்மா மட்டுமே என வாதிப்பதனுல் இவர்களுக்கு ஏகான்ம வாதிகள் என்ற பெயர் ஏற்படலாயிற்று (ஏகம் = ஒன்று). ஒரு ஆன்மா பல ஆன்மாக்களாகக் காணப்படுவதற்கு மாயைதான் காரணம் என மாயைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற காரணத்தால் இவர்களுக்கு மாயாவாதிகள் என்ற பெயரும் உண்டாயிற்று. பரம்பொருளும் ஆன்மாவும் அடிப்படையில் இரு வெவ்வேறு பொருள்களல்ல என வாதிப்பதனுல் இவர்களுடைய கொள்கையைக் குறிப்பதற்கு இரண்டல்ல என்ற கருத்தையுடைய அத்வைதம் என்னும் சம்ஸ்கிருத பதமும் வழங்கலாயிற்று. பரம்பொருளுக்கும் ஆன்மாவுக்கும் அடிப்படையில் வித்தியாசம் அதாவது பேதம் எதுவும் கிடையாது என வாதிப்பதனுல் இவர்கள் அபேத (அ + பேத = பேதமில்லை) வாதிகள் என்ற பெயரையும் பெறலாயினர்.

மேலே கூறியவற்ருல் ஏகான்மவாதம், மாயாவாதம், அத்வைதவாதம், அபேதவாதம் ஆகிய நான்கும் குறிப்பது ஏறத்தாழ ஒரு கொள்கையையே என்பதும் இக்கொள்கையினரின் கருத்துப்படி இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் அடிப்படையிலே பேதம் எதுவும் கிடையாது என்பதும் புலனுகும்.

மேலே கூறிய அபேதவாதிகளுக்கு நேர்மாருன கொள்கையையுடையவர்கள் பேதவாதிகள் (பேதம் = வித்தியாசம்). அபேதவாதிகள் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் அடிப்படையில் வித்தியாசம் எதுவுமில்லை என வாதிப்பவர்களாக, அவர்களுக்கு நேர்மாருன பேதவாதிகளோ

கட்டுண்ட நிலையாகிய பெத்த நிலையில் மட்டுமன்றிக் கட்டற்ற நிலையாகிய முத்தி நிலையிற்கூட இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் வித்தியாசமுண்டு என வாதிப்பர். எனவே, இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் பேதம் கிடையாது என வாதிக்கும் அபேதவாதிகளை ஒரு கோடியிலும், பேதமே நிறைய வுள்ளது என வாதிக்கும் பேதவாதிகளை மறுகோடியிலும் காண்கிறோம். அபேதவாதிகளுக்கு அத்துவைதிகள் என வேறொரு பெயரும் உண்டு என்பதையும், அப்பெயர் ஏற்பட்ட காரணத்தையும் மேலே விளக்கினோம். அபேதவாதிகளை அத்துவைதிகள் எனக் குறிப்பிடுவதுபோலப் பேதவாதி களைத் துவைதிகள் (அடிப்படையிலும் உள்ள பொருள் இரண்டேயன்றி ஒன்றன்று என வாதிப்போர்) எனக் குறிப்பிடும் வழக்கமும் உண்டு.

கடும் அபேதவாதம், கடும் பேதவாதம் ஆகிய இரண்டுமே தீவிர மான கொள்கைகள். இந்த இரண்டையும் ஏற்காது இந்த இரண்டுக்கும் நடுவில் நிற்பவர்களே இந்துக்களுட் பெரும்பாலோர். அவர்கள் ஓரளவு பேதம், ஓரளவு அபேதம் ஆகிய இரண்டையுமே ஏற்றுக்கொள்ளுகின்ற காரணத்தால் அவர்களுடைய கொள்கை பேதாபேதம் எனப்படும். அதைப்போலவே துவைதம் அத்வைதம் ஆகிய இரண்டையும் ஒவ்வோ ரளவு ஏற்றுக்கொள்ளுகின்ற காரணத்தால் இக்கொள்கையைத் துவை தாத்வைதம் என்ற பெயராலும் குறிப்பிடலாம்.

இறைவனுக்கும் ஆன்மாவுக்குமிடையிலுள்ள தொடர்பை யொட்டி இந்துக்கள் அனைவரையும் அபேதம், பேதம், பேதாபேதம் ஆகிய இம்மூன்று பிரிவுள் அடக்கிவிடலாம்.

சங்கரரும் அவரைப் பின்பற்றுவோரும் அபேதவாதிகளுள் முதன் மையானவர். வேதாந்திகள் எனக் குறிப்பிடப்படுவோரும் இவர்களே. மத்துவரும் அவரைப் பின்பற்றுவோரும் தீவிரமான பேதவாதிகள். இவர்கள் இருவருக்கும் நடுவில் நின்று நடுநிலை வகிப்போருள் முக்கியமான வர்களே சைவசித்தாந்திகள். சைவசித்தாந்திகள் பேதாபேதவாதிகள். எனினும் பேதாபேதிகளுக்குச் சிறந்த பிரதிநிதியாகக் கொள்ளத்தக்கவர் நிம்பார்க்கர் எனப்படுபவரே யாவர். நிம்பார்க்கர் என்பவர் பிரமசூத்திரத் துக்கு வியாக்கியானம் எழுதியவர்களுள் ஒருவர். இவர் ஆந்திர நாட்டிலே பிறந்தவர். சங்கரரை ஒரு கோடியிலும் மத்துவரை மறுகோடியிலும் நிறுத்தி னால் நிம்பார்க்கரைச் சரிநடுவில் நிறுத்தலாம். ஏனையோருள் பேதத்தைவிட அபேதத்துக்குச் சற்று அதிக இடம் கொடுப்போரைச் சங்கரருக்கும் நிம்பார்க் கருக்குமிடையிலும், அபேதத்தைவிடப் பேதத்துக்குச் சற்று அதிக இட மளிப்போரை மத்துவருக்கும் நிம்பார்க்கருக்குமிடையிலும் நிறுத்தலாம்.

இங்கு நாம் கருத்திலிருத்த வேண்டிய விஷயமொன்றுண்டு. அபேதம் என்னும்போது நூற்றுக்கு நூறுவீதம் அபேத மெனவோ, அதைப்போலவே பேதம் என்னும்போது நூற்றுக்கு நூறு வீதம் பேத

மெனவோ கொள்ளலாகாது. அபேதத்தில் சிறிதளவு பேதத்துக்கும், பேதத்தில் சிறிதளவு அபேதத்துக்கும் இடமுண்டு. இவ்வாறு நோக்கினுல் சங்கரர் முதல் மத்துவர்வரை எல்லாருமே பேதாபேதவாதிகளாகிவிடு வர். எனினும், அபேதத்தை வற்புறுத்துவோரை அபேதவாதிகளெனவும், பேதத்தை வற்புறுத்துவோரைப் பேதவாதிகளெனவும் குறிப்பிடுவதே மரபு. சங்கரர் கொள்கையை 90 வீதம் அபேதம், 10 வீதம் பேதம் எனக் கொண்டால், மத்துவர் கொள்கை 90 வீதம் பேதமும் 10 வீதம் அபேதமு மாகும்.இடையிலுள்ள பேதாபேதிகள் அனைவரையும் அபேதத்துக்கு 50 வீத இடமும்.பேதத்துக்கு 50 வீதம் இடமும் கொடுப்பவராகக் கொள்ளலாகாது. நிம்பார்க்கரை மட்டுமே அவ்வாறு கொள்ளலாம். ஏனைய பேதாபேத வாதிகளனைவரும் அபேதத்துக்கும் பேதத்துக்கும் வெவ்வேறு வீதத்தில் முக்கியத்துவம் கொடுப்பவராவர். இங்கு கொடுத்த புள்ளி வீத உதா ரணங்கள் யாவும் விஷயத்தை விளக்கும்பொருட்டுக் கையாளப்பட்ட வையேயன்றி வேறல்ல.

அபேதவாதி, பேதவாதி, பேதாபேதவாதி ஆகிய மூவரும் தத்தம் கொள்கைகளை நிலைநாட்டும்பொருட்டுக் கூறும் காரணங்கள், அக் கொள்கைகளுக்கு எதிராக ஏனையோர் எழுப்பும் தடைகளுக்கு அவர் கள் கொடுக்கும் விடைகள், ஏனையோர் கொள்கைகளுக்கு மாருக ஒவ் வொருவரும் எழுப்பும் தடைகள் ஆகிய மூன்றின் விளக்கமும் விரிவுமே இந்திய தத்துவசாத்திரம், சமயசாத்திரம் ஆகியவற்றின் பெரும்பகுதி.

இத்தொடர்பிலே இன்னெரு குறிப்பை மட்டும் கூறி இக் கட் டுரையை முடித்துக்கொள்வோம். இம்மூன்று கொள்கைகளுக்குமேற்ப முத்தியைப் பற்றிய கருத்து, முத்தியை அடைதற்குரிய வழி ஆகியனவும் வேறுபடும். உதாரணமாக, முத்திக்குரிய வழியை எடுத்துக்கொள்ளின் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் அடிப்படையில் ஒன்றே என்ற அபேதவாதத் திலே பக்திமார்க்கத்துக்கு அதிக இடமில்லை. உள்ள பொருள் ஒன்றே யாகலின் தான் தன்னிடமே பக்தி செலுத்துவது போன்ற நிலைமை ஏற் படும். தனது உண்மை நிலையை அறிந்து கொள்வதற்கேற்ற ஞானமே அங்கு முக்கிய இடம் பெறும்.

பேதவாதத்திலே நிலைமை முற்றிலும் வேருனதாகும். இறைவனும் ஆன்மாவும் ஒன்றன்று என்ற கொள்கையையுடைய பேதவாதத்திலே இறைவனிடத்திலே பக்தி செலுத்துவதே முத்திக்குச் சிறந்த மார்க்க மாகும். இந்த மூன்று கொள்கைகளின் விளைவுகளும் எவ்வாறு வேறுபடு மென்பதைப் புலப்படுத்த இந்த உதாரணம் ஒன்றுமே போதும்.

# "வினையினீங்கி விளங்கியவறிவின் முனைவன் ......................"

—தொல்காப்பியம்

நவாலியூர் திரு. சோ. இளமுருகனார்
[தலைவர், தமிழ்ப்பாதுகாப்புக் கழகம்.]

மேலே கண்ட தொடர்மொழி, மிகப்பழைய நூலாகிய தொல்காப்பியப் பொருளதிகாரத்து மரபியலிலே 649ஆம் நூற்பாவில் உள்ளது. முதனூல் இதுவென்று கூறவந்த ஆசிரியர் தொல்காப்பியனார், '**வினையினீங்கி விளங்கிய அறிவின் — முனைவன் கண்டது முதனூலாகும்.**' என்று அந்நூற்கு வரம்பு செய்தருளினார். அத்தொடர்மொழியில் வரும் வினையென்றது, உயிர்கள் செய்யும் நல்வினையுந் தீவினையுமாகிய இருவகை வினைகளை. வினையின் என்பதிலுள்ள இன்னுருபு நீக்கப் பொருள் தந்தது. [1] விளங்கிய அறிவென்றது, முனைவனிடத்து விளங்கும் இயற்கையுணர்வை. இன் சாரியை. அறிவின் முனைவன் என்றது, பிறிதொன்றின் துணை வேண்டாது எல்லாவற்றையும் தானே முழுமையில் உணரும் இயற்கையுணர்வுடைய முனைவனை. முனையென்பதுமுன். முனைவன் [2] முன்னோன். முன்னோன் என்றது, செம்பொருட் சிவத்தினை யென்க.

"**முன்னோன் காண்க—முழுதோன் காண்க**", என்றார் மணிவாசகப் பெருமானும்.

இத் தொடர்மொழி ஐந்து சொல்லாலாயது. வினையின்—நீங்கி—விளங்கிய—அறிவின்—முனைவன் என்று பகுத்துக் கொள்க. எனவே, நல்வினை தீவினை என்னும் இருவகை வினைகளினின்றும் இயல்பாகவே நீங்கிப் பிறிதொன்றின் துணைவேண்டாது, எல்லாவற்றையும் தானே முழுமையில் உணரும் அறிவினையுடைய செம்பொருட் சிவம் என்று பொழிப்புரைக்க.

கற்றாரும் கல்லாதவரும் வழங்கும் வழக்கு மிகுதி நோக்கி வினைகள் என்று பொதுப்படக் கூறினார். எனினும், வினைகட்கு ஏதுவாகிய ஆணவமலமும், அவ்வினைகளை நுகர்ந்து கழித்தற்கும், புதிய வினைகளைச் செய்து அம்மலத்தின் வலிமையை நீக்குதற்கும், அம்முகத்தான் [3] மெய்யுணர்வு பெற்றுப் பிறப்பறுத்தற்கும் ஏற்ற கருவிகளாகிய [4] உடம்பும் உலகமும்

---

1. விளங்கிய அறிவு—வாலறிவு. வாலறிவன் என்பதற்கு மணக்குடவர், "விளங்கிய அறிவினை யுடையவன்" என்று உரைத்தார். வான்மை — தூய்மை. வாலாமை— தூய்மையின்மை. 2. "மங்கையோர் பாகன் முன்னோன் மகேச்சுரன் வாமதேவன்"— என்பது சூடாமணி நிகண்டு.

3. எக்காலத்தும் எவ்விடத்தும் அழியாது நிற்கும் பொருள் இதுவெனவுணர்தல்.

4. உடம்பு உலகம் நுகர்பொருள்—தனு புவன போகங்கள். உடம்பு கூறவே உட்கருவிகளு மடங்கும்.

நுகர்பொருள்களுந் தோன்றுதற்குக் காரணமாகிய மாயையும் கூறுமலே அமையும் என்க.

வினையொன்றின் காரியமாதலின் காரணமின்றி நிகழாது. ஆதலின், வினையை யுண்டாக்கியது, உயிர்களும் முனைவனும் அல்லாத பிறிதொரு பொருளாதல் வேண்டும். அப்பொருளே ஆணவம் என்பது. ஆகவே ஆணவம், வினை, மாயை என்னும் முப்பொருளுண்மையும் ஆசிரியர் தொல்காப்பியனார்க்கு உடன்பாடாயிற்று.

வினையைச் சித்தாந்த நூல்களிற் கன்மம் என்பர். கருமம் கன்மம் எனத்திரிந்தது. தருமம் தன்மம் ஆனாற் போலக் கொள்க. மாயை என்பது மாயா வென்னும் வடசொற்றிரிபு. அது, தத்துவங்கள் தன்னில் ஒடுங்குதற்கும், மீளவுந் தன்னினின்று தோன்றுதற்குங் காரணமான பொருள். உயிர்களை அணுத்தன்மைப் படுத்தியமையால் மலம் ஆணவம் எனப்பட்டது. ஆணவத்தை இருளென்றும், இருண்மலமென்றும் தமிழ்நூல்கள் கூறும். அப் பொருள் உயிர்களிடத்து இயல்பாயுள்ள [5]அறிவு விழைவு செயல் என்பவற்றைத் தொழிற்படவிடாது மறைப்பது. ஆகவே, முன்னோன், ஆணவம், இருவகைவினைகள், மாயை என்பன உயிர்களுடன் பிணிப்புண்ட பொருள்களாம்.

என்று இத்துணையுங் கூறியவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு நூற்பாவடியிற் பொதிந்த பொருளை ஆராய்வாம்.

[6]சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்குதல் நூற்பாவின் இலக்கணமாதலின், அதற்கமைய மேற்போந்த தொடரிலே [7] சித்தாந்த சைவத்திற் கூறப்படும் அடிப்படைப் பொருண்மைகள் அமைந்து கிடக்கின்றன. அவற்றை இங்கே காண்போம்.

1. **'வினையினீங்கி'**—என்றதனால், இயல்பாகவே, வினையின் நீங்கிய பொருள் முனைவனாகிய சிவம் என்பதும்,
2. இயல்பாகவே வினையின் நீங்காப் பொருள்கள் மன்னுயிர்கள் என்பதும்,
3. நீங்காமைக்குக் காரணம் மும்மலத்தடை யென்பதும், [அஃதாவது, வினையாகிய காரியத்தைச் சொல்லவே, அதன் காரணமாகிய ஆணவமும், அவ்வினை நுகர்ச்சிக்குரிய உடம்பு உலகம் முதலியன தோன்றும் மாயையும் [8]மும்மலத் தடைகளாம்]

---

5. அறிவு விழைவு செயல்—ஞானம் இச்சை கிரியைகள்.
6. சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்—நன்னூல் 18
7. சைவசமயம்
8. ஆணவம், கன்மம், மாயை.

4. அத்தடை நீங்கவே, உயிர்கள் மெய்யுணர்வு தலைப்பட்டுச் சிவ மாந் தன்மையடையும் என்பதும்,

5. மெய்யுணர்வையுஞ் [9] சிவப்பேற்றையும் கொடுக்கவல்லது, **வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவனாகிய** சிவமென்பதும்,

6. அச்சிவமே முனைவன் எனப்படும் முதற்பொருள் என்பதும், அதிலமைந்த பொருண்மைகளாம்.

இவைகளைக் கருத்தூன்றி ஆராயும்வழிப் பதி, பசு, பாசம் என்று சித்தாந்த சைவத்திற் கூறப்படும் முப்பொருள்களின் உண்மையும், அவற்றின் இயைபுகளும் இனிது புலனாகும்.

இனி, முனைவன் எனப்படுஞ் சிவம் பேரறிவுப் பொருளென்று முன்னே கண்டோம். அஃது அறிவிக்காது அறியும் பொருள். மன்னுயிர்கள் அறிவிக்க அறியும் பொருள்கள் மாயை அறிவித்தாலும் அறியாப் பொருள். அறிவுப்பொருள் சித்து. அறிவில்பொருள் சடம். இம்மூன்று பொருள்களும் உள்பொருள்கள். உள்பொருள்கள் சத்தெனப்படும். உள் பொருளுக்குத் தோற்றம் இல்லை. இல்லையாகவே அதற்கு முடிவும் இல்லை. இனிச் சிவமொன்றே யுள்பொருள், ஏனையிரண்டும் அச்சிவத்தால் ஆக்கப்பட்ட பொருள்கள் என்பாருளராலோவெனின், அற்றன்று. உயிர்களும் மாயையும் சிவத்தால் உண்டாக்கப்பட்ட பொருள்களல்ல. சிவங் குறைவிலா நிறைவுப் பொருள். அவருக்கு வேண்டப்படும் பொருள் ஒன்றும் இல்லை. இல்லையாகவே, அவையிரண்டும் வேண்டாப் பொருள்களாம், ஆதலினாற் சிவம் அவற்றைப் படைக்கவில்லை. அற்றாக, உயிர்கள் அம்மாயையைப் படைத்தனவோ வெனின், அதுவும் பொருந்தாது. அவைகள் அம்மாயையின் துணையாலே சிற்றறிவும் சிறுதொழிலும் பெறுகின்றனவாதலின், அம்மாயையைப் படைக்கு மாற்றல் இல்லாதனவாம்.

திருவருள், மாயையைக் கலக்கித் தொழிற்படுத்தி, உடம்பு உலகம்,நுகர் பொருள் என்பனவற்றைப் படைத்து.அவ்வுயிர்களுடன் சேர்த்துத் தானும் உடனின்று இயக்கியவழியே அவைகட்குஅறிவுவிளக்கமும் தொழிற்பாடும் உண்டாகும். அதற்கு முன்னர் அறியாமையைத்தரும் ஆணவத்தினாற் பிணிப்புண்டு, அறிவு முதலிய உயிர்க்குணங்களை யிழந்து, [10] கேவல நிலையிற்கிடந்த அவை, மாயையைப் படைக்குமாறு இல்லையென்க. இனி, அம் மாயை யுயிர்களைப் படைக்குமோ வெனில், அஃது அறிவில் பொருளாதலின் அதற்குப் படைக்குமாற்றல் இல்லையென்பது.

ஆதலினால், மாயையையும் உயிர்களையும் கடந்து, அவைகளைத் தனக்குள்ளே அடக்கித் தான் பிறிதொன்றிலும் அடங்காது நிற்கும் முழு

9 வீட்டின்பம்

10. தனிநிலை. கேவலம்— தனிமை

முதற்சிவமே, மன்னுயிர்கள்மேல் வைத்த வற்ருப் பேரருட்டிறத்தால், அம் மாயையினின்றும் உடம்பு உலகம் முதலியவற்றைத் தோற்றுவித்து, அவைகளை அவற்ருேடு இசைவித்தாரென்க.

ஆகவே, சிவமும் உயிர்களும் மாயையும் ஆகிய முப்பொருள்களும் தொடக்கமும் முடிபும் இல்லாத உள்பொருள்களென்பதூஉம், அச் சிவமே அவ்விருபொருள்களையும் இயக்கிவருகின்ற முன்ஞேன் என்பதூஉந் துணியப்படும்.

இனி, வினைகள் உண்டாதற்குக் காரணமாயிருந்த [11] ஆணவமுந் தொடக்கமில்லாத பொருள். தொடக்கம் இல்லையாகவே அதற்கு முடிவுமில்லை. அல்லதூஉம், உயிர்கள் தொடக்கமில்லாதன வாதலால், அவற்றைப் பிணித்துக் கொண்ட ஆணவமுந் தொடக்கமில்லாததாகல் வேண்டும். ஆணவம் அறிவில் பொருள். அதுதாஞகச் சென்று உயிர்களைப் பற்ற மாட்டாது. உயிர்கள் தாமாகவே அத்தீய பொருளைச் சேர்ந்திருக்க மாட்டா. ஆணவம் இடையிலே சேர்ந்த பொருளாயின், அஃது இடையிலே விட்டு நீங்கவேண்டும். இடையிடை நீங்குவது அதன் குணமாஞல், வீடு பேற்றிலும் உயிர்களைப்பற்றிக் கொள்ளவேண்டும். வீடுபேற்றில் அது பற்ருமையிஞலும், இடையே விடுதற்கும் இடையே தொடுதற்கும் காரணம் இல்லாமையாலும், இடையிலே விட்டதற்கும் தொட்டதற்கும் [12] உரையளவை காணப்படாமையாலும் அது பொருந்தாது. அல்லதூஉம், அருட்கடலாகிய அச்சிவமும் அத்தீய பொருளை உயிர்களுடன் சேர்த்திருக்கவும் மாட்டார். ஆதலின் அஃது உயிர்களிற் பண்டு தொட்டே செம்பிற் களிம்பு போலக் கலந்து கொண்டது. [13] அதனை அத்துவிதக் கலப்பென்பர் அஃதாவது, பொருளால் இரண்டும், தன்மையால் ஒன்றுமாயுள்ள நிலை.

இனிச் செம்பிலே களிம்பு அநாதியாய் ஒன்ருய் உடஞயிருப்பது. செம்பிற் களிம்பு கலந்தமைக்குக் காரணம் இல்லாதது போலவே, உயிர்களில் ஆணவங் கலந்தமைக்கும் காரணம் இல்லை. சுருங்கச் சொல்லுங்கால் தொடக்கமில்லாத உயிர்களிடத்திலே தொடக்கமில்லாத ஆணவம் தொடக்கமில்லாத காலந்தொட்டே கலந்து கொண்டது எனலாம்.

ஆணவத்தின்குணம் அறியாமை. அவ்வறியாமைபற்றி யானென மதிக்குஞ் செருக்கெழுகின்றது. அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும்

11. அறியாமை, மயக்கம், அவிச்சை, அவித்தை என்பன அதன் வேறு பெயர்கள்.

12. ஆகமப்பிரமாணம்

13. "ஆணவத்தோடத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத் தாஞவிஞேடத்துவித மாகுநாளெந்நாளோ"—தாயுமானவர். ஆணவ அத்துவிதத்தால் உயிர்கள் சிவத்தையறியா. சிவத்துடன் ஒன்றுபடும் அத்துவிதத்தால் உயிர்கள் விடுதலையடைந்து பேரின்பத்தை நுகரும். முந்தியது இருளுடன் கலந்தநிலை. பிந்தியது ஒளியுடன் கலந்த நிலை. இரண்டும் அத்துவிதங்கள்:

அவா எழுகின்றது. அதுபற்றி அப்பொருட்கட் செல்லும் ஆசையெழுகின்றது. அதுபற்றி அதன் மறுதலைக்கட் செல்லும் வெகுளி எழுகின்றதென்பர் பரிமேலழகர். [14] இவ்வைந்து குணங்களையும் காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்றில் அடக்கிக் கூறுவர் திருவள்ளுவர்.

ஆணவத்துக்குத் தொடக்கமில்லை யாகவே, அதனால் வந்த இருவினைகளுக்குந் தொடக்கமில்லையாகும். இனி, அவ்வினையில் ஒரு பிறவியின் நுகர்ச்சிக்கென்று அளந்து கொடுத்தது நுகர்வினையாகும். அதனை நுகரும் வழி யான் எனது என்னும் பற்றுடைமையாற் செய்யப்படுவது புதுவினையாகும். நுகர்ச்சிக்கு அளந்து கொண்டது போக எஞ்சிக் கிடப்பது இருப்புவினையாகும். இவற்றைச் சித்தாந்த சைவநூல்கள் முறையே பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என்று கூறும். இங்கே கூறிய வினைகளினின்றும் சிவம் இயல்பாகவே நீங்கியதை உணர்த்தவே ஆசிரியர் '**வினையின் நீங்கிய**' என்றார்.

இனி, இவ்வினைகளை நுகர்ந்து கழித்தற்குக் கொடுக்கப்பட்ட உடம்பு உலகம் முதலியவற்றின் துணையால் உயிர்களிடத்து அறிவுவிளக்கமுண்டாகும். வினைகளின் அளவுக்கு ஏற்பவே அறிவும் விளக்கமுறும். அஃது [15] ஏக தேசப்பட்டு நிகழ்தலினாற் சிற்றறிவேயாகுமன்றி, முழுமையிலுணரும் முற்றறிவாக மாட்டாது. அச்சிற்றறிவும், உடல்முதலிய கருவிகளோடு நின்றறியினும், சிவத்தின் துணையாலன்றி நிகழா தென்க.

படலத்தால் மூடுண்ட கண்ணானது ஞாயிற்றின் முன்னிலையில் நிற்பினும், அஃது ஒளியையிழந்து இருளிலே அழுந்துவது போல, ஆணவமலத்தால் மூடுண்ட உயிர்கள் சிவத்தின் முன்னிலையிற் றொடக்கமில்லாக் காலந் தொட்டு நிற்பினும், படிமுறையாக அறிவிக்க அறியும் இயல்புடையனவாம். முழுமையில் அறியமுடியாதன. ஏனெனில், மலத்தின் குணமாகிய அறியாமையில் அழுந்திக்கிடத்தலா லென்பது. மும்மலமும் நீங்கிச் சிவமாய வழியே முற்றுணர்வைப் பெறும்.

இனித் தனிநிலை எனப்படும் கேவலத்தில் உயிர்கட்கு ஆணவம் அறியாமையைச் செய்யுமென்று மேலே கண்டோம். அதுவே அதன் சிறப்பியல்பு. கேவலம் என்ற வடசொற்குத் தனிமை என்பது பொருள். புணர்நிலை எனப்படுஞ் சகலத்திற் கருவிகளோடு நின்று திரிபுணர்ச்சியை உண்டாக்கும். அதுவே அதன் பொதுவியல்பு. [16] அருணிலை எனப்படுஞ் சுத்தத்

14. திருக்குறள்—மெய்யுணர்தல் 10

15: ஒருபுடை சிவத்துக்கும் உயிருக்கும் வியாபகம் எனப்படும் எங்கும் நிறைவுத் தன்மையுண்டு. மலப்பிணிப்பினால் உயிர் அதனையிழந்து அணுத்தன்மைப்படலாயிற்று. ஆதலின் அது பற்றிய பொருளின் அளவுக்கு நிறைவுத் தன்மையைக் கொள்ளும். ஒருடம்பைப்பற்றி நிற்குங்கால் ஒவ்வொரு பொறியையே பற்றி நிற்கும்.

16. அருணிலையை நீக்க நிலையெனினுமொக்கும்.

தில் அறியாமையையும் திரிபுணர்ச்சியையும் செய்யும் வலிமையற்றுப் போக. அதனுல் அதன் பிணிப்பு உயிரினின்றும் நீங்கிவிடும். மாசுண்டகண்ணுனது, மாசுநீங்கியவழி ஞாயிற்றின் ஒளியை இனிது காண்டல் போல, உயிர்களும் மலமாசு நீங்கியவழிச் சிவத்தின் அருளொளியைக் காணும். இங்ஙனம் உயிர்கள் சிவமாந்தன்மை பெய்தும். எங்ஙனமெனில் உயிர்கள் சிவத்துக்குரிய எண்குணங்களையும் பெற்றுச் சிவமாகின்றன.[17] இதுவும் அத்துவிதம் எனப்படும்.

ஆகவே, தனிநிலையிலும் புணர்நிலையிலும் ஆணவமும், அதனுல் வந்தவினைகளும், அவற்றை நுகர்தற் கமைந்த உடம்பு உலகம் முதலிய மாயைப் பொருள்களும், உயிர்களைப் பிணித்துநிற்கும்[18] மும்மலக்கட்டுக்களாம். இக்கட்டுக்கள் பாசம் எனப்படும். பாசம், தளை, கட்டு என்பன ஒருபொருட் சொற்கள். இப்பாசத்தாற் கட்டுப்பட்டிருத்தலினுல், உயிர்கள் பசு வெனப்படும். அம்மலக் கட்டுடைமையினுல், உயிர்கள் தம்வயமில்லாதன வாயின.

சிவத்துக்கு அம் மும்மலக்கட்டு இல்லாமையால், தனிநிலை, புணர்நிலை, நீக்கநிலை என்பன இல்லையாம். இல்லையாகவே, சிவம் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவர்ஆயினுர். உயிர்களுக்கு அக்கட்டுக்களை நீக்கிப் பேரின்பப் பெருவாழ்வு வழங்க வேண்டியே, தமது பேரருட்டிறத்தாலும், பேரறிவுத்திறத்தாலும்[19] ஐந்தொழில்களையும் இடையீடின்றிச் செய்தருளுகின்றுர்.

எனவே, ஆசிரியர் தொல்காப்பியனுர் '**வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**", என்றுரைத்த தொடரின் பொருளாழமும் திட்பநுட்பமும் இப்பொழுது மிகவிளக்கம் பெறுகின்றன. சிவத்துக்குரிய குணங்கள் பலவாக '**விளங்கிய அறிவை**' விதந்துரைத்த காரணம் என்னையெனிற் கூறுதும்: முதனூல் செய்தற்கு விளங்கிய அறிவுடைமையே வேண்டப் படுமாதலின் என்க. அல்லதூஉம், முக்குண வயப்பட்டு மயங்கும் மக்கள் முதனூல் செய்தற்குத் தகுதியுடையரல்லரென்பதும், வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் செய்வதே முதனூலாகு மென்

17. மலக்கட்டு நீங்கிய நிலையில், உயிரும் சிவமும் வேறுவேருய் நிற்பதில்லை. உயிர்தான் வேறு சிவம் வேறு என்று கருதுவதில்லை. பொருளால் இரண்டாயும் தன்மையால் ஒன்ருயும் நின்று பேரின்பத்தை நுகரும். மலக்கட்டு நீங்காத நிலையில், மலமுந் தானும் வேறு வேறு பொருள்கள் என்றுணராது மலத்தின் வயப்பட்டு அதுவாய் நிற்கும். இரண்டும் அத்துவிதமாம்.

18. ஆணவம், கன்மம், மாயை.

19. உயிர்கட்குப் பேரின்பம் வழங்குதலைக் குறிக்கொண்ட சிவம், அதன்பொருட்டுத் தனிநிலையிலும் புணர்நிலையிலும் ஐந்தொழில்களையும் செய்தருளுகின்றுர். தனிநிலையில் நிகழ்வது நுண்மை ஐந்தொழில். புணர்நிலையில் நிகழ்வது. பருமை ஐந்தொழில். பேரருட்டிறத்தால் இடையறவின்றி ஐந்தொழில்களையுஞ் செய்தருளுவார்.

பதும் நூற்றுணிபாம் என்க. இனி, மலம், வினை, உலகம் என்னும் முப்பொருள்களுள் நடுவண் நின்ற வினையை எடுத்துக்கொண்டு, அதன் நிகழ்ச்சிக்குக் காரணமாகி முதலில் நின்ற மலத்தையும், அவ்வினைப்பயனை நுகர்ந்து கழித்தற்குக் கருவியாகி ஈற்றில்நின்ற வுலகத்தையும் உய்த்துணர வைத்ததிறம் போற்றற்பாலதாம். அல்லதூஉம் நூற்பாவின் இலக்கணமும் அதுவேயா மென்க.

இனி, இயல்பாகவே மலங்களினின்றும் நீங்குதல் சிவத்தின் குணமன்றோ! அங்ஙனமாயின், அவரைக் [20] குணமிலி என்று சான்றோர் வழங்குதல் அமையுமோவெனிற் கூறுதும்: குணம், மாயையின் குணமும், அதுவல்லாக் குணமும் என இருதிறப்படும். இராசதம் தாமதம் சாத்துவிகம் என்பன மாயையின் குணங்கள். மாயையினின்றுங் காரியப்பட்டுப் பிறந்த உடம்பு, உட்கருவிகள், உலகம், நுகர்பொருள்களிலே கட்டுண்டு கிடப்பன உயிர்களென்று அறிந்தாயன்றே; ஆதலின், அம்மூன்று குணமும் உயிர்களிடத்து நிகழ்வன. ஒன்றையொன்று மாறுபட்ட அம்முக்குணங்களும் பிறவிக்கு ஏதுவாவன. பிறவிக்குரியவை உயிர்களேயன்றிச் சிவமாகார். அவர் இம் மூன்று குணத்தையும் கடந்தவர். கடந்தமையினுலன்றோ அவர்க்குக் கடவுள் என்னும் அடிப்பட்ட பழஞ் சொல்லை ஆசிரியர் தொல்காப்பியனுர்,

> "[21]கொடிநிலை [22]வள்ளி [23] கந்தழியென்று
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" [24]

என்ற நூற்பாவிலமைத்துக் கூறுவாராயினர்.

இம்முக்குணங்களை மட்டுமன்றி அவையுட்பட்ட முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து நிற்பவர் என்பது அச்சொல்லின் பொருளாகும். கடவுட்குப் பகுதி 'கட' என்பது. விகுதி 'உள்' என்பது. கடத்தல் என்பது அதன் பொருள். செய்யுள் என்பதுபோலக் கொள்க. அது தொழிலாகு பெயராய்க் கடந்து நிற்கும் பொருளை யுணர்த்திற்று. அவ்வாறு கடந்து நிற்கும் பொருளே முனைவன்.

ஆசிரியர் தொல்காப்பியனுர் செம்பொருட் சிவத்தைக் கடவுள், முனைவன், தெய்வம் என்னும் பெயர்களால் வழங்குகின்றுர். எல்லாவற்றையுங் கடந்து நிற்றலிற் கடவுள் என்றுர், எல்லாவற்றுக்கும் முன்னுய் நிற்றலின் முனைவன் என்றுர். கடந்து முதலாகிய அறிவொளியும் அருளொளியுமாய் நிற்றலின் தெய்வம் என்றுர். தெய்வம் என்பது தீயென்னும் அடியிற்பிறந்து ஒளியுடைப்பொருளை யுணர்த்தும். அன்றியும் முனைவனின் வேறுகாத அருட்சத்தியை முருகன் என்றுங் கூறினுர். கடவுட்டன்மை, அழகு முதலிய பலகுணங்கள் உடையவர்முருகன்.

20. நிர்க்குணன் 21. ஞாயிறு 22. திங்கள் 23. தீப்பிழம்பு
24. பொருள்—புறத்திணையியல்—33

அங்ஙனமாயின், அச்சிவத்துக்குரிய குணங்கள் யாவையோவெனிற் கூறுதும்:- சிவத்துக்கு எண்குணங்களுண்டு. [25] எண்குணத்தான்', என்று வள்ளுவர் கூறியதுங் காண்க· அவ்வெண்குணங்களுள் இயல்பாகவே மலங்களினின்றும் நீங்கியகுணத்தை மேலே கண்டாயன்றோ! ஏனை ஏழுகுணங்களும் இவை:– i தன்வயத்தனுதல் ii. தூயவுடம்பினனுதல் iii. இயற்கையுணர்வினனுதல் iv. முற்றுமுணர்தல் v. பேரருளுடைமை vi. முடிவிலாற்றலுடைமை vii வரம்பிலின்பமுடைமை. இவ்வெட்டுக் குணமும் முனைவற்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாம்.

எண்ணிறந்த உயிர்கட்கு எண்ணிறந்த உடம்புகளையும், எண்ணிறந்த வுலகங்களையும், எண்ணிறந்த நுகர்பொருள்களையும், பிறவற்றையும் படைத்துங் காத்தும் ஒடுக்கியும் வருகின்ற முழுமுதற் பொருட்கு இக்குணங்கள் இல்லாக்கால், அத்தொழிற்பாடுகள் இனிது நிகழாவென்று உணர்ந்த அருட்சான்றோர் [26] அவற்றை உண்மை நூல்களிற் கூறுவாராயினர். நீங்கிய அவர்க்கே அவர் தன்மை புலனுகும்.

ஆகவே, சிவத்துக்குரிய எண்குணங்களும் மாயைக்கு அப்பாற்பட்டனவாய், அம்மாயையைக் காரியப்படுத்துவனவாய், முழுமுதலிறைமைக்கு இயைபுடையனவாய், எக்காலத்தும் அழியாத்தன்மையனவாய்த் தூயவறிவின் பெற்றியனவாய், உயிர்களின் விடுதலையின் பொருட்டே அமைந்தனவாய்த் திகழ்வன வென்றுணர்க.

அஃது அமையும், அவற்றின் இன்றியமையாமையை அறிதல் வேண்டுமெனின், நன்று கூறினை. மன்னுயிர்கள் செய்த இருவினைகளின் பயன்களாகிய இன்பதுன்பங்களை இனிது ஊட்டுவித்தற்கும், இரு [27] வினையொப்பும், [28] மலபரிபாகமும் அடைந்த நல்லுயிர்கட்குப் பேரின்பப் பெருவாழ்வை நல்குதற்கும், பிறர்வயப்படாது தானேயாய் நின்று நினைத்தாங்கு வினைமுடிக்கும் தன்வயமுடைமை வேண்டப்படுமன்றோ!

இன்னும், இதனைச் சிறிது கருத்தூன்றி நோக்கும்வழி, உலகத்தில் உள்பொருள் மூன்றென்று கண்டாயன்றே! அவற்றுட் சிவமொழிய நிற்கும் இரண்டனுள் மாயையைச் சிவங்கடந்து நிற்பதென்று மேலே யுரைத்தேம். அது பிறரொருவர் இயக்க இயங்குவதன்றித் தானே இயங்காச் சடம் ஆதலின், அத்ற்கு அச்சிவத்தை வயப்படுத்தும் ஆற்றல் யாண்

25. 'எட்டுவான குணத்தீசன்'—திருநாவுக்கரசர்
'இறைவனை மறையவனை யெண்குணத்தினனை'—சுந்தரர்.

36. வடமொழியில் நான்கு வேதமும், இருபத்தெட்டு ஆகமமும், தமிழ்மொழியிற் பன்னிரு திருமுறையும். பதினன்கு சாத்திரமுமாம்.

27. வினையொப்பாவது, ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமின்றிஉயிரறிவில் ஒப்ப வெறுப்பு நிகழ்தல். ஒப்புச்சம புத்தி பண்ணுதல்.

28. மலபரிபாகமாவது, ஆணவத்தின் ஆற்றல் உயிரறிவை மயக்கவியலாது வலி குன்றி நிற்றல்

டும் இல்லை. மற்று, மன்னுயிர்கள் மலத்தால் மூடுண்டு அறிவு விழைவு செயல்களின்றி, அதன்வயப்பட்டுக் கிடப்பன. பிறிதொன்றுக்கு வயப்பட்டுக்கிடப்பன சிவத்தை வயப்படுத்தும் ஆற்றல் உடையனவாகா. அவை சிவத்துக்கு முழுதடிமை. ஆதலின் சிவமொன்றே தானேயாய் நின்று அவ் விரண்டு பொருள்களையும் தன்வயப்படுத்தும் என்றறிக. சிவத்தைவயப் படுத்த வல்ல சிவத்தின் மேலான நான்காவது பொருள் யாண்டும் இல்லை. ஆகவே, அவ்விரண்டு பொருள்களையும் தன்வயப்படுத்தும் ஆற்றலானது, எல்லாவற்றுக்கும் முதலாயுள்ள சிவத்துக்கு இயல்பாகவே அமைந்தவாறு காண்க. ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய முனைவன் என்ற சொல்லின் பொருள் விளக்கம் இப்பொழுது நன்கு புலனாகு மென்க. [28] 'ஆதிபகவன்' [29] 'அந்த மாதி என்மனார் புலவர்' — [30] 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே' [31] 'முந்தாகி முன்னே முளைத்த வடி' — எனவரூஉம் அருண் மொழிகள் எல்லாம் முனைவன் என்னும் சொற்கு விளக்கந் தருதல் காண்க.

இனித் தன்வயமுடைமை முனைவற்கு வேண்டப்படவே, அதனை ஆளுதற்கு, எங்கும் நீக்கமற நிறைந்து, எல்லாவற்றையும் ஒரு சேரவறியும் தூயவுடம்பும் வேண்டப்படும். அதனை அறிவுரு வென்பர். அதனையே திருவள்ளுவர் [32] 'வாலறிவு' என்றும், மணிவாசகப்பெருமான். [33] 'அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவு', என்றும் கூறியருளினர்.

வாலறிவு என்றது, மாயைப் பொருள்தரும் அறிவுவிளக்கத்திற்கு அப்பாற்பட்டதாய் என்றும் ஒருபடித்தாய் நிற்கும் தூயஅறிவினை யென்க. நல்லறிவென்றது, மெய்யுணர்வாகிய நன்மையைப் பிறப்பிக்கும் [34] சிவஞானத்தை யென்க.

இனி, உயிர்களும் அறிவுடைப் பொருள்கள். முனைவனும் அறிவுடைப் பொருள். உயிர்கள் அறிவிக்க அறிவன. முனைவன் பிறர் அறிவிக்க அறியாது தானே முழுமையில் அறியும் பொருள். அறிவிக்க அறியும் பொருளாயின், அது தன்வயமுடைமைக்கு இழுக்காகும். ஆதலின், முனைவற்கு எல்லாவற்றையும அறியும் இயற்கை யுணர்வுடைமை வேண்டப்படும்.

இனி, முனைவன் மலப்பிணிப்பு இல்லாதிருப்பினும், மும்மலமும் நீங்கிய உயிரைப்போலச், சிற்றறிவுடையனாயின், ஐவகைத் தொழிலும் நிகழாவாதலின், முற்றுணர்தல் வேண்டப்படும். முற்றுணர்தல் மும்மலமும் நீங்கிய நல்லுயிர்களிடங் காணப்படுதல்போன்ற தொன்றெனில், இயற்கையுணர்வினன் என்பது அமையாது. ஆதலின் இயல்பாகவே மும்

28. திருக்குறள் 29. சிவஞானபோதம் 30: திருவாசகம் 31- தேவாரம்
32. கடவுள்வாழ்த்து 33. சிவபுராணம் 34. பாசஞான பசுஞானங்களால் அறியப்படாத பதிஞானம்.

மலங்களினின்றும் நீங்குதல் வேண்டப்படும். உயிர்கள் வீடுபேறு எய்திய வழி யுண்டாகும் முற்றுணர்தற்கும், இயற்கையுணர்வுடைமைக்கும் மல முண்மையும் இன்மையுமே காரணமாகும்.

இனி, முனைவன் மும்மலக்கட்டு இலனுயிருப்பினும். அருளுடை யனுயிருந்தாலன்றித் தனிநிலை. புணர்நிலை, அருணிலை எனப்படும் மூவகை நிலையிலும் உயிர்கட்கு அருள்செய்ய முடியாதாகலின், பேரருளுடைமை வேண்டப்படும். அருளுடையனுயினும், எண்ணிறந்த உயிர்களின் பொருட்டு, அவைதம் வினைக்கேற்பப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களை யும் ஓய்வின்றிச் செய்யவேண்டுதலின் முடிவிலாற்றல் வேண்டப்படும். விண் வெளியிலே இயங்கும் கோள்களையும் நாள்களையும் பிறவற்றையும் ஒரு கால் நோக்குவார்க்கு முனைவனது முடிவிலாற்றல் ஒரு நொடிப் பொழுதிற் புலப்படும்.

இனி, முடிவிலாற்றல் அமைந்திருப்பினும், உயிர்கட்கு வாரிவழங் குந்தோறும் குறைவிலா நிறையின்பம் பொருந்தியிருந்தாலன்றி, அவை கட்கு இன்பம் வழங்குதல் கூடாதாகலின், அதற்கு வரம்பிலின்பமுடை மையும் வேண்டப்படும். பிறப்பின் நோக்கமும் சிவத்தின் திருவுள்ளக் குறிப் பும் மன்னுயிர்களை அழியா வின்பிற்றிளைப்பித்தலே யாதலின் சிவத்துக்கு இக்குணம் இன்றியமையாததாயிற்று. ஏனைக்குணங்களின் நோக்கமும் பய னும் இந்தப் பேரின்பம் வழங்குதலிலே முடிவுறும்.

இன்னும், இதனைச் சிறிது நுணுகியாராய்வோம். சிவத்துக்குரிய [35] ஆற்றல் மூவகைப்படும். அவற்றுள் [36] விழைவாற்றல். உயிர்கட்குப் பேரின்பம் வழங்கவேண்டுமென்று கருணையால் விரும்பாநிற்கும். [37] அறி வாற்றல், அவ்விழைவுக்கு ஏற்றவாறு வேண்டப் படுவனவற்றை அறியா நிற்கும். [38] செயலாற்றல். விரும்பியறிந்தனவற்றைச் செய்யாநிற்கும். இம் மூவகை ஆற்றலும் சிவத்தின் வேறாகாது அவரிடம் விளங்கும் குணங்க ளாம். இவற்றின் நோக்கமும் பயனும் உயிர்கட்குப் பேரின்பம் வழங்கு தலேயாம். என்பது இனிது போதரும்.

இனி, **'விளங்கிய அறிவின் முனைவன்'** என்று கூறுதலினுல், ஆற் றலும் முனைவனும் எனப்பொருள் ஒன்றோ இரண்டோ வெனிற் கூறுதும். ஆற்றலாவது, நெருப்பினிடஞ் சூடுபோல முனைவனிடம் பிரிவின்றி நிற்பது. அது முனைவனது குணமேயன்றிப் பிறிதில்லை. அது, தொழில் வேறுபாட் டால் வேறுவேறாக வைத்தெண்ணப்படினும், பொருளால் ஒன்றேயாம். நெருப்பின்சூடு அதனின் வேற்றுமைப்படாது, ஒற்றுமைப்பட்டு நிற்றல் போல, ஆற்றலும் முனைவனும் வேற்றுமைப்படாது ஒற்றுமைப்பட்டே நிற் கும். இஃது உணராதார் முனைவனும் ஆற்றலுமாகிய சிவமுஞ் சத்தியும்

35. சத்தி 36. இச்சாசத்தி
37. ஞானசத்தி 38. கிரியாசத்தி



31

இரண்டு பொருள்களென்று மயங்குவர்[39]. சிவஞானபோதம் முதலிய உண்மை நூல்களில் அங்ஙனம் வழங்கக் காணுமையால் அது பொருளுரை யாகாதெனவிடுக்க.

இனி, அம் மூவகை ஆற்றலும் [40]மறைப்பாற்றல் எனப்படும் திரோ தான சத்தியிலடங்கும். அது [41]பராசத்தியில் அடங்கும். அப்பராசத்தி உயிர் கட்கு அருள்செய்தலைக் குறித்துப் பொதுவகையில் அறிந்தும் அறிவித்தும் நிற்கும் தூய அறிவுவடிவாம். இதனையே ஆசிரியர் தொல்காப்பியனார், **'விளங்கிய அறிவின் முனைவன்'**, என்று குணத்தையுங் குணியையும் வேறு படுத்தாது கூறினரென்க. அப்பராசத்தி எனப்படும் அருளாற்றல் தொழில் வேற்றுமையால் ஐவகையவாயினும், உயிர்களைப் பிறவிதோறும் பக்குவப் படுத்தியும், பக்குவமெய்தியவழி முனைவனுடன் சேர்த்தும் விடுகின்ற அரு ளலையே செய்யும். செய்யினும், உயிர்கட்குப் பேரின்பத்தை வழங்குவது முனைவனே யென்க.

ஆகவே, உயிர்கள் பேரின்பம் அடைதலே பொருளாக, அதனை அடைவித்தற்குரிய முயற்சிகளெல்லாம் ஆற்றலின் தொழிலாகக் கொள் ளப்படும். படவே, வரம்பிலின்பமுடைமை, நோக்கமும் பயனுங் கருதிய வழி முனைவற்குரிய குணங்களுள் மிக மேம்பட்டு விளங்குதல் காண்க. அஃது போலப் பொதுவகையிற் பராசத்தியே பேரறிவாயும், சிவமே பேரின்ப மாயும் அமைந்தவாறும்

இனி, இவைதம்மை இன்னும் நுணுகி நோக்குமிடத்து, அவ் வெண் குணமும் [42]சத்து சித்து ஆனந்தம் என்னும் முக்குணங்களுள் அட கும். அஃது எங்ஙனமெனிற் கூறுதும். எக்காலத்தும் வேறுபடாது ஒருபடித் தாய் உள்ளபொருள் சத்தெனப்படும். ஆதலின் தன்வயமுடைமை சத்தி லடங்கும். வரம்பிலின்பமுடைமை ஆனந்தத்திலடங்கும். ஏனைய ஆறு குணமும் சித்தில் அடங்கும். சித்தென்பது அறிவுடைமை. ஆகவே சிவமும் உயிர்களும் சித்துப்பொருள்கள். உயிர்கள் அறிவிக்க அறிவனவாதலின், அவற்றின் சார்புநிலை நோக்கித் தூலசித்து என்றும் சூக்கும சித்து என்றும் கூறுவர். பிறிதொன்றின் துணையால் அறிவது தூலசித்தாம். அஃதாவது உடம்பு உட்கருவி முதலியவற்றின் சார்பால் உயிர்கள் அறிவைப் பெறுதல். இது [43]கட்டுநிலையிலமைந்த பெயர். [44]கட்டுநீங்கிய நிலையிற் றிருவருளின் துணையிருப்பினும், வேறுநில்லாமையால் உயிர்கள் சூக்கும சித்து எனப் படும். இந்நிலையைச் சிவத்துடன் சார்த்தி நோக்கச் சிவம் அதிசூக்கும

39. திருவாசகவிரிவுரை 40. திரோதானசத்தி. திரோதானம் – மறைப்பு.
41. அருளாற்றல்
42. சத்து–மெய்; சித்து–அறிவு; ஆனந்தம்–இன்பம், சச்சிதானந்தம் என்பதை உண்மையறிவின்பம் என்பர் தமிழ்நூலார்.
43. பெத்தநிலை 44. முத்திநிலை

சித்து எனப்படும். அஃதாவது யாதொரு பொருளின் சார்பும் வேண்டாது தானே எல்லாவற்றையும் முழுமையில் அறிந்து நிற்பது- ஆசிரியர் தொல் காப்பியனுர், **'விளங்கிய அறிவின் முனைவன்'**, என்றதும், திருவள்ளுவர், **வாலறிவன்'**, என்றதும், இளங்கோவடிகள் **'பிறவாயாக்கைப் பெரியோன்'**, என்றதும், இப்பொருண்மை நோக்கி யென்க.

எனவே, அச்சித்தில். அறிவுருவாய தூயவுடம்புடைமை, முற்றுணர்வுடைமை, இயல்பாகவே மலநீக்கமுடைமை, பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை என்னும் ஆறுகுணமும் அடங்குமென்றறிக. இயல்பாகவே மலநீக்கமுடைமை ஒருகுணமாயமைய, இயற்கையுணர்வுடைமை தானேபோதரும். போதரவே, முற்றுமுணர்தலும் அறிவுருவுடைமையும் தாமே அமையும். இந்நான்கு குணமும், **வினையின் நீங்கி விளங்கிய அறிவு'** என்னுந் தொடரில் அமைந்தவாறு இனிது புலனுகும்.

இனி, அறிவுருவுடைமை சிவத்தின் குணமாய் அமையவே, அதன் காரியப்பாட்டுக்கு நிலைக்களமான பேரருளுடைமையும், அதன் நோக்கம் முடிதற்கு வேண்டப்படும் முடிவிலாற்றலுடைமையும், சொல்லாமலே அமையுமென்க.

இனி, வினைகளினின்றும் இயல்பாகவே நீங்கிய முனைவன், வினைகளைச் செய்து வினைப்பயன்களோடு அழுந்திக்கிடக்கும் உயிர்கட்கு அவைகளை யூட்டுவித்தற்கும் வினையொப்பும் மலநீக்கமும் வந்தவழி, அவற்றை ஆட்கொண்டு வீட்டின்பம் நல்குதற்கும் தன்வயமுடைமையும், வரம்பிலின்பமுடைமையும், வேண்டப்படும்.

இவ்வாறு முனைவற்குரிய எண்குணங்களையும், பல்வகைப்பட்ட ஆற்றல்களையும் ஆராய்ந்து கூறுவது தத்துவ நூல்கட்கே இலக்கணமாதலின், ஆசிரியர் தொல்காப்பியனுர் அவற்றைத் தமது இயற்றமிழ் நூலில் விதந்து கூருது, வேண்டும் இடங்களில் மின்னுக் கீற்றுப்போலச் சிலசொல்லால் உணர்த்துவாராயினுர்.

நச்சினுர்க்கினியர் திருவடி வாழ்க

119 ஆம் பக்கத்தில் 14 ஆவது வரியில் நீங்கிய என்பதை மல்மாக நீங்கிய எனத் திருத்தி வாசிக்க.


# நவகல்யாணி ஆபரண மாளிகை

68 H, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர் :

**மு. இரத்தினசிங்கம்**

**சைவமகாசபை "பொன் விழாவிற்கு" எமது நல்லாசி**

# முன்னடைந்த முதல்வர்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான்,
சி. அருணைவடிவேலு முதலியார்.
தருமையாதீனம்.

உலகில் உள்ள சமயங்கள் எல்லாவற்றிலும் சைவசமயமே தலையாய சமயம் என்பது உயர்ந்தோர் பலர்க்கும் ஒத்தமுடிபு. யாதொரு சமயத்திலும் அதன்கண், 'ஆசிரியர்' எனப் போற்றப்படுபவர்களே அச்சமயத்தின் மேல்வரம்பினர் என்பது சமயிகள் பலர்க்கும் உடன்பாடு. எனவே, சைவ சமயத்திலும், 'ஆசிரியர்' எனப்போற்றப்படுபவர்களே அதன் மேல்வரம்பினர் என்பது தெளிவு.

'முதலாசிரியர், வழியாசிரியர்' எனச் சமயங்களில் விளங்கும் ஆசிரியர் இருதிறத்தினர். முதலாசிரியராவார், சமயத்தின் உண்மைகளையும் ஒழுக்க நெறிகளையும் முதற்கண் தக்கார்க்கு அறிவுறுத்தருளுபவர். அவரது அருளுரையைச் செவ்வையாக உணர்ந்து, அவ்வழித் தாமும் நின்று, பிறரையும் நிற்பிப்பவரே வழியாசிரியர். அவ்வகையில் சைவசமயத்தின் முதலாசிரியர் சிவபெருமானே. ஏனைய ஆசிரியர் பலரும் சைவசமயத்தின் வழியாசிரியரே.

முதற்கண் சிவபெருமானால் அறிவுறுத்தப்பட்டுப் பின்பு பன்னெடுங் காலமாக நல்லாசிரியர் பலரால் வழிவழியாக வளர்க்கப்பட்டுவந்த சைவ சமயம், ஒருகாலத்தில் அதற்குப் புறம்பானவர்களது ஆரவார உரைகளால் சிறிது ஒளி மழுங்கிநிற்க, மீளவும் அதனை முன்போலத் தழைத்தோங்கச் செய்தவர்கள், 'திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்' என்னும் நால்வர் பெருமக்களேயாவர். அதனால், சைவ சமயத்தின் வழிநிலை ஆசாரியர்களுள் அவர்களே முதன்மை பெற்று விளங்குகின்றனர். ஆகவே, அவர்களே சைவசமயத்தின் வரம்பாதல் வெளிப்படை.

சைவசமயாசாரியர் நால்வருள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்குத் தனிச்சிறப்புக்கள் பலவுள. அவற்றுள் தலையாயது, அவர் அவதரித்து இரண்டாண்டு சென்று மூன்றாவது ஆண்டு தொடங்குகின்ற அத்துணை இளமைக் காலத்திலே அவர் உவமையிலாக் கலைஞானத்தையும், உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் நிரம்பப் பெற்றுத் தாவில்தனிச் சிவஞானசம்பந்தராய் விளங்கினமையேயாம். இதனைச் சேக்கிழார். இந்நிகழ்ச்சி பற்றி வரும் வரலாற்றுப் பகுதியுள், சீகாழி அந்தணர்களது கூற்றில் வைத்து, வியந்தருளிச்செய்கின்றார்.

"புண்ணிய முதலே! புனைமணி அரைஞா ணொடுபோதும்
கண்ணிறை கதிரே! கலைவளர் மதியே! கவின்மேவும்
பண்ணியல் கதியே! பருவம தொருமூ வருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவ தருள்பெற் றனைஎன்பார்"

என்பது அவ்வரிய திருப்பாட்டு.

மூவாண்டிற்குள்ளே சிவஞானம் கைவரப்பெற்றதும், அதுவும் இறைவன் தானே அம்மையோடு உடனாகி எதிர்வந்து அருளப்பெற்றதும் அவ்வருள் ஞானம், அப்பொழுதே அரிய அழகிய செந்தமிழ்த் திருப்பாடல்களாய் வெளிப்போதத் தொடங்கியதும் எங்கும் என்றும் யாரும் கண்டும் கேட்டும் அறியாத அதியற்புதச் செயல்கள் என்பதை அவர்,அவர்கள் கூறுமாகவே, **"இப்படி யொப்பதொ ரற்புதம் எங்குளது"** என்று முன்னரே அருளிச்செய்தார்.

இவ்வாறும், மற்றும் பிறவாறும் இறைவன் ஆளுடைய பிள்ளையார்க்குச் சிறப்பு முறையில் அருள்புரிந்தது, ஆசிரியன்மார் பலருள்ளும் தலைமை நிலையை அவரிடத்து வைத்தற்பொருட்டேயாம். தலைமை நிலைக்கு உரியார் பலர் இருப்பினும் ஒருவரிடத்திற்றனே அதனை வைத்தல்கூடும்? அதனுள் அவ்வாறு வைக்கப்பெற்றவர் ஞானசம்பந்தர். ஆகவே, அவரே சைவசமயத்தின் முடிநிலை வரம்பினராகின்றார். அவர் மூவாண்டிலே சிவஞானம் கைவரப்பெற்று, தமிழ்நாடெங்கணும் சென்று நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பி வந்ததன்றிப் பிறிதொரு செயலை மேற்கொள்ளாமையையும், பதினாறுவதாண்டில் திருமணத்தை மேற்கொண்டும் காதலியைக் கைப்பற்றிய பின்பு ஒருகணமேனும் அவளோடு வாழக்கருதாது இறைவன் திருவடிநிழலை எய்தினமையையும் நோக்கின், ஆசிரியத் தன்மைக்குரியார் பலதிறத்தினருள் நைட்டிகப் பிரமச்சாரிகளே அதற்குப் பெரிதும் தகுதியுடையர் என்பதே சைவசமயத்தின் முடிபு என்பது இனிது விளங்கும். சந்தானாசாரியருள் முதல்வராகிய மெய்கண்டதேவரும் இளமையிலே சிவஞானச் செல்வராயினர் எனக் கூறப்பட்டுவருதலும் இங்கு நினைக்கற்பாலது.

இங்ஙனம் உலகியலிற் சிறிதும் தொடர்பு கொள்ளாது பிள்ளைமைப் பருவத்திற்றனே சிவஞானத்திற்கு உரியவராய் நிற்பவரை,**'கருவிலே திருவுடையார்'** என்றும், **'சாமுசித்தர்'** என்றும் உயர்த்துக் கூறுவர் அறிவுடையோர். எனினும், பிறவாற்றால் தலைமை எய்தினோரும் ஆசிரியரே யாவர் என்பதற்கு, 'நாவுக்கரசர் சுந்தரர், மாணிக்கவாசகர்' என்னும் இவர்களையும் இறைவன் ஆசிரியத் தன்மைபெற்று விளங்கச்செய்தான். அது **"நாவுக்கரசு என்று உலகேழினும் நின் நன்னாமம் நயப்புற மன்னுக"** என்றும், **"தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்"** என்றும், **"கோலமார்தரு பொதுவினில் வருக"** என்றும் அருள்புரிந்தவாற்றான் அறியப்படும்.

ஞானசம்பந்தர் தாம் அருளிச்செய்யும் திருப்பதிகங்களில் இறுதித் திருப்பாடலாகிய திருக்கடைக்காப்பினுள் தம்மைக் குறிப்பிடும் வகைகள்

பல்வற்றுள், தமக்குப் பிள்ளைமைப்பருவத்தே இறைவன் திருவருள் கிடைக்கப்பெற்ற பெறலரும் பேற்றினை ஓரிடத்தில் அவரே மகிழ்ந்தெடுத்தோதியருளுகின்றார். அத்திருப்பாடல் வருமாறு:

> தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானைத் தத்துவனைக்
> கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனை
> முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்தும் இவைவல்லார்
> பொன்னடைந்தார் போகங்கள் பலஅடைந்தார் புண்ணியரே.

இதனுள், ''முன்னடைந்தான் சம்பந்தன்'' என்பதற்கு, எல்லார்க்கும் முன்னே சிவத்தை அடைந்தவனாகிய 'சம்பந்தன்' எனப்பொருள் கொள்ளின், அவருக்குமுன்னே ஒருவரும் சிவத்தை அடைந்திலர்' என்பதாய் முடியும். அது பொருந்தாமையால் 'முதற்காலத்தே' அஃதாவது, 'மிக இளைய பருவத்திலே சிவத்தை அடைந்தவனாகிய சம்பந்தர்' என்ற பொருளையே அது தருவதாகின்றது. 'முன் என்பதற்கு, முற்பிறப்பிலே, தந்தையார் முன்னிலையில்' என்றாற்போல உரைப்பனவும் சிறப்பில்லாதனவேயாதல் விளங்கும். ஆகவே,

> "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
> இருங்கடல் வையத்து
> முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை
> முழுமணித் தரளங்கள்
> மன்னு காவிரி சூழ்தரு வலஞ்சுழி
> வாணனை வாயாரப்
> பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
> வழிபடு மதனாலே"

என்றாற்போல, பால்மணம் மாறாத பிள்ளைமைப் பருவத்தே தமக்கு இறைவன் எதிர்தோன்றி இன்னருள் புரிந்த சிறப்பினை நினைந்து மகிழ்ந்த இன்ப மேலீட்டால் எழுந்த தொடரே அதுவாயிற்று.

இன்பங்கள் பலவற்றினும் இறையின்பமே மேலான இன்பமாயின், அதனை மிக இளமைப் பருவத்தே எய்தப்பெறுதல் எத்துணைப் பெருஞ்சிறப்பு! எனவே, அதனைப் பெற்றவராகிய திருஞானசம்பந்தர்க்கு அதனை நினைக்குங்கால் எல்லையில்லா இன்பம் பெருகுதல் இயல்பேயன்றோ! திருவள்ளுவ நாயனாரும்,

> "வேண்டின் உண்டாகத் துறக்க; துறந்தபின்
> ஈண்டியற் பால பல"

என, இளமையிலே உலகப்பற்று விடுதலின் சிறப்பை இனிதெடுத்து இயம்புகின்றார்.

> "உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
> கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட"

என்று மணிவாசகமும் இதனை விளக்குகின்றது.

> "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
> சிறந்துநின் சேவடியேசேர்ந்தேன்"

என்று காரைக்காலம்மையார், தாம் இளமையிற்றானே இறைவனிடத்து

அன்பு செய்யப்பெற்றமையை அருளிச்செய்கின்றார்.

> "முன் இளங்காலத்திலே பற்றினேன்...........
> சரணாஉன் சரணங்களே"

என்று மூத்த பிள்ளையார்தம் முன்னின்று மொழிகின்றார் கபிலதேவ நாயனார். இன்னோரன்ன அருட்பெரு மொழிகளாலும், இளமையிலே இறையருளுக்கு உரியராதல் எத்துணை அரும்பெறற் பேறென்பது புலனாகும். அத்தகைய பேற்றினைப் பிறர் ஒருவரும் பெற்றில்லாத வகையிற் பெற்ற ஒருவரை முதல்வராகக் கொண்டுவிளங்குவது சைவசமயம் ஒன்றே எனின், அதன் அருமைபெருமைகளை ஆழ்ந்துணர்ந்து பயன்கொள்வது அறிஞர் கடனாகுமன்றோ!

> "இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேழையுடன்
> ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார்! — இன்றிங்கே
> அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவரார்!
> எங்குமிலை கண்டாய் இது"

என்னும் திருக்களிற்றுப் படியார் பாடலும் இங்கு ஒப்புநோக்கத்தககது.




ஆறுமுகம் நல்லதம்பி,

75, கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

போன்: 664

தங்கப்பவுண், வயிரம், பலவித இரத்தினக்கற்கள்
சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

*

ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
செய்து
கொடுக்கப்படும்.

*



GIVE US A
TRIAL BEFORF
GOING
ELSEWHERE
HONESTY
&
PROMPTNESS
IS OUR MOTTO

A. NALLATHAMBY,

75, Kannathidy, : : JAFFNA.

Telegrams: 'KAMALAM'
Telephone: 664

# உண்மையான கல்வியின் நோக்கம்

திரு. ந. சபாரத்தினம B. A.
அதிபர், இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

எங்கள் கல்விச்சாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்கள் தாம், வாழும் உலகத்தின் இயல்புகளை, முன்னேற்றச் சக்திகளை, அவற்றினால் மனித வாழ்வு அடையும் பெறுபேறுகளை, எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்வு, மறைவு என்ன என்பதை உணர்ந்துகொள்வதற்கு வேண்டிய ஆரம்ப அறிவைத்தானும் பெற்றுள்ளார்கள் என்று கூறமுடியாதிருக்கின்றது. இந்த நிலையிலே கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள நாம் நமது சாதனைகளைப்பற்றிப் பெருமைப்பட்டுக்கொள்வதற்கு எத்தகைய காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

பரீட்சை என்ற அளவு கோலுக்கடங்கிய பல துறைகளிலேயே அவர்களுடைய கல்வி அமைந்து கிடக்கிறது. உயிரற்ற வெற்று உண்மைகளைச் சேகரிப்பதைத்தவிர **'உள்ள விடுதலைக்கான'** மார்க்கங்களில் நமது கல்வியமையவில்லை. ''உண்மையான கல்வியின் நோக்கம் உள்ளத்தின் விடுதலையே'' என்று கல்விமான்கள் கூறிய அந்த உயர்ந்த நிலையை நம் பட்டதாரிகள் எய்தவோ, எய்த எத்தனிக்கவோ முடியவில்லை. வர்சாலகமான பிரசாரங்களுக்கும் குறுகிய சாதி, சமூகக் கட்டுப்பாடுகளுக்கும் நாம் தலைவணங்குவதில்லையா? நமது சாதாரண வாழ்விலே கல்லாதவர்கள், அரைகுறைக் கல்வியுள்ளவர்களிலும் பார்க்கப் படித்தவர்கள் என்றிருப்பவர்கள் கூடுதலான சகிப்புத்தன்மையையாவது காட்டுகிறார்களா?

வாழ்க்கைக்குத் தேவையானதும், அநுபவரீதியானதுமான கல்வியை விடுத்து வெறும் பள்ளிப்படிப்பினால் என்ன பயன் என்று கல்வி நிபுணர்கள் குறை கூறிவரும் இந்தக் காலத்திலே, அன்று கிரேக்க நாட்டுப்பேரறிஞர்களான பிளேட்டோவும் (Plato) அரிஸ்டோட்டலும் (Aristotle) முதன்முறையாகக்கூறிய **''உள்ள விடுதலைக்கான கல்வி''** என்ற வரைவிலக்கணம் பொருத்தமற்றதாகத்தான் இருக்கும். ஆனால், அவர்கள் கூறிய சிறந்த இலட்சியத்தை நாம் நன்குணரவேண்டும். இன்று ''உபயோகமான'' கல்வியை மாணவன் நன்றாகக் கற்று வாழ்க்கை வசதிகளை நன்கு அமைத்துக் கொள்ளட்டும், ஆனால், அதோடுகூடப் பாடசாலைகளிலும், உயர்தரக் கல்வி நிலையங்களிலும்; அவன் ''உபயோகம்'' குறைந்தனவாகக்கருதும் அந்தத்துறைகளிலும் பயிற்சிபெற்றுப் பண்புள்ளவனாகவும், திறமையுள்ளவனாகவும், சிறந்த பிரசையாகவும் விளங்கட்டும்.

இலக்கியம், தத்துவம் சரித்திரம் என்பனவே மனித இனத்தின் பண்புகளையும் வாழும் வகைகளையும் போதிக்கின்றன. ஆனால், பௌதிகம்,

ரசாயனம், உயிரியல் போன்றவை விஞ்ஞான முறையான விதிமுறைகளே மாத்திரமே போதிக்கின்றன. ஆதலால் **உள்ள விடுதலையைத்** தரக்கூடிய கல்வியைப் பெறுவதற்கு அந்த ''உபயோகம்'' குறைந்தபாடங்களே ஏற்றவையாக இருக்கின்றன. ஆனால், இச் சமூகக்கலைகளைக் கலைக்காகவும் அவற்றின் சிறப்புக்காகவும் பயிலாமல் பரீட்சையையும் பட்டத்தையுமே குறியாகக்கொண்டு பயில்வதானால் அவையும் உள்ள விடுதலைக்கேற்ற கல்வியாக அமையமாட்டா.

தத்துவம் சமயம் என்பவற்றிற் காணப்படும் வாழ்க்கைப் பிரச்சினைகள் அல்லது சரித்திர வாயிலாகப் பெறப்படும் முடிவுகள் என்பன சுட்டிக்காட்டும் உண்மைகளை உலகினைப்பற்றியும் மனித வாழ்வினைப்பற்றியும் அநுபவமடையாத இளம் மாணவன் முற்றாக விளங்கிக் கொள்ள முடியாதென்பது உண்மையே. ஒளவையும் திருவள்ளுவரும் உலகுக்களித்த அமரத்துவம் வாய்ந்த நூல்களிற் கூறப்படும் உலகஞானமும் ஒழுக்கக் கோட்பாடுகளும் வாழ்க்கையில் அநுபவ முதிர்ச்சியடையும் போதுதான் நன்கு விளங்கும். பழம்பெரும் வரலாற்று நூலாசிரியர்கள் காட்டும் கருத்துக்களை இளமுள்ளங்கள் விளங்குவது கடினமேதான். ஆனால், காலத்தோடு ஒட்டிய சம்பவங்களால் அக்கருத்துக்கள் தெளிவு அடையும்போது அவை விளக்கமடையும். ''காலங்கடந்து பயன்தரும் செயல்'' என்ற விதி மனிதவாழ்வின் பல துறைகளிலும் இருப்பது போலவே கல்விக்கும் உள்ளது. வகுப்பறைகளில் தூவிய விதை மனிதனாக வளர்ந்து வாழுங்காலத்தில் பழுத்துப் பயன் தருமன்றோ? மாணவப் பருவத்திலே சாத்திரம் இலக்கியம் தத்துவம் என்ற பாடங்கள் சீர்தூக்கியறியும் அறிவைப் பலம்பெறச் செய்கின்றன; அவற்றிற் காணப்படும் உயர்ந்த லட்சியங்களும் சிறந்த பண்புகளும் அந்தப் பிஞ்சு உள்ளத்திலே பதிந்து விடுகின்றன.

சமயச்சார்பற்ற லௌகிகக் கல்விபற்றி யெல்லாம் இப்போது பேசி வருகின்றோம். அதற்கு ஆதாரமாகப் பல பெரியார்களுடைய கூற்றுக்களை எடுத்துக்காட்டாகவும் கொள்கின்றோம். அந்த லௌகிகக் கல்வி மாணவனுடைய சமூகத்தின் மதகலாசாரபாரம்பரியத்தை ஒதுக்கிவைத்துள்ளதா? தன்னைச் சுற்றியுள்ள மதகலாசாரச் சூழ்லிலிருந்து மாணவன் ஆத்மீகச் செல்வத்தைப் பெறுவதற்கு உரிமையற்றவனா? சேவை உணர்ச்சியை, உயர்ந்தலட்சியத்தை அவ்வாத்மீக உணர்ச்சி மாணவனுடைய உள்ளத்திலே வளரச்செய்யாதா? சமயம் கலாசாரம் சமூகநீதி என்ற தற்காலக்கொள்கை என்பன யாவுமே இந்த உயர்ந்த குறிக்கோளைத் தான் வற்புறுத்துகின்றன. இத்தகைய பண்புகளை, ஆத்மீக செல்வத்தை மாணவனுடைய உள்ளத்தில்—அவன் சைவனானால் திருமுறைகளிலிருந்தும், கிறிஸ்தவனானால் பைபிளிலிருந்தும், பௌத்தனானால் தர்மபதத்திலிருந்தும், மகமதியனானால், கோரானிலிருந்தும் பதியச்செய்வதே **கல்வியின் நோக்கமாகும்.** பாடசாலைக் கல்வியென்பது அவன் அங்கே

சம்பாதித்துக்கொள்ளும் அறிவன்று. பாடசாலையையோ சர்வகலாசாலையையோ மாணவன் விட்டுவிலகும்போது மேலும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டுமென்று அவனுடைய உள்ளத்தில் எழும் **ஆர்வமே** உண்மையான கல்வியாகும். பாடசாலையிலாரம்பித்த கல்வி, வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து செல்கிறது. அதற்கு **முடிவில்லை**. ''படித்த அனைத்தையும் மறந்தபின் எஞ்சிநிற்பது எதுவோ அதுவே கல்வி'' என்று ஒரு பழமொழியும் உண்டு. அங்ஙனம் எஞ்சிநிற்பது எது? ''எப்பொருளைக்கேட்டாலும், அப்பொருளில் மெய்ப்பொருளைக் காண்பதுவே **அது**.''

இயற்கையன்னை இந்தநாட்டிலே நமக்கு எல்லாவகையான செல்வங்களையும் தந்திருக்கிறாள்; லௌகிகம், கலை, மனிதவாழ்வு இவையனைத்துக்கும் ஏற்றவளங்கள் பலவற்றை அள்ளிச் சொரிந்திருக்கிறாள். ஆனாலும் எங்களிற் பெருந்தொகையானவர்கள் தேசியச் செழிப்பிலும் வறுமையினால் வாடுகிறோம்; அறிவு மிகுந்த ஒரு யுகத்திலே அறியாமையால் வாடுகிறோம்; வைத்தியசாஸ்திர அறிவு முன்னேறியுள்ள ஒருகாலத்திலே நோய்களால் நலிவடைகிறோம். எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த மாறுபட்ட நிலையைக் கல்விமான்கள் பார்த்துக்கொண்டிருக்கப்போகிறார்கள்?

**இரண்டு** கருத்துக்கள் நமது கவனத்துக்கு வருகின்றன. உண்மையான மாணவனுக்குரிய மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல் - அதாவது அறிவைத் தேடுவதில் தணியாத ஆர்வமும் குன்றாத ஊக்கமும் கொள்ளுதல் **ஒன்று**. நம்மோடு கூடவாழும் மக்களின் சாதி—சமய—நிற—வகுப்பு வேறுபாடுகளைப் பாராது உண்மையான மனிதாபிமானத்தை வளர்த்துக் கொள்ளுதல் **மற்றது**. அறிவும் மெய்ஞ்ஞானமும் இணையவேண்டும்; விவேகமும் அன்பும் ஒன்றுகூடவேண்டும். அங்ஙனம் கலந்து பரிணமிக்கும்போது தான் குறுகிய மனப்பான்மைக்கு ஏதுவான ஆசாபாசங்களைக் கடந்து நிற்கும் மனத்திண்மையும் ஆக்கபூர்வமான சக்தியும் நமக்குக் கிடைக்கும். சமூகத்தின் பாரம்பரியமான கட்டுப்பாடுகள் மாறுபட்டாலும் உண்மையின் வழியிலே நீதியின் முன்னணியிலே நம்மை இட்டுச்செல்ல உதவுவதும் அந்த மன உறுதியேயாகும்.

*With the best Compliments*

*of*

**M/s A. K. SANGARAN & CO**

"Estd 1914"

SANGARAN'S BUILDING.

387, Old Moor Street, COLOMBO-12

Dial: 2753

# சைவத்தின் உயர்நிலை

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்.
விரிவுரையாளர், அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.

ஒரு சமயத்தின் சிறப்பு, அச்சமயத்தை எத்தனை கோடி மக்கள் பின்பற்றுகிறார்கள் என்பதையோ, அது எத்தனை இராச்சியங்களைக் கட்டியாண்டு வருகின்றது என்பதையோ பொறுத்ததன்று. என்றும் நிலைக்கக் கூடிய உண்மைகளைத் தன்னகத் தடக்கியிருப்பதும், மக்களின் மனமாசினையகற்றி அவர்களை நல்வழிப்படுத்துவதும், முன்னோடிகளான உயர்ந்த சாதகர்களை உலகுக்கீவதும் சமயத்துக்குயர்வளிக்கும் விடயங்களாம்.

விஞ்ஞானத் துறைகள் மிகவேகமாக வளர்ச்சி பெற்றுவரும் இக்காலத்தில், மேற்கு நாட்டறிஞர்கள் உலகமதங்களைச் சீர்தூக்கி யாராய்ந்து, புதிய விஞ்ஞானக் கருத்துக்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய சமயம் எதுவெனச் சிந்தித்து, சைவசித்தாந்த மொன்றே பழமைக்குப் பழமையாயும், புதுமைக்குப் புதுமையாயும் நின்று, தருக்க, விஞ்ஞான, கணித நுட்பங்களையெல்லாம் தன்மாட்டுப் பொருந்தி மிளிர்கின்றது எனக் கூறுகின்றார்கள்.

சைவ சித்தாந்தம் மிகப் பழைய காலந்தொட்டு வழங்கிவருவது. தெற்கே, கடல் கொண்ட லெமூரியா தொடக்கம் வடக்கே இந்துநதிக் கரை வரையிலும், கிழக்கே பீஜித்தீவுகள் தொடக்கம் மேற்கே மத்திய அமெரிக்கா வரையிலும் இச்சமயம் பரந்திருந்தமைக்குச் சான்றுகள் உள.

பரிசுத்த நீதிநெறியெனப்படும் இச் சைவநெறி, கடவுளாலும் அவனருள் வழிப்பட்ட முனிவர்களாலும் மனிதகுலம் தோன்றிய பொழுதேவகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதனாலேயே எக்காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் பொருந்தத்தக்க அடிப்படைக் கொள்கைகளை அது வரையறுத்துள்ளது. 'உலகம் சடமாயும், அவயவப் பகுப்புடையதாயும், தோற்றம், நிலைபேறு, அழிவு என்னும் முத்தொழில்களிற் படுவதாயும் இருத்தலால் அது செய்யப்பட்டபொருளே; செய்யப்படும் பொருள்களெல்லாம் செய்வோனையுடையன. ஆகவே, 'உலகம் கருத்தாவாகிய இறைவனை உடையது. தனது திருவருளின் ஆதாரத்திலுள்ள மாயையென்னும் சூக்குமப் பொருளிலிருந்து நிமித்த காரணனாகிய இறைவன் பிரபஞ்சத்தைப் படைக்கின்றான். பிரபஞ்சம் உயிர்களின் வினைக்கீடாகப் பலவகைப்பட்டுத் தனு, கரண, புவன, போகங்களாகப் பரந்து கிடக்கின்றது.'

'பிரபஞ்சத்தாற் பயன் பெறுவன உயிர்கள். இவ்வுயிர்களோடு இறைவன் ஒன்றாகியும், வேறாகியும், உடனாகியும் நிற்கின்றான். கடலுக் கிடங்கொடுத்து வியாபித்து நிற்கும் வெளியைப் பற்றாது, கடல் நீரை

மாத்திரம் பற்றியுள்ள உப்பினைப்போல, ஆணவமலம் உயிரினுக் காதார மாய்க் கலந்துள்ள பரம்பொருளைப் பற்றாது உயிரை மாத்திரம் பற்றி யுள்ளது.'

'தலையிலுள்ள அழுக்கைப் போக்குவதற்குச் சிகைக்காயைப் பயன் படுத்துவது போலவும், உடையிலும் உடலிலும் உள்ள அழுக்கைப் போக்குவதற்கு உவர் மண்ணையும் சவர்க்காரத்தையும் உபயோகிப்பது போலவும் மாயை கன்மங்கள் ஆன்மாவிலுள்ள ஆணவ அழுக்கைப் போக்கப் பயன்படுத்தப்படுகின்றன. அழுக்குடன் சேர்த்துச் சிகைக்காய் முதலியனவும் கழுவப்படுதல்போல ஆணவ மலத்துடன் சேர்த்து மாயை கன்மங்களுங் கழுவப்படவேண்டியன. நம் சகோதர உயிர்களிடம் நமக் குள்ள கடமைகளைச் சரிவரச் செய்தலாலும், உள்ளத்தில் அன்பையும் நீதியையும் வளர்த்தலாலும், கடவுளிடத்தில் நன்றியுடையவர்க ளாய்ப் பக்தி செய்வதாலும் இவை கழுவப்படுகின்றன.'

'இறைவனை வணங்கி அகந்தை மமதை முதலிய பாவங்களி லிருந்து விடுதலை பெறுவதே மானிடவாழ்வின் சாரமாகும். அன்பு வளர்ச்சியே அகந்தை முதலியவற்றை யழிப்பது. ஆன்மநேய ஒருமைப் பாடு, அறப்பற்று, கடவுட்பக்தி, பாவத்தில் வெறுப்பு முதலியன உண் மைச் சைவர்களுக்குரிய குணங்கள். புலன்களின் அற்ப உணர்வுகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆன்மாவின் பெரிய சம்பத்துக்களான அன்பு, நீதி, ஒழுக்கம் முதலியவற்றைச் சைவர்கள் அழித்துக்கொள்ளமாட்டார் கள். அவர்கள் சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார்; தம்முயிர்போல் மன்னுயிரை மதித்துத், "தமவும் பிறவும் ஒப்ப நாடுவர்.'

இவ்வாறு உண்மைகளைத் தெளிவாக விளக்கி வாழ்க்கைக்கு வழிகாட்டுஞ் சைவ சித்தாந்தம் அனேக தவப்புதல்வர்களைத் தந்துள்ளது. நீதிக்காக மகனை முறை செய்தவனும், தன்கை குறைத்தவனுஞ் சைவர் கள். முந்நூறாறும் பரிசிலர்க் களித்தவனும், முல்லைக் கொடிக்குத் தேரீந்தவனுஞ் சைவர்கள். புறவுக்காகத் துலை புகுந்தவனும் மயிலுக் காகப் போர்வையளித்தவனுஞ் சைவர்கள். கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கிய மெய்யடியார்களைச் சைவந் தந்தது. 'கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோம்' என்ற அரிச்சந்திர னையுஞ் சந்திரமதியையுந் தந்தது; 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்ற வள்ளுவனையும், பொய்யடிமையில்லாத புலவர்களையும் தந்தது; ஆன்ம பலத்தால் அதர்மங்களை வெற்றிகண்ட அப்பரையும், சம்பந்தரையும், மாணிக்கவாசகரையுந் தந்தது; தம்பிரானைத் தோழரா கக் கொண்ட சுந்தரரையுந் தந்தது. சைவத்தின் உயர்வுக்கு வேறு சான்று கள் வேண்டியதில்லை.

சைவம் ஒரு கட்சிக்கோ, இனத்துக்கோ உரிய மதமென்று கூறப் பட்டதில்லை. அது உலகப் பொதுத் தத்துவம். 'ஞாலம் நின்புகழேயாக வேண்டும்' என்று உலக அடிப்படையிற் சைவம் வளர்த்தனர் சைவ ஞானிகள். 'யாதும் ஊரே யாவருங் கேளிர்', 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பன தமிழ் என்ற உடலில் வளர்ந்த உயிரோட்டமான சைவக் கருத்துக்கள்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

# Tilleys Hardware Stores

*For*

*All your Requirements in*

## GENERAL HARDWARE STORES

AND

## BOLTS — NUTS

PLEASE CONTACT:

# Tilleys Hardware Stores

**Colombo - 12**

T' Grams: TILLES

T' Phone: 79143

Telephone: 308 Telegrams: "SANGARBROS"

*With the best Compliments of*

# A. S. Sangarapillai & Bro.

DIRECT IMPORTERS & EXPORTERS

General Merchants, Commission Agents
&
Govt. Contractors

162, 164, & 166 HOSPITAL ROAD,

**Grand Bazaar, : Jaffna.**

Head Office:
NOS. 4 & 6 ADAMALLY BUILDINGS,
P. O. BOX. 802, COLOMBO.

Branches:

KARAINAGAR—Palavodai.
KANDY—123, Colombo Street.
KILINOCHCHI—Kandy Road
DAMBULLA—Kandy Road.
GALAHA—16, Bazaar Street,

FILLING STATION Lanka: Dambulla, Vavuniya, Paranthan & Pallai, Jaffna & Ponnalai

## Elephant Brand Aerated Water

AVAILABLE

**யானை மார்க் குளிர்ந்த பானங்கள்**

எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

DISTRIBUTORS
BOTAN BRAND MACKERAL PIKE AND APPLE BEEDI

STOCKISTS
DIAMOND COOKER OVEN & FOUNTAIN PENS
Wholesale & Retail Dealers in:
OILMANS & PROVISIONS AND NESTLES PRODUCTS GOODS

*With the best compliments*
*from*

# N. B. Abdul Gafoor

**903, GAFOOR & STEAM BEEDI**
**Manufacturers**


102/2 WOLFENDHAL STREET,
**Colombo - 13**

Telephone No: 6080

*For* ——

COMFORT & DURABILITY

# D. S. I. Foot wear



*Manufacturers:*

## D. Samson Industries Ltd.
**GALLE.**

Distributors:

## D. SAMSON & SONS LTD.

95, 97 & 62, Ist Cross Street.

**Colombo - 11**

Telephone: 6509

# திருவாசகர் கையாண்ட பிரபந்தங்கள்

திரு. ச. தனஞ்சயராசசிங்கம் B. A. (Hons); C. L.; M. Litt.
தமிழ் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்.

"பிரபந்தம்" என்னும் வடமொழிச் சொல் "நன்கு கட்டப்பட்டது" என்று பொருள்படும். தமிழில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் உண்டு என்பர். உலா, பரணி முதலிய பிரபந்தங்கள் சங்க இலக்கியச் செய்தியை அடியொற்றி எழுந்தன எனலாம். தமிழ்ப் பிரபந்தங்களின் தோற்றத்தினை அறிவதற்குத் தொல்காப்பியப் பொருளதிகாரம் இன்றியமையாத துணை நூலாகும். தொல்காப்பியத்திற்குப்பின் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் முதலிய இலக்கண நூல்கள் பிரபந்தங்களின் இலக்கணத்தினை விரிவாகக் கூறுகின்றன. திருவாசகர் கையாண்ட பிரபந்தங்களிற்சில, இவ்விலக்கண நூல்களில் இடம்பெறவில்லை. அவை தனித்தன்மை வாய்ந்து விளங்குகின்றன.

## இறையான்ம அனுபவங்கள்

சைவ வைணவ அடியார்கள் தத்தம் இறையான்ம அனுபவங்களைப் பொதுமக்கள்விரும்பும் இலக்கிய வடிவங்களில் அமைத்துப் பாடினர். அவர்கள் பொன்றும் நிலையிலிருந்த சைவத்தையும் வைணவத்தையும் மன்னரும் மக்களும் மீண்டும் பெருவிருப்புடன் நன்னிலைக்குக் கொண்டுவரச் செய்வதைத் தம்வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு உழைத்தனர். சின்னூட் பல்பிணிச் சிற்றறிவுடைய பொதுமக்கள், உயர்ந்த குறிக்கோளற்று உலகவாழ்வில் சிலகால் கிடைத்தும் பலகால் கிடைக்காதனவுமாகிய சிற்றின்பங்களில் ஈடுபட்டுத் தம் வாழ்நாளைக் கொன்னே கழித்தனர். மாணிக்கவாசகர் போன்ற சமயத்தொண்டர் நில்லாதனவற்றை நிலையுள்ளன வென்றுணரும் புல்லறிவாளரைத் தெருட்டித் தம் குறிக்கோளுக்கும் வாழ்விற்கும் அவரை ஈர்ப்பதற்கு மேற்கொண்ட முயற்சியே பத்திப் பிரபந்தங்களாகத் தமிழை வளப்படுத்தின.

பொதுமக்கள், சிற்றின்பத்தைக் கூறும் அகப்பொருள் நூல்களைப் பெரிதும் விரும்பிக் கற்றனர். பழந் தமிழரின் இலக்கியங்களில் அகத்துறை பற்றியனவே சிறந்து விளங்கின. இறைவனே களவியற் சூத்திரங்களை அமைத்துக் கொடுத்தானெனக் கட்டுக்கதை ஒன்று வழங்கிவருகிறது. இவ்வாறு மக்கள், உலகியலைத் தனியே கூறும் அகப் பாடல்களில் ஈடுபட்டுப் பற்றுள்ள வாழ்க்கையை நடாத்தி வந்தார்கள். மாணிக்கவாசகர் முதலிய சமயத்தலைவர்கள் சிற்றின்பத்தின் நிலையாமையையும் சிறுமையையும், பேரின்பத்தின் அழியாமையையும் பெருமையையும் மக்களுக்கு உணர்த்துவதற்கு அவர்கள் விரும்பிய உலகியல் வாழ்க்கையைக் கூறும் இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தினார்கள். இதனாற் பல்லவர் காலத்தில் எழுந்த பிரபந்தங்களுட் பெரும்பாலானவை இறைவனின் பெருமையையும் ஆன்மா

யிற்கும் அவனுக்கும் உள்ள தொடர்பையும் உணர்த்தின. பொதுமக்கள் எளிதில் விளங்குமாறு செய்யுள்கள், நாட்டுப்பாடல் முறையில் பேச்சுவழக்கு களையும் கொண்டனவாக இயற்றப்பட்டன. பொதுமக்களும் தாம் விரும்பும் இலக்கிய வடிவங்களில் வெல்லம் கலந்த மருந்துபோலக் காணப்படுஞ் சமயக்கருத்தின் மெய்ப்பொருளைச் சிறிது சிறிதாக அறியத்தொடங்கினர்.

''கோவை என்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூறென்ப''

—221, பன்னிருபாட்டியல்

### களவு, கற்பாகிய ஈரொழுக்கங்கள்

கோவைப்பிரபந்தம், அன்பினைந்திணையாகிய அகப்பொருண் மரபினையொட்டிக் களவு, கற்பாகிய ஈரொழுக்கங்கள் பற்றிய கிளவிகள் ஒழுங்குபட வரும் நானூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களைக் கொண்டது. அஃது அகப்பொருட் துறைகள் ஒழுங்காகக் கோக்கப்பட்டிருத்தலால், கோவையென்னும் பெயரைப் பெற்றது. மாணிக்கவாசகர் தில்லையில் எழுந்தருளியிருக்கும் நடராசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திருக்கோவை என்னும் பிரபந்தத்தைப் பாடினார். இந்நூல் தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி, நற்றாய், செவிலித்தாய் முதலிய அகப்பொருட் பாத்திரங்களின் வாயிலாக உலகியற் காதலை உணர்த்துவதுபோலக் காணப்படினும், அஃது உண்மையில் ஆன்மாவுக்கும் இறைவனுக்குமிடையே உள்ளபேரின்ப அன்பினை உணர்த்துகிறது. குமரகுருபரர் அதனை 'ஞானப் பனுவல்' என்றார்.

ஒருவன் உளப்பாங்கைப் பிறர் அறிய அன்னம் முதலிய பறவைகளையும் மனிதரையும் அனுப்புவதாகப் பாடும் பிரபந்தம் 'தூது' எனப்படும். தூதுப் பிரபந்தத்திற்கு முதனூல் வடமொழியிற் காளிதாசன் இயற்றிய மேகதூதம் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் அஃது ஒரு தூய தமிழ்ப் பிரபந்தம். சங்க இலக்கியங்களிலே மருதநிலத் தலைவன் பரத்தை வீட்டிற்குச் செல்வதாலும், அங்கு அவன் தங்குவதாலும் அவனுக்கும் அவனுடைய இல்லக்கிழத்திக்குமிடையே பிணக்கு ஏற்படுவதாகப் பல பாடல்கள் உள. தலைவன் தலைவியினுடைய கோபதாபத்தை நன்கறிந்து சாந்தப்படுத்தப் பாணன் முதலியோரைத் தூது அனுப்புவதாகச் சங்கப் பாடல்கள் சித்திரிக்கின்றன. புறப்பாடல்களில், பொருதுகின்ற இரு மன்னரிடையே புலவன் சென்று சந்து செய்து வைப்பதும் ஒருவகைத் தூதாகக் கருதப்படுகிறது. நாயன்மாரும் ஆழ்வாரும் அஃறிணைப் பொருள்களிலும் இறைவன் தன்மையையே கண்டனர். ஆகவே, அவற்றினை விளித்துத் தம் காதற் குறையைக் கேட்குமாறு பாடினர். அவர்கள் கோபமுற்ற பொழுதே அவற்றினைச் சினந்தார்கள்.

### தலைவனிடம் குயிலைத் தூதனுப்பிய தலைவி

குயிலைத் தூது அனுப்பும் தலைவியாக மாணிக்கவாசகர் தம்மைக் கருதிக் குயிற்பத்தைப் பாடினார். தலைவன் தலைவியைப் பொழிலிடத்துக்

கண்டதற்குப்பின் பிரிகின்ருன். தலைவி களவொழுக்கத்திற்குப் பின், பிரிந்த தலைவனைக் காணுது வருந்துகிருள். அவள் உள்ளத்தில் ஏக்கம் குடிகொள்கிறது. கட்டுப்பாடற்ற களவொழுக்கம் மணத்திலே முடியுமா? தலைவன் வாக்குறுதி தளர்வானே? என்றெல்லாம் ஐயப்படுகிருள். அவன் குறிப்பிட்ட காலம்வரையும் ஆறியிருக்கும் ஆற்றல் அவளிடம் இல்லை. அவனை முதலிற் கண்டுகூடிய பொழிலுக்குப் பன்முறை சென்று அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிருள். அவர்கள் உறவை மானிடர் எவரும் காணவில்லை. அப்பொழிலிடத்துறையும் குயில்களே அதனை அறிந்தவை. இதனுல் அக்குயில்களைத் தனக்கு அலர் ஏற்படாமற் காப்பாற்றத் தலைவனிடம் தூதாகச் செல்லுமாறு வேண்டுகிருள். தலைவன் வினைவயின் பிரிந்த பொழுதும், தலைவி தூதுவிடுவதாகப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. மாணிக்கவாசகர் திருக்கோத்தும்பி என்னும் பிரபந்தத்தில் தும்பியினை இறைவனிடத்துத் தூது அனுப்புகிருர்.

> ''உன்னை உகப்பன் குயிலே உன் துணைத் தோழியும் ஆவன்
> பொன்னை அழித்தநன் மேனிப் புகழில் திகழும் அழகன்
> மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
> தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய்''
>
> —குயிற்பத்து.

இப்பாடலில் திருவாசகர் ஒரு பெண்குயிலை அழகினுல் பொன்னை வென்ற தூயதிருமேனியையுடைய மெய்ப்புகழால் விளங்கும் அழகனுகியும் அரசனுகியும் குதிரைமேல் வந்த அருட்கொடையாளனுகியும் திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பாண்டியன், சேரன், சோழனுகிய மூவேந்தனுகியும் சிறப்புப் பொருந்திய புயங்கக் கூத்தாடியுமாகிய இறைவனை வருவிக்குமாறு வேண்டுகிருர்.

### அறத்தொடு நிற்றல் என்னும் துறை

'அன்னைப்பத்து' என்னும் பிரபந்தம் சங்க இலக்கியங்களில் வரும் அறத்தொடு நிற்றல் என்னும் துறையை அமைத்துப் பாடப்பட்டது. களவொழுக்கத்திற்குப் பின் தலைவனின் பிரிவினுல் தலைவி உள்ளத்திலும் உடலிலும் வாட்டமுறுகிருள். பெற்றேர் அவளின் அந்நிலைக்குக் காரணம் அறியாமையால், தெய்வத்தின் துணையை நாடுகின்றனர். வெறியாட்டின் பொழுது தலைவியின் காதல் பற்றிய செய்திகள், தெய்வச் சார்பினுல் வேலனே கட்டுவிச்சியோ வெளிப்படுத்தக்கூடுமென்று அஞ்சிய தோழி செவிலித்தாய்க்கு அதுபற்றிக் கூறுவது அறத்தொடு நிற்றல் என்னும் துறையில் அடங்கும். அன்னைப்பத்தில் மாணிக்கவாசகர், தோழிதாய்க்கு எடுத்துரைக்கும் முறையில் இறைவனுகிய தலைவனின் சிறப்புக்களை எமக்கு அறிவிக்கிருர்.

பல்லவர் காலத்தில் 'பதிகம்' என்னும் பிரபந்தம் பெரு வழக்குப் பெற்றது. இப்பிரபந்தத்தை முதன்முதலாகப் புனிதவதி கையாண்டார். அவரின் திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் சைவ நாயன்மார்க்கும்

வைணவ ஆழ்வார்க்கும் பத்திப் பிரபந்த வகையில் ஒரு வழிகாட்டியாக அமைந்தது. பதிகங்களுள் மூத்ததால், அது மூத்த திருப்பதிகம் எனப்பட்டது. பதிகம் பத்துச் செய்யுள்களைக் கொண்டது. செய்யுட்கள் பதினொன்றனைக் கொண்ட பதிகங்களும் உண்டு. மாணிக்கவாசகர், கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், திருப்பாண்டிப் பதிகம், திருக்கழுக்குன்றப் பதிகம், எண்ணப் பதிகம் முதலிய பிரபந்தங்களைப் பாடியுள்ளார். கோயில்களில் மூத்ததாகிய தில்லையில் எழுந்தருளியிருக்கும் கூத்தப்பிரானைக் கோயில் மூத்த திருப்பதிகத்திலும் திருப்பெருந்துறையில் தமக்குக் காட்சி கொடுத்த இறைவனைக் கோயில் திருப்பதிகத்திலும் பாடினார்.

### மகளிர் பாடி ஆடும் அம்மானை ஆட்டம்

சங்ககாலத்து மகளிர், கழங்கினை உருட்டி விளையாடினர். கையிலிருந்து காய்களை மேல் எறிந்து பிடித்து விளையாடும் விளையாட்டினை அம்மானை என்பர். இக்காலத்துக் கொக்கட்டான் விளையாட்டினை அது ஓரளவு ஒக்கும். அம்மானை ஆட்டத்தினை மகளிர் பாடிக்கொண்டு ஆடுவர். திருவாதவூரனாகிய நாயகி, திரு அம்மானைப் பிரபந்தத்தில் இறைவனின் திறனைப் புகழ்கிருள். நபி அவதார அம்மானை முதலிய அம்மானை இலக்கியங்களுக்கு அது வழிகாட்டியது. பூவல்லி என்பது விளையாட்டுக்களில் ஒன்றாகும். மகளிர் பூக்களை ஆயும் பொழுது ஆடிப்பாடுவர். மாணிக்கவாசகர், திருப்பூவல்லி என்னும் பிரபந்தத்தில் தில்லையம்பலத்தே ஆடுகின்ற புணியாளன் சீரினைப்பாடியுள்ளர். உந்தி பறத்தல் என்பதும் அம்மானை போன்ற விளையாட்டுக்களில் ஒன்றாகும். திருவுந்தியார் என்னும் பிரபந்தமும் இறைவனாகிய தலைவனின் இயல்புகளை அவன்பாற் காதல் கொண்ட மாணிக்கவாசகராகிய நாயகியின் கூற்றுக்களைக் கொண்டது.

பழந்தமிழ் இலக்கியங்களில் மன்னனை மகளிர் துயிலெழுப்பிப் பாடுவதாகக் கூறப்படுகிறது. சூதர் முதலியோர் மன்னனைத் துயிலெழுப்புவதாகப் பாடப்பட்ட பாடல்கள் ''துயிலெடை'' என்னும் பிரபந்த வகையைச் சேர்ந்தது. ''திருப்பள்ளியெழுச்சி'' என்னும் பிரபந்தத்தில் திருவாதவூரர் திருப்பெருந்துறையில் உறையும் சிவனை ''எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே'' என்று பாடித் துயில் எழுப்புகிருர்.

''புராணம்'' என்பது 'பழையவரலாறு' என்று பொருள்படும். சிவபுராணத்தில் திருவாதவூரர் இறைவனை உருவமும் இயல்பும் உடையவனுகக் கருதிப் பாடியுள்ளார். நிர்க்குணனாகிய இறைவனைக் குணமுடையவனுகப்பாடியது பொதுமக்கள் அவனை எளிதில் அறியும் வண்ணம் எனலாம். இப் புராணத்தில் நாம் திருவாசகரின் ஆத்மீக பரிபூரண நிலையினைக் காணலாம். அப்பரின் திருத்தாண்டகத்தில் இறைவன் இயல்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளனவெனினும் சிவபுராணம் ஏனைய நாயன்மார் அவைபற்றிக் கூறியவற்றினின்றும் பன்மடங்கு சிறந்து விளங்குகிறது.

### இறைவனிடம் அடியான் வேலை

நீத்தல் விண்ணப்பத்தில் தம்மை நீத்துச் சென்ற இறைவனிடத்து திருவாதவூரர் விண்ணப்பம் செய்கிருர். உலகியலில் ஒருவன் வேலை ஒன்

றற்கு விண்ணபஞ் செய்யும்பொழுது தன் குறைகளை விண்ணப்பத்திற் குறிப்பதில்லை. அவன் தன் நிறைகளை மட்டுமே குறிப்பிடுவான். திருவாதவூரரோ இறைவனிடம் அடியாருயிருக்கும் வேலைக்கு இரங்கி நின்றவர். எல்லாவற்றினையும் அறிந்த இறைவனிடம் விண்ணப்பஞ் செய்யும் பொழுது ஒளிவு மறைவிற்கு இடமில்லை. செருக்கு, காமம், புலனொடுக்கமின்மை முதலிய குணங்களைத் தாம் பெற்றிருந்தமையால் இறைவன் தம்மை விட்டு நீங்கினான் என எண்ணினார். உலகியலில் ஒருவர் எம்மை விட்டுநீங்குவதற்குத் தக்க காரணத்தை அறியாத நிலையில் நாம் எவ்வாறெல்லாம் எம் தவறுகள்பற்றி எண்ணுவோமோ அவ்வாறெல்லாம் திருவாதவூரர் எண்ணினாரென்பதை நீத்தல் விண்ணப்பத்திலுள்ள ஐம்பது பாடல் வாயிலாக அறிகின்றோம். இப்பிரபந்தத்திற் கையாளப்பட்டிருக்கும் உவமைகள் புலவன்கருதிய பொருளை எளிதாக விளக்குவனவாகவும் சொற்சுருக்கமுடையனவாகவும் விளங்குகின்றன.

### கன்னிப் பெண்ணின் வழிபாட்டுச் சிறப்பு

மார்கழித் திங்களிற் கன்னியர் விடியற்காலையில் எழுந்து குளித்து ஈரமணலிற் பாவைசெய்து, தாம் நற்கொழுநரை அடைதல் வேண்டுமென்றும், நாடு மழை பெய்து பல்வளங் கொண்டதாக விளங்குதல் வேண்டுமென்றும் தெய்வத்தை வழிபடுவர். திருவெம்பாவையில் மாணிக்கவாசகராகிய கன்னிப்பெண்ணின் வழிபாட்டுச் சிறப்பினை இருபது பாடல்களிற் காணலாம். பொருளமைதியிலும் வருணனைகளிலும் பற்பல இடங்களிற் திருவெம்பாவைக்கும் ஆண்டாளின் திருப்பாவைக்கும் ஒற்றுமைஉண்டு. ஆங்கிலப் புலவனாகிய Keats என்பவன் இயற்றிய ''Eve of St Agnes'' என்றபாடலுடன் ஓரளவு திருவெம்பாவை ஒத்திருக்கிறது; உறக்க நிலையில் உள்ள ஆன்மாவைத் துயில் எழுப்புதல் எனச் சித்தாந்தக் கருத்தும் இதற்குக் கொள்வர்.

''சதகம்'' என்ற வடமொழிச் சொல் நூறு எனப் பொருள் படும். திருச்சதகத்தில் திருவாதவூரர் நூறு பாடல்களில் இறைவனுக்கும் தமக்கும் உள்ள உறவினை விரித்துப் பாடுகிறார்.

போரிலே வெற்றிபெற்ற மன்னனை மகளிர் சிறப்பித்து ஆடிப்பாடுவர். தொல்காப்பியத்தில், பாலைக்குப் புறனாகிய வாகைத் திணைத்துறைகளில் ''முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை'' என்பன கூறப்பட்டுள்ளன. போரிலே வெற்றி பெற்ற வீரனதுதேர்முன், கூத்தர் குரவைக் கூத்தினை ஆடுவர். தேரில் வீரன் சென்றபின் ஆடப்படுவது பின்தேர்க்குரவையாகும். திருத்தோணோக்கம் என்னும் பிரபந்தத்தில் மாணிக்கவாசகராகிய கூத்தி தோள்களை வீசி இறைவன் புகழினைப் பாடுகிறாள்.

மாணிக்கவாசகரின் பிரபந்தங்களில் சங்ககால அகத்திணை மரபு ஓரளவு மாற்றம் அடைந்த நிலையில் வழங்கப்பட்டிருக்கிறது. சங்ககாலப் பாடல்கள் தனிப்பாடல்களாக விளங்குகின்றன. அவை அன்பினைந் திணையின் சிறப்பினை முதல், கரு, உரியாகிய முப்பொருளின் துணை



35

கொண்டுஉணர்த்துகின்றன. அவை தலைவனுடைய பெயர் சுட்டப் பட்டோ அவனை அடையாளங் கண்டு கொள்ளக்கூடிய வர்ணனைப் பகுதி கொண்டோ விளங்குவதில்லை.

**சைவ இலக்கிய மரபில் புதியவழி**

மக்கள் நுதலிய அகனைந் திணையுஞ்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறுஅர்''

எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இதனால், தலைவன் நாடன், வெற்பன், ஊரன், சிலம்பன் எனச் சிறப்பிக்கப்பட்டான். ஆனால், மாணிக்கவாசகரின் பிரபந்தங்களில் தலைவன் பெயரினால் சுட்டப்படுகிறான். சங்கப் பாடல்கள் ஆசிரியம், வஞ்சி முதலிய யாப்புக்களினால் ஆக்கப்பட்டவை. மாணிக்கவாசகரின் பிரபந்தங்கள் தாழிசை, துறை, விருத்தம், ஆகியவற்றினால் யாக்கப்பட்டவை. அகத்துறையினைச் சித்திரிக்கும் தனிப்பாடல்களுக்குப் பதிலாகக் கோவை, பதிகம் அம்மானை முதலிய பிரபந்தங்களில் இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள பேரின்பக் காதலினைப் பாடினார். சங்ககாலப் புலவர், ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்றகாலத்துப்பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவருக்கும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறும் பொருளேயே அகமெனக் கருதினர். அன்பினைந்திணையில் உருவுந் திருவுங் குணமும் ஒத்த தலைவனும் தலைவியும் கவிதைக்குப் பொருளாக அமைந்தனர். இதற்கு மாறாகத் திருவாதவூரரின் பிரபந்தங்களில் இறைவனும் அவனுடன் எத்துணையும் இணைந்து நிற்கவியலாத ஆன்மாவும்பற்றிய செய்யுள்கள் உள்ளன. சைவ இலக்கியமரபிலே அவை ஒரு புதியவழியினை வகுத்திருக்கின்றன.


மோட்டார் வாகனச் சொந்தக்காரரின்
பூரண இன்பம் பெறக்கூடிய
மிகச் சிறந்த

எக்சைட் பற்றறிகளை
(EXIDE BATTERIES)

விற்பனைசெய்யும்
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்
சங்கத்துக்கு
விஜயம் செய்ய மறவாதீர்கள்.

# சமய சமுதாயம்

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை.
மட்டக்களப்பு.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்''.

தெய்வ மென்பதோர் சித்த முண்டாகப் பெற்றால், அங்கேயே அப்போதே சமயம் பிறந்துவிடுகின்றது. மனத்திலே புத்தி திடம் பெற்றால் அச்சமயம் நிலைபெற்று விடுகின்றது. சமயங்கள் இவ்வாறு பலவாகத் தோன்றி நிலைபெற்று வீட்டுலகின் பல வழிகளாய் அமைந்துள்ளன. சமயங் கடந்த நிலையே மோட்ச பதமாகும். சமயாதீதப் பழம் பொருள் எங்குமுள்ளதேனும் விறகிலே தீப் போன்றும் பாலிலே நெய் போன்றும் எங்கும் மறைந்துள்ளதேனும் அங்கேதான் மணியில் ஒளிபோல் வெளிப்பட்டு விளங்கி நிற்கின்றது. எல்லாச் சமயவாதிகளும் ஏகோபித்து இரண்டறக் கலந்த பேரின்ப அனுபவத்திலே இனிது திளைத்திருக்கும் அந்தப் பொது நிலையத்திலே சாதியேது? சமயமேது? இவைகளை விட்டவர்களுக்குத்தான் வீட்டுலகில் இடமுண்டு. எல்லாச் சமயங்களுஞ் சேர்ந்ததோர் சமுதாய நிலையே மோட்சமென்று சொன்னாலும் அது பொருந்தும். வீட்டு நெறிக்கு மக்களைப் பக்குவஞ் செய்கின்ற பல சமயங்களுள்ளே சைவசித்தாந்த சமயமும் சீரியதோர் மெய்ந்நெறியாய்ச் சிறந்து விளங்குகின்றது. சைவ சித்தாந்த நெறி மிக்க தொன்மை வாய்ந்தது. சிந்துவெளி நாகரிக காலத்துக்கும் முற்பட்ட இத்தெய்வநெறி மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர்களாலும் சுந்தரமூர்த்திநாயனார் முதலிய சமயகுரவர்களாலும் ஆக்கம் பெற்று வளரும் பரம்பரைச் செல்வமாக நிறைவு பெற்றுள்ளது. ஆகம வரம்பினுள்ளே நின்று நிலையான பேரின்பத்தைத் தருகின்ற இச் செந்நெறியினை,

ஓரும் வேதாந்தத் துச்சியிற் பழுத்த
சாரங் கொண்ட சைவசித் தாந்தம்'' என நல்லறிஞர்கள்

நயந்து பாராட்டுகின்றனர்.

இப்புனித நெறிக்கு அதனது விசாலமான அடிப்படைக் கொள்கையானது சிறந்ததோர் நல்லணியாகத் திகழ்கின்றது. உலோகாயதர் முதலாக அப்பாலும் அடிச்சார்ந்தார் ஈறாக எல்லாரும் தத்தம் தகுதிக்கேற்பப் படிமுறையாக உயர்ந்து செல்வதற்கு இடந்தந்து நிற்கின்ற இப் பேரழகானது உலகம் முழுவதையும் கவர்ந்து கொள்ளத்தக்க தனித் தன்மையினைச் சைவசித்தாந்த நெறிக்கு உரிமை செய்து நிற்கின்றது. மக்கள் ஈடேறும் வண்ணம் உயர்நலமளித்து நிற்கின்ற இத்திரு நெறியானது உலகப் பொதுநெறியாக வைக்கும் தகைமை பெற்றுள்ளது. இது அனுசரித்தற்கு எளியது; அனுபவித்தற்கு இனியது. இந்த அனுபவம் தனித்

தனியே சைவர்களின் வாழ்க்கையில் மலரவேண்டும்; சமுதாய வாழ்க்கையில் மலரவேண்டும்; சமுதாய வாழ்க்கையிலே கமழவேண்டும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கு வழிபாட்டு முறைகளைப் படிகளாக வகுத்தமைத்து எல்லார்க்கும் அவரவர் மன நிலைக்குப் பொருத்தமான சந்தர்ப்பந் தந்து, நால்வகை முத்திநிலைகளாகிய இன்ப நிலைகளைக் காட்டி, எல்லார்க்கும் இனியதாய தனிச்சிறப்புவாய்ந்தது சைவம். இந்தச் சிறப்பினை உலகறியச் செய்தல் சைவர்களின் தலையாய கடமையாகும்.

பலதரப்பட்ட எல்லா ஆன்மாக்களையும் அதனதன் அறிவு விளக்கத்திற்கேற்ப அருவ உருவ, அருவுருவ, வழிபாடுகளில் உபாயமாகச் செலுத்தி உய்விக்கின்ற சைவத் திருநெறியானது ஆன்மாக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். சைவ நெறியைக் கடைப்பிடித் தொழுகும் எந்த ஓர் ஆன்மாவும் வீண் போவதில்லை. இது சைவத்தின் ஒரு விசேட இலட்சணமாகும்.

தாசமார்க்கம், புத்திரமார்க்கம், தோழமார்க்கம் சன்மார்க்கம் என்னும் தொடர்பு பற்றிய வெவ்வேறு பத்தி நிலைகளைப் படிமுறையாக வளர்த்து இரண்டறக் கலத்தல் என்கின்ற அத்துவித முத்திக்கு இட்டுச்செல்லும் அமைதியுடைய சைவநெறியானது மனித வாழ்வின் மணி முடியாய் விளங்குகின்றது. எந்த வணக்க முறையையுங் குறைகூறி ஒதுக்கிவிடுகின்ற குறுகிய நோக்கம் சைவநெறிக்கில்லை. இதனால் ஆத்மீக பரிபூரண நிலையை அருளுகின்ற இரட்சணிய வழியாக அது நின்று நிலவுகின்றது.

முப்பொருள் ஆராய்ச்சியினைச் சற்காரியவாதத்தின் வாயிலாக நிலைநாட்டுகின்ற சைவசித்தாந்தம், நேரிய நோக்கத்திற்கு ஓர் உதாரணமாக விளங்குகின்றது. அது கட்டுப்பாடான—ஒழுங்கான நெறிமுறையிலே மக்கட் கூட்டத்தைச்செலுத்தி விடுதலை வாழ்விற் புகுத்துகின்ற விழுமிய நோக்குடையது. ஆசாரம் சுகாதாரம் என்பவற்றைச்சமூகவாழ்வுடன் இணைத்துக் கூறுவதால் இம்மைக்கும் உறுதுணையானது.

இறைவனது திருப்பரிசம் மக்கள் உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் படுதலால் நமது உள்ளத்தை மாத்திரமன்றி உடம்பையும் உடையையும் புனிதமாக வைத்திருக்குமாறு சைவம் நமக்குக் கட்டளையிடுகின்றது. வெளியாசாரம் இலேசாக அனுட்டிக்கத்தக்கது. இதனை அனுட்டிக்க முடியாதவர்கள் உள்ளாசாரம் உடையவர்களாய் வாழ்வது முடியாது.

இத்தகைய நல்லியல்புகள் யாவும் ஒருங்கேயமைந்துள்ள சைவத்திற் பிறப்பதும் ஒரு நற்பேறே. அதனுட்பிரவேசிப்பதும் ஓர் பெரும்பேறே. அதன்வழி ஒழுகுவதும் ஓர் உயர்பெரும் பேறே. சமூகத்தோடு இணைந்து நிற்பதற்குரிய இனிய இயல்புகள் வாய்ந்த சைவநெறிக்கும் சமூகத்திற்குமிடையிலுள்ள மிகப்பெரிய இடைவெளியினை நிரப்பவேண்டிய உத்தரவாதம் சைவநெறி நிற்போராகிய சைவசித்தாந்தச் செல்வர்கள்மீது சுமத்தப்பட்டுள்ளது. சைவசித்தாந்த நெறியினை அகில உலக நாடுகளும்

தத்தம் ஆசாரசீலங்களுக்கும் வெப்ப தட்ப நிலைகளுக்கு மேற்ப அனுசரித்தற்கு வழிகாட்டவேண்டியது சைவப் பெருமக்களின் தாழாத கடமையாகும்.

சீர்திருத்தங்கள் யாவும் சைவத்தின் அடிப்படைக் கொள்கைகளோடு மாறுபடாவண்ணம் அமைதல் வேண்டும். சர்வதேசிய நோக்குடன் விசால புத்தி கொண்டு அவைகள் அமைக்கப்பட்டால் சமூகத்துக்குப் பெரும் பயன் விளைய ஏதுவாகும்.

இன்றைய விஞ்ஞான உலகினை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கும் தீவிர விவேகம் படைத்த இளஞ்சந்ததிக்கும் கவர்ச்சியளிக்கும் முறையில், நமது சீர்திருத்தங்கள் ஆக்கபூர்வமானவைகளாய் இருத்தல் வேண்டும். விஞ்ஞான ஆராய்ச்சி முடிபுகளைக் கொண்டும் சைவசித்தாந்தக் கொள்கைகளை நிலைநாட்டும் பணியில், நாம் முன்னேற வேண்டியது மிகமிக அவசியமாகின்றது.

இவ்வுலக வாழ்வினையும் மறுவுலக வாழ்வினையும் ஒருங்கே கட்டியெழுப்பும் முறையில், நமது இளஞ்சந்ததி, சைவநெறியில் உணர்ச்சி கொண்டு எழுதல் வேண்டும். வாழ்வு வந்தபோது அதிலே ஆழ்ந்து விடாமலும், தாழ்வு வந்தபோது அதிலே வீழ்ந்துவிடாமலும், இரண்டையும் தாங்கும் வல்லமையுடைய ஒரு புதுச்சந்ததியை உருவாக்கும் பணியிலே நமது சைவத்தாபனங்கள் இறங்கி உழைத்தால், உண்மையான ஒரு சைவ சமுதாயத்தை நாம் உருவாக்கிவிடலாம். இது நமக்குப் புதியதன்று. நமது மகான்களின் பழைய சாதனை நமக்குப் புதியதுபோலத் தோன்றுகின்றது. மறப்பிற் பிறந்த புதுமை.

தன்னலமற்ற சேவையே பற்றுக்கோடாகத் திருவருளை முன்னிறுத்தி முயன்றால், நமது இலட்சியங்களை நிச்சயமாக அடைதல் முடியும். இச்சேவையிலே நமது சமயத் தாபனங்களும் ஆலயபரிபாலனங்களும் முன்னணியில் நின்று ஊக்கமளித்தல் இன்று மிகமிக அவசியமாகின்றது.

இன்றைய சர்வசமயச் சூழ்நிலையிலே, நமது சைவசித்தாந்தச் செந்நெறியினை மற்றவர்கள் கௌரவிக்கும் வண்ணம் உயர்வு பெற்று ஒளிரச்செய்வதோடு நமது வாழ்க்கையும் சைவமயமாக மிளிரவேண்டும்.


"யாழ் உலோகத் தொழிற்சாலை"

தூய அலுமினியப் பாத்திரங்களுக்கும்,
எவர்சில்வர் பாத்திரங்களுக்கும், அலங்காரப் பொருள்களுக்கும்
உத்தரவாதமும் நம்பிக்கையும் நிறைந்த இடம்.

250-252, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7049 தந்தி: "யாழ் மெற்றல்"

**YARL METAL INDUSTRIES**
JAFFNA.

# சைவசமயக் கிரியைகளின் இன்றியமையாமை

பிரமஸ்ரீ. க. வை. ஆத்மநாதசர்மா
"ஞானதீபம்" பத்திரிகாசிரியர், யாழ்ப்பாணம்.

ஆழமும் அகலமும் நுட்பமும் உடையது சைவசமயம். அது இன்னுரால் தோற்றுவிக்கப்பட்டது என்றே, இன்ன காலத்தில் தோன்றியது என்றே சொல்லமுடியாத பெருமையும் உடையது. சைவசமயத்தின் மூலாதாரமான இடம் புண்ணிய பூமியாகிய பாரத நாடு. பௌத்தம் தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்பே, அது ஈழநாட்டிலும் பரவியிருந்தது என்பதற்கு இதிகாசமே சான்றுகும். சைவம் பரவிய எல்லை அவ்வளவோடு மாத்திரம் அமையவில்லை. அது பாரதத்தின் மேற்கிலும் கிழக்கிலும் உள்ள கடல் கடந்த நாடுகளிலும் பரவியிருந்ததென்பது இக்கால ஆராய்ச்சியாளர் ஆதாரத்தோடு கூறும் முடிபாகும்.

வாழ வழி வகுப்பது சமயம். வாழ்க்கையில் நேரும் சிக்கல்களைத் தீர்ப்பது சமயம். காலத்துக்குக் காலம் மனிதனிடத்து எழும் மாக்களின் இயல்பை மாற்றி, அவனை மீண்டும் மனிதனுக்குவது சமயம். மனத்தில் எழும் சிந்தனைச் சுழலை மாற்றி, ஆறுதல் அளிப்பது சமயம். ஏறத்தாழ எல்லாச் சமயங்களும் இந்த முடிபுக்கே வருகின்றன. சைவசமயமோ மனச் சாந்தியளவில் முடிபு கொள்ளாமல், ஆன்மீக சாந்தியையே இறுதி முடிபாகக் கொண்டுள்ளது.

கணந்தோறும் காலம் கழிந்துகொண்டே இருக்கிறது. அது ஒரே சீரான வேகத்திலேயே போய்க்கொண்டிருக்கிறது. ஆனல், மனிதன் தனது செயல்களின் வேகத்தை விரைவு படுத்திக்கொண்டான். அதற்குரிய காரணம் விஞ்ஞான வளர்ச்சியே யாகும். பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த மக்களின் செயல் முறைகளுக்கும் இந்த இருபதாம் நூற்றுண்டில் வாழ்கின்றவர்களின் செயல் முறைகளுக்கும் அதிக பேதம் காணப்படுகிறது. அக்கால மனிதனும் உழைத்தான், உண்டான், உறங்கினுன், இன்பம் பெருக்கினுன். இக்காலத்தவர்களும் அவற்றைச் செய்யாதிருக்கவில்லை. அடிப்படையான செயல்களில் யாதொரு பேதமும் இல்லை. பின், பேதம் யாது என்பது சிந்திக்கப்படவேண்டும்.

அக்காலத்தவர்களது உலக அறிவு ஒடுங்கியிருந்தது. இக்காலத்தவர்களது உலக அறிவு நவநவமாகக் கண்டுபிடித்த விஞ்ஞான சாதனங்களின் உதவியினுல் விரிவடைந்துகொண்டே போகிறது. அக்காலத்தவர்கள் நலேமுறை தத்துவமாகச் செய்துவந்த செயல்முறைகளை முன்னேர் சொற்படி நம்பிச் செய்து வந்தார்கள். இக்காலத்தவர்கள் எதற்குங் காரண காரியத் தொடர்பை ஆராயும் மனங்கொண்டவராய் விட்டனர். அதனுல்

இக்காலத்தவர் தாம் செய்யுஞ் செயல்களுக்குரிய காரணத்தை அறிய முடியாதவிடத்து, அச்செயலைச் செய்வதில் பற்றுக் குறைந்தவராகின்றனர். எனவேதான், ''சைவ சமயக் கிரியாமுறைகள் இக்காலத்திலும் இன்றியமையாதனவா?'' என்ற தலைப்புக்கொண்ட இக்கட்டுரை இங்கு இடம் பெறுவதாயிற்று.

அக்காலத்திலே படித்தவர் மிகச்சிலர்; படியாதவர் மிகப்பலர். படித்தவர் படித்தன சிலவேயாயினும், அவற்றைத் துறைபோகக் கற்றிருந்தனர். அதனால், தீர்க்கதரிசிகளாக, பிறர் கொண்ட ஐயந் திரிபுகளைப் போக்கும் வன்மை படைத்தவராக விளங்கினர். ஒருசார் படித்தவர், மறுசார் படியாதவர்; படித்தவர் சொல்வதைப் படியாதவர் கேட்டு அதன் வழி வாழ்ந்தனர். இடைச்சார்பில் எவரும் இருந்திருக்கவில்லை. அதனால் யாதொரு கேடும் நேரவில்லை. இக்கருத்து,

''கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்(கு)
ஒற்கத்தின் ஊற்றாந் துணை'' என்ற தேவர் வாக்காலுந் துணியப்படும்.

காலமாற்றத்தில் கல்வி பரவத் தொடங்கியது. எல்லோருக்கும் உணவு வேண்டியதுதான். அதற்காகக் காலங்கருதாமல், பருவம் நோக்காமல், தரம் அறியாமல் எவரும் எந்த உணவையும் உண்ணலாமா? ஆகாதே. அது போலக் கல்வி கற்பதிலும் வரம்பு கெடலாகாது எனக்கருதிய தீர்க்கதரிசியாகிய திருவள்ளுவர்,

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'' என வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இந்த வரம்பு கடந்த நிலையிலேயே இடைச்சார்பானவர்கள் இக்காலம் மலிந்துள்ளனர். இவர்கள் கற்றவருமாகார், கல்லாதவருமாகார். துறை போகக் கற்றவர், தாமே திருத்தமுறுவர். கல்லாதவர், கற்றவர் சொற்படி நடப்பர் ஆதலின் திருத்த இடம் பெறுவர். இடைப்பட்டவர்களே இரங்கப்பட வேண்டியவராவர்.

சைவசமயச் செயல்முறைகள் யாவும் அறிவு சான்ற முன்னோர்களால், காரண காரியத் தொடர்பு கொண்டு நல்ல நோக்கத்துடன் அமைத்து வைக்கப்பட்டனவேயாம். காரண காரியத்தொடர்பை அறிந்து செய்வது நல்லதுதான். ஆயினும், அதனை அறிய முடியாத பருவத்தில் அறிய முயல்வதும், அதனை அறியமுடியாதபோது அது தவறு எனச் சாதிக்க முற்படுவதும் மௌட்டீகமாகும். உண்டால் பசிதீரும் என்பதை உணராத குழந்தை உணவை வெறுத்து நட்டமடைவதுபோலவாகும்.

சைவசமய ஆசார அனுட்டானக் கிரியைகள், ஆன்மார்த்தம் பரார்த்தம் என இருவகைப்படும். ஒரு குழந்தை, தன் தாயின் கருப்பத்தில் உற்பத்தியாகிப் பிறந்து வளர்ந்து வாழ்ந்து மடியும் வரையும் உள்ள கிரியைகள் ஆன்மார்த்தம் எனப்படும். பொது வழிபாட்டுக்குரிய ஆலயம் அமைத்தல் முதல் விழா எடுத்தல் ஈறான கிரியைகள் பரார்த்தம் எனப்படும். வேதம், ஆகமம் என்பவற்றில் இவற்றை அநுட்டிக்கவேண்டிய விதி

முறைகள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. விஞ்ஞான அறிவு விரிந்துள்ள இந்தக் காலத்திலும் இந்தக் கிரியாமுறைகள் இப்படித்தான் அநுட்டிக்கப்படவேண்டுமா என்ற வினு விந்தையானது.

மனித வாழ்வின் வசதிக்காகவே சட்டப் பிரமாணங்கள் மனிதரால் ஆக்கப்பட்டவை. ஒரு நீதி மன்றத்திலே இன்ன இன்ன முறைப்படி மக்கள் நடந்துகொள்ளவேண்டும் என்ற விதி இருக்கிறது. இந்தக் காலத்திலும் இப்படித்தான் விதிக்கு அடங்கி நடக்க வேண்டுமா என்று கேட்பது போலத்தான் இருக்கிறது முந்திய வினு. சில்வாழ்நாட் பல் பிணிச் சிற்றறிவினராகிய மனிதரால் ஆக்கப்பட்ட உலக வாழ்வுச் சட்டப் பிரமாணங்களை, மனிதராகிய நாம் மதித்து நீதிமன்றத்தில் அடங்கி வாழக் கடமைப்பட்டுள்ளோம். ஒரு குறைவுமில்லாது நிறைவுத் தன்மை பூண்ட இறைவனுலும், இறைவனது அருள்வழிப்பட்ட முனிவர்களாலும், இருமை வாழ்வுக்கும் ஏற்றனவாக அமைக்கப்பெற்ற வேதாகம சாஸ்திரப் பிரமாணங்களைப் பின்பற்றி ஒழுகும் விஷயத்திற்ருன் எமக்கு இப்படியாக விபரீத புத்தி தோன்றவேண்டும். சைவசமயிகளிடத்தே இந்த விபரீத புத்தி இடம்பெருமல், அவர்கள் கிரியாமுறைகளைத் தொன்மை மறவாது இக்காலத்திலும் இன்றியமையாதனவாக அநுட்டித்து ஈடேறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் சுரப்பாராக.

சைவசமயக்கிரியாமுறைகள் ஆன்மார்த்தமாயினும் பரார்த்தமாயினும், அவற்றில் முதற்கண் இடம் பெறுவது குருவணக்கம். எமக்கு வழி காட்டியாக உள்ளவரே குரு எனப்படுவார். வணக்கச்செயல், 'நான்', 'எனது' என்னும் இறுமாப்புக் குணங்களைப் போக்குவது.

ஒவ்வொருவருக்கும் ஐந்துபேர் குரவராக மதிக்கப்படவேண்டியவர் என்பதும்; நாட்டை ஆளும் அரசன், கல்வி கற்பிக்கும் ஆசிரியன், பெற்றதாய், தந்தை, தனக்குமுன் பிறந்தவனுகிய தமையன் இவர்களே ஐங்குரவர் என்பதும்; இவர்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் வணங்கி வருவதே தொன்மை மறவாத சிறந்த ஆசாரமுறை என்பதுமாம்.

இந்த ஐங்குரவரைவிடச் சமயச்சார்பிலே ஒவ்வொருவருக்கும் தீட்சா குரு என ஒருவர் அமையவேண்டியவர். தீட்சை என்பது சமயப் பிரவேசஞ் செய்யுங் கிரியை. அதனைச் செய்விப்பவரே தீட்சா குரு ஆவார். அவரே ஒருவனுக்கு ஞான குருவாகவும் அமையலாம். ஞான சாத்திரங்களைப் போதிப்பவர் ஞான குரு. தீட்சா குருவன்றிப் பிறர் ஒருவரும் ஞானகுருவாகலாம். தீட்சா குருவே புரோகித குருவாகவும் இருக்கலாம். சைவசமயிகள் தாம் செய்யத்தொடங்கும் எந்தக் கிரியைக்கும் தகுந்த ஒரு குருவை முதலில் தேடிக்கொள்ளவேண்டும். ஒருமுறை ஒருவரைக் குருவாகத் தேடிக்கொண்டால், ஆயுள் உள்ளவரையும் அவரை நிந்தித்தல் ஆகாது. குரு நிந்தை பஞ்சமா பாதகங்களுள் ஒன்ருகும். குருவை வணங்கி அவர் தரும் சிவசின்னமாகிய திருநீற்றை வாங்கித் தரித்துக்

கொள்ள வேண்டும். திருநீறு தரியாதவன் எந்தக் கிரியைக்கும் உரிமை யற்றவன் ஆவன்.

அடுத்தபடியாக, அவ்வக்கிரியைகளுக்குரிய செயல்களைக் குருசொற்படி கேட்டுச் செய்யவேண்டும். அப்படியன்றிச் செய்பவன், தான் சொல்லுகிறபடி குரு செய்யவேண்டும் என முனைவது தவருகும். அந்த இடத்திலே செல்வச் செருக்கோ, அதிகார வெறியோ இடம்பெறுமாயின் அது அவனைத் தீய நெறிப்படுத்திவிடும்.

தானம் என்பது கொடை. கொடுப்பதெல்லாம் கொடைதான். ஆயினும், ஒருவர் முறையாகத் தாம் ஈட்டிய பொருளைப் பிறருக்குக்கொடுக்கும்போது ஏற்பவரைப் பொறுத்து அது வேறுவேருகப் பெயர் பெறும். எப்பொழுதும் கொடுப்பவனது கை உயர்ந்தும், ஏற்பவனது கை தாழ்ந்தும் இருக்கும் என்ற கூற்றுத் தவருனது. தம்மினும் தகுதியில் உயர்ந்தாருக்கு ஒன்றைக் கொடுக்கும்போது வணக்கத்துடன் கொடுக்கவேண்டும். தம்மினும் தகுதியிற் குறைந்தவருக்கு ஒன்றைக் கொடுக்கும்போது இன்முகத்துடன் கொடுக்கவேண்டும். இன்றேல்; கொடுப்பவனை அறியாமலே, அவனிடத்தில் ''யான் கொடுக்கிறேன்'' என்ற இறுமாப்புப் புகுந்து அவனைக் கெடுத்துவிடும்.

பரம்பொருளாம் இறைவனைக் குறித்து ஆலயங்களுக்குக் கொடுப்பது சமர்ப்பணம். அரசனுக்குக் கொடுப்பது திறை. குருவுக்குக் கொடுப்பது தட்சிணை. கலைஞருக்குக் கொடுப்பது சந்மானம். இரவலர்க்குக் கொடுப்பது பிச்சை. நண்பனுக்குக் கொடுப்பது விருந்து. உரிமைப்படி சுற்றத்தவருக்குக் கொடுப்பது நன்கொடை. இவ்வாறு பலதரப்பட்ட ஈகையில்; குருவுக்குக் கொடுப்பதாகிய தட்சிணை, சைவசமயக் கிரியைகளில் முதன்மையான இடத்தைப் பெறுகிறது.

இறந்தவர்களான தமது முன்ஞேரைக் குறித்துச் செய்யப்படுவதாகிய கிரியைக்குச் ''சிராத்தம்'' என்று பெயர். செய்பவன் சிரத்தை (ஊக்கம்) கொண்டு செய்யப்படுவதனுல் அது சிராத்தம் எனப் பெயர் பெற்றது. இக்காலத்துச் சிலர், சிராத்தஞ் செய்விக்கும் குருவினிடத்தே அந்தச் சிரத்தை இருக்கவேண்டும் என எண்ணுபவர்போல நடக்கின்றனர். அது தவறு. அந்த நிலை மாறவேண்டும்.

இப்படியே சைவசமயக் கிரியைகளின் இன்றியமையாமைபற்றி ஒவ்வொன்ருக விளக்கிக் காட்டுவதாயின் இக்கட்டுரை மிக விரிந்து விடும். எனவே; சைவசமயிகள் யாவரும், கிரியைமுறைகள் யாவும் இக்காலத்தில் மாத்திரமல்ல, எக்காலத்துக்கும் உரியன என்பதை உணர்ந்து கடைப்பிடித்துத் தமக்கும் பிறர்க்கும் பயன்பட வாழ்வதற்கு இறைவன் திருவருள் பாலிப்பாராக.

———⊙———

# தேவாரத் திருமுறைகளும் சேக்கிழார் பெருமானும்

பண்டிதர் க. மயில்வாகனன்.
தலைமை ஆசிரியர், சிவப்பிரகாச வித்தியாசாலை, சங்கானை.

அறநூல்களை நிரைப்படுத்திய சான்றோர், வேதத்தைப் பசுவென்றும், ஆகமங்களைப் பால் என்றும், நால்வர் நற்றமிழை நறுநெய் என்றும், குறிப்பிட்டுச் சென்றனர். நால்வர் நற்றமிழுள் மூவர் முதலிகள் திருவாய் மலர்ந்தருளிய அருட்பாடல்கள், தேவாரத் திருமுறைகள் என வழங்கும். தேவாரம் என்பது, இறைவனுக்கு நாரிற்றொடுத்துச் சாத்தும் நறுமலர் மாலையொப்பப் பத்திமை நாரிற்றொடுத்துச் சாத்தப்பட்ட சொன்மாலையாகும். இனி, 'வாரம்' என்பது தெய்வத்தைப் பரவும் பாடலுமாம். ஞானசம்பந்தப்பெருமான் திருப்பதிகங்களை முதலாம், இரண்டாம், மூன்றாந் திருமுறைகள் என்றும், நாவுக்கரசப்பெருமான் திருப்பதிகங்களை நான்காம், ஐந்தாம், ஆறாந் திருமுறைகள் என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகங்களை ஏழாந் திருமுறை என்றுங் கூறுவது சைவநூன் மரபாகும்.

சைவத் திருநெறியின் தனிப்பெருங் காவலராக விளங்குபவர் தெய்வச் சேக்கிழார். அவர், ''பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப்'' பாவிசைக்கும் அருட்பாவலர். சேக்கிழார் பெருமானது வருகையால், சிவநெறியின் சென்ற காலத்தின் பழுதிலாத் திறம் சீர்பெற்றமைந்தது. இனிவருங் காலத்தின் பழுதிலாத் திறம் திட்டமிடப் பெற்றது. அவர் நெஞ்சம் தமிழ்நெஞ்சம்; தமிழ்மொழியிடத்தும் தமிழ்நாட்டகத்துங் கழிபெருங் காதல் கொண்டவர்; தமிழ்மொழியை ஞானமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ் என்று போற்றுவார்; தமிழகத்தை மாதவஞ் செய்த தென்றிசை என்று வாழ்த்துவார்; அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வென்றேற ஆசையுற்றார்; சைவ நல்லடியார் சால்பெண்ணி இதயங் களிப்புறுவார்; ''தத்தம் பெருமைக்களவாகிய சார்பில் நின்ற எந்தம் பெருமக்கள் பெருமையை'' எண்ணி எண்ணி இறும்பூதெய்துவர். சுருங்கக் கூறின் சிவஞான சுவாமிகள் கூறியாங்கு எங்கள் பாக்கியப் பயனாய் வந்தவர் அவர்.

சேக்கிழார் பெருமான், திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகம் அருளிய நம்பியாரூரரதும், திருத்தொண்டர் திருவந்தாதி புனைந்த நம்பியாண்டார் நம்பிகளதும் வழியில் நின்று, தில்லைக்கூத்தன் 'உலகெலாம்' என்று அடியெடுத்துத்தர, அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் புகழ் என்றும் நின்று நிலவத் திருத்தொண்டர் புராணத்தைத் தொடங்கி, ''மன்றுளார் அடியாரவர் வான்புகழ் நின்றதெங்கும் நிலவி உலகெலாம்'' என்று பாடிமுடித்தார்.

மூவர் திருப்பெயர்களையும் மறைமொழிகளாக மதித்த சேக்கிழா ரடிகள், தேவாரத் திருமுறைகளைத் திருமறைகள் என்றுபோற்றினார். அதனை ''வண்தமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்'' என்றும், ''புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனார்'' என்றும், ''ஆதிஞானம் மலருந் திருவாக்குடைய வள்ளல்'' என்றும், ''தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தை இருளும் நீங்கவும் எழுது சொன்மறை அளிப்பவர்'' என்றும் வரும் பகுதிகள் கொண்டு இனிது உணரலாம்.

பாடற்றிரண்டு ஒன்றே இறைவன் உவக்கும் இனிய தொண்டு என்ற பேருண்மையினைத் தடுத்தாட்கொண்ட புராணத்தில், ''அன்பில் பெருகிய சிறப்பின்மிக்க அர்ச்சனை பாட்டேயாகும்'' என இறைவன் கூற்றில்வைத்து விளக்கிச் செல்கின்றார். மற்றும் தேவாரத் திருப்பதிகங்களை ஓதும்வழி, என்பு நைந்துருகி, நெக்குநெக்கேங்கி, அன்பெனும் ஆறு கரையது புரள, நன்புலன் ஒன்றி நாத என்று அரற்றி, உரோமஞ் சிலிர்ப்பக் கை கூப்பி, இதயம் மலர்ந்து, களிகூர்ந்து, கண்ணீர் மல்கிநின்று ஓதவேண்டும் என்பதனை அடியார்களை முன்மாதிரியாக வைத்து விளக்கிச் செல்கின்றார்.

தேவாரத் திருமுறைகள், தமிழுலகில் மட்டுமன்றி அனைத்துலகிலும் நிலவி ஆக்கமளிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதனால், சுந்தரமூர்த்திசுவாமிகள், 'பித்தா பிறைசூடி' யெனத் திருப்பதிகம் பாடியதைக் கூறும்வழி, ''இத்தாரணி முதலா உலகெல்லாம் உய'' திருப்பதிகம் பாடினார் என்று கூறியருளுகின்றார். மேலும், சமயம் வாய்க்கும் வழியெல்லாம் தேவாரத் திருமுறைகளின் பெருமையை இயம்பிவந்தவர், பெரியபுராண நிறைவின்போது ஒருசெய்தியைச் சைவநல்லுலகின் முன்வைத்துச் சிவநெறிச் செல்வர்களைச் சிந்திக்கும்படி தூண்டுகின்றார். நம்பியாரூரர் திருக்கயிலாயஞ் சென்றகாலை, வழியிடை அருளிய திருப்பதிகங்கள்கூட மக்களினத்திற்கு மாண்பயன் விளைக்கவேண்டு மென்பது திருவருட் குறிப்பாம். அதனால், ஆழிவேந்தனும் வருணன் அத்திருப்பதிகத்தை ''ஊழியிற்றனி ஒருவர்தந் திருவஞ்சைக் களத்திலுய்த் துணர்வித்தான்'' என்று உரைக்கின்றார். அங்ஙனமாயின் அடியார்கள் அருளுருத்தாங்கி அவனியில் வாழ்ந்தகாலை அருளிய திருப்பதிகங்களுக்கு எத்துணைச் சிறப்பளிக்கவேண்டு மென்பதனை ஓர்ந்து தெளிதல்வேண்டும். ஒவ்வொரு சைவனும் ஏழிசைத் திருப்பதிகங்கள் ஏற்றமுற உழைக்கவேண்டியது தலையாய கடனும் அன்றோ!

தமிழராயினார் தமிழை மறந்து, தமிழிசையை மறந்து, வெறுங் கிரியைகளில் மாத்திரம் காதலுற்று வழிபாடியற்றிய காலத்திலுங்கூடத் திருமுறைகள் தெய்வத் தன்மையால் திருக்கோவில்களில் இடம்பெற்று நிலவின. அரசர்களும் ஆலயங்களில் தேவாரத் திருமுறைகள் ஓதப்படுவதற்கு அன்பர்களை நியமித்து மானியங்கள் ஏற்படுத்தினர். இன்று திருக்கோவில்களில் மீண்டும் திருமுறைகள் இடம்பெற்றுவருதலைக் காண்கின்றோம். இது தமிழன்பர்களுக்கு மகிழ்ச்சிதரும் செயலாவதோடு இறைவன் இன்னருளை எளிதில் எய்துவதற்கும் பேருதவி செய்வதாகும்.

கட்டுரையை முடிக்குமுன் சைவத்தமிழுலகிற்கு வேண்டுதல் ஒன்று விடுக்கவேண்டிய அவசியமும் உண்டாகின்றது. கிறிஸ்துவ நல்லோர், தமது புனித பைபிளைப் பொற்றகட்டிற் சாசனஞ் செய்து,எந்தப் பைபிள் பதிப்பும் அதனை ஒத்திருக்கவேண்டும் என்று விதி செய்து,அதன்படி ஒழுகி வருவதாக அறிகின்றோம். வெளியீட்டுக் கழகங்களும் அச்சகங்களும் பெருகிவரும் இந்நாளில், தேவாரத் திருமுறைகள் பல வெளியாகி வருதலையும் பார்க்கின்றோம். ஆனால், பாடபேதங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இந்நிலையில் சரியான பதிப்பு, சாசனஞ் செய்து வைக்கப்படல் வேண்டும். அந்தப் பாடமே எல்லாப் பதிப்புக்களிலும் இடம் பெறுதல் வேண்டும். சைவத்தமிழ்ச் சான்றோர் இதற்கு வழிகாணவேண்டும் என்று பணிவுடன் வேண்டுகின்றோம்.

வாழிய திருமுறை.


மனித அவயவங்களில் மகத்தானது ஒவ்வொருவரின் பற்கள். நிரந்தர உறுதியும், நிகரற்ற வெண்மையும் உங்கள் பற்களுக்கு நல்கி நிஷ்களங்கமான முக வசீகரத்துடன் தினமும் திகழ

# கோபால் பல்பொடி

பாவியுங்கள்.

**பல்வலி, பல் அரணை, பல்லில் இரத்தம் வடிதல்**

முதலியவற்றை நீக்கி, தந்த வாய்வு, பல்லில் குழி விழுதல், வாய் நாற்றம் ஆகியவற்றை அறவே போக்கி, முத்துப்போன்ற வெண்மையையும் மோகனத் தோற்றத்தையும் தருகிறது.

**கோபால் பல்பொடி**

இலங்கையிலும் இந்தியாவிலும் சகல சமுதாயங்களையும் சேர்ந்த பலகோடி மக்களால் அநேக வருடங்களாகப் பாவிக்கப்பட்டுப் போற்றப்பட்டு வருவது.

கோபால் பல்பொடி

தயாரிப்பாளர்கள்:

எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ,
வேல் கெமிக்கல் ஒர்க்ஸ், மதுரை.

இலங்கை ஏகவிநியோகஸ்தர்கள்:

**எம். ஏ. ஆர். எஸ்.**

**மனுவேல் நாடார் அன் கோ.**


தலைமைக் காரியாலயம்:

193, காலி ரோடு, கொள்ளுப்பிட்டி, கொழும்பு – 3
கிளை: செட்டியார் தெரு, கொழும்பு – 11
தந்தி: Jayajeevi Colombo. போன்: 9019 & 6048.

இலங்கை மக்களின் இணைபிரியாத நண்பன்.

இன்றே வாங்கிப் பாவியுங்கள்.

காரைநகர் பெற்றெடுத்த தவப்புதல்வர்களுட் சிலர்




## கார்த்திகேயப் புலவர்

*1819 — 1898*

திருத்தில்லைப் பல்சந்தமாலை, திண்ணபுரத் திரிபந்தாதி நகுலேசரி யமக அந்தாதி, திருப்போசை வெண்பா, தன்னை யமக அந்தாதி, திக்கைத் திரிபந்தாதி, வண்ணைத் திரிபந்தாதி என்னும் நூல்களின் ஆசிரியர். கந்தபுராணத்திலுள்ள சூரபன்மன் சரித்திரத்தை நாடகமாக இயற்றி நடிப்பித்தவர்; பாரதத்திற் சொல்லப்பட்ட சந்திரவண்ணன் சரித்திரத்தையும் நாடகமாக இயற்றி நடிப்பித்தவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருவாகிய இருபாலைச் சேனாதிராய முதலியாரின் மாணாக்கர்; வேதாகமங்களை நன்கு கற்றவர்; 1886இல், 'உதயபானு' என்னும் சஞ்சிகையை ஆரம்பித்து நடாத்தியவர்.


1886இல், இவரது கையெழுத்துப் பிரதிகள் [திருக்குறள் - நாலடியார் - நிகண்டு] லண்டன் மாநகரில் நிகழ்ந்த சர்வதேசப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டன.



**நாகமுத்துப் புலவர்**

*17.2.1857 — 18.3.1939*

திண்ணபுரப்பதிகம், திண்ணபுர ஊஞ்சல், திருமங்கல வாழ்த்துச் சீட்டுக் கவித் திரட்டு, மலாய் நாட்டு மனோரஞ்சிதக் கும்மி, கலிகால வேடிக்கைக் கும்மி; என்னும் நூல்களின் ஆசிரியர் வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை, திரு. சிதம்பரப் பிள்ளை நெவின்ஸ் என்னும் பேரறிஞர்களின் மாணாக்கர்.




**திரு. S. அல்லின் ஏபிரகாம் (அம்பலவாணர்**
**– B. A., F. R. A. S.**

*1865 — 1922*

வானசாஸ்திரம், கணிதம், இலக்கணம், இலக்கியம் என்பவைகளிற் புலமை மிக்கவர்; வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிற் கணிதப் பேராசிரியராய் விளங்கியவர்; 1910ஆம் ஆண்டில் வால்வெள்ளி ஒன்று தெரியுமெனக் கணித்து, அது நிகழுமுன்னரே அறிவித்தமை காரணமாக எவ். ஆர். ஏ. எஸ் (F. R. A. S.) பட்டம் அளிக்கப்பெற்ற ஆராய்ச்சியாளர்.

தமிழிசையில் வல்லுநர்; சிறந்த சொற்பொழிவாளர்; சைவப் பாடல்களை விரும்பிப் படிப்பவர்; மது விலக்கை ஆரம்பித்து அதில் வெற்றிகண்டவர்.



**உயர்திரு. ந. நடராஜா K. C.**

*(1897 — 1947)*

சட்டநூல் வல்லுநர்; உயர்தர நீதிமன்ற நீதிபதியாய் விளங்கியவர்.

காரைநகரிலுள்ள இந்துக்கல்லூரியைச்சேர்ந்த 'நடராஜ ஞாபக மண்டபம்,' 'பிரசவ விடுதி,' 'சிவாச்சிரமம்,' கொள்ளுப்பிட்டியிலுள்ள 'கமலாசன மாளிகை,' (சிவாச்சிரமத்திற்குரியது) இவரது நூல்நிலையம் (பல்கலைக்கழகத்திற்கும் சட்ட நூல் நிலையத்திற்கும் வழங்கப்பட்டது) என்பன இவரின் நினைவை என்றென்றும் ஞாபகப் படுத்துவன.

இவர் திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவர்.




*11.4.1910 — 20.5.1966*

**சங்கநூற் செல்வர், பண்டிதமணி,**

**சு. அருளம்பலவனார்**

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து, திருவாசகம் என்னும் நூல்களுக்கு ஆராய்ச்சியுரை எழுதிய பேரறிஞர்; பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரைக்காக இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர்.



வேதாகம கிரியா பூஷணம்,

## சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்கள்

*10.3.1888 — 13.3.1967*

காரைநகர், ஈழத்துச்சிதம்பரம் தேவஸ்தானத்தில் அரைநூற்றாண்டுக்கு மேலாகப் பிரதமாசாரியராகவும், பல்லாண்டுகளாக அகில இலங்கைச் சைவசமய குருமார் சபைத் தலைவராகவும், திருக்கேதீச்சரம் சிவானந்த குருகுல பஞ்சாய உறுப்பினராகவுமிருந்து தொண்டாற்றிய பெருமகனார்.

'ஈழத்துச் சிதம்பரம்' என்னும் நூலின் ஆசிரியர்.

"வடமொழி யறிவின் மிக்கு மன்னுமா கமமும் தேர்ந்து
புடவியிற் கோயிற் கேற்ற கிரியையிற் புலமை மிக்கே
கடமைகள் வழுவா தாற்றுங் கணபதீஸ் வரப்பேர் பூண்ட
குடமுனி போல்வி ளங்குங் குரு..............."

என மகாவித்துவான் சி. கணேசையர் அவர்களாற் பாராட்டப்பெற்றவர்.

# DUCK BRAND

(QUICK DRYING)

## ★—★ தாரா மார்க் ★—★

உடனே காயக்கூடிய

**வார்ணீஷை**

மரத்தினுற் செய்த அலுமாரி, கதிரை,

**மேசை, கதவு, மற்றும்**

★ மரச்சாமான்கள் என்பனவற்றிற்கும் ★

**பூசி அதனுடையபளபளப்பை அனுபவியுங்கள்**

**சிறந்த வியாபாரிகள் எல்லோரிடமுங் கிடைக்கும்**

**லங்கா பெயின்ட் கொம்பனி,**

*291, மெயின் வீதி,* **கொழும்பு 11**



# ஜெம் ஹவுஸ்

**தங்கப் பவுண் வியாபாரமும் வைர வியாபாரமும்**

*62, செட்டியார் தெரு,*

**கொழும்பு, 11.**

★ **உத்தரவாதத்துடன் விரும்பியமாதிரி**

★ **விரும்பிய நிறையில் கிடைக்குமிடம்.**

**விரைவில் எமது ஸ்தாபனம் ஒன்று**

**வெள்ளவத்தையில் திறக்கப்பட விருக்கிறது.**

*தொலைபேசி:* 3753 *தந்தி:* "டைமன்கட்"

ரகத்தில் உயர்ந்தது      தரத்தில் சிறந்தது

**பீடி உலகில் மக்கள் மத்தியில் என்றும் மங்காது**

**துலங்கும் "பீடி"**

# பெஸ்ட் இந்தியன் பீடி

# பெஸ்ட் பகதூர் பீடி S.M.K.S.P. பீடி

தங்க நிறம் உள்ள முதல்தரமான புகையிலையினாலும் சிறந்த பீடி இலைகளினாலும் தயாரிக்கப்படுவது.

இலங்கை மக்கள் யாவரும் விரும்பி புகைப்பதற்கு ஏற்றவாறு சிறந்த முறையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு பலவருட முதிர்ந்த அனுபவசாலிகளின் மேல் பார்வையில் தயாரிக்கப்படும்.

பெஸ்ட் இந்தியன் பீடி, பெஸ்ட் பகதூர் பீடி, S.M.K. ஸ்பெசல் பீடி

எப்பொழுதும் பாவியுங்கள்

சிறந்த சுவைக்கு புகையுங்கள் S. M. K. ஸ்பெசல் பீடி

தயாரிப்பாளரும் வினியோகஸ்தரும்:

## மகாலெட்சுமி ஸ்டோர்ஸ்,

உரிமையாளர்: மு. கனகரத்தினம்

26, புதிய செட்டித் தெரு, கொழும்பு.

தொலைபேசி: 4875      102 & 102 9/1

தந்தி மகாலக்      ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு.



சிறந்த முறையில்

**தெளிந்த புகையிலையால் தயாரிக்கப்படுவது;**
**காரத்திலும், மணத்திலும், குணத்திலும்,**
**தனித்தன்மை வாய்ந்தது.**

புகைக்கப் புகைக்க இறுதிவரை இன்பமளிப்பது

# கந்தையா போட்டோ பீடியே

தயாரிப்பாளர்::

## ஆ. ச. க. கந்தையாபிள்ளை,

**நீ 539, மெயின் வீதி,      கந்தானை.**

Best Compliments From the

**Managing Director & Staffs**

OF

**CEYLON TEXTILES LIMITED**

P. O. Box 50
117/119 Second Cross Street.,
COLOMBO-11
Cables: "CETEX"
Phone: 2192



**"சிவாஸ்"**

புடைவை மாளிகை,
இல, 42, காலி வீதி,
முறட்டுவா.



WITH THE BEST COMPLIMENTS
FROM

**JAFFNA STORES**
DANKOTUWA.



**UMA Hardware Enterprises**

(Proprietor: K. AMBALAVANAR
A.V.M. BEEDI CO.)

**GENERAL HARDWARE MERCHANT**

425, Old Moor Street,
COLOMBO-12

சைவமகாசபை
"பொன் விழா" விற்கு
நல் வாழ்த்துக்கள்
லீலா பஞ்சாங்க சித்திரக்
கலண்டர் தயாரிப்பாளர்

**லீலா ஸ்ரோஸ்**
249, நோறிஸ் றோட்
கொழும்பு-11

**Leela Stores,**
249, Norris Road,
COLOMBO-11



*This Space Donated*

*By*

**TEXTILE**
MERCHANTS

**LOTUS STORES,**
157, Second Cross Street,
COLOMBO.

Phone: 2285

Grams: LOTUS



*With the Best Compliments*

From:

**RAJAN STORES**
**& INDUSTRY,**

137, Wolfendhal Street,
COLOMBO



அழகான ஆடையே
அழகைக் கொடுப்பது
தற்காலத்திற்கேற்ற
இலங்கை கைத்தறி சாரிகள்
**சாரங்கள்**
பிளவுஸ் பீஸ்கள்
வாங்குவதற்கு ஏற்ற இடம்

சுப. பெரியண்ணபிள்ளை
அன் கோ,
180, இரண்டாம் குறுக்குத்தெரு,
கொழும்பு 11.

Phone: 5738

# திருநாவுக்கரசர் திருவுள்ளம்

பண்டிதை, சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி.
விரிவுரையாளர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

''திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட திருநாவுக் கரையன்றன் னடியார்க்கு மடியேன்'' என்று திருத்தொண்டத் தொகையில் போற்றப்படுகிறார் திருநாவுக்கரசர். உண்மை, தூய்மை, வாய்மை ஆதியன சேர்ந்து உண்டாக்கும் நிறைவே செம்மையாகும். எனவே கருத்தும், சொல்லும், செயலும் தம்முள் மாறுகாமையே செம்மையாகும். இந்த வழிபாட்டில் உறுதியாக நின்றவர் திருநாவுக்கரசர். வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனுக்கு உவப்பன யாவை யென்பதைத் தாமும் அறிந்து, பிறர்க்கும் அறிவித்தவர் அப்பர். அவருடைய உள்ளத்தின் உண்மையொளியே வாக்கிலொளியை உண்டாக்கியது. இதனால், ''சொற்குறுதிக்கு அப்பரெனச் சொல்'' என்று போற்றினார்கள் பெரியோர்கள்.

சிவசின்னங்கள் விளங்குகின்ற திருமேனியும், மனத்தின்கண் எழுகின்ற தியானம் அறாத உணர்வும், வாயின்கண் ஈறின்றியெழும் திருப்பதிகமும், கையின்கண் உழவாரப்படையும் நாவுக்கரசருடைய தெய்வீக உள்ளத்தை நமக்குக் காட்டுவனவாகும். இவர், சம்பந்தருக்கு முன்னரே சைவராகப் பிறந்து, சமணத்திற் பலகாலம் இருந்து, மீண்டும் சைவராக மாறிச் சைவத்தை வளர்த்தவர். இவர், பல தலங்களுக்குஞ் சென்று வழிபட்டுச் சைவத்தை வளர்த்து வரும்போதுதான் சிறுபிள்ளையாகிய சம்பந்தரைச் சந்தித்தார். சந்தித்தபொழுதே ''அப்பரே'' என்று அழைத்து வழிபட்டார் சம்பந்தர். இதற்குக் காரணம் அப்பரது முதுமையும் தெய்வீக அனுபவமுமேயாகும்.

இவர், எண்பத்தொரு வருடம் இவ்வுலகில் வாழ்ந்தமையால் முதிர்ந்த அனுபவம் உடையவர். இவருடைய பாடல்கள் யாவும் அருள் வீரத்தோடு மிளிர்வன. ''ஈர அன்பினர் யாதும் குறைவிலர், வீரம் என்னால் விளம்புந் தகையதோ ''என்று பாடிய சேக்கிழார் வாக்குக்கு இலக்கியமாக விளங்குவது அப்பருடைய வாழ்க்கை.

நிலையாமை யுணர்ச்சியே திருநாவுக்கரசரைச் சமணத்திற் சேர்த்தது. பெற்றோரின் மறைவும், மைத்துனரின் சடுதி மரணமும், தமக்கையாரின் விதவைக் கோலமும் சேர்ந்து இவருக்குத் துறவுணர்ச்சியை யூட்டியது. கடுந்துக்கத்துட்பட்டவனுக்குச் சில சமயங்களில் கடவுளை நினையாமையும் உண்டாவதுண்டு. இந்த நிலையில் சமணத்திற் சேர்ந்தார். இதற்குக் காரணம் இறைவனுடைய அருளின்மையே யென்பதைச் சேக்கிழார்,

"நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினல்
கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம் குறுகினர்"

என்பதால் காட்டுகின்றார். பின்பு சூலைநோய்வாய்ப்பட்டபோதுதான் அவருக்கு நல்லுணர்வு ஏற்பட்டது; மருள் நீங்கியது; அருள் தோன்றியது. இதனல் தன்னை யறிந்தார்; தலைவனை யறிந்தார்; சைவத்தை யுணர்ந்தார் தமது முன்னைய நிலைக்கு இரங்கினர்.

"கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்போக்கித்
தெள்ளியே னாகிநின்று தேடினேன் நாடிக்கண்டேன்
உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந் தறிதியென்று
வெள்கினேன் வெள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே.

—அப்பர்தேவாரம்

இவருடைய வாழ்க்கை, சோதனை நிறைந்த ஒரு வாழ்க்கையாகும். நீற்றறையிலடைத்தும், நஞ்சு குடிக்கக் கொடுத்தும், மதங்கொண்ட யானையை ஏவியும், கல்லோடு கட்டிக் கடலிலே விட்டும் பலப் பல துன்பங்களை விளைத்தனர் சமணர். அவற்றிலெல்லாம் அஞ்சாது வெற்றிகண்டவர் இவர். இன்னும் சைவத்திலேகூட அவர்க்கேற்பட்ட இடர்ப்பாடுகள் பல. இவற்றை நோக்கித்தான்போலும் "நினைந்துருகு மடியவரை நைய வைத்தாய்" என்றும், 'என்னை நீ படைத்திலையேல் இடும்பைக் கிடமெங்கே" என்றும் பாடியுள்ளார்.

அடிகளின் கொள்கைகள் சமுதாயத்தால் மிக வரவேற்கக்கூடியன. இவை ஏழாவது நூற்றூண்டிலே தோன்றியவையெனினும் இருபதாம் நூற்றூண்டினராலும் வரவேற்கக் கூடியவையாகும். "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே" என்ற தேவாரத்தை நோக்கும்போது, அடிகளாருடைய சமநோக்குப் புலப்படுகின்றது. சமண, பௌத்த சமயங்கள் பரவியிருந்த காலத்தில், அந்த நாகரிகத்தை எதிர்த்துப் போராடினர்; பண்ணும் இசையும் கேட்கக் கூடாது என்ற சமண, பௌத்தக் கொள்கைகளை எதிர்த்துத் "தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்" என்று பாடினர்; பெண்மையை இழிவு செய்த சமணத்துக்கு மாறான முறையில் பெண்மைக்குப் பெருமை கொடுத்துத் தேவாரத்தில் அமைத்தார். நீதியான பக்கம் நின்று துணிந்து கூறுவதற்கு எந்த மனிதனுக்கும் உரிமை உண்டு என்பதை இவரே காட்டியிருக்கிறார். பல்லவ மன்னன் தனது தூதுவரை விடுத்து அப்பரை அழைத்துவரச் சொன்னபோது,

"நாமார்க்குங் குடியல்லோம், நமனை அஞ்சோம்"

என்று வீர உரை பகர்ந்த வீரர் இவர்.

அடுத்து, இவருடைய திருமுறைகளைப்பற்றிக் கவனிப்போம். சிக்கல் சூழ்ந்து நாட்டு மக்கள் இருளிலே மயங்கிக் கிடந்த காலத்திற்றான் அப்பரடிகள் தொண்டை நாட்டிலே அவதரித்தார். இவருடைய பாடல்கள் அனைத்தும் மக்களுடைய உள்ளங்களைத் தொடுவனவாகும்.

"ஒழுகு மாடத்துள் ஒன்பது வாய்தலும்
கழுக ரிப்பதன் முன்னங் கழலடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்
றழுமவர்க் கன்பன் ஆனைக்கா அண்ணலே"

என்று பாடும்போது யாக்கையினது இழிவும்; இறையருளினது பெருமையும் புலப்படுகின்றன. இப்படியாகப் பலவிடங்களில் யாக்கையை இழிவுடையதென அறிவுறுத்தி மக்களை மயக்கத்திலிருந்து விடுக்கத்தக்க பாடல்களைப் பாடியுள்ளார்.

இவருடைய திருமுறைகளின் பெருமைக்குத் திருமறைக் காட்டுச் சம்பவம் பெருஞ் சான்றாகும். அப்பரும் சம்பந்தரும் திருமறைக்காட்டு வேதாரணியேசுவரரைத் தரிசிக்கச் சென்றபோது வேதங்களால் கதவு அடைக்கப்பட்டிருந்தது. உடனே திறக்கப்பாடும்படி சம்பந்தர் அப்பரை வேண்டினார். ''பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ'' என்னும் பதிகத்தைப் பாடி முடித்த அளவிலே கதவும் திறபட்டது. இதிலிருந்து வேதங்களின், பெருமையும் சக்தியும் அப்பருடைய திருமுறைகளுக்கும் உண்டு என்பது புலனாகின்றது.

ஆன்மாக்களின் பக்குவத்தை யறிந்தவுடனே சிவன் துணையாக நின்று அவ்வான்மாவைக் கொண்டு தன்னையடையும் முயற்சியில் ஈடுபடுத்துவன். அம்முயற்சியில் அவன் வழிநின்று ஈடுபடாவிட்டால் உயிர்கள் உய்தியடைய முடியாது. இறைவனை யடையும் இம்முயற்சியைப்பற்றி ஒரு பாடலில் விளக்குகிறார் அப்பர்.

''விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே''

இறைவன் நம்முள்ளத்திலே என்றும் இருக்கிறான். தீக்கடைகோலில் மறைந்து நிற்கும் தீப்போலவும், பாலில் மறைந்து நிற்கும் நெய் போலவும், மணியில் மறைந்து நிற்கும் ஒளிபோலவும் இறைவன் நம்முளே மறைந்து நிற்கிறான். தீயைக் காணவேண்டுமானால் தீக்கடைகோலை நன்றாக இழுத்துக் கடையவேண்டும். நெய்யைக் காணவேண்டுமானால் பாலைக் காய்ச்சிப் பிரை குத்தி இழுத்துக் கடைந்தால் வெளிப்படும். மணியில் உள்ள ஒளியினைச் சாணைக் கல்லில் வைத்துக் கடைந்த அளவாலே வெளிப்படுத்திவிடலாம். இறைவனும் இவற்றைப்போன்று அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்றபடி காட்சி கொடுப்பான். ஒருசிலர்க்கு உறவுக் கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன்னிற்பான். இன்னும் சிலர்க்கு முறுகவாங்கிக் கடைய முன்னிற்பான். வேறுசிலர்க்கு வாங்கிக் கடைய முன்னிற்பான். உடலால் வருந்திக் கண்ட நாவுக்கரசரையும், உரையாற்பாடிக் கண்ட சம்பந்தரையும், உள்ளத்தாற் கண்ட பூசலார்நாயனாரையும் நோக்கினால் மேற் காட்டிய மூன்று நிலையையும் காணமுடியும். அப்பருடைய திருமுறைகளை நோக்கினால் அவை உலகியலிலே வாழ்ந்து அருளியலுக்கு மாறுவோருக்குச் சிறந்த வழிகாட்டுவனவாக அமையும்.

எனவே, திருநாவுக்கரசருடைய உள்ளம் செம்மையான உள்ளம் என்பதும், ''தொண்டலால் துணையுமில்லை, தோலலால் உடையுமில்லை'' யென்று வாழ்ந்த உள்ளம் என்பதும், அனுபவத்துக்கு வாராத அறிவை அவருரைகளிற் காணமுடியாதென்பதும், அவரது உள்ளத்தின் உண்மையொளியே திருமுறைகளிற் பிரதிபலிக்கிறதென்பதும் புலனாகிறது.

"இடையருப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின்
படையருத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதிந்தநெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையருச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்துவாழ்வாம்"

# மாணிக்கவாசகர் பெரிய விஞ்ஞானி!

திரு. செ. தனபாலசிங்கன் B. A. (Lond)
கொழும்பு.

''மனித அறிவுக்கு எட்டாதது அனைத்தும் பொய்; அது வெறும் பித்தலாட்டம்; சாஸ்திரங்களும், அறநூல்களும் முட்டாள்கள் எழுதிக் குவித்தவை'' என்றெல்லாம் சாதிக்கும் ஒரு கும்பல் நம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், பௌதிக சாஸ்திரங்களை ஆழ்ந்து பரிசோதித்த விஞ்ஞானிகள், தாம் கண்டது, காணாததன் அளவுக்கு மிகச் சிறியதாகவே இருக்கிறது என்று ஒப்புக்கொள்கிறார்கள். அன்னார், தாம் பெற்ற அறிவினால் அடங்கி ஆராய்ச்சிக்கு அதீதமான பொருள் உண்டென்பதைத் திட்டவட்டமாக நம்புகிறார்கள்.

காரணங்களுக்கெல்லாம் ஒரு காரணம் இருக்கவேண்டும். பிரகிருதி விதிகளுக்கெல்லாம் விதி ஒன்று இருக்கவேண்டும். அதுதானே பராசக்தி. எந்த ஆராய்ச்சியை எடுத்துக்கொண்டாலும் ஓரளவுக்குமேல் உண்மையை அறியமுடியாது. பஞ்சப் புலன்களைத் துணைக்கொண்டு அறிந்த உண்மைகளைப் பிரமாணமாக வைத்துக்கொண்டு விஞ்ஞான ஆராய்ச்சி நடைபெறுகிறது. பௌதிக சாஸ்திரங்கள் துருவித்துருவி ஆராயப்படுகின்றன. இவற்றுக்கு அப்பாற்பட்ட விஷயத்தை மனிதன் ஆராயப்புகும் போது புத்திக்கு அதீதமான பாறையிலே மனித மூளை போய் முட்டி மோதுகிறது. அது ஆராய்ச்சியின் எல்லையாகவும் அமைந்துவிடுகிறது.

பிரமாணங்களுக்கு அதீதமான பரம்பொருளை மேல்நாட்டு அறிஞர்களே பார்க்க முற்பட்டிருக்கிறார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதுபோல் அந்த ஆரா அமுதத்தை விதியின்மையால் வாரிவிழுங்க முடியாது விக்கி இருக்கிறார்கள். பொருளியலிலும் அறிவியலிலும் பெரிய வெற்றி கண்ட மேலைநாட்டார், அருளியலிலும் எடுத்து அடிவைத்திருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். கொந்தளிப்பு நிறைந்த அண்ட வெளியிற் பணியாற்றும் ஒரு சிறு அணுதானும் தெளிவு இல்லாத—தேவையில்லாத வேலையைச் செய்யவில்லை. அவைகள் தாங்கள் இப்படித்தான் வேலை செய்ய வேண்டும் என்ற ஒரு நியதியில் முடிவுகட்டிச் செயற்படவும் இல்லை என்று பாடுவான் ஷெல்லி என்னும்ஆங்கிலப் புலவன். அணுக்கள் எப்படி இயங்குகின்றன என்று அவன் சிந்திக்கிறான். அப்போது சூரியனுடைய ஒளி அவன் இருந்த அறைக்குள்ளே வருகிறது. அந்த ஒளிக் கற்றையின் சிறுபகுதியில் தூசித் துணிக்கைகள் ஒழுங்காக இயங்குவதைப் பார்க்கிறான். சிந்தனை சுழல்கிறது. இவை எல்லாவற்றையும் இயக்குவோன் ஒருவன் இருக்கத்தான் வேண்டும் என்ற முடிபுக்கு வருகிறான். அந்த இயக்குவோனை அகண்ட பரம்பொருள் என்று பெயரிட்டுப் பாடுகிறான். இயற்கையைப்

பாடுவதில் கருவிலே திருவுடையான் ஷெல்லி.

இந்த ஷெல்லியைப் பார்த்துப் பாடுகிறான் நம்காலத்திலே வாழ்ந்த பாரதி.

மூலப் பழம்பொருளின் நாட்டம்-இந்த
மூன்று புவியுமதன்; ஆட்டம்;
..........................................
..........................................

காலை இளவெயிலின் காட்சி-அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி;
நீல விசும்பினிடை இரவில்-சுடர்
நேமி யனைத்துமவள் ஆட்சி

சக்திக்கு விளக்கம் கொடுக்க வந்த பாரதி இப்படிப் பாடுகிறான். திருப்பெருந்துறைச் சிவனைப் பாடுகிறார் மணிவாசகர். அப்பெருமானின் அற்புதத் திருவாசகம் பின்வருமாறு:-

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றி யொன்றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

ஒவ்வொரு பொருளிலும் இறைவன் நுட்பமாய் வியாபித்திருக்கும் நிலையைச் ''சென்று சென்று அணுவாய்'' என்றும், எல்லாப் பொருளையும் உண்டாக்கிய இறைவனது வியாபகம் நுட்பத்தினும் நுட்பமாதலின் ''தேய்ந்து தேய்ந்தொன்றும்'' என்றும், இறைவன் இயக்கினாலன்றி ஒரு பொருளும் தொழிற்படாமையின் ''அன்றி ஒன்றில்லை'' என்றும், தொழிற்படும் உயிர்களுக்கு அப்பாற்பட்டவனாதலின் ''யாருன்னை அறியகிற்பார்' என்றும் மணிவாசகர் விஞ்ஞானிகளைத் திடுக்கிடவைத்துப் பாடுகிறார். ஒவ்வொரு பொருளுக்கும் அடிப்படையாய் நிற்கும் கட்டடப் பொருள் அணு. அந்த அணுவுக்கு விளக்கம் கொடுத்துப் பூரணப் பொருள் அணுவாய் இருக்கின்ற தன்மையைப் பாடுகின்ற மணிவாசகர் ஒரு பெரிய விஞ்ஞானி.

சிந்தித்துப்பார்ப்போமேயானால் இறைவனின் நிலையை யாரறிய வல்லவர்.? மகாபாரதம் சாந்தி பருவத்தில் அற்புதமான ஒரு வருணனை வருகிறது. ''உலக மாந்தர் தமது நுண்ணறிவினால் அறியவேண்டிய ஆன்மாவில் ஒன்றியுள்ள பரம்பொருளை அறியாத நிலையிலேயே உள்ளனர். விஸ்தீரணத்தில் பூமியைவிட நீர்ப்பரப்பு உயர்ந்தது. ஒளி, நீரைப் போலல்லாமல் எங்கும் வியாபித்து, நீரைவிட உயர்ந்ததாகிறது. வாயு இல்லாத இடமே இல்லையாதலால் ஒளியைவிடக் காற்று உயர்ந்ததாகும். இக்காற்றையும் தன்னுள் அடக்கிய, எங்கும் நிறைந்த ஆகாயமேகாற்றுக்கும் உயர்வாகக் காணப்படுகிறது. மனமோ ஆகாயத்தைக் கடந்து செல்லக் கூடிய வலிமை பெற்றிருப்பதால் ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது. மனம்

இலயிக்கும் விஷயங்களில் உள்ள தத்துவத்தைப் புரிந்துகொள்ளும் வலிமை அறிவுக்கே ஏற்பட்டுள்ளதால் மனத்தைக்காட்டிலும் அறிவே சிறந்தது. காலம் காட்டும் வழியிலேயே அறிவு செல்லவேண்டியிருப்பதால், அறிவுக்கும் மேம்பட்டது காலம். ஆனால், பிரபஞ்சமே தானாகி மேலே சொல்லப்பட்ட எல்லாப் பூதங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருப்பவனான ஸ்ரீமந். நாராயணனே இவை எல்லாவற்றிற்கும் மேம்பட்டவன். பகவான் முதல், நடு, முடிவு (ஆதிமத்யாந்தம்) என்ற மூன்று நிலைகளும் அற்றவனாதலால் இவனது ஸ்தானம் மாற்றப்படவே முடியாது. இவன் சகல துக்கங்களும் அண்டமுடியாத நிலையிலேயே எப்போதும் இருப்பதால் மிக உயர்ந்தவன் ஆவான். துக்கத்துக்கு எல்லையுண்டு. இவனுக்கோ எல்லையில்லை. இவனே விஷ்ணு எனப்படுவோன். இத்தகைய பெருமைகளைத் தாங்கிய விஷ்ணு உலகரக்ஷகனாகத் திகழ்கிறான்.

கீதாசிரியன் பேசுகிறான்.

> அவ்யக்தம் வ்யக்தி மாபன்னம் மன்யந்தே மாம புத்தய :
> பரம் பாவ மஜானந்தோ மமாவ்யய மனுத்தமம்
> நாஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோக மாயாஸமாவ்ருத:
> மூடோஅயம் நாபிஜானாதி லோகோ மாமஜ மவ்வயம்

அதாவது, என்னுடைய அழிவற்ற ஒப்பற்ற பரம சொரூபத்தை அறியாத அறிவிலிகள் புலன்களுக்கு எட்டமுடியாத என்னைப் புலன்களுக்குத் தென்படும் இயல்பை அடைந்தவனாகக் கருதுகிறார்கள்; யோகமாயையினால் மூடப்பட்டுள்ள நான், எல்லோருடைய அறிவுக்கும் எட்டுவதில்லை. பிறப்பற்ற அழியாத என்னை இந்த மதியிழந்த உலகம் அறிவதில்லை.

கீதாசிரியன் பேசுவதில் நியாயமிருக்கிறது. ஆண்டவனைக் காண எத்தனை எத்தனை முயற்சிகள். காவி உடுத்துத் தாழ்சடை வைத்துக் காடுகள் புக்குத் தடுமாறுகிறான். காய்கனி துய்த்துக் காயம் ஒறுத்துக் காசினி முற்றும் திரிகிறான். கோவில்களைக் கட்டி எழுப்புகிறான். மூர்த்திகளை உருவாக்குகிறான். ஆயிரம் ஆயிரம் குடங்களைக்கொண்டு பாலைச் சொரிந்து, தேனைச் சொரிந்து, நீரைச் சொரிந்து அபிஷேக ஆராதனைகள் பண்ணிப் பார்க்கிறான். யாகங்களைச் செய்து ஹவிசைச் சொரிகிறான். மூக்கைப் பிடித்துக்கொண்டு மூலையில் உட்கார்ந்து தியானம் பண்ணுகிறான். அஞ்சி வழிபடுகிறான். கெஞ்சி வழிபடுகிறான். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றி மூத்த தமிழன், உண்ணத் தெரிந்து, உடுக்கத் தெரிந்து, உறங்கத் தெரிந்த நாள்முதல் இறைவனைத் தேடிப்பார்த்துக்கொண்டேவருகிறான். எல்லாம் வல்ல இறைவனும் எப்படி எப்படியோ அன்பர்கள் உள்ளத்திலே உருவெடுத்துவிடுகிறான். இவர்களுக்கெல்லாம் அப்பர் ஓர் அருள் விருந்து தருகிறார். பாடல் பின்வருமாறு:—

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஒங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே.

இங்ஙனம் ரிஷிகள் பாரமார்த்திகப் பெருநிலையைத் தங்கள் ஸ்வானுபூதியிற் கண்டு அறிந்து பகர்ந்திருக்கிறார்கள். உபநிடதங்களில் உள்ள கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கி, இதுதான் முடிவான நிலை என்று ஒரு மந்திரம் சொல்கிறது. பிரபஞ்சத்துக்கு அப்பால் இருப்பது பூரணம். பிரபஞ்சமாக வந்திருப்பது பூரணம். பிரபஞ்சமாகத் தோன்றி வந்திருக்கும் பூரணம், பிரபஞ்ச அதீதமாக இருக்கின்ற பூரணத்திலிருந்துதான் வந்திருக்கிறது. அப்போது ஒருவினா எழுகின்றது. பிரபஞ்சம் எனப்படும்பூரணம் வந்ததினால் மூலத்தில் இருக்கின்ற பூரணத்தில் ஏதாவது குறை ஏற்பட்டிருக்கவேண்டுமே? அதுதான் இல்லை. குறை இல்லாத நிறைநிலையில் அது பூரணமாகத்தான் இருக்கின்றது. தோற்றத்துக்கு அப்பால் இருக்கும் பூரணம் தோன்றுகின்ற இத்தனையுமாகத் தன்னைக் காட்டிக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.வானத்தில் இலங்குகின்ற நட்சத்திரங்களும், மண்ணிலே மிளிர்கின்ற மலர்களும், உள்ளத்திலே ஒளிர்கின்ற உணர்வும் ஓயாது பரதத்துவத்தை விளக்கிவருகின்றன. இவைகளை நுகர்கின்றவர்கள்பரத்தைக்காணாதுஎப்படி இருக்கமுடியும்?ஸ்ரீஇராமகிருஷ்ணர் பின்வருமாறு சொல்வார். ''பெரிய ராஜமாளிகையைப் பார்க்கப்போகிறவர்கள் மாளிகையைப் பார்ப்பதோடு திருப்தியடைந்து வந்துவிடுகிறார்கள். அதற்குச் சொந்தக்காரனைக்கண்டு அவனோடு உறவு கொண்டாடுவதைப்பற்றிப் பெரும்பான்மையோர் நினைப்பதில்லை. இந்தப் பிரபஞ்சம் என்கின்ற பெரிய மாளிகையில் அவரவர்க்கு உகந்த பகுதியில் இணக்கம் வைத்து அதில் திருப்தியடைந்தவர்களாகப் பலர் நின்றுவிடுகின்றனர். இதற்குச் சொந்தக்காரனாக இருக்கின்ற சர்வேசுவரனைப்பற்றிய எண்ணம், அவனோடு தொடர்புகொள்கின்ற எண்ணம் பலருக்கு வருவது கிடையவே கிடையாது''. இதை அமைத்தவன் சாமான்யமானவன் அல்லன். அவன் சர்வக்ஞன்; வாலறிஞன். அவனுடைய திட்டத்தில் குறை இல்லா நிறை இருக்கின்றது. இதை அறிந்துகொள்ளுகின்ற அளவு நாம் பூரணத்தில் நிலைபெற்றவர் ஆகின்றோம். இதோ மந்திரம்.

''ஓம் பூரணமத: பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ணமுதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய
பூர்ணமேவ அவசிஷ்யதே"

என்னை யறியாமல் எனக்குள்ளே நீயிருக்க
உன்னை யறியாமல் உடலிழந்தேன் பூரணமே

—பட்டினத்தார்—

# திருவருட் பயனில் ஒரு குறட் பயன்

பண்டிதர் ச. சுப்பிரமணியம்.
விரிவுரையாளர், கிறிஸ்தவக் கல்லூரி, அச்சுவேலி.

எமது இந்து சமய நூல்களையும், அந்நூல்கள் தங்கொள்கைகளை நாட்டவும் பிறமதக் கொள்கைகளை மறுக்கவும் கையாளும் வாதத் திறங்களையும் பார்த்து உலகப் பேரறிஞர் பலரும் வியந்து பாராட்டுகின்றனர். உலகிலுள்ள பலசமய தத்துவ நூல்களிலும் வைதிகசமய தத்துவ நூல்களே உயர்ந்தன; சிந்தனைக்கு விருந்தாவன எனப் போற்றுவர்.

இங்ஙனம் இணையற்ற எமது இந்து சமய நூல்கள், சில கோட்பாடுகளை விளக்க, காட்சி, அநுமானம், ஆகமம், அருத்தாபத்தி, உவமை முதலிய அளவைகளை எடுத்தாளும். அவற்றுள் உவமை என்பது பொருளை எளிதில் விளங்கவைக்க மிகச் சிறந்த ஒரு கருவியாகும். இவ்வுவமையைக் கொண்டு ஆரியம் தமிழ் ஆகிய மொழிகளில், அரிய தத்துவக் கருத்துக்கள் மிக எளிதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம் எளிதில் விளங்கக் கூடியதாக மிகப் பொருத்தமுறக் கூறப்பட்ட உவமைகள் சிலவற்றுக்கு நாம் பொருத்தமற்ற உரைகூறி இடர்ப்படுவதுமுண்டு. அப்படியான ஒருவமையைத் திருவருட்பயனில் காண்பாம்.

எங்கள் சமயநூல்கள் யாவற்றினதும் முடிவான நோக்கமும் பயனும், மலநீக்கமும் சிவஞானப் பேறுமாகிய இவற்றைப் பெறுதலே. இவை அருளுருவாகிய குருதரிசனத்தாலும், உபதேசத்தாலுமே நமக்கு ஏற்படும். குறித்த பேறுகளைக் குரு மூலம் பெறுமாற்றைத் திருவருட்பயன் இரு குறட்பாக்களில் பொருத்தமான இரு உவமைகள்மூலம் விளக்குகிறது.

அவை, "விடதகுலம் மேவினும்மெய்ப் பாவகனின் மீளும்
கடனிலிருள் போவதிவன் கண்."

"ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கலனல்
பானு வொழியப் படின்" என்பன.

முதற் குறளில் மலநீக்கத்தை விடநீக்கம் என்னும் உவமையாலும், இரண்டாங் குறளில் சிவஞானப் பேற்றைச் சூரியகாந்தக் கல்லால் தீப்பற்றுதல் என்னும் உவமையாலும் விளக்குகின்றார்.

முதலாங் குறளின் உவமை யமைப்பை நோக்குக.

| உவமானம் | உவமேயம் |
|---|---|
| 1. விடம் தீண்டியவன் | மலம் பற்றிய ஆன்மா |
| 2. விடம் | மலம் |
| 3. விடந் தீர்க்கும் விடகாரி | மலம் நீக்கும் குரு |

| | |
|---|---|
| 4. விடகாரியால் பாவனை செய்யப்பட்டு விடந் தீர்க்குந் தெய்வ நகுலம். | குருவினுற் பாவனை செய்யப்பட்டுக் குருவை அதிட்டித்து நின்று நீக்கும் இறைவன். |
| 5. நேரே நகுலத்தால் விடந்தீராது நகுல பாவனை செய்வோனுல் விடந் தீர்தல். | நேரே கடவுளால் மலம் நீங்காது தன்னைக் கடவுளாகப் பாவனை செய்யும் குருவால் மலம் நீங்குதல். |

இங்ஙனம் உவம உறுப்புக்களைப் பொருந்தவைத்து விடந் தீர்தல் போல மலம் நீங்குதலாகிய பொருளை விளங்கலாம்.

இதன் பொருள்: நகுலமே முன்னின்ருலும் விடந் தீராமல் நகுல பாவனை செய்யும் விடகாரியின் பார்வையாலேயே விடந் தீருவதுபோலத் தன்னைக் கடவுளாகப் பாவனை செய்யும் குருவின் பார்வையாலேயே சீடனுக்கு மலம் நீங்கும் என்பது. இதில் உவமையும் பொருளும் பொருத்தமுற உள்ளன.

அங்ஙனமே சிவஞானப்பேற்றை விளக்கும் இரண்டாங் குறளின் உவமையை நோக்குக:-

| உவமானம் | உவமேயம் |
|---|---|
| 1. தீ பற்றும் பொருள் | மாணவன். |
| 2. தீ உண்டாக்கும் சூரிய காந்தம் | ஞானம் உண்டாக்கும் குரு |
| 3. தீ உண்டாக்குவதற்கு மூலமான சூரியன் | ஞானேதயத்திற்கு மூலமான கடவுள் |
| 4. தீ பற்றுதல் | ஞானம் உதித்தல் |
| 5. நேரே சூரிய கதிரால் தீ பற்ருமல் சூரிய காந்தக் கல்லினூடு பாயும் சூரிய கதிரால் தீ பற்றுதல். | நேரே கடவுளருளால் ஞானம் உதியாமல், குருவினூடாகப் புகுதரும் இறையருளால் ஞானம் உதித்தல். |

இங்ஙனம் உவம உறுப்புக்களைப் பொருந்த வைத்து, தீ பற்றுவது போலச் சிவஞானம் உதிக்கிறது எனப்பொருளை விளங்கலாம். இங்ஙனம் ஒப்பு நோக்கும்போது உவமையில் எவ்வித பொருத்தமின்மையுங் காண முடியாது. இப் பொருள்கோளுக்கு ''நற்கல் ஒழிய அனல் பானு படின் ஞானம் இவனொழிய நண்ணியிடும்'' எனக்கொண்டு கூட்டவும். பொருள்: நல்ல சூரிய காந்தக்கல்லின் துணையின்றி நேரே சூரியனுல் (பஞ்சில்) தீப் பற்றுமாயின், (மாணவனிடம்) ஞானமும் குருவின் துணையின்றி நேரே இறையருளால் உதிக்கும் என்பது.

எனவே, சூரிய காந்தக்கல்லின் துணையோடு பஞ்சிலே தீ பற்றுவிப்பது போலவே, குருவின் துணையோடு சீடனில் சிவஞானம் தோற்றுவிக்கப்பெறுகிறது என்பதும், கல்லும் குருவும் துணைக் கருவி என்பதும், சூரியனும் இறைவனும் மூலகாரணம் என்பதும் தெளிவாம்.

இவ்வாறு பொருள் கொள்வதை விட்டுக் குறள் கிடந்தவாறே சூரியனின்றிச் சூரியகாந்தக் கல்லில் தீ பற்றுமாயின் குருவையின்றியும் மாணவனிடம் ஞானம் உதிக்கும் எனப்பொருள் கூறப்படுகிறது. இப் பொருள்கோளில் உவமையில் பொருத்தக் குறைவும் முரண்பாடும் காணப் படுகின்றன. இவ்வுரையின்படி,

| உவமானம் | உவமேயம் |
|---|---|
| 1. சூரியன் | குரு |
| 2. சூரிய காந்தம் | மாணவன் |
| 3. தீ பற்றுதல் | ஞானம் உதித்தல் |
| 4. —?— | கடவுள் |

மேலே காட்டியவாறு கடவுளுக்கு உவமையாக இருக்கவேண்டிய ஒருறுப்புக் குறைகின்றது. மேலும் சூரியகாந்தக் கல்லில் தீ பற்றுவதில்லை; கல்லின் முன்னுள்ள பஞ்சுபோலும் பிறிதொரு பொருளிலேயே தீ பற்றுகிறது. இதனால் கருத்தில் முரண்பாடு தோன்றுகிறது. ஆகவே, இது வழுவான உவமையெனவும் இடமுண்டாகிறது. இக்காரணங்களால் இப்பொருள்கோள் ஏற்றதோ எனஅறிஞர் எண்ணக் கடவர்.

"பெருக்கம் நுகர்வினை பேரொளியாய் எங்கும்
அருக்கனென நிற்கும் அருள்"

எனப் பிறவிடத்தும் கடவுளுக்கும் அருளுக்கும் சூரியனையும் ஒளியையுமே உவமை கூறும் ஆசிரியருக்கு, சூரியனைக் கடவுளுக்கும் சூரியகாந்தத்தைக் குருவுக்கும் உவமையாகப் பொருள்கொள்ளுதலே உடன்பாடாகும். அன்றிச் சூரியனைக் குருவுக்கு உவமையாகக் கூறுவது உடன்பாடாகுமோ எனவும் சிந்திக்க வேண்டும்.

குருவும் சூரியகாந்தமும் துணைக்கருவியாய் இடைநின்று வாங்கித் தந்து ஞானத்தையும் தீயையும் பிறப்பிக்கும். குருவின் முன்னிருந்து உபதேசம் பெறும் மாணவன், சூரியகாந்தத்தின் எதிரிலிருந்து தீ பற்றும் பஞ்சுபோலச் சிவஞானத்தால் பற்றிக்கொள்ளப்பட்டுத் 'தான் அதுவாகி' விடுகிறான்; பஞ்சு தீயாகி விடுவதுபோல் ஆன்மா ஞானமேயாகிவிடுகிறது என்ற கருத்தும் மற்றைய பொருளில் பெறப்படவில்லை.

மேலும் மல நீக்கத்தைக் குறிப்பிடும் குறளின் உவமையமைப்புடன் சிவஞானப் பேற்றைக் குறிப்பிடும் இக் குறளின் உவமையமைப்பும் ஒத்திருப்பதும் காண்க.

பின்தோன்றிய சித்தாந்த நூல்களுக்கெல்லாம் மூலமானதும் பிரபல சுருதியானதுமான திருமந்திரத்தில்,

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே

என்று கூறப்படுகிறது.

இதன் பொருள்: சூரியனும் சூரியகாந்தமும் பஞ்சும் இருக்கின்றன. ஆனால் தீ பற்றுவதில்லை. மூன்றும் நேர்படும்போது (சூரிய ஒளி கல்லினூடு பாய்ந்து பஞ்சை அடைய) தீ பற்றும். (பஞ்சேயன்றி வேறுபக்குவமில்லாத பொருள் நேர்படினும் தீ பற்றாது.) அதுபோலவே, இறையருள் குரு வடிவாய்வர, பக்குவனான மாணவன் குருவை எதிர்ப்பட்டு மலநீக்கம் பெறுகிறான். மலநீக்கமாகிய காரணமுண்டாகவே சிவஞானப் பேறாகிய காரியமும் உண்டாகும் என்பதாம்.

திருமந்திரத்தில் மலநீக்கத்துக்குக் காட்டிய உவமையே திருவருட்பயனில் சிவஞானப்பேற்றுக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. ஆதலின், முன்னூலாகிய திருமந்திரத்துக்கு மாறுபடாமலே பின்னூலுக்கு உரை கொள்வதே மரபுமாகும்.

**உணர்ந்தவர் உண்மையை உணர்ந்து உரைப்பாராக.**

# கோயில் வழிபாடு

திரு. பெ. திருஞானசம்பந்தன் M. A., L. T.
உயர்தரக் (கல்லூரி) கல்வித் துணை இயக்குநர்,
சென்னை.

'மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே'

என்று செப்புகிறது சிவஞானபோதம்.

'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்ற ஔவை வாக்கை அறியாதார் யார்?

'திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே' என்று உருவ வழிபாட்டின் உட்பொருளை உணர்த்துகின்றார் அருணந்திசிவம்.

சங்க காலத்திலேயே உருவ வழிபாடு இருந்தது என்பதை ஒருவாறு துணியலாம். தொல்காப்பியர் குறிப்பிடுகின்ற மாயோன், சேயோன் ஆகிய சொற்கள் நிறம் பற்றியவையாகலான் உருவ வழிபாடு அவர் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் இருந்து வந்தது எனலாம். கடவுளை நானில மக்கள் பல்வேறு உருவங்களிலும் முறைகளிலும் வழிபட்டனரேனும், தெய்வங்களிடையே ஏற்றத்தாழ்வு கூறப்படவில்லை. அனைத்தையும் கடந்து நிற்கும் இறைவன், அனைத்துள்ளும் வியாபித்திருக்கிறான் என்னும் உண்மையை விளக்கும் 'கடவுள்' என்ற அருமையான சொல்லை மிகத் தொன்மையான தொல்காப்பியத்திற் காண்கிறோம். சிலப்பதிகாரக் காலத்திலே, பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ்க் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும் இருந்தனவென அறிகிறோம். சமயாசாரியர்கள் காலத்தில், 'செம்பியன் கோச்செங்கணான் செய் கோயிலைப்' போன்ற மாடக்கோயில்கள் இருந்தனவாகவும் அறிகிறோம்.

அகத்தியமாமுனிவர், அருளிய தேவாரத்திரட்டின் தொடக்கத்திற் கூறப்படும் வெண்பாவில், அதன் உட்கிடையாகக் காணப்படும் பொருள் எட்டனுள், கோயிற்றிறமும் சிவனுருவமும் இடம்பெற்றிருப்பதை நோக்குங்கால், தேவாரத் திருப்பதிகங்களில் இவை ஆங்காங்கே எங்ஙனம் சிறப்புற ஓதப்படுகின்றன என்பதை அறிகிறோம்.

குருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயில்
அரனுருவு மென்றலைமே லாக்கும்—திருவடியும்
சிட்டான அர்ச்சனையும் தொண்டுஞ் சிவாலயர்க்கென்
றிட்டார் அகத்தியனார் எட்டு.

இந்தியாவிலேயே தமிழ்நாடு கோயில்களுக்குப் பெயர்பெற்றது. இக்கோயில்கள், சிற்பம், இசை, கூத்து, ஓவியம், இலக்கியம் ஆகிய பலகலைகளுக்

கும் உறைவிடமாகத் திகழ்ந்து வந்திருக்கின்றன. வாழ்வியலோடு சமய அறிவும், அதன்வழி ஒழுக்கமும் பின்னிக்கிடந்த நிலையைத்தான் இது நமக்கு உணர்த்துகிறது. இன்று அந்நன்னிலை மாறிவருவது வருந்தத்தக்கது. மீண்டும் வாழ்வியலும் சமயநெறியும் ஒன்றுபட்டாற்ருன் மக்களினத்திற்கு உய்தி உண்டு என்பதை மேன்மக்கள் உணர்ந்து செயற்படவேண்டும்.

கடவுள் எங்கும் வியாபித்திருந்தாலும் கோயில்களே அருள் பெருகும் இடங்களாகக் கொள்ளத்தக்கன. அரசனுக்குரிய நாடு பரந்திருந்த போதிலும் அவன் உறைகின்ற இடம் என்று தனியே ஒன்று உண்டு. அங்கிருந்தே அவன் ஆணை செலுத்துகிருன். அதுபோல உலகிற்கெல்லாம் வேந்தனுக (கோவாக) இறைவன் இருந்தாலும் அவனுடன் நமது மனம் கூடுமிடம், அவனை நாம் நெருங்கிக் காணுமிடம் கோயில் (கோ+இல்) ஆகும். அங்கே நமது மனம் லயிப்பதற்குரிய சூழல் இருப்பதனுலேதான் ஆலயம் (ஆ+லயம்) என்று அதனை நாம் அழைக்கின்ருேம். ஆ=ஆத்மா லயிப்பதற்குரியஇடமென்றும், ஆ—ஆணவம் ஒடுங்குதற்குரிய இடமென்றும் அச்சொல்லிற்குப் பொருள் கூறுவார் உண்டு.

நமது உயிருக்கு உறைவிடமாக எப்படி உடல் அமைந்துள்ளதோ அப்படியே இறைவன் உறைவிடமாக கோயிலின் அமைப்பும் பொருந்தியிருக்கிறது. நமது கால்கள் எப்படி உடலைத் தாங்குகின்றனவோ, அப்படியே கோயிலைத் தாங்குகின்ற தூண்களும் சிற்பநூலில், 'பாதம்' என்று அழைக்கப்படுகின்றன. நமக்குக் கழுத்தும், தலையும், சிகையும் இருப்பதுபோல அதே அமைப்போடு கூடிய கோயிற் பகுதிக்குக் களம், சிகரம், சிகை என்ற சொற்கள் முறையே ஆளப்படுகின்றன. நமது உடலில் வயிறு நடுப்பகுதியாதல்போல, கோயிலில் கர்ப்பக்கிருகம் அமைந்துள்ளது. மேலும் கர்ணம் (காது), நாசி (மூக்கு), போன்ற உறுப்புக்களும் சிகரத்தில் அமைந்துள்ளன. மனிதனுக்கு முகமே முக்கிய உறுப்பாதல்போல, முகத்தைக் கொண்டே இன்ஞர் என்று பகுத்தறிதல் போல, கோயிலின் சிகரத்தைக் கொண்டே ஒன்று மற்றென்றினின்றும் எவ்வாறு வேறுபடுகிறதென்று கூறுவர் சிற்பநூலோர்.

பண்டைக் கோயில்கள் தமிழகத்தில் மரத்தினுற் கட்டப்பட்டவை என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அதனுலேதான் பல்லவர், கற்கோயில் தோன்றிய கி. பி. ஆரும் நூற்ருண்டிற்கு முன்னர் இருந்த மரக்கோயில்களை அழித்துவிட்டிருக்கக்கூடுமென அறிஞர்கள் கருதுகின்றனர். கோவில் வளர்ச்சியை நாம் நோக்கும்போது பொதுவாகப் பல்லவர் (600—850) காலத்தில் குடைவரைக் கோயில்களும் கற்கோயில்களும், முற்காலச்சோழர் (850—985) காலத்தில் சிறுகற்கோயில்களும், இடைக்காலச் சோழர் (985—1070) காலத்தில் பேரிய கோயில் விமானங்களும், பிற்காலச்சோழர் பாண்டவர் (1070—1350) காலத்தில் வானளாவும் கோபுரங்களும், விஜயநகர வேந்தர் (1350—1600) காலத்தில் கோபுரங்களும் உருவாகின என்பதைப் பார்க்கிருேம்.

கோயில் சமைப்பது பற்றியும், சிற்பங்கள் வடிப்பது பற்றியும், பூஜை முறைகளைப் பற்றியும் சைவ வைணவ ஆகமங்களும் பிற சிற்ப நூல்களும் கூறுகின்றன.

'பாஞ்சராத்ர ப்ராசாத ப்ரசாதனம்'என்ற வைணவ ஆகம நூலில் விஷ்ணு பகவான் பிரமதேவனிடம் கூறுகிறார்:—

க்ருத்வா ப்ரதிநிதிம் சம்யக் தாருலோஹ சிலாதிபி:
நத் ஸ்தாபயித்வா மாம் ஸ்தானே சாஸ்த்ரத்ருஷ்டேன வர்த்மனு
யஜஸ்வ மாம் வக்ஷ்யமாண விதினு கமலாஸன.........

'மரம், உலோகம், கல் ஆகியவற்றால் நல்லமுறையில் பிரதிமையைச் செய்து தக்க இடத்தில் சாத்திரத்தில் விதிக்கப்பட்ட முறையானே தாபனம் செய்து வழிபடுவாயாக'.

அநுபூதிமான்களாகிய நாயன்மார்களும் பல கோயில்களுக்குச் சென்று வழிபாடாற்றிய வரலாற்றினை நாம் படிக்கிறோம். அப்பர் பெருமான் கோயில் வழிபாடுசெய்யவேண்டிய முறையை உணர்த்தியிருப்பதைப் பாருங்கள்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
　　நித்தலு மெம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
　　பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
　　சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
　　ஆரூரா என்றென்றே அலறு நில்லே.

இத்தகைய மூர்த்திவழிபாடு சைவசமயாசாரியர்கள், ஆழ்வாராதியர், சங்கரர், ராமானுஜர், இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற அநுபூதிமான்களுக்கே வேண்டியிருந்ததென்றால் நம்மனோர்க்கு அது இன்றியமையாதது என்பதைக் கூறவும் வேண்டுமோ? 'தம்மிலேயே இறைவனைக் காணும் பெரும் யோகியருக்கு உருவ வழிபாடு வேண்டாதிருக்கலாம். ஆனால், சிற்றறிவினராகிய நாம் அன்பு செலுத்துதற்காகத்தான் கோயிலில் திருவுருவங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன' என்று கூறுகிறது ஜாபாலோபநிடதம்.

சிவமாத்மநி பச்யந்தி ப்ரதிமாஸு ந யோகின :
அஜ்ஞானம் பாவனார்த்தாய ப்ரதிமா : பரிகல் பிதா :

பலதிறப்பட்ட ஆன்மகோடிகளுக்கு இறைவன் எப்படி அருள் பாலிக்கின்றான் என்பதை உணர்த்துகின்றன நமது சமய சாத்திர தோத்திர நூல்கள். சிவாலயத்தைச் சிவமென வழிபடுகின்ற சரியையாளருக்கு இறைவன் வெளிப்படாமல் இருந்து அருள்புரிகின்றான். மந்திரம் ஓதி வழிபடுகின்ற கிரியையாளருக்கு விறகைக் கடைகிறபோது தோன்றும் தீ போல வெளிப்படுகின்றான். தமதுள்ளமே கோயிலாகக் கொண்டு



41

வழிபடுகின்ற யோகியருக்குக் கறந்தபோது தோன்றும் பால்போல வெளிப்படுகின்முன். எங்கும் இறைத்தன்மையைக் காணும் ஞானியர் கோயிலிலுள்ள திருவுருவத்தைக் காணும்போது, கன்றை நினைத்த மாத்திரத்தில் பசு பால் சுரப்பது போல இறைவன் அருளை வழங்குகின்முன்.

உய்யவந்ததேவ நாயஞரும் யாவருக்கும் காண்பரிய இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த பெருங்கருணையால் திருமேனிகொண்டு எழுந்தருளுகின்முன் என்று கூறுகின்முர். 'அகளமா யாரு மறிவரி தப்பொருள் சகளமாய் வந்ததென் றுந்தீபற'

பக்திநெறியில் நிற்போரின் பக்குவநிலைக்கேற்ப இறைவன் வெளிப்படும் திறத்தை முண்டகோபநிடதம் எளிய உவமையின் வாயிலாகக் காட்டுகிறது.

'திலேஷு தைலம், ததினீவ சர்பி; ஆப : ஸ்ரோதஸ் ஸு
அரணீஷு சாக்னி :
ஏவமாத்மனி க்ருஹ்யதேஸௌ ஸத்யேனைனம்
தபஸா யோநுபச்யதி.'

'எள்ளில் எண்ணெயைப் போலவும், தயிரில் நெய்யைப் போலவும், ஊற்றில் நீரைப் போலவும், விறகில் தீயைப்போலவும் சத்தியம், தவம் ஆகிய நெறிகளைப் பின்பற்றும் சீவன் இறைவனைத் தன்னுள் காண்கிருன்?

இதனேடொத்த கருத்தைத் திருநாவுக்கரசர் பாடலில் பார்க்கிறேம்.

'விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினல்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே.'

ஆன்மாக்கள் மாட்டு இறைவன் காட்டுகின்ற பெருங்கருணைத் திறமும், அருளிப்பாடும் சைவசித்தாந்தக் கருத்துகளில் பெருஞ்சிறப்பு வாய்ந்தன. காரைக்கால் அம்மையார் கூறுகிருர்:—

அருளே உலகெலாம் ஆள்விப் பதீசன்
அருளே பிறப்பறுப்ப தாஞல் — அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு.

மாகனிகால் என்னும் அறிஞர் தனது 'Indian Theism' என்ற நூலில் இதனையே விதந்தோதுகின்முர் — 'The breadth and dignity of this ( Saiva ) doctrine and its deep sense of the gracious character of God give it a place apart from other systems of theism that have arisen in India'

# வாழ்வாங்கு வாழச் சமயநெறி நிற்போம்

புலவர் க. பூரணம் B. O. L.
"ஈழநாடு", யாழ்ப்பாணம்.

நமக்கு மேலே ஒரு பரம்பொருள் உண்டு. அதுவே அண்ட சராசரங்களையும் இயக்கி வருகிறது என்ற உண்மையை உணராதோர் மிகச் சிலரேயாவர். கடவுளுண்டு என்பதைப் பலரும் நம்புகிறார்கள். அவனருளாலே அவன்தான் வணங்குபவர்களே அவ்வுண்மையை உணரும் தன்மையைப் பெற்றிருக்கிறார்கள். ''பொருள்களின் இயற்கை யமைப்பில், மனிதனது மனத்தின் அப்பாற்பட்டதும், ஆராயும் அறிவு புக முடியாததுமாகிய ஒரு இயல்பு இருக்கிறது. இத்தகைய இயல்பை ஆக்கித் தருவது மனிதனைவிட மேம்பட்டதாகலின் கடவுளைத் தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்'' என்ற கடவுளுண்மையைச் 'சிசிரோ' என்ற உரோம அரசியல் ஞானி அழகாகக் கூறியிருக்கிறார்.

அத்தகைய இறைவனின் பாதங்களில் நம்மை அர்ப்பணமாக்குவதே நமது பிறவியின் நோக்கமாகும். அப்பொழுதுதான் நமது வாழ்க்கையில், தூய்மையும் சாந்தியும் நிறைந்து விளங்கும்.

நமது வாழ்க்கையில், வறுமையும் துன்பமும் நாளாந்தம் வளர்ந்துகொண்டு செல்கின்றன. எல்லையற்ற துன்பத்தைக் கண்டபோது கடவுளிடம் வைத்த நம்பிக்கை மெல்லமெல்லக் குறைய ஆரம்பிக்கிறது. எனினும், நமது உண்மையறிவு வெளிப்படும்போது துன்பங்களினால் ஏற்படும் அளப்பரிய நன்மையைத் தெரிந்துகொள்ளலாம். இன்னல்கள் இல்லாவிட்டால் நாம் இறைவனின் மகிமையை உணர முடியாது. கவலையும் துன்பமும் வாழ்வின் வாயிலைத் திறக்கின்றன. சுடச்சுட ஒளிரும் பொன் போல், துன்பம் ஆகிய நெருப்பு நம்மைச் சுடச்சுட, நமது வாழ்வும் ஒளி விடுகிறது. அதனால், ஆன்மா மலர்ச்சியுறுகிறது. ஆன்மா மலர்ச்சியுற்று இறைவனை இடைவிடாது சிந்தித்துத் தியானம் செய்து நித்தியானந்தத்தைப் பெறுகிறது. இப்பேரானந்தத்தைப் பெற உறுதுணை புரிவது சமயமாகும். நமது வாழ்வு அனைத்திலும் சமய உணர்வு கலக்கவேண்டும். சமய வாழ்வு, பகையும் பொறாமையும் கொள்ளாமல் வாழ்வதற்கு வகை செய்கிறது. மேலும் நாம் யாவரும் இறைவனின் குழந்தைகள் என்ற உணர்வைச் சமயம் ஏற்படுத்துகிறது.

இத்தகைய சமயப் பண்பில் தோய்ந்து தமிழரது வாழ்வு வளம் பெற்றுள்ளது. கலை உள்ளம் படைத்த தமிழ் மக்கள் வானளாவிய கோபுரங்களுடன் பல கலைக்கோயில்களை அமைத்து வழிபட்டனர். அந்தக் கோயில்கள் கலைப் பொக்கிஷங்களாவும், முத்தமிழ் முழங்கும் பள்ளிகளாகவும் விளங்கின; மக்களை அன்புவழி ஒழுகச்செய்து நன்னெறிக்கு உய்வித்

தன்; பிறர் நலம் பேணுவதில் பெருவிருப்புறச் செய்தன; 'ஆண்டவனிடம் அன்புவைக்க விரும்பினுல் அவனுற் படைக்கப்பட்ட அனைத்துயிர்களிலும் அன்பு வை' என்ற உண்மையை உணரும்படி செய்தன. ஆலய வழிபாடு, நீதியையும் நேர்மையையும் ஒழுக்கத்தையும் நிலைநிறுத்தினது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்',
'ஒன்றே குலம் ஒருவனே தேவன்',
'தென்னுடுடைய சிவனே போற்றி,
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'

என்ற உயர்ந்த குறிக்கோள்களுடன் விளங்கிய நமது சமயத்தில், அந்நிய மதங்களின் வருகை; இயற்கையாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் சம்பிரதாயச் சடங்குகளாக மாறியமை ஆகியன அதன் வளர்ச்சியைக் குன்றச் செய்தன.

இப்பொழுது மீண்டும் நமது சமயத்தை மறுமலர்ச்சியுறச் செய்ய மங்கையரும், முதியோரும், இளைஞரும் பெரு விருப்புக்கொண்டு சமயப் பணி செய்கின்றனர்; ஆங்காங்கு பல சங்கங்களை நிறுவிச் சமயத்தின் சிறப்புக்களை எல்லோரும் உணரும்படி அறிஞர்களைக்கொண்டு சொற் பொழிவுகள் செய்விக்கின்றனர்; நமது சமயத்தின் பண்பாட்டைப் பளிச் சிடச் செய்யும் பெருவிழாக்களை, 'கோயில்கள், இல்லங்களில் மட்டுமன்றித் தாங்கள் தொழில் செய்யும் நிலையங்களிலும் சிறப்பாகக் கொண் டாடுகின்றனர். சமயநூல்கள் பல அச்சிடப்பட்டு வெளியாகிக்கொண்டிருக் கின்றன. சமய அறிவைச் சிறப்பாகப் பெறுவதற்குப் போட்டிகள் நடாத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மக்கள் இவ் வண்ணம் சைவநெறியை மறுமலர்ச்சியுறச் செய்வதற்குக் காரணம் சமயம் இல்லா வாழ்க்கை, சாரமற்ற வாழ்க்கை என்பதை அவர்கள் உணர்ந் தமையேயாகும்.

'சமயம் என்பது உயிர்க்கும் சத்துக்கும் உள்ள தொடர்பைத் தெளியப்படுத்தும் மார்க்கமாகும். சமயம் ஆராய்ச்சியைக் கடந்தது. ஆராய்ச்சியில் அடங்காத ஒன்று. ஆராய்ச்சி முட்டும் இடத்தில், முளை விடுவது சமய உணர்வு. உலகில் சமயங்கள் பல இல்லை. சமயப் பெயர் கள் பல உண்டு. உலகில் மண்ணுக்கு எவ்வளவோ பெயர்கள் இருக்கின் றன. பெயர் பலவாயிருப்பினும் பொருள்கள் ஒன்றேயன்றோ. சமயத்தின் புறப்பெயர்களை நீக்கி, அதன் அகத்தை நோக்கின் பொருள் ஒன்ருயிருத் தல் புலனுகும்' எனத் தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் கூறும் சன்மார்க்க நெறியை இன்றும் பல சமய மக்களும் கடைப்பிடித்து வருதலை நாம் கண்கூடாகக் காண்கின்ருேம்.

நாம் நமது சமயநெறி நின்று, நம் குறைபாடுகளை இறைவனிடம் கசிந்து கூறி, இறையின் அருளைப் பெற்று நித்தியானந்தம் பெறுவோமாக.

# ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ

பிரதான வீதி, வவுனியா.

- கட்டடப் பொருள்கள்
- இரும்புச் சாமான்கள்
- கமத்தொழிற் கருவிகள்
- விவசாய இரசாயனப் பொருள்கள்
- சலன உப உறுப்புக்கள்
- பலசரக்கு வகைகள்
- வூல்ஸிலி தண்ணீர் நீர்ப்பாய்ச்சன யந்திரங்கள்
- அல்கதீன் பைப்புகள்

என்பனவற்றிற்கு உத்தரவுபெற்ற வியாபாரிகள்.

**உறவு ஸ்தாபனங்கள்**

## சில்வா ஸ்ரேரர்ஸ்

*பிரதான வீதி,* **வவுனியா.**

- வவுனியா மாவட்டத்திற்கு C. W. E. புடைவை வகைகள் விநியோகம் செய்வதற்கு உத்தரவு பெற்ற வியாபாரிகள்.
- மருந்து வகைகள்
- அலங்காரப் பொருள்கள்.

## நவீன கம கைத்தொழிற் கூட்டுஸ்தாபனம்


- ஆதாயம் மிக்க கமத்தொழிலுக்காக நீங்கள் வைத்திருக்கவேண்டிய உழவு யந்திரங்கள்


**போர்ட் 2000**

**போர்ட் 3000**

- உங்கள் யந்திரத்திற்குத் தேவையான உப பாகங்கள் அனைத்தும் எங்கள் வசமிருக்கின்றன.

Telephone: **519** Vavuniya.　　Telegrams: "PERIYAKADE"






# இலங்கை சணல்
# பொருள் தயாரிப்பு

அரசடிக்காடு, காரைநகர்.


அரசாங்கத்தால் உத்தரவாதம்
பெற்ற கைத்தொழில்

கயிறு, கொடி, நூல் வகைகள்
உற்பத்தி செய்யப் படுகின்றன

**சணல் கம்பு,**
**சணல் தும்பு**

இவைகள் விலை கொடுத்து
வாங்கப்படும்.

சணல் உற்பத்தி செய்வதற்கு
விதைகள் இங்கு பெற்றுக்
கொள்ளலாம்.


CSH

# CEYLON SUNN HEMP PRODUCTS

ARASADIKKADU,
KARAINAGAR.

புரட்சி! புரட்சி!!

# கட்டட நிருமாணத் துறையில் வடமாகாணத்தில் புரட்சி!!!

## இலங்கையில் முதன்முதல் தனியார்துறையில் அமைக்கப்பட்ட ஓரேயொரு தாபனமான

ஜனா செங்கல் ஓட்டுத் தொழிற்சாலையார் நவீன ஜெர்மன் யந்திரங்களினால் அமுக்க சக்தி முறையில் உருவாக்கும் தரத்தில் மிக உயர்ந்த ஒட்டக மார்க்கு செங்கட்டிகளினால் உங்கள் கட்டடங்களைக் குறைந்த செலவில் கட்டுங்கள்.

**Jana Brick & Tile Factory**

REGD; TRADE MARK

KANDAWALAI

Via PARANTHAN

எமது ஒட்டகமார்க் ஓடுகள் வெகு விரைவில் விற்பனையாகும்.

## ஜனா செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை

கண்டாவளை, Via பரந்தன்.

ஈழத்தில் திரைப்பட விநியோகத்தில் முதன்மை ஸ்தானத்தைப் பெற்றுள்ள "சினிமாஸ் லிமிடெற்" அளிக்கவிருக்கும் வெற்றிச் சித்திரங்கள் சில......!

**சரஸ்வதி சபதம் (கலர்)**
சிவாஜி - சாவித்திரி

**பறக்கும் பாவை (கலர்)**
எம். ஜி, ஆர் – சரோஜாதேவி

**படகோட்டி (கலர்)**
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி

**வல்லவன் ஒருவன்**
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி

**சந்திரோதயம்**
எம். ஜி ஆர். - ஜெயலலிதா

**நீலவானம்**
சிவாஜி - தேவிகா

**ராமு**
ஜெமினி - கே. ஆர். விஜயா

**குழந்தையும் தெய்வமும்**
ஜெய்சங்கர் - ஜமுனா

**முகராசி**
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா

**மேஜர் சந்திரகாந்**
முத்துராமன் - ஜெயலலிதா

# ஆலய வழிபாடு அவசியந்தானு?

சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர்.

மனிதன் இன்பத்தை அனுபவிக்க விரும்புகிருன். அதனுல் இன் பத்தையே நாடி அவ்வின்பத்தை உலகப் பொருள்கள் மூலம் அடைய முயல் கிருன். ஏதோ சிறிது இன்பம் கிடைத்தாலும் துன்பமே மிகுந்து நிற்கி றது. உதாரணமாக ஒரு நகையை எடுத்துக்கொள்வோம். நகைவாங்க மற்றைய செலவுகளைச் சுருக்கி, காசு சேகரித்தல் ஒருகவலை; நல்ல சுத்தமான தங்க நகையாய் வாங்கவேண்டும் என்ற கவலை; தற்போதைய நாகரிக நகை யாய் அமையவேண்டும் என்ற கவலை; வாங்கியதும் பாதுகாப்பாய் வைத் திருக்கவேண்டும் என்ற கவலை; அணிந்து செல்லும்போது தெரியாமல் கழன்று விழுந்துவிடக்கூடாதே என்ற கவலை; யாரும் அதைப் பிடுங்கிக் கொண்டுபோய்விடக்கூடாதே என்ற கவலை; காலஞ் செல்லப் பழைய நாக ரிகமான நகையாய்விட்டதே என்ற கவலை; இப்படியாக உலகத்தில் நாம் அனுபவிக்கும் இன்பத்துளெல்லாம் நிறையத் துன்பங்கள் மறைந்து இருப் பதை உணரலாம்.

இந்த இன்ப துன்பங்களைச் சமமாக்குவதே வாழ்க்கையின் லட்சி யமாகும். இவ்விலட்சியத்தை நிறைவேற்ற மனிதன் ஆசைகளை விடவேண் டும்; பற்றுக்களை விடவேண்டும். நான், எனது என்பவைகளே பற்றை உண்டாக்குவன. நல்லஅழகான புத்திசாலியான அயல்வீட்டுக் குழந்தை இருந்தாற்போல் மரணமாகிவிட்டது; அதைப்பற்றி நாம் அவ்வளவு கவ லைப்படப்போவதில்லை. ''வாழ்க்கை இப்படித்தான்'' என்று வேதாந்தங் கூடப் பேசுவோம். ஆனுல் நம்வீட்டுக் குழந்தை அவ்வளவு அழகும் புத்தி சாலித்தனமும் இல்லாவிடினும் அது இறந்துவிட்டால் நாம் அடையும் கலக்கம் சொல்லவும் வேண்டுமோ? ஏன்? இது எனது குழந்தை என்ற பற்றுத்தான். இப்பற்றைப் படிப்படியே நீக்கச் சுயநலம் அற்ற தியாக உணர்ச்சி ஏற்படவேண்டும். ஆலய வழிபாட்டின் மூலம் இத்தகைய தியாக உணர்ச்சியை வளர்க்க வழிவகுத்தனர் நம் முன்னோர்கள்.

ஆலயத்திற்குச் செல்லும்போது நாம் இறைவனுக்கு அர்ப்பணிக்க நம்மால் இயன்ற பொருள்களை எடுத்துச் செல்லுகிறோம். எத்தனையோ கோடி 'டன்' நெல்லை விளைவிக்கும் இறைவனுக்கு ஒருபிடி சாதம் படைத் தால் போதுமா? என்று இந்நாளில் கேட்கிறார்கள். தந்தை, மாலையில் வீட் டுக்கு வரும்பொழுது சில மிட்டாய்களை வாங்கி வந்து தன் பிள்ளைக்குக் கொடுக்கிருர். பிள்ளையிடம் கொடுத்துவிட்டுப் பின். பிள்ளையிடம், 'அப்பா வுக்கும் கொடுபிள்ளை' என்று இரக்கிருர். பிள்ளை ஒரு மிகச்சிறிய துண் டைத் தந்தையின் வாயுள் போடுகிறது. அதைப் பெற்றுத் தந்தை அடை யும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. குழந்தை கொடுக்க மறுத்து விட்டால்

தந்தையின் மனம் குழந்தைக்குக் கொஞ்சம் தியாக உணர்ச்சி ஏற்படவேண்டுமே என்று நினைக்கிறது. இப்படியாகத் தந்தை ஒரு சிறுதுண்டு மிட்டாயினுல் எல்லையில்லா ஆனந்தத்தினை அடைகிருரென்ருல், உலகத் தந்தையான இறைவன் ஒரு பிடிசாதத்திஞல் ஆனந்திப்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நம் தியாக உணர்ச்சியையும் மெச்சுவாரல்லவா? ஆகவே, நாம் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லும் பொருள்கள்மூலம் பொருட்தியாக உணர்ச்சியைப் பெறுகிருேம்.

அதிகாலையில் எழுந்து குளிரையும், பனியையும், மழையையும் பொருட்படுத்தாது குளித்துவிட்டு, உடம்பின்மேல் பாதுகாப்புக்காகிலும் சட்டை அணியாது கோயிலுக்குச் சென்று, அங்கும் விழுந்து கும்பிடுகிருேம். இதனுல் உடல் தியாக உணர்ச்சி வளர்கிறது. இப்படியே படிப்படியாகத் தியாக உணர்ச்சி வளர்ச்சி பெற்று, இறுதியில் தன்னைத் தானே அர்ப்பணஞ் செய்யும் உயர்ந்த நிலை வந்தெய்தும். இந் நிலையைப் பெற ஆலயம் எத்துணை அவசியம் என்பது நன்கு விளங்குகிறதல்லவா?


மேலும், ஒருவன் தன் வேலைகள் முடிந்ததும் வீட்டுக்கு வருகிருன். வரும்போது அவன் மனத்தில் ஏதேதோ அன்றைய வேலைச் சிக்கல்கள், அல்லது வீட்டில் உள்ள துன்பங்களின் நினைவுகள் ஊசலாடிக்கொண்டிருக்கும். வழியில் ஒரு நண்பன் சந்தித்து, இருவருக்கும் தெரிந்த நண்பரின் வீட்டுக் கல்யாணத்திற்கு அழைத்துச் செல்கின்ருன். அங்கு சென்றதும் அங்குள்ள அலங்கார கோலாகலங்களினுலும், அங்குள்ளவர் எல்லோரும் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருப்பதினுலும், கவலைகள் ஊசலாடிக்கொண்டிருந்த இவன் உள்ளத்திலும் தன்னையறியாமலே மகிழ்ச்சி உண்டாகிறது. அங்கு அப்போது பரம்பியுள்ள மகிழ்ச்சி அலைகள் அவனையுந் தாக்கி, அவனுள்ளத்திற் புகுந்து மகிழ்ச்சியை உண்டாக்கி விடுகின்றன. இவ்வாறே ஒருவன் எவ்வித மகிழ்ச்சியுடன் இருந்தபோதிலும் அவன் ஒரு துக்கவீட்டுக்குப் போவானுகில், அங்குள்ள சூழ்நிலையினுலும், அங்கு பரம்பியுள்ள துக்க அலைகளின் தாக்குதலினுலும் அவன் மகிழ்ச்சி குன்றும். சூழ்நிலையினுலும் அங்கு பரம்பியுள்ள அலைகளின் தாக்குதலினுலும் ஒருவனின் உள்ளம் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆகையினுலே எல்லோரும் ஒரே எண்ணத்துடன் வந்து இறைவனை ஏத்தும் ஆலயத்தில் இறைவழிபாட்டுக்குரிய சூழ்நிலையும், சாந்த அலைகளும் எப்போதும் நிறைந்திருக்கும். அத்தகைய ஆலயங்கள் வழிபாட்டிற்கு இன்றியமையாதன என்பது வெள்ளிடைமலை.

ஆகாயமெல்லாம் பரந்து கிடக்கும் மின்சக்தியை யந்திரங்களாற் கிரகித்து மின் பெட்டிகளில் சேகரித்துக் கம்பிகள்மூலம் வேண்டிய இடத்திற்குக் கொண்டுபோய் வெளிச்சம் உண்டாக்குகிருேம். அதேபோல் இறைவன் சக்தியும் யாகங்கள், கும்பாபிஷேகங்கள் மூலம் ஆலயத்திலுள்ள மூர்த்தியில் பாய்ச்சி நிரப்பிவைக்கப்பட்டுள்ளது. அதில் குறைவேற்படாமலிருக்க அடிக்கடி ஆராதனைகளும், பூசைகளும், பன்னிரண்டு வருடங்

களுக்கொருமுறை கும்பாபிஷேகமும் நடைபெறுகின்றன. கூடிய சக்தியுள்ள மின்சார ஸ்தானங்கள் எப்படியாக அபாயம் ஏதும் ஏற்படாமல் நல்ல பெட்டிகளுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனவோ அதேபோன்று ஆலயமூர்த்தியும், சின்ன அறைக்குள் வைக்கப்பட்டுள்ளது. அதை உபயோகிப்பவர்கள் தத்தம் நிலைக்கேற்ற இடங்களில் நின்று பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

ஆகவே, நம் இதயம் என்ற 'பல்பில்' ஒளி ஏற்றுவதற்காக நன்மை தீமை என்ற கம்பிகளில் உள்ள துருசுகளை வாழ்க்கை என்ற அரத்தில் தேய்த்துத் துப்புரவு செய்துகொண்டு ஆலயங்களிலுள்ள மூர்த்தியென்ற மின்நிலையத்தில் இணைத்து ஒளியேற்றுகிறோம். ஒரு துண்டு துப்புரவான கம்பியை ஒருமுறை காந்தத்துடன் பொருத்தினால், அது சிறிது காந்தத்தைப் பெறுகிறது. மேலும் மேலும் பொருத்த அச் சிறு துண்டுக் கம்பியில் காந்தம் நன்றாக வந்துவிடுகிறது. அதேபோல நாமும் இதயத்தைச் சுத்திசெய்து அடிக்கடி ஆலயத்துக்குச் சென்று அங்குள்ள மூர்த்தியின் அருட்சக்தியிலே தோயத்தோய அவனுடைய கல்யாண குணங்கள் அவ்வளவும் நம்மையும் வந்தடையும். நாமும் தெய்வநிலைக்கு உயர்த்தப்பெறுவோம்.

டயமண்ட் மண்ணெண்ணெய்
அடுப்பு உபயோகித்தால்
விறகுப் பிரச்சினையே இல்லை...



மேசை மொடல்
இரட்டை பேர்னர்கள் — ரூ. 61-50
மூன்று பேர்னர்கள் — ரூ. 82-50

தரை மொடல்
இரட்டை பேர்னர்கள் — ரூ. 80-00
மூன்று பேர்னர்கள் — ரூ. 102-50

தயாரிப்பாளர்கள்:
சிலோன் ஸ்டோவ்ஸ் & எனமெலிங் வேர்க்ஸ் லிமிட்.
பிரதான விநியோகஸ்தர்கள்: அப்துல் ரஹீம்ஸ்

# சிவமெனுந்தாய்

வல்வை, பண்டிதர் சங்கர. வைத்தியலிங்கனூர்
ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்.

மணிவாசகப் பெருமான் இறைவனிலே தாய்த் தன்மையை நன்கு கண்டவர். சைவசமயமே தாயொடு கூடித் தாயே தந்தையைக் காட்டத் தந்தையை அடையும் மார்க்கமாகும். ''நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'' என்று சிவ புராணப் பகுதியில் அருளிச் செய்த அடிகளார், போற்றித் திருவகவலிலும் சிவலோகத்தை விட்டுச் சிவகுருநாதன் இப் பூமியிலே திருவடி பதித்துத் தம்மை ஆட்கொண்டமையை என்பு நைந்துருகி அன்பென்ற ஆறு கரை கடந்தோடத் தோத்தரிக்கு மிடத்தில்,

''சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி''

என்று அருமை ததும்ப எடுத்தோதியுள்ளார். இன்பத்தின் உச்சியில் நிற்கும்போதோ, துன்பத்தின் அதி ஆழத்தின் விழுந்தழுந்தும் போதோ—எந்த நிலையிலும்—தலை நிமிர்ந்து உறுதியாக நிற்கும் அன்பருக்கு, அப்பன் தாய்போல வந்து, தலையன்பு காட்டி, அன்னோரைத் தலையளிசெய்து வாழச்செய்தலை எத்துணை பக்தியுடன் எடுத்தியம்புகிறார். தாயன்பு தலை யாய அன்பாக அமைவதனால் அன்பின் உயர்படியில் நின்ற இப் பெரி யார், அப்பனை அம்மையாகத் திருவாசகத்தில் நமக்குக் காட்டு மிடங் கள் மிகப் பல.

''தாயாய் முலையைத் தருவானே தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ?'' எனத் திருவாசகத்தில்

ஆனந்தமாலை என்னும் பகுதியில். உண்ணாமுலையாள் பாகனைத் தமக்குப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாயாகவே மதித்து அடிகளார் அலறுவதை நாம் கேட்கின்றோம். ''பீரம் பேணி பாரந் தாங்கும்'' என்று—தாய்ப்பால் குடித்து வளர்ந்த பிள்ளை, பெருவலி மிக்கவனாய் வளர் வானென்று ஔவையார் மந்திரம் எடுத்தியம்புகின்றது. அடிகளாரும் தாய்ப்பாலின்மையால் தாம் சவலைக் குழந்தையாய் ஆக நேரிடுமே என்று சிவாநுபவ விருப்பத்தின்மீது தமக்குள்ள ஆராமையை வெளிப்படுத்து கின்றார், ''சீயேது மல்லாதென் செய்பணிகள் கொண்டருளும் தாயான ஈசன்'' என்று திருக்கோத்தும்பியில் எந்த நிலையிலும் பிள்ளையை வெறுக் காமல், அவன் செய்யும் அற்ப பணியையும் அளப்பரும் அரும்பணியாகக் கொள்ளும் தாயின் பெரும் பேரன்பைத் திட்டமாகக் காட்டுகின்றார்.

''பால் நினைந்தூட்டும் தாய்'' என்று பிடித்த பத்திலும் தமக்குப் பரமானந்தம் தந்த பரமனைப் போற்றுவதை நாம் காண்கிறோம். தாயின்

தன்மையை அதேபாட்டின் மூன்றுமடியில், ''உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே'' என உச்சப்படிக்கு ஏற்றிக் காட்டுகிறார் அடிகளார். அடிகளார், தாம் பெற்ற சிவானந்த அனுபவத்தை அது அழிந்துவிடாது பாதுகாத்துத் தம்மை உய்வுபெறச் செய்வதற்காக, எம்பெருமான் தமக்குப் பின்னும் முன்னும் திரிந்துகொண்டிருக்கும் நிலையை ஓர்ந்து, அப் பெருமானைத் தாய் தாய் என்றே வாய் சலிக்காது வழுத்துகின்றார்.

பிடித்த பத்தில், தாமருளிச்செய்த இத் தாய்ப் பாட்டின் அதே கருத்தைத் திருச் சதகத்தில், ஆனந்தாதீதம் என்ற பகுதியிலும் காட்டுகின்றார். பிடித்த பத்துப் பாடல் யாவருமறிந்ததொன்றாயினும் இத் திருச் சதகப் பாடல் பலருக்குந் தெரிந்திருக்காதென்பதை நாமறிவோம். தாய் அருமையாக வைத்திருக்கும் சிறு பொற்கிண்ணமொன்றைக் குழந்தை கண்டுகொண்டது. அதனை எடுத்துவைத்து, விளையாட்டுப் பொருளாகக் கொண்டு குழந்தை இன்புற விழைகின்றது. அங்ஙனமே விளையாடிக் கொண்டு, வீட்டின் வெளிப்புறத்துக்கு அக்குழந்தை அதனுடன் புறப்பட்டு விடுகிறது. இக் கிண்ணங் காரணமாக, குழந்தைக்குக் கள்வரால் வரக்கூடிய துன்பம் தாயின் மனத்தை நடுங்குறச் செய்கின்றது. பொற்கிண்ணமாயினும் விளையாட்டுக் களைப்பால், குழந்தை அதனைத் தூர எறிந்து, கேவலம், ஒரு மண் பொம்மையைக் கையில் எடுத்துவைத்துக் களிகூரவும் கூடுமல்லவா? கிண்ணத்தின் பெருமையை அறிந்த தாய், அது தொலைந்துபோகாமல் காப்பதற்கும் குழந்தைக்குத் தீங்கு நேரிடாதிருப்பதற்குமாகக் குழந்தையை விட்டுப் பிரியாது அதன்பின் செல்வதுதானே பொருத்தமாகும்.

''மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
..........................................................
..................................புகுத விட்டுநீ
போவ தேசொலாய் பொருத்த மாவதே.''

என்று விநயத்துடன் தாயை நோக்கிக் கூறும் சேயின் வார்த்தையாக அமைந்த திருப்பாடல் இஃதாகும். குழந்தைக்குக் கிண்ணத்தினருமை தெரியாது. தாய்க்கோ கிண்ணத்தினருமையும் குழந்தையின் பெருமையும் ஒருங்கு தெரியும். ஆகவே, அவள் குழந்தையின் பின் செல்லாது, வேறு யாதுதான் செய்வாள்? ஆன்மா அரிதிற் பெற்ற சிவானந்த அனுபவத்தை, அவ் வான்மா பாதுகாத்து ஆனந்த அதீத நிலையெய்த அருளும் சிவம் அருமையினுமரிய தாய் தானன்றே!

# நால்வர் காட்டிய நன்னெறி

திரு. நா. முத்தையா.
'ஆத்மஜோதி' நிலையம், நாவலப்பிட்டி.

நாலுபேர் சொன்னபடி நடவுங்கள் என்பது நாட்டில் பழகிவந்த பழமொழி. இங்கே நாலுபேர் என்பது சமயாசாரியர் நால்வரையுமே குறிக்கும். திருமுறைகளில் கயிறு சாத்திப் பார்த்து, நால்வர் கூறுவனவற்றைக் கவனித்து, அதன்படி தமது வாழ்க்கையை நடத்திவந்தனர் நமது முன்னோர். வாழ்விலும் தாழ்விலும் சந்தேகம் ஏற்பட்ட காலத்து நால்வர் காட்டிய வழியிலே நின்று வாழ்ந்த பெருமை நம் மூதாதையருக்கு உண்டு.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரும் பாடிய பாடல்கள் தேவாரம் என்றும், மாணிக்கவாசகர் பாடியபாடல் திருவாசகம் என்றும் வழங்கப்பெறும். பன்னிரு திருமுறைகளில் திருஞானசம்பந்தர் பாடியவை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடியவை நாலாம் ஐந்தாம் ஆறும் திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியவை ஏழாந் திருமுறையாகவும், மணிவாசகர் பாடிவை எட்டாந் திருமுறையாகவும் வகுக்கப்பெற்றுள்ளன.

தேவாரம் என்றால் தெய்வ பக்தி என்பது பொருள். அதாவது, தெய்வ பக்தியை உண்டாக்கும் பாடல்கள் என்பது பொருள். தெய்வத்தின்பால் உள்ள அன்பினால் பாடப்பட்டதென்றும், தெய்வத்துக்கு ஆரம் போல் அமைந்தது என்றுங் கூறுவர். தே என்பது தெய்வத்தைக் குறிக்கும் சொல். வாரம் என்பது இசைப்பாட்டு வகையில் ஒன்று. தேவாரத்தைத் திருப்பதியம், திருப்பாட்டு என்ற பெயர்களாலும் அழைத்தனர். ஔவையார், தேவாரத்தை 'மூவர்தமிழ்' என்று அழைக்கின்றார். இக்காலத்தில் ''திருநெறித் தமிழ்'' என வழங்குவர்.

காவியங்கள் பலதிறத்தன. அவைகளுட் சிலவற்றில் உலகைக் காணலாம்; சிலவற்றில் உயிரைக் காணலாம்; சிலவற்றிற் கடவுளைக் காணலாம். மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியங்கள் மிகச்சில. திருமுறைகள் இம்மூன்றையும் காட்டும் வர்க்கத்தைச் சேர்ந்தவையாகும்.

இயற்கையின் எழிலைக் கவிதையிலே ஓவியமாகக் காட்டி, மனித உள்ளத்திலே தோன்றும் மிக நுட்பமான உணர்ச்சியாகிய காதலை அணு அணுவாக ஆராய்ந்து, அதனால் விளையும் உள்ளத் துடிப்புக்களை நன்றாகத் தெரிந்து பாடி, வீரத்தையுங் கொடையையும் பாராட்டிச் சங்ககாலப் புலவர்கள் தமிழை வளர்த்தனர். காதலையும் வீரத்தையும் பாராட்டிய புலவர்கள், அவ்விரண்டையுமே தலைமையாகவைத்து, மற்ற உணர்ச்சிகளைப் புறக்கணிக்கத் தொடங்கினர். மனித வாழ்வுக்கு இன்றியமையாததாகிய கடவுள் உணர்ச்சி, பண்டைத் தமிழரிடத்திலே ஆழமாய் வேரூன்றி

யிருந்தாலும் பொதுமக்கள் வாழ்விலே அது மலரவில்லை. இந்நிலையில், பௌத்தமும் சமணமும் தமது கொள்கைகளைத் தமிழ் நாட்டில் பரவ விட்டன.

இந்த நிலையில் அதுவரை அமைந்துகிடந்த தமிழ்ச் சமயங்களாகிய சைவமும் வைணவமும் வீறி எழுந்தன. அதனால் நாயன்மார்களும் ஆழ்வார்களும் திருவவதாரம் செய்தார்கள். திருமுறைகள், தமிழ்நாட்டுக்குப் புதுமுறையில் கடவுள் உணர்ச்சியை ஊட்டி முறுக்கேற்றின. இந்த நெறியே இன்றைய சமூகத்திற்கும் அவசியம் வேண்டியுள்ளது. சினிமாவுக்குப் பின்னணியிலே தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்ட மக்கள் சமுதாயத்திற்குத் திருமுறை நெறியே வழிகாட்டியாக அமையவேண்டியுள்ளது.

நால்வர் தந்த தமிழிலே சமயமும் பக்தியும் தாண்டவம் ஆடின. தமிழ்ப் பண்பிலே பிறழாமல், இசையையும் தாளத்தையும் மிகுதியாக இணைத்து, அழகையும் அதனைத் தந்ததெய்வத்தையும் ஒன்றுபடவைத்து, மனிதவாழ்வில் இறைவனை மறந்த நிலையின் அவலத்தையும் அவனை நினைந்து அன்பு செய்தாரது உயர்வையும் எடுத்துக்காட்டிச் சிறந்து நின்ற இந்தப் பக்தித் தமிழில், தமிழுலகம் சொக்கிப்போயிற்று. தமிழ்ச் சுவையும் கடவுளுணர்ச்சியும் தேனும் பாலும் போலக் கலந்தன.

சைவமும் தமிழும் பிரிக்கமுடியாதவை. அதனால் 'சைவத்தமிழ்' என்றே வழங்குவதைப் பார்க்கின்றோம். 'சைவம் இன்றேல் தமிழ் இல்லை; சைவமும் தமிழும் ஒன்றே' என்று கூறுகின்றனர். ''சைவந்தான் தமிழை வளர்த்தது; சைவம் இன்றேல் தமிழ்வளர்ச்சி இல்லை; தமிழ் இல்லை'' என்று சைவப்புலவர்கள் பெருமையுடன் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு நாயன்மார்களுடையவும் ஆழ்வார்களுடையவும் பாடல்கள் அமைந்துள்ளன.

சமயாசாரியர் நால்வரும் தாம் பெற்ற இன்பத்தை அனைவரும் பெறவேண்டுமென்று விரும்பினார்கள். ஒழுக்கமும் பக்தியும் மனிதவாழ்க்கையை உயர்த்தும் என்று நம்பினார்கள். மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று விரும்பினார்கள். மக்கள் அனைவரும், உண்மை நெறியிலே ஒழுக வேண்டும்; மக்களை மக்கள் வெறுக்கும் செய்கை ஒழிய வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். கடவுள் ஒன்றே என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. கடவுள் ஒன்று என்ற நம்பிக்கை மக்களிடம் பரவினால் அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிப்பார்கள்; ஒன்றுபட்டு வாழ்வார்கள் என்பது நாயன்மார்களின் நம்பிக்கை.

தமிழர் பரந்த உள்ளம் படைத்தவர்கள்; அன்பு காட்டுகின்ற அனைவருடனும் நெருங்கிப் பழகுவார்கள்; அன்புகாட்டுவோர் வேறு இனத்தாராயினும் சரி, வேறு மதத்தாராயினும் சரி, வேறு நாட்டவராயினும் சரி அவர்களுடன் ஒன்றுகலந்து உறவாடுவார்கள். இப் பண்பு காரணமாகத்தான் தமிழர்கள் உலகின் பலபாகங்களிலும் வாழமுடிகின்

றது. 'உலகம் ஒன்று; உலக மக்கள் அனைவரும் ஒருதாய்வயிற்றுப் பிள்ளைகள்; ஆதலால் யாருடனும் பகைமை பாராட்டக்கூடாது; யாரையும் வெறுக்கக்கூடாது; இவ்வுலகில் உள்ள எல்லா ஊர்களையும் நமது ஊர்களாகவே எண்ணவேண்டும்; இவ்வுலகில் உள்ள எல்லா மக்களையும் நமது உறவினராகவே நினைக்கவேண்டும்' என்ற உயர்ந்த கொள்கையைக் கொண்டவர்கள் தமிழர்கள்.

இத்தகைய பண்பாட்டு வாழ்க்கையைச் சம்பந்தப் பெருமானின் பின்வரும் தேவாரம் விளங்குகிறது.

வாழ்க அந்தணர்; வானவர் ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயதெல்லாம்; அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

நால்வர் பெருமக்களும் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நால்வகை நெறிகளுக்கும் உதாரண புருஷராய் வாழ்ந்து அந்நெறிகளை உலகிற்கு விளக்கினர். நால்வகை நெறியும் அரும்பு, மலர், காய், கனிபோலச் சோபான முறையே அமைந்ததாயினும், நால்வகை நெறியின் முடிந்த முடிபும் ஞானமே என்பதை வாழ்க்கைமூலம் தெளிவுபடுத்தினர்.

இறைவனை அடைதற்குரிய இந் நால்வகை நன்னெறிகளையும் முறையே தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என வழங்குவர் சான்றோர். இந் நால்வகை நெறிகளையும் கடைப்பிடித்து ஒழுகுவோர் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய பதமுத்திகளையும் சாயுச்சியம் ஆகிய பரமுத்தியையும் அடைவர். சாலோகம் என்பது இறைவன் உலகினை அடைதல்; சாமீபம் என்பது இறைவன் அருகு இருத்தல்; சாரூபம் என்பது இறைவன் உருவினைப் பெறுதல்; சாயுச்சியம் என்பது இறைவனை அடைந்து அவனோடு இரண்டறக் கலத்தல்.

மேற்கூறிய நால்வகை நெறிகளுள் தாசமார்க்க இயல்பு திருநாவுக்கரசரிடத்தும், சற்புத்திரமார்க்க இயல்பு திருஞானசம்பந்தரிடத்தும், சகமார்க்கத்து இயல்பு சுந்தரரிடத்தும், சன்மார்க்கத்திறம் மணிவாசகரிடத்தும் வெளிப்பட்டு விளங்குதல் காணலாம்.

சரியை வழி நின்றவர் அப்பர் என்றும், கிரியை வழி நின்றவர் சம்பந்தர் என்றும், யோகநெறி நின்றவர் சுந்தரர் என்றும், ஞானநெறி நின்றவர் மணிவாசகர் என்றும் கூறுதல் உண்டு. ஆயினும் சமயகுரவராகிய இந் நால்வரும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் கைவரப்பெற்று, முதிர்ந்த ஞானநெறியில் நின்ற செம்புலச் செல்வர்கள் என்பதே சேக்கிழார் முதலிய அருளாசிரியர்களின் துணிபாம்.

காரைநகர் சைவ மகாசபையினருக்கு,

## கலைமகள் கம்பனியாரின்

வாழ்த்துக்கள்

**பொங்கலோ பொங்கல்!**

*எங்கும் இந்தக்குரல் ஒலிக்கும் இத் திருநாளில்,*
*வாழ்த்த, வாழ்த்துகளைப் பெற*

கலைமகள் பொங்கல் வாழ்த்து மடல்களையே

*மக்கள் தெரிவுசெய்கிறார்கள்.*

★ மக்கள் மனதைக் கவர்ந்தவை ! ★ மகத்தான படைப்புகள் !
★ மகிழ்ச்சி தருபவை ! ★ மலிவான விலைகள் !

*எங்கும் விற்பனையாகிறது !*

*இன்றே நீங்களும் தெரிவு செய்யுங்கள் !*

***கலைமகள் கம்பனி***

**124, செட்டியார் தெரு, கொழும்பு - 11**

த. பெ. எண் : 765 தொலைபேசி : 5950

உங்கள் உபஉணவுப் பொருட்கள்
இலகுவிற் பெறத் தொடர்புகொள்ளவும்

||

வட - இலங்கை

## உணவு தானிய மொத்த வியாபாரிகள் இறக்குமதியாளர் சங்கம்

இல. 30, கஸ்தூரியார் வீதி :: யாழ்ப்பாணம்

தொலைபேசி இல. 272

## விஜயஞ் செய்யுங்கள்!

❋ பலசரக்குச் சாமான்கள்
❋ மிருக உணவுகள்
❋ கயிறு வகைகள்

நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## A. வைத்திலிங்கம் அன் கொம்பனி

45, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

*T'gram:* **"Sivasakthi"** *T'phone:* **663**

---

எங்களிடம்

**அரிசி, நெல், சீமெந்து, பலசரக்குச் சாமான்கள், சாய்ப்புச் சாமான்கள்**

*மொத்தமாகவும் சில்லறையாகவும்*
*நிதானமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.*

## ச. வி. முருகேசு

154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:

1. *ச. வி. முருகேசு, நெல்லியடி, கரவெட்டி*
2. *முருகன் அரிசி மில், கிளிநொச்சி*

---

*With best compliments from*

# S. APPUCUTTY & CO.

(ESTABLISHED 1907)

SOLE-AGENTS & DISTRIBUTORS FOR
CHEMICALS, PHARMACEUTICALS, SCIENTIFIC
INSTRUMENTS ETC.

*Eankers:*

The National & Grindlays Bank Ltd., Colombo-1.
Bank of Ceylon, Foreign Branch, Colombo-1.

**149, NEW CHETTY STREET,**
**COLOMBO-13**

*Cables:* "CHEMAGENT" *Telephone:* **4494**

# கோவில்களின் வளர்ச்சியும் ஆட்சியும்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் M. A., L. T., M. O. L., Ph. D.
சென்னைப் பல்கலைக் கழகம்.

**கோவில்களின் வளர்ச்சி**

கி. பி. 9ஆம் நூற்றாண்டுமுதல் ஆதித்த சோழனும் அவன் மரபினரும் பழைய கோவில்களைக் கற்றளிகளாக்க முற்பட்டனர். பாடல் பெற்ற கோவில்களிற் பல, பாறையே இல்லாத தஞ்சை, திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவை என்பது நினைவில் இருப்பின், அவற்றைக் கற்றளிகளாக்க அவர்கள் எவ்வளவு பாடுபட்டிருத்தல் வேண்டும் என்பது நன்கு புலனாகும். மலைகள் உள்ள மாவட்டங்களிலிருந்து பாறைகளை வெட்டிக் கொணர்ந்து பழைய கோவில்கள் அனைத்தையும் குறிப்பிட்ட காலத்திற்குள் கற்றளிகளாக்க முடியவில்லை. ஒவ்வொரு கோவிலின் எல்லாப் பகுதிகளையும் கற்களால் அமைப்பதாயின், கற்கள் மிகுதியாகச் செலவாகும். இவை அனைத்தையும் உளங்கொண்டே சோழரும் சிற்றரசரும் பிறரும் பழைய கோவிலின் கருவறையையும் விமானத்தையுமே முதலிற் கற்களால் அமைக்கத் தொடங்கினர். அவர்கள் பாடல்பெற்ற கோவில்களைக் கற்றளிகள் ஆக்குவதிலே பெருங்கவனத்தைச் செலுத்தினர். திருவிடைமருதூர், ஆமாத்தூர், செந்துறை, ஆவடுதுறை, விசயமங்கை, ஆலந்துறை, அரிசிற்கரைப்புத்தூர், மழபாடி, ஒற்றியூர், வைகாவூர், நீடூர், பழுவூர், பெருந்துறை, அறையணி நல்லூர், வக்கரை, திருப்பாலைவனம், மாகறல், வேள்விக்குடி முதலிய பல கோவில்கள் கற்றளிகளாக மாறின.

ஒவ்வொரு சிவன் கோவிலின் சொத்துக்களைக் கண்காணிக்கும் முக்கிய அதிகாரி சண்டேசுவரர். அவர் பெயராலேயே கோவில் வரவு செலவுக் கணக்குகள் எழுதுவதும், விலைகொள்வதும், விற்பதும் நடைபெற்றுவந்தன. ஆதலால் முதல் திருச்சுற்றில் அவருக்கு மட்டும் இறைவன் கருவறையை அடுத்துக் கோவில் கட்டுவது வழக்கம். அக்கோவிலும் சோழர் காலத்தில் கற்றளியாக்கப்பட்டது.

ஒருகோவில் கற்றளியாவதற்கு முன்பு அதன் அடிப்படைக் கற்சுளிலோ, மண்டபத் தூண்களிலோ, பிற இடங்களிலோ முற்பட்ட கல்வெட்டுக்கள் இருக்குமாயின், அவற்றைப் படியெடுத்துக் கொண்டு திருப்பணி முடிந்தபின்பு, புதிய கற்சுவர்களில் அவற்றைப் பொறித்து, முன்னோர் அறத்தைப் பாதுகாக்கும் முறை சோழர் காலத்தில் இருந்தது.

சாதாரணமாக ஒவ்வொரு கோவிலும் கருவறை, நடுமண்டபம் இவற்றைப் பெற்றிருக்கும்; பின்னர் முகமண்டபம் அமைந்தது. கோவிலைச் சுற்றிலும் முதல் திருச்சுற்றும் மதிலும் அமைந்தன. முன்பு சொன்னபடி முதல் திருச்சுற்றில் சண்டேசர்க்குத் தனிக்கோவில் அமைந்தது. அத்திருச்

சுற்றில் வலம் வரும் முறையில் தென்கிழக்கில் சூரியன், தென்மேற்கில் கணேசர், சப்தகன்னியர், மேற்கில் சுப்பிரமணியர், வட மேற்கில் ஜேஷ்டர், வடக்கே சண்டேசுவரர், வட கிழக்கில் சந்திரன் இடம் பெற்றிருந்தனர். இத்திருச்சுற்றுக் கோவில்கள் சில கோவில்களில் தனித்தும், மதிலை ஒட்டி அமைந்த கட்டடத்திற்குள்ளும் இருந்தன. மதிலில் ஒன்று முதல் நான்கு வாயில்கள்வரை கோவிலுக்கேற்றவாறு அமைந்தன. வாசல்மீது சிறிய கோபுரங்கள் அமைந்தன. இராஜராஜன் இராஜேந்திரன் காலம்வரை கருவறைக்கு மேல்உள்ள விமானமே வானளாவக் கட்டப்பட்டது. ஆயின், பிற்காலங்களில் விமானம் தாழ்த்தப்பட்டுக் கோபுரங்கள் உயர்த்தப்பட்டன. கோவிலைச் சுற்றிலும் சில இடங்களில் கோவிலுக்குள்ளும் நந்தவனங்கள் ஏற்பட்டன. அவ்வாறே திருக்குளங்களும், கவனிப்பு மிகுந்த கோவில்களில் இரண்டாம் திருச்சுற்றும் மூன்றும் திருச்சுற்றும் கட்டப்பட்டன. அச்சுற்றுக்களில் அரசர் சிற்றரசர் முதலியோர் எடுப்பித்த சிறிய கோவில்கள் நாளடைவில் இடம்பெற்றன. திருவீரட்டான முடையார் கோவிலுள் காலகாலதேவர், கூத்தாடுந்தேவர், குலோத்துங்க கோழீச்சுரமுடையார், விக்கிரம கோழீச்சுரமுடையார் கோவில்கள் இருந்தன என்று ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது.

பல்லவர் காலத்தும் முற்காலச் சோழர் காலத்தும் அம்மனுக்குச் சிவன்கோவிலில் தனிக்கோவில் ஏற்படவில்லை; அம்மன் இறைவன் சந்நிதியிலேயே 'போக சக்தி அம்மன்' எனத் தனிஇடம் பெற்றிருந்தாள். இராஜராஜன் இப்போக சக்தி அம்மனை 'உமாபரமேசுவரி' என்று குறிப்பிட்டான். கி. பி. 11ஆம் நூற்றுண்டில், முதல் இராஜேந்திரனது எண்ணுயிரம் கல்வெட்டே முதல் முதலாக அம்மன் தனிக்கோவிலைப் பற்றித் திருச்சுற்றுலையில் உள்ள பரிவார ஆலயங்களைப் பற்றிக் கூறுமிடத்துக் குறிக்கிறது. அதன்பிறகே அம்மனுக்குத் தனிக்கோவில்கள் எடுக்கப்பட்டன. சோழர் ஆட்சிமுடியப் பல கோவில்களில் அம்மன் கோவில்கள் புதியனவாக ஏற்பட்டன என்பதைப் பல கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

கோவில்கள் செல்வாக்கிற் பெருகப் பெருக, அவற்றுள் பல மண்டபங்கள் ஏற்பட்டன. செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டநம்பி மண்டபம், திருவொற்றியூரில் இருந்த வக்காணிக்கும் மண்டபம், 'மண்ணைக் கொண்ட சோழன்,' 'இராஜராஜன்', 'இராஜேந்திரன்' என்ற பெயர்களைக்கொண்ட மண்டபங்கள், வியாகர்ணதான – வியாக்யான மண்டபம் என்பன குறிக்கத்தக்கன. பின்னது, இலக்கணம் கற்பிக்க ஏற்பட்ட மண்டபமாகும். நடன மண்டபம், நாடக மண்டபம், திருப்பதியம் பாடவும் எழுதவும் பயன்பட்ட திருக்கைக் கோட்டி மண்டபம், நூற்றுக் கால் மண்டபம், யாகசாலை என்பனவும் குறிக்கத்தக்கன. சாதாரண மண்டபங்களைப் பெற்ற கோவில்களும் பல. திருவக்கரையில் ஆயிரக்கால் மண்டம் இருந்தது. இம்மண்டபங்கள் குறைவின்றிக் கட்டி முடிக்க, அவசியம் நேருமாயின், தம் தலையை அறுத்துப் பலியிடவும் மக்கள் தயாராயிருந்த

னர் என்பது தெரிகிறது. சில கோவில்களில் மாளிகைகள் இருந்தன. நீடூர்க் கோவிலில் இருந்த மாளிகை, 'புராண நூல் விரிக்கும் புரிசை மாளிகை' எனப்பெயர் பெற்றது. 'திருமாளிகைத் தேவர்', 'மாளிகை மடத்து முதலியார்' என்னும் பெயர்களைக்காண, இம்மாளிகைகள் சைவ சமயப் பெரியோர்கள் தங்கியிருக்கவும் மக்கட்குச் சமயபோதனை வழங்கவும் பயன்பட்டவை எனக்கருதுதல் பொருத்தமாகலாம். பல பெரிய கோவில்களில் மடங்கள் இருந்தன. அவற்றில் சைவசாத்திரங்களில் வல்ல துறவிகளும் சாத்திர மாணவர்களும் இருந்தனர். அத்தகைய மடங்கள் இருந்த கோவில்களில் 'சரசுவதி பண்டாரம்' என்ற நூல்நிலையம் இருந்தது என்பது தெரிகிறது.

பல்லவர் காலத்தில் செங்கற் கோவில்களாகவும் சிறிய உருவினவாயும் இருந்த பல கோவில்கள், சோழர் காலத்தில் இங்ஙனம் கற்றளிகளாகவும் பெரிய உருவினவாகவும் மாறியதற்குச் சோழர்காலச் சைவசமய வளர்ச்சியே காரணமாகும். அவற்றைக் கற்றளிகளாக மாற்றிய கல் தச்சர்களின் பக்தியும், தொழில் திறமையும் பாராட்டத்தக்கன அல்லவா? சோழர்கள் அத் தச்சர்களைப் பாராட்டினர்; நிலங்களை மானியமாக வழங்கினர். திருவாவடுதுறைக் கோவிலைக் கட்டிய கற்றளிப்பிச்சன் உருவம் அக்கோவிலில் இன்றும் இருக்கக் காணலாம்.

**கோவில்களின் ஆட்சி.**

அரசர் முதல் சாதாரண குடிமகன் ஈறாக அனைவருமே கோவிலைத் தம் உயிராகக் கருதி, அதில் திருநந்தா விளக்கு எரிக்கவும், பூசை செய்யவும், விழாச்செய்யவும் ஏராளமான நிலங்களையும் தோட்டங்களையும் பொன்னையும் நகைகளையும் பொன்—வெள்ளிப் பாத்திரங்களையும் பூசை முதலியவற்றுக்குரிய செப்பு முதலிய உலோகப் பாத்திரங்களையும் கால் நடைகளையும் பிறவற்றையும் மிகுதியாக வழங்கினர். இவற்றைக் கவனித்துப் பாதுகாக்கவும், நிலங்கள் முதலியவற்றைக் குத்தகைக்குவிட்டு வசூலிக்கவும், கோவில் பரிவாரத்தார் அனைவர் வேலைகளையும் மேற்பார்க்கவும் அதிகாரிகள் இருக்கவேண்டும் அல்லவா? அதிகாரிகள் இல்லாவிடில் அனைத்தும் பாழாகி விடுமே!

செய்யூர், பெரியபாளையம், அகத்தியான் பள்ளிக்கோவில் போன்ற சிறிய கோவில்கள் அர்ச்சகர் பொறுப்பிலேயே விடப்பட்டிருந்தன. மாகேசுவரர் என்ற சைவத்துறவிகள் ஆட்சியில் சில கோவில்கள் இருந்தன. திருக்களர் கோவில், மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் ஆண்டார்கள் ஆட்சியில் இருந்தது. மூன்றும் இராஜராஜன் காலத்தில் மாகேசுவரர் ஆட்சிக்கு மாற்றப்பட்டது. சில கோவில்கள் கோவிலைச் சார்ந்த மடத்துத் தலைவர்கள் ஆட்சியில் இருந்தன. சில கோவில்கள் ஊரவையார் மேற்பார்வையில் இருந்தன. நடுத்தர வருவாயுள்ள பெரிய கோவிலில் கோவிலுக்கென்றே தனி ஆட்சிக்குழு இருந்தது. அக்குழுவினர், 'ஸ்ரீகாரியம் செய்வர்' 'கோவில் கணப் பெருமக்கள்', 'பாத மூலத்தார்' எனப்பலவாறு பெயர்

பெற்றிருந்தனர். அக்குழுவினருள் ஊரவையார், மாகேசுவரர், மடம் இருப்பின் அதன் தலைவர் என்போர் இடம் பெற்றிருந்தனர். சில கோவில்களின் ஆட்சி ஊரவை, கோவில் ஆட்சிக்குழு, ருத்திரமாகேசுவரர் ஆகிய மூவரிடமும் இருந்தது. சில பெரிய கோவில்கள் தனிப்பட்ட அதிகாரிகள் மேற்பார்வையில் இருந்தன. அவர்கள் ஊரவையார்க்குக் கட்டுப்பட்டிருந்தனர். வேறுசில பெரிய கோவில்களில் இருந்த அதிகாரிகள், கோவில் ஆட்சிக் குழுவினர், ஊரவையார் இவருடன் சேர்ந்து கோவில் காரியங்களைக் கவனித்தனர். கோவில் ஆட்சி ஒரு குழுவினரிடம் அல்லது ஊரவையாரிடம் இருந்தாற் போலவே கோவிலிலுள்ள நடுக் கோவில் (சிறப்புடைக் கோவில்) ஒரு குழுவினர் ஆட்சியில் இருத்தலும் உண்டு. அக்குழுவினர் கோவிற் பணத்திலிருந்து கடன் தருவர்; கடன் பெறுவர்; கோவிற்பணிகளைக் கவனிப்பர். கோவிலைப் பற்றிய மிக முக்கியமான செய்திகள் அரசன் பார்வைக்குக் கொண்டு செல்லப்படுதலும் உண்டு. கோவிலில் இருந்த பொக்கிஷ சாலை **'ஸ்ரீ பண்டாரம்'** எனப்பட்டது. அதுபற்றிய கணக்குப் புத்தகம் 'ஸ்ரீ பண்டாரப் பொத்தகம்' எனப்பட்டது; அப்பண்டார அதிகாரிகள் 'சிவ பண்டாரிகள்' எனப்பட்டனர். நடுக்கோவில் ஆட்சிபோலவே முழுக்கோவில் ஆட்சி நடத்துவோரும் இருந்தனர். அவர்கள் கோவில் நிலங்களை விற்கவும் நிலங்களை வாங்கவும் உரிமை பெற்றிருந்தனர். கோவிலுக்கு அவரவர் செய்த தானப் பத்திரங்கள் (மூல ஓலைகள்) சிவ பண்டாரத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன; அதேசமயத்தில் அவை கோவிற் சுவரிலும் வெட்டுவிக்கப்பட்டன. கோவிலைச்சேர்ந்த தேவரடியார் முதலிய மக்கட்கும் பசுக்கள் முதலிய கால்நடைகட்கும் சூலப்பொறி பொறிக்கப்பட்டிருந்தது.

எல்லாக் கோவில்களின் வரவு செலவுக் கணக்குகளும் அரசாங்க அதிகாரிகளால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டன. மதுராந்தகன் கண்டராத்தித்தன், காழி ஆதித்தன், அருமொழி மூவேந்த வேளார் முதலிய அரசாங்க அலுவலர் பலருடைய பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இந்த அதிகாரிகள், கோவில் கணப் பெருமக்கள், ஊரவையார் என்பவர் முன்னிலையில் கோவில் நகைகளைக் கணக்கிட்டு, மதிப்பிட்டுக் குறித்துக் கொண்டனர்; கோவில் கணக்குகளைப் பார்வையிட்டனர்; கோவில் பணத்தைக் கையாண்டவர்—சொன்னபடி கோவிலுக்கு நெல் முதலியவற்றைக் கொடுக்கத் தவறிய குத்தகையாளர் இவர்தம் நிலங்களை அல்லது வீடுகளைப் பறிமுதல் செய்தனர். குற்றவாளிகள் 'சிவத்துரோகிகள்', 'ஊர்த்துரோகிகள்' என்று ஏசப்பட்டனர்.

**சிறிய கோவில்கள் கவனிக்கப்பட்ட முறை**

இராமநதீச்சுரம் கருங்கல் திருப்பணியற்றது. அது, முதற் குலோத்துங்கன் காலத்திலும் செங்கற்களாலேயே புதுப்பிக்கப்பட்டது. அதனால் அதற்குரிய பத்திரங்கள் திருச்செங்காட்டங்குடிக் கோவிற் சுவரில் வெட்டப்பட்டன. பின்பு பூசை முதலியன நடைபெற இரண்டாம் குலோத்

துங்கன் நிலமளித்தான். பின்பு மூன்றும் இராஜராஜன் காலத்தில் கோவிற் பூசைக்கு முட்டுப்பாடு ஏற்பட்டதால், கோவில் மாகேசுவரரும் தானத்தாரும் சிதம்பரம் கோவில் ஆட்சியாளரைச் (மாகேசுவரரைச்) சந்தித்து உதவி கேட்டனர். அவர்கள் அவை கூட்டி, சேர, சோழ, பாண்டிய, சயங்கொண்ட சோழ மண்டலங்களில் உள்ள குறிப்பிட்ட கோவிற் பணியாட்கள், முன்போலவே ஆளுக்கு ஆண்டுக்கு இருபது காசு வீதம் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தனர். சூலப்பொறி பொறிக்கப் பெற்றவரும் இருபது காசு ஆண்டுக்குச் செலுத்தவேண்டும். பிற சிற்றூர்களில் உள்ள மாகேசுவரரும் பிராமணரும் (பொதுவாக) பத்துக்காசு செலுத்தவேண்டும். இங்ஙனம் செலுத்தப்பெறும் பணங்கொண்டு கோவிலைப் பழுது பார்க்கக் கடவர் என்றும் முடிவு செய்தனர்.

இத்தீர்மானத்திலிருந்து நாம் அறியத்தருவன இரண்டு: (1) சிறிய கோவில்கள் பொருள் உதவி பெற்ற முறை: (2) தில்லை மாகேசுவரர்க்கு அக்காலத் தமிழகக் கோவில்களில் இருந்த செல்வாக்கு.

முன்பு சொன்ன திட்டமான கோவில் ஆட்சியில் பொதுமக்கட்கு நம்பிக்கை ஏற்பட ஏற்பட, அவர்கள் கோவில்கட்கு மிகுதியாக நிபந்தங்கள் விடுத்தனர்; கோவில்கள் செல்வவளத்திற் பெருகின; பக்தர்களின் அறங்கள் குறைவின்றி நடந்தன; கோவிற் பரிவாரத்தார் தத்தம் கடமையான தொழில்களைச் செவ்வனே செய்தனர். கோவில்களில் சமயத் தொடர்பான ஆடல், பாடல், நாடகம், திருமுறை முதலியன ஓதல், சமயபோதனை என்பன காலந்தவறாது நடைபெற்றன.


# K. M. Kaliappa Pillai & Co. Ltd.

IMPORTERS:

**Foodstuff - Groceries and Hardware.**

EXPORTERS:

**Tea - Spices and Coconut products.**

HEAD OFFICE
263, SEA STREET,
COLOMBO 11

Telephone: 3913/4161/5852. Cables: "MATHOORAN".

# திருவுந்தியாரின் பொருணிலை

தருமையாதீனப் புலவர், சித்தாந்த சிகாமணி
க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T.
காஞ்சிபுரம்.

சைவ சித்தாந்த சாத்திரம் பதினன்கனுள் முதற்கண் வைத்து எண்ணப்படுவது திருவியலூர் உய்யவந்ததேவர் இயற்றிய திருவுந்தியார். அதன்கண் இறைவன் தமக்கு உணர்த்திய ஞானநெறியின் இயல்பையும் பயனையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகின்றார். அவை வருமாறு:—

உருவமில்லாத உயிர்களின் அறிவைக் கடந்த முதற்பொருள் குருவாய்வந்து பக்குவான்மாக்களுக்குச் சிவமாம் தன்மையைக் கொடுத்தது.

> அகளமா யாரும் அறிவரி தப்பொருள்
> சகளமாய் வந்ததென் றுந்தீபற
> தானாகத் தந்ததென் றுந்தீபற

ஆசாரியன் அறிவுறுத்திய நெறியில் நின்று தன்னை நோக்கி உணர்தல் அவசியம். அங்ஙனமன்றிப் பலவகைப்பட்ட நூல்களைக் கற்று மனத்தைப் பலவேறு வழியிற் செல்லவைத்தல் நன்றன்று. தன்னை நோக்கி உணரும்போது முதற்பொருளை உணர்ந்து செறிந்து நிற்கும் நிலை உண்டாகும். அந்நிலையைப் பெற்றவர்களுக்கும் பிறப்பு இறப்பு இல்லை. அந்நிலையிற் பெறும் பேரின்பத்தைப் பிறருக்கு எடுத்துக் கூறமுடியாது.

முதல்வனே ஆசிரியனாய் வெளிப்பட்டுவந்து பக்குவான்மாக்களை ஆட்கொள்ளுகிறான். ஆட்கொள்ளும்போது யான், எனது என்னும் செருக்கற்று உயிர் சிவமாகவும் அதன் செயல் சிவச்செயலாகவும் ஆகின்றன. இந்நிலையைப் பெறுதற்கு உலகப் பற்றறுதியும் மெய்யன்பும் வேண்டற்பாலன. அவ்விரண்டையும் பெறுதற்கு ஆதாரயோகம் நிராதாரயோகம் என்பவற்றைப் பயின்று, மாயையின் செயல்களைக் கடந்து, திருவருள் நிலைக்களத்தை எய்துதல் வேண்டும். திருவைந்தெழுத்தால் உணர்த்தப்படும் ஞானநெறியில் தன் உணர்வை நிறுத்துவதே நிராதாரயோகம் எனப்படும். தத்துவ உணர்வும், வாசியோகமும் இவ்வுயர்ந்த நிலையை அடைதற்கு வேறுவழிகளாக உள்ளன. சரியை கிரியை யோகம் என்பனவற்றில் முறையே முதல்வனைப் புறத்தேயும், புறத்தும் அகத்தும், அகத்தேயும் ஒருகுறிப்பிட்ட பொருளாக வரம்புசெய்து வழிபடுகின்றோம். ஞானநெறியில் அப்படிப் புறத்தோ, அகத்தோ நினைக்கும் நினைவைக் கடந்து, வியாபக உணர்வில் அருள் ஒளி விளங்கப்பெற்றுப் பேரின்ப நுகர்ச்சியை எய்துதலே நிட்டை எனப்படும். நெற்பயிரானது விதையும் நாற்றும் விளைவும் என மூன்று வகையாக வளர்ந்து நின்று பயன்தருவதுபோல, மெய்யுணர்வு

ஞானம், அன்பு, பேரின்பம் எனமூன்று நிலையை உடையது. ஞானத்தின் பயன்அன்பும், அன்பின் விளைவு பேரின்ப அநுபூதியுமாகும். அவ்வனுபவத்தில் அனுபவிக்கும் உயிரும் அனுபவிக்கின்றேன் என்ற உணர்வும் பிரிந்து தோன்றுவதில்லை. இல்லறத்தில் நின்றாலும் துறவறத்திற் சென்றாலும் தற்போதத்தை இறைவன் அருளில் அடங்கி நிற்கச் செய்தாற்றான் அவ்வறங்கள் பயனைத் தரும். அதுபோலவே, பரமுத்தி நிலையில் ஆன்மா தன்செயலற்றுத் தன்னிழப்பை உடையதாகின்றது. சித்தாந்த சைவம், தன்னிழப்பையும் மெய்யன்பையும் சிறந்த சாதனங்களாகக் கொண்டு, திருவருளையும் பேரின்பத்தையும் பேறாக வைத்து உணர்த்தி எல்லா உயிர்களுக்கும் உறுதி பயப்பதாகும்.

பேரின்ப அனுபவத்தைப் பெற்ற முத்தர்கள் உலகத்தை நோக்கி வந்தாலும் திருவருளைச் சார்ந்தே நிற்பர். அவர்களுக்கு நேரக்கூடிய துன்பங்களும், திருநாவுக்கரசருக்கு நீற்றறையின் வெப்பம் சிவனடி நிழலாகக் குளிர்ந்தாற்போல, பேரின்பமாகவே முடியும். அவர்கள் செல்லும் நெறியே உலகத்தார்க்குச் செந்நெறியாகிய அறநெறியாகும். இறைவன் ஆல்நிழற்கீழ் அமர்ந்து, மோன முத்திரையாற் காட்டும் ஞானம், உயிரையும் கடவுளையும் முன்னர்ப் பகுத்துணர்ந்து, பின் இறைவன் அடிநீழலில் அடங்கி நிற்றல் வேண்டும் என்பதே ஆகும்.

> அதுஇது என்று தனைத்தறி வாகும்
> அதுஇது என்றறிந் துந்தீபற
> அவிழ்ந்த சடையாரென் றுந்தீபற.

உயிர் சிவமாய் நிற்றல் சிவனருளால் வந்ததேயல்லாமல் உயிர் தானே சிவமாகமாட்டாது.

> அவனிவன் ஆன தவனருளா லல்லது
> இவனவ னாகானென் றுந்தீபற
> என்றும் இவனேயென் றுந்தீபற

சிவம் கொழுகொம்பு போன்றது. முத்தியைப் பெறுதற்குரிய உயிர், அக்கொம்பைச் சார்ந்து வளரும் கொடி போன்றது. மயக்கத்தைச் செய்யும் ஆணவமாகிய கொடி, உயிரோடு உடன் எழுந்து, தான் வளர்ந்து, உயிரின் வளர்ச்சியைத் தடுத்து, உடம்பாகிய பழத்தைக் கொடுத்தது. அவ்வுடம்பால் வரும் இன்பதுன்ப நுகர்ச்சியை உயிர் ஏற்றுக்கொள்ளுதல் கூடாது. திருவருளாகிய கத்தியால் ஆணவமாகிய கொடியை அறுத்துவிட்டால் உயிர் இறைவனோடு ஏகமாய் நின்று பேரின்பத்தை அனுபவிக்கும். இவ்வாறு மக்கள் உடம்பிலிருந்தே மெய்யுணர்வினால் வரும் ஆனந்தத்தேனை உண்ண அறியாதார் மாயையினால் வரும் இன்ப துன்பங்களை நுகர்ந்து பயன்படாது ஒழிகின்றனர்.

> காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
> மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
> வறட்டுப் பசுக்களென் றுந்தீபற

உய்யவந்தான் உரையாகிய இந்நூல் உலகத்தவர்க்கு மலக்ஷயத்தை (பாசநீக்கத்தை) உண்டுபண்ணி, மெய்ப்பொருளைத் தலைப்பட்டுணரவைக்கும் எனக்கூறி ஆசிரியர் நூலை முடிக்கிறார்.

> வைய முழுதும் மலக்கயம் கண்டிடும்
> உய்யவந் தானுரை உந்தீபற
> உண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற.

# மாணிக்கவாசகர் கண்ட தெய்வம்

'சைவ இளவல்' சி. திருநாவுக்கரசு
கல்வித் திணைக்களம், கொழும்பு.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் அநாதியானவை என்பதும், பசுவாகிய ஆன்மா, பாசத்துடன் சேர்ந்திருப்பதால் ஆணவ இருளில் பஞ்ச அவஸ்தைப்பட்டு, கன்மத்தால் பல பிறவிகளை எடுத்து, இன்ப துன்ப இரட்டைகளிற் கலங்கி, பின் மாயையின் ஆற்றலால் தன்னைத்தான் உணர்ந்து, சிவனருளை வேண்டி அழ, சிவபெருமான் மூன்று மலங்களையும் தன் திருவருளாற் கழுவி, இருவினைப் பயன்களையும் அழித்து, சத்திநிபாதம் காட்டி, ஒவ்வொரு ஆன்மாவையும் ஈடேற்றுவர் என்பதுந்தான் சைவ சித்தாந்த சாத்திரத்தின் சுருக்கமான விளக்கமாகும்.

சிவபெருமானது அருளைப்பெற்றுச் சிவனருட் செல்வர்களாக நாயன்மார்களும், மற்றைய அடியார்களும் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் சிவபெருமானை நேரிற் கண்டு, அவரை நேர்முக வர்ணனை செய்திருக்கிறார்கள். அந்த வர்ணனைகள் அவர்களுடைய தேவார திருவாசகங்களாம் அருட்பாக்களிற் பிரதிபலிக்கின்றன. சிவபெருமான் மூன்று நிலையில் நின்று நம்மை ஆட்கொள்கின்றார். அருவமாகவும், உருவமாகவும் அருவுருவமாகவும் காட்சி கொடுப்பதால் எல்லாவித ஆன்மாக்களும் இறைவனைச் சிறிதளவேனும் தம் அநுபவத்திற் காணமுடிகின்றது. மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை மூன்று நிலையிலுங் கண்டு களித்ததை இங்கு கவனிப்போமாக.

> ''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
> ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
> கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
> வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே."

அருவத் திருமேனியில் சிவன் எங்கும் வியாபித்து எல்லா உலகங்களையும், பொருள்களையும், சகல உயிர்களையும் தானே தாங்கி நிற்பதால் ''என் சொல்லி வாழ்த்துவேன்'' என்று அதிசயித்தார். மண், நீர், தீ, காற்று, நீலவானமாகி, அந்த வானத்திற் பவனி வரும் ஒளியாகியும் ஒலியாகியும் நிற்கும் நிலையைக்கண்டார். பின் தன்னைப் பார்த்தார். தனது ஊனமும், உயிரும் சிவமாக இருப்பதையும் உணர்ந்தார். அகில உலகமும், உயிர்களும் நிலைத்து நிற்கும் உண்மைப் பொருளாகச் சிவபெருமான் வியாபித்து நிற்பதை அறிந்தார். அவைகளுக்கும் அப்பாலும் அவர் நிற்கும் நிலையைக்கண்டு வியந்தார்.

அருவுருவத் திருமேனியை விளக்குவதைக் கவனிப்போமாக. முடிவற்ற எல்லாப் பதங்களையும் கடந்த ஆனந்தமயமான சிவபெருமான் எனது அன்புக்குரியவர், என் உள்ளத்தில் பரஞ்சோதியாக எழுந்தருளி

யிருக்கின்றார். அதனால் என் உள்ளத்தில் ''அமுதம்'' ஊறி நிற்கின்றது. புலன்கள் வழியே அந்த அமுதம் சென்று புலன்களின் போக்கை அடைத்துவிட்டது. அதனால் இப்போது எனக்கு உலக மயக்கம் இல்லை. புலன்களின் வஞ்சம் இன்றோடு தொலைந்தது. தேனினும் இனிமையான சிவபெருமான்—திருப்பெருந் துறையில் வீற்றிருக்கும் 'மங்களகரன்' எனது உள்ளத்தின் கண்ணே தோன்றுகின்ற மேலான ஒளியாக நிற்கின்றார்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே.

மாணிக்கவாசகர் சிவபெருமானை உருவநிலையில் விபரிப்பதைக் கவனிப்போமாக. பாலினைக் குழந்தைக்குப் பசிக்கும் காலத்தே, அது அழுகின்றமுன்னரே அறிந்து ஊட்டுகின்ற தாயைப் பார்க்கினும் மிகவும் இரங்கித் தீவினையேனுடைய உடம்பை உருக்கி, உள்ளத்தே அறிவு ஒளியை வளர்த்து, வற்றுதல் இல்லாத பேரின்பமாகிய தேனைப்பொழிந்து புறம்புறந் திரிந்த செல்வமே! உன்னை நான் இடைவிடாது உறுதியாகப் பற்றினேன். இனி என்னை விட்டு நீ எங்கு எழுந்தருளிச் செல்வது?

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே

சிவபெருமான் பூசுவது வெண்ணீறாகும். அணிவது பாம்பு ஆகும். அவர் வாயிலிருந்து வருகின்ற நாத ஒலி வேதாகம மந்திரங்களாகும். தோழி, இவற்றைச் சிவபெருமான் பேசுவதாலும், பூசுவதாலும், பூண்பதாலும் என்ன பயன் என்று கேட்கிறாய்? எல்லா உயிர்களுடனும் இயைந்து அவரவர் புரிந்துகொள்ள, குணம், குறி இல்லாத சிவபெருமான் உருவத் திருமேனி தாங்க வேண்டியிருக்கின்றது.

''பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.''

ஆதலால், இறைவர் பஞ்சபூதங்களாயும், இந்திரியங்கள் பொறி புலன்களாயும், கரணங்கள் முக்குணம் மூலப்பிரகிருதியாயும், புருடனும், பிரமா விஷ்ணு உருத்திரன் மகேஸ்வரன் சதாசிவமாயும், நாதம் விந்து சத்தி சிவமாயும் காட்சி தந்தாலும் முப்பத்தாறு தத்துவங்களோ ஆன்மாவோ சிவமாகாது என்ற கருத்தை, ''திருப்பெருந்துறையுறை சிவனே, ஒன்றும் நீயல்லை அன்றி ஒன்றில்லை'' என்னும் தொடரால் விளக்கிச் சைவ சித்தாந்தக் கொள்கையை நிலைநாட்டுகின்றார். அவரது வழிகளை நாமும் பின்பற்றித் திருவருளைப் பெறுவோமாக.

# அத்துவிதவாதம்

"சங்கரன்"

கேவலாத்துவிதிகள், விசிட்டாத்துவிதிகள், துவைதிகள் சுத்தாத்து விதிகள் என்னும் நான்கு பிரிவினர் தனித்தனி தாந்தாமே அத்து விதிகள் என வாதித்து நிற்றலை யாவரும் அறிவர். அதன் வரலாறும் விளக்கமும் யாதென்பதையறிய அனேகர்க்கு விருப்பிருக்குமாகலின் அதனை இங்கே விளக்கிக்காட்டுகின்றோம்.

உண்மை வேதாந்தமாகிய உபநிடதங்களிலே சர்வசாஸ்திரசார மாய் ஞானோபதேசகாலத்தில் ஆசிரியனால் உபதேசிக்கப்படும் ஒரு வார்த் தையாகிய "தத்துவமசி" முதலிய மகா வாக்கியங்கள், "அது நீ ஆகின் றாய்" எனவும், "அது நான் ஆகின்றேன்" எனவும், "அது இது ஆகின் றது" எனவும், மூவிதம்பற்றி நிகழுவனவாயின. அம் மகா வாக்கியங் களுள்ளே "அது நீ ஆகின்றாய்" என்பதில், "அது" என்பது ஒரு பொருள், "நீ" என்பது ஒரு பொருளாகலின், ஒரு பொருள் மற்றொரு பொருளாவ தெப்படி என ஐயநிகழ்ந்தது. அவ்வைய நீக்குதல் காரணமாக அது இது ஆதற்கேதுவாய அவ்விரண்டற்கும் உள்ள சம்பந்தம் "அத்துவிதம்" என உணர்த்தப்பட்டது.

இவ்வத்துவிதச்சொல்லை நான்குவிதவாதிகளுந் தத்தம் மதங் களுக்கு இயைத்துப் பொருள்கொள்வாராயினர்.

அவருள், கேவலாத்துவிதிகள் ஆன்மா ஒன்றே உள்ளது; அதை விட வேறொருபொருளில்லை என்பர். அதனால் அவர் ஏகான்மவாதிகள் எனப்படுவர். இம்மதப் பிரவர்த்தகர் சங்கராசாரியர்.

இராமாநுஜமதத்தர் வாசுதேவனே பரம்பொருள்; சடமும் சித்து மாய எல்லாம் அவனது பரிணாமமாம் என்பர்.

சிவாத்துவிதசைவர் சிவமே பரம்பொருள்; சித்தும் சடமுமாய எல்லாம் அதன் பரிணாமமேயென்பர். இவ்விருவரும் விசிட்டாத்துவிதி களேயென்பர்.

துவைதிகளாவார் பேதவாதிகள். அவர் மத்துவாசாரியமதத்தர். ஆன்மாவும் முதல்வனும் வேறுவேறிருக்குமென்பது அவர்மதம்.

சுத்தாத்துவிதிகளாவார் சைவசித்தாந்திகள். அவர், முதல்வனும் ஆன்மாவும் மலமும் எனப்பதார்த்தம் மூன்றுள்ளன; அவற்றுள் முதல்வன் சூக்குமசித்தாயும் ஆன்மா தூலசித்தாயுமிருக்கும்; அவ்விரண்டும் நிற்கும் நிலை, ஒன்றுமன்று, வேறுமன்று, இரண்டறநிற்கும் என ஓதுவர்.

இப்படி இந்நால்வர்மதமும் வேறுபடுதலால், அது இது ஆதற் கணுள்ள அத்துவித சம்பந்தத்தையும் தத்தமதங்களுக்கியையப் பொருள் கொள்ளவேண்டியவராயினர்.

இனி, அத்துவிதம் என்னும் சொல்லின் முதலில் உள்ள அகரம், இன்மை அன்மை மறுதலை என்னும் மூன்றனுள் ஒருபொருள் பயக்கும். அப்படியிருத்தல் அவர் மனம்போனபடி பொருள்கொள்ளு தற்கு வாய்ப்பாயிற்று. வேதாந்த நூல்களிலே துணிந்தபொருள் கூறப் படாமையும் அவரது இடர்ப்பாட்டுக்கு மூலமாயிற்று.

ஏகான்மவாதிகளும் இராமநுஜமதத்தரும் சிவாத்துவிதிகளும் அகரத்திற்கு இன்மைப்பொருள் கொண்டனர். மத்துவமதத்தராகிய துவை திகள் மறுதலைப்பொருள் கொண்டனர். சைவசித்தாந்திகள் அன்மைப் பொருள் கொண்டனர்.

ஏகான்மவாதிகளும் இராமாநுஜமதத்தரும் சிவாத்துவிதசைவரும் இன்மைப்பொருள் கூறினும் இன்மைக்குப் பொருள் கொள்ளும் வகையில் வேறுபடுவர்.

அவருள் ஏகான்மவாதிகள் கொள்ளும் பொருளாவது, அ-துவிதம் இரண்டின்மை எனப்படுதலின், இரண்டின்மை ஒரு பொருண்மாத்திரை யையேயுணர்த்தும். இரண்டு மூன்று நான்கு முதலியவாய் எண்ணப்படும் பொருள்களில் இரண்டின்மை இன்மையின், அவை அச்சொற்குப் பொரு ளாகா. அதனுல், அத்துவிதம் என்னும் சொல்லின் பொருள் ஒன்றென் பதேயாம் என்பது..அது நீ, அது இது என்பன ஒன்று என்பதே அவரது உபதேசமாம்.

இனி, ஆன்மா ஒருபொருளாயினும் குண குணி என வேற்றுமை தோன்ற நிற்பிற் கேவலம் ஒன்ருதலின்மையின், அத்துவிதம் என்பது உபசாரச் சொல்லாய் முடியுமாதலின் தன்னின்வேருயொருபொருளுமின் றித் தானுங் குணமுடைப்பொருளென விசேடிக்கப்படுதலின்றி நிருவிசேட மாய் நிற்கும்பொருள் என்பது அத்துவிதம் என்னும் சொல்லின் பொரு ளாம் என்பர். அதனுல் அவர் கேவலாத்துவிதிகள் எனப்படுவர்.

இராமாநுஜர், சிவாத்துவிதசைவர் முதலாயினேரும் அவ்வாறே இன்மைப் பொருள்பற்றி ஒன்றெனப் பொருள்கொண்டு சத்திசங்கற்ப முதலிய குணங்கள் பரப்பிரமப்பொருட்கு உள என்று உபநிடதங்களிற் கூறுதலாலும், அவை செயற்கைக் குணமென்றல் பொருந்தாமையாலும், பசுபாசங்களும் உள்ளனவென்பது உபநிடதங்களில் ஓதப்படுதலாலும் அவற்றிற்கு மாருகக் கேவலாத்துவிதமெனக் கொள்ளுதல் பொருந்தாது; தன்னேடு இயைபுடைய பசுபாசங்களானும் தன்குணங்களாகிய சத்திசங்கற் பம் முதலியவற்ருனும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய்நின்ற பரப்பிரமம் இரண்டில்லை. ஒன்றேயாம் என்பதே அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளாமென்பர். அதனுல் அவர் விசிட்டாத்துவிதிக ளெனப்படுவர்.

பேதவாதிகளாகிய மத்துவமதத்தர் மறுதலைப்பொருள்பற்றி இரண்டன் மறுதலையாகிய ஒன்று எனப் பொருள் கொண்டு, அவ்வாறு கொள்ளவே அவ்வொன்றன் மறுதலையாகிய இரண்டாவதும் உண்டென்பதற்குத் தடையின்மையின் அத்துவிதம் என்பதும் துவிதம் என்னும் பொருளைத்தரும் என்பர்.

இவரெல்லாம் அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருள் ஒன்றென்பதேயாமெனக் கொண்டு தத்தம் மதங்களோடு முரணுமைப் பொருட்டுக் கேவலம் என்றும், விசிட்டம் என்றும், மறுதலை என்றும் அடைகூட்டி இடர்ப்பட்டுப் பொருள் கொள்வர். அவருள், ஏகான்மவாதிகள் கூறும் கேவலமும், பேதவாதிகள் கூறும் மறுதலையும் சுருதிகளோடு மாறுபடுவனவாம். அதனால் இவ்வத்துவித விசாரத்தில் அவை பொருந்துவனவல்ல. இராமாநுஜரும் சிவாத்துவித சைவருங் கூறும் விசிட்டம் என்பது சுருதிகளோடு ஒவ்வுமாயினும் அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள் ஒன்றெனக் கொள்ளுதல் ஒவ்வாது. என்னை? ஒன்றென்பது பொருளாயின், ஒன்றெனவே தெளிவாகக் கூறியிருக்கலாம். அவ்வாறன்றி, அத்துவிதம் என உய்த்துணர வைத்தோத வேண்டாமையானும், ஒன்றெனப் பொருள்கொள்ளின், மகாவாக்கியப் பொருள் பயப்பதோர் விசேடமின்மையின் அத்துவிதம் என்றது பற்றி அவ்விடத்து ஒரு பயனும் பிறவாமையானும் என்க.

இனி, அத்துவிதம் என்பது ''அது'' ''இது'' என்னும் இரண்டு பொருள்கள் ஒன்றுதற்கண் உள்ள சம்பந்தவிசேட முணர்த்த எழுந்ததாகலின், அச்சொல்லாற் பெறப்படும் சம்பந்தம் ஐக்கியமோ? தாதான்மியமோ? சமவாயமோ? சையோகமோ? சொரூபமோ? வேறு? என விசாரிக்குமிடத்து, ஆற்று நீரும் கடல்நீரும் ஒன்றுகச் சேர்ந்தாற்போலவும், குடாகாயமும் மகாகாயமும் ஒன்றுய்ச் சேர்ந்தாற்போலவும் ஐக்கியமெனின், அவ்வாறு சேர்ந்தவிடத்து ஒருபொருளேயாகலின் ''ஒன்று'' என்றே கூறலாம். அத்துவிதம் என உய்த்துணரவைக்கவேண்டுவதில்லை. அன்றியும் ஒன்றுயவிடத்து அதுவதுவாய் நின்றறிதலாகிய ஆன்மாவின் இலக்கணம் முத்திக்காலத்து இல்லையென்றுகி வழுவாம். ஆதலின், ஐக்கியமென்றல் பொருந்தாது.

குணகுணிகட்குத் தம்மின்உளதாகிய சம்பந்தம்போலும் தாதான்மியமெனின், ஆன்மா முதல்வனைப்போலக் குணகுணிப்பொருளாய் நிற்பதன்றி, முதல்வனுக்குக் குணமாகாமையின், அவ்வாறியைத்தல் பொருந்தாது.

சமவாயமெனின், தாதான்மியத்தின் வேருய் நையாயிகர் கூறும் சமவாயம் என்பது ஒன்றின்மையின் அதுவும் பொருந்தாது.

விரலும் விரலும் சேர்ந்தாற்போலச் சையோகமெனின் வியாபகத்துவமில்லாத அவ்வியாப்பிய விருத்தியாகிய சையோகம் வியாபகப்பொருள்கட்குக் கூடாமையின் அதுவும் பொருந்துவதன்று.

இனி, யாதானுமோரியைபுபற்றிக் கூறப்படும் சொரூபமெனின், அது மகாவாக்கியப்பொருளை வலியுறுத்தற்கு எழுந்த அத்துவிதமென்னும் சொல்லுக்குப் பொருளாகாது. இங்ஙனம் அவையெல்லாம் பொருந்தாது ஒழிவனவாம்.

இனி, சுத்தாத்துவிதிகள் கூறும்பொருள் இதுவென்று காட்டுதும்:—ஒருபொருளே அவயவ அவயவிகளாயாதல் குணகுணிகளாயாதல் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்றற்கு ஏதுவாகிய தாதான்மியமும், அது போல இருபொருளே அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற்கு ஏதுவாகிய தாதான்மியமும் எனத் தாதான்மியம் இருவகைப்படும் அவற்றுள், முன்னையது தாதான்மியம் என்றும் பின்னையது அத்துவிதம் என்றும் வழங்கப்படும். மேலே கண்டிக்கப்பட்ட தாதான்மியம் ஒரு பொருளே குணகுணிகளாய் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்குமெனக் கொள்ளுந் தாதான்மியம்.

இங்கே கொள்ளப்பட்ட தாதான்மியம் ''இருபொருளே அதுவதுவாய்'' ஒற்றுமைப்பட்டு ஒன்றாய்நிற்றற்கு ஏதுவாகிய ''அத்துவிதம்'' என்னுந் தாதான்மியம், இதுவே வேதாந்தமாகிய உபநிடதங்களின் தாற்பரியமாம். அது பிரமோபநிடதமும், சுவேதாசுவதரோபநிடதம் 10ஆம் அத்தியாயம் 15ஆம் மந்திரமும் ''திலேஷுதைலம் ததிநீவசர்ப்பி ஆபஸ்ரோதஸ் வரணீஷு சாக்நி ஏமவாத்மாத்மநிஜாயதே'' (திலத்தின் கண்ணே தயிலம்போலவும், தயிரில் நெய்போலவும், பிரவாகத்தில் நீர் போலவும், அரணியில் அக்கினிபோலவும் இவ்வான்மா, ஆன்மாவிடத்தில் உண்டாகின்றான்) என ஓதுமாற்றால் உணரப்படும்.

இதனையே ''விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போன், மறையநின்றுளன் மாமணிச்சோதியான்'' எனத் தமிழ்வேதம் ஓதிற்று.

இதனையே ''முப்பொருளும் சமவியாபகமாயினும் நீரும் எண்ணெயும் போல ஒன்றற்கொன்று தூலசூக்குமங்களாமியல்புடைமையின் அதுபற்றி வியாப்பியமும் வியாபகமுமாய் நிற்பனவாம்'' என்னுஞ் சுருதி விளக்கிற்று.

இருபொருள் அத்துவிதமாய் நிற்குநிலை வியாபக வியாப்பிய முறையாம். முதல்வன் வியாபகப்பொருள். ஆன்மா வியாப்பியப்பொருள். இந்நிலை, பேதம் பேதாபேதம் அபேதம் என்னும் முறைகளுள் அமையாமையின் அத்துவிதம் எனப்படும்.

அதுபற்றியே முதல்வன் கலப்பினால் ஒன்றாயும் செலுத்துதலால் உடனாயும் பொருட்டன்மையால் வேறாயும் நிற்பனென ஓதுவர். அத்துவிதமென்னும் சொல் இம்மூன்று தன்மையையும் அடக்கி நிற்கும்.

இனி, இம் மூன்றற்கும் தனித்தனி உவமை கூறுமிடத்து ''அலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல்'' ''வானகத்தில் வானும் மணத்தில் மணமும்போல்'' என்பன கலப்புப்பற்றி ஒன்றாதலாகிய அபேதநிலையை

உணர்த்துவன. ''பண்ணையும் ஓசையும்போலப் பழமதுவும் - எண்ணுஞ் சுவையும் போல்'' என்பது செலுத்துதலால் உடனுதலாகிய பேதாபேத நிலையையுணர்த்துவது. ''இரும்பைக் காந்தம் வலித்தாற் போலியைந்து'' என்பது வேறுதலாகிய பேதநிலையையுணர்த்துவது.

வேதங்கள் ஆகமங்கள் அவற்றின் வழிநூல் சார்புநூல்களெல்லாம் இம்முறைபற்றித் தனித்தனி உவமை கூறுமிடங்களில் அவ்வுவமை கூறியநோக்கம் இதுவென உணர்ந்து பொருள்கொள்ளவேண்டும்.

இனி, இம்மூன்று இயைபும் தன்னிடத்துத் தோன்ற இம் மூன்றற்கும் வேறாய் நிற்கும் அத்துவிதத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டும் உவமையாவது ஆன்மபோதமும் கண்ணொளியும் தம்முள் அத்துவிதமாய்நிற்றலாம். ''காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காணவுள்ளத்தைக்கண்டு காட்டலின்'' எனவும், ''காட்டக்கண்டிடுந் தன்மையுடைய கண்ணுக்கேயுமுயிர்காட்டிக் கண்டிடுமாபோல வீசனுயிர்க்குக் காட்டிக்கண்டிடுவன்'' எனவும் ஓதியதும் அதுநோக்கி.

இனி, அத்துவிதம் என்னும் சொல்லின் அகரத்திற்கு அன்மைப் பொருள்கொண்டு அச்சொல் ஏனையோர் கூறும் அத்துவிதம்போலக் கேவலமென்றுதல் விசிட்டமென்றுதல் மறுதலையென்றுதல் விசேடிக்கப் பட்டுநின்று பொருளுணர்த்தாது சுத்தமாய்நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதம் என வழங்குவர். சுத்தமென்றது யாதானுமொன்றான் விசேடிக்கப்படாதுநிற்றலை. ஏனையோர் வலிந்துகொள்ளும் அப்பொருள்கட்குக் கேவலம் முதலிய அடைகொடாதொழியின் அப்பொருள் பயவாமையும் உணரற்பாற்று.

இன்னும் இப்பொருளை வலியுறுத்தி அரதத்தசிவாசாரியரும் ''வேதத்தில் ஆங்காங்குப் பிரமப்பொருளாகிய சிவனுக்கும் ஆன்மாவுக்கும் அத்துவிதபாவனை கூறப்படுமாறு என்னை?'' என ஆசங்கைநிகழ்த்தி, ''கருடனும் மாந்திரிகனும் தம்முள்வேறுதல் வெளிப்படையாயினும் கருடோகம் என்னும் அத்துவிதபாவனை விஷநிவிர்த்திப்பொருட்டு வேண்டப்படும். அதுபோலப் பிரமப்பொருளாகிய பரசிவமும் ஆன்மாவும் தம்முள் வேறுதல் வெளிப்படையாயினும் மலநிவிர்த்திப் பொருட்டு வேதத்தில் அத்துவிதபாவனை கூறப்பட்டது. அதுகொண்டுதானே நிருபசரித ஐக்கியங்கூறுதல் சாலாது'' எனச் சதுர்வேததாற்பரிய சங்கிரகத்து ஓதியருளினர்.

ஆதலின், இவ்வத்துவிதவாதத்தில் இடர்ப்பாடின்றி நேரே பொருள்கொள்ளக் கிடக்கும் சுத்தாத்துவிதமே துணிந்த மெய்ப்பொருளாமென்பது உணரத்தக்கது.

# சஞ்சிதம்

**வித்துவான் க. முருகேசன்**
விரிவுரையாளர், யாழ்நகர்க் கல்லூரி, காரைநகர்.

மக்கள் தத்தம் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் செய்யும் செயல்கள் யாவும் வினையாகும். இவை பயனின்றிப் போவதில்லை. உடனே பயன் தராவிட்டாலும் ஒருகாலத்தில் உண்டென்பது நூற்றுணிபு. சைவசமயக் கொள்கைப்படி நமக்கு எத்தனையோ பிறவி உண்டென்பதைப் பலர் ஒத்துக்கொள்வர். ஆனால் பிறவி உண்டானதற்கு எல்லை காணமுடியாது. பிறவிகள் நீர்ப்பெருக்குப் போல அநாதியாய் உயிரைப்பற்றி வருவன. நம்மை அநாதியே பற்றியுள்ள அஞ்ஞானத்தைப் போக்குவதற்கே பிறவிகள் தரப்படுகின்றன. பிறப்புக்கள் தோறும் நாம் வினைகளைச் செய்யச் செய்யப் பிறப்புக்கள் அதிகப்படும். அப்படியானால் பிறப்பு ஒருபோதுமே தொலையாதா என்று சிலர் கேட்கக் கூடும். அப்படியன்று; மேல்வினை (ஆகாமியம்) ஏறாமல் கன்மத்தை அநுபவிக்க அஞ்ஞானம் தேயும். அஞ்ஞானம் தேயப் பிறவி ஒழியும். அதுவே ஞானநிலை. அதுவரை நாம் பிறந்து இறந்துகொண்டே இருத்தல் வேண்டும்.

உயிரானது முன்செய்த வினையின் பயன்களே அதனது இன்ப துன்பங்கட்குக் காரணமாகும். கடவுளைத்தவிர மற்றெல்லாப் பொருள்களும் இயங்கிக்கொண்டே இருக்கின்றன. ஆனால், உடம்போடு கூடிய உயிர் செய்வதையே வினையென்பது. வித்திலிருந்து மரமும் மரத்திலிருந்து வித்தும் வருவதுபோலப், பிறப்பிலிருந்து வினையும், வினையனுபவிக்க உடம்பும் வந்துகொண்டிருக்கின்றன. இதனையே மணிமேகலை ஆசிரியர் இவ்வுடம்பானது ''வினையின் வந்தது, வினைக்கு விளைவாயது'' என்று கூறிப்போந்தார். இப்படி எண்ணிலா உயிர்களை இறைவன் நிலைபெறச் செய்கின்றார்.

ஒரு பிறவியிற் செய்த வினைப்பயனை அடுத்த பிறப்பில் அநுபவித்துத் தொலைக்க முடியாது. ஏனெனில் உயிரானது, தான் முன்செய்த வினையை அநுபவிக்கும்போது புதுவினையைச் செய்கிறது. இப்படியாக உயிர் அநுபவித்து அநுபவித்துச் செய்வது, கலத்திலிருந்து இவ்வாண்டுக்கென ஒரு தொகை நெல்லை எடுத்து, மீதியைவிட, எடுத்த அவ்வாண்டு விளைவு நெல் வந்து கலத்தில் சேர்வதுபோல இருக்கும். உயிர், இந்த உடம்பில் அநுபவிக்கவென்று ஒரு அளவு பக்குவப்பட்ட வினையையே எடுக்கும். அப்படி எடுக்கப்படும் வினை பிராரத்தம் எனப்படும். இதுவே ஊழ் அல்லது விதியெனவும் கூறப்படும். அநுபவத்துக்காக

முகந்து கொள்ளப்பட்டதுபோக எஞ்சியுள்ளது சஞ்சிதம் எனப்படும். இது சூக்குமமாய், புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடக்கும். இன்ப துன்பமாகிய இரண்டுவித பயனைத் தருதற்குக் காரணமாதல் பற்றி புண்ணிய பாவம் எனவும், கட்டுப்பட்டுக்கிடக்கின்ற வினைக்கு முன்பின் கூறமுடியாமைபற்றி அபூர்வம் எனவும் கூறப்படும். இது சாதி, ஆயுள், போகம் என்பவற்றிற்குக் காரணமாய் இருப்பது.

சிலர், தாம் செய்த வினையே தமக்குப் பலனளிக்கும் என்பர். வேறு சிலர், வினைகள் தாமாகவே சென்று செய்தவனை அடையமாட்டா, அறிந்து அவற்றை உயிருடன் கூட்ட ஒருவன் உளன் என்பர். மேலே வினையால் பிறப்பும், பிறப்பால் வினையும் என்று கூறினோம். அப்படியானால் ஒழிய ஒழியச் செய்து பெருகும் வினை எப்படித் தொலைவது? அது தொலையாவிட்டால் பிறவி முடியாது. ஆகையால் வினை அநுபவித்துத் தொலைக்கமுடியாதது என்ற ஆசங்கை ஏற்பட்டதனால் பெரியோர்கள் விருப்பு வெறுப்பும் தன்முனைப்பும் இன்றி வினைகளை அநுபவித்தால் ஆகாமியம் ஏறாதென்றும், ஆகாமியம் ஏறாதொழியின் சஞ்சிதம் இல்லையென்றும் அறிவுறுத்துகிறார்கள். இப்படி ஒழுகிவரின் ஒருகாலத்தில் உண்மைஞானம் உண்டாகும். தீட்சையினால் ஆத்மாவின் பாசம் கெடும். சிவஞானம் பிரகாசிக்கும். திருவள்ளுவப் பெருந்தகை மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில்,

> "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
> சார்தரா சார்தரு நோய்"

என்று கூறுவதை அவதானிக்குக.

விண்ணுற அடுக்கிய விறகை நெருப்பு அழித்துவிடுவதுபோல, நாம் பல பிறவிகளிற் செய்த வினையும் "காதலாகிக் கசிந்துகண்ணீர் மல்கிப்" பஞ்சாட்சரத்தை ஓதினால் அழிந்துவிடும் என்று பெரியோர் கூறியுள்ளனர். இராமகிருஷ்ண பரமஹம்சரும், 'நூறு வருடங்களாகப் பூட்டப்பட்டு இருளடைந்து கிடந்தாலும், ஒரு விளக்கைக் கொண்டு சென்றால், அவ்வீட்டினுள் உள்ள இருள், எவ்வாறு நீங்கிவிடுகின்றதோ அவ்வாறே ஞானமாகிய ஒளியினால், அநேக பிறவிகளில் ஈட்டிய வினையும் ஒழியும்' என்று கூறியிருக்கின்றார். இந்த வினையை எந்த ஞானிகளும் அநுபவிக்கவேண்டியதே. இவ்வாறு ஞானி அஞ்ஞானி இருவரும் அநுபவித்தலில் வேறுபாடுண்டு. வினை செய்பவன் விருப்பு வெறுப்போடும் அகங்காரத்தோடும் செய்தால் அதற்குப் பயன் உண்டு. கடவுள் செய்விக்கின்றார், யான் செய்கிறேன் என்று எவன் விடுகிறானோ அவன் செய்யும் அத்தொழிற்குரிய பயனை அவன் பெறமாட்டான்.

TELE {GRAMS : RAJGO
PHONE : 7168

Try ராஜ்கோபால்ஸ்
Your
Textiles
AT
RAJGOPAL'S
36/1, GRAND BAZAAR, JAFFNA



வீட்டுப்பாவனைக்கும், அன்பளிப்புக்கும்
ஏற்ற
எவர்சில்வர்
பாத்திரங்கள்
கிடைக்குமிடம்
எஸ். சந்தோஷநாடார்
85, குமாரவீதி :: கொழும்பு - 11
தொலைபேசி: 5269

A. PERAMPALAM & SONS

No. 3, Stanley Road, JAFFNA

T'phone: 335 T'gram: "EMEMTIPI"

**General Hardware Merchants**

*DEALERS IN*

Pentalite and Robialac Emulsion Paints
Distempers in brilliant colours
Snowcem and Permacem
Coloured cement — Red (Terracotta) white, green and black
Spray Paints — (DUCO)—ICI

*SPECIALISTS IN*

Hardware — Brassware — Sanitaryware and Building materials

*With the best compliments from*

V. M. PONNAMBALAM & Co.

★

128, CENTRAL ROAD,
COLOMBO - 12

Use
"HIROVAC"
VACUUM FLASK

Now available in all sizes

*PLONEER IN*
*FLASK MANUFACTURE*

HIRANI INDUSTRIAL WORKS

111, 1st DIVISION, COLOMBO

T. Gram: "RUKIYA" T. Phone: 7623

BENTLEY OVEN

the only oven
For
PERFECT & FOSTEST BAKING

*AVAILABLE EVERYWHERE*

*Sole Distributors:*

A. S. MOHAMED ISMAIL

51, First Cross Street,
COLOMBO - 11

Grams: "GLASSWARE" Phone: 2734

எங்களிடம்

★ பேரேடுகள்
★ சி. ஆர். கொப்பிகள்
★ பாஸ் புத்தகங்கள்
★ மாப்பிங் கொப்பிகள்
★ வரைதல் கொப்பிகள்
★ நோட் பேப்பர்

முதலிய யாவும்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

★

ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தந்தி : "அச்சகம்" போன் : 348



உள்ளத்தழகை முகத்தழகில்
பதியவைக்கும்
உங்களின் உயர்ந்தரக
போட்டோக்களுக்கு

பாரத் ஸ்ரூடியோ

கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்
போன் : 252

BHARAT STUDIO

*Photographers*

*82/1, Kasturiar Road,*
**JAFFNA.**



*Always Specify*

"EVERITE" ASBSTOS CEMENT
PRESSURE PIPES

FOR ALL WATER SUPPLY SCHEMES

AND

"TURNALL" ASBESTOS CEMENT PIPES

FOR DRAINAGE & SEWERAGE WORKS,

manufactured by
TURNERS ASBESTOS CEMENT CO., LTD.
MANCHESTER - ENGLAND.

*For further particulars, apply to Local Agents:-*

**Chettinad Corporation Private Limited**

116 / 118, KEYZER STREET, :.: COLOMBO

*With best compliments*

*from*

# S. S. HAMEED & CO.,

DEALER IN SUNDRY GOODS

25, 1/12, DAM STREET,

**COLOMBO.**

*Telephone No.* **79129** *T' gram :* **"DEEMA"**

★ சகலவிதமான சாய்ப்புச் சாமான்கள் ★ விளையாட்டு உபகரணங்கள்

★ பாடசாலை உபகரணங்கள் ★ அழகு சாதனங்கள் - பரிசுப் பொருட்கள்

இன்னும் பலவிதமான ஆடம்பரப் பொருட்களையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே விஜயஞ் செய்யுங்கள், எமது புதிய ஸ்தாபனத்திற்கு.

போன் : 372 **ருஜு ஸ்ரோர்ஸ்** கிரும்ஸ் : ராஜு

**67, 69, கஸ்தூரியார் வீதி,** த. பெ. **64** **யாழ்ப்பாணம்**

*ANY WHERE AT ANY TIME*

*Drink*

**BABY BRAND SPECIAL**

TO QUENCH YUUR THIRST

உங்கள் தாகங்களைத் தீர்க்க எப்பொழுதும்

எந்தநேரத்திலும்

**பேபி அடையாளமுள்ள ஸ்பெஷல்**

**பானங்களையே**

கேட்டு வாங்கி அருந்துங்கள்

What do you Need!

*Please pay a Visit to our Establishment For all kinds of*

**Fancy Goods, Toys, Gifts, Toilet, School Fancy Goods, Sundries Etc. Etc.**

*Phone :* **372** **RAJU STORES** *Grams :* **RAJU**

P. O. BOX 64

**67, 69, Kasthuriar Rd., JAFFNA**

# சங்க காலத்திற் சைவம்

**சைவப்புலவர் க. சி. குலரத்தினம்.**
எழுத்தாளர், பாடநூற்குழு, கொழும்பு.

சிவ வழிபாடு சிந்து நதிக்கரை நாகரிகங்களிலும் தொன்மை வாய்ந்தது. சிவவழிபாட்டைக்கண்ட தென்னுட்டவரே போகபூமி எனப் படும் மெசப்பொட்டேமியாவில் சுமேரிய நாகரிகத்தையும் கண்டவர் என ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். அம் மக்கள் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே சீரும் சிறப்பு முற்றுப் பெருவாழ்வு வாழ்ந்த பெற்றியராவர்.

இத்தகைய நாகரிகங்களைக்கண்டுவளர்த்த குடியேறிகளைத் திரா விடர் என ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவர். அவர்கள் குடியேற்றம் மத் தியவாசியா தொடக்கம் தென்னிலங்கைவரை பரவியிருந்தது. பிறநாட் டவர் காலத்துக்குக் காலம் இந்தியாமீது படையெடுத்து அதனைச் சிதைத்தபோதெல்லாம் தென்னகம் அதிகதூரம் பாதிக்கப்படாமலே இருந்தது. அதனுலே அங்கே வழிபாட்டுமுறை, பக்திநெறி, சமய இலக் கியங்கள், ஆலயவமைப்புக்கள் சிறப்புற்றேங்கின. 'மேருத்தாழ்ந்து தென் திசையுயர்ந்தபோது' எனவருந்தொடர் சிந்திக்கற்பாலது.

சங்ககாலத்துச் சைவசமயிகள் சிவனை மறவாத சிந்தையர். சம ணர்கூடத் தம் வீட்டுநிலையைச் சிவகதி எனவே குறித்தனர். வடக்கே வேதவிற்பன்னர் உருத்திரனையும் திருக்கைலாயமலையையும் கண்டவாறே, தென்னுட்டவர் சிவனைக் கண்டு அவன் எந்நாட்டவர்க்கும் இறையெனக் கொண்டனர். குன்றமர்ந்துறைதல் வீடுபேற்றிலும் பெரிதெனக்கொண் டவர் தமிழர்.

சங்க நூல்களில் ஆலமர் செல்வன், ஆலமர் கடவுள், ஆல்கெழு கடவுள், தாழ்சடைபொலிந்த அருந்தவத்தோன் எனப்பலவாய தொடர் கள் பயின்றுவருகின்றன இன்னும் முக்கட்செல்வன், மூவெயில் எரித் தவன் எனவும், அவன் கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் ஆகிய சங்கார தாண்டவங்கள் ஆடவல்ல தம்பிரான் எனவும் சங்ககாலத்துப் புலவர் கண்டனர். இறைவனுடைய முக்கண் போலச் சேர சோழ பாண் டியர் இருத்தனர் எனவும், இறைவனை வழிபடுதற்கே அரசன் குடை பணிதலல்லது பிற இடங்களிற் பணிதலாகாது எனவும் புலவர் கூறி யுள்ளார்.

விருப்பத்தை உண்டாக்குபவனை வேள் எனவும், விரும்பியதைப் பெறுவதற்குச் செய்வதை வேள்வியெனவும் வழங்கினர். பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி பல வேள்விகளைச் செய்துள்ளான் என அறியக்கிடக்கின்றது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றாற் போல அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்னும் கருத்தும் அக் காலத்தில் எழுந்தது. நீலமேனி வாலிழை பாகத்தொருவன் எனப் பெண் பாற் புலவரான ஔவையாரே அம்மையப்பரைக்கண்டு பாடியுள்ளார். சிவப்பும் நீலமும் ஆற்றலையும், அருளையும், ஆண்மையையும், பெண்மையும்

குறிப்பதாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழர் கண்டனர். அண்மையில் வில்லியம் யேம்ஸ் என்னும் தத்துவப் பேராசிரியர் ஒருவர் அவ்வுண்மையை அமெரிக்காவிற் பரிசோதித்து நிறுவியுள்ளார்.

மூவிலைவேலும், மழுவும், எரிதிகழ் கணிச்சியும் சிவன் திருக்கரங்களில் திகழ்புவை... புலித்தோலரடை. அணிந்த இறைவன், புல்லிலை எருக்கும் காட்டுக்கொன்றையும் அணிந்தவன். ஆவைப்போலக் கொன்றையும் சிவனை அணிசெய்வது. தலையிலுள்ள கண்ணியும், மார்பில் உள்ள மாலையும், அடையாள மாலையும் கொன்றை.

நட்சத்திரங்களுள் சிறந்ததாகக் கருதப்படும் திருவாதிரையே மிகப்பழைய காலத்தில் முதலில் வைத்தெண்ணப்பட்டது. திருவாதிரையும் சிவனோடு சிறப்புற்றது. ஆதிரையான், ஆதிரை முதல்வன் எனவரும் தொடர்கள் பொருள் பொதிந்திருப்பன. ஆதிரை முதல்வனிற் கிளர்ந்த நாதர் பதினொருவர் எனப் பதினோர் உருத்திரரைப் பற்றிப் பரிபாடலிற் கூறப்பட்டுள்ளது.

மாலைக்காலத்து வானம் சிவன் திருக்கோலத்தையும், அவன் செஞ்சடை திசைமுகம் அலம்புவதையும், ஆதவன் மேற்குக் கடலில் மறையும் அற்புதக் காட்சி சிவ்பெருமானின் திருக்கூத்தை நினைவுபடுத்துவதையும் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அந்தணன் என்போன் அறவோன்: அவன மற்றுயிர்க்குச் செந்தண்மை பூண்டொழுகுபவன். தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ்சத்தி பின்னமிலான் எங்கள் பிரான். அவனைப் பைங்கட்பார்ப்பன், அந்தணன், மறையோன் என்றெல்லாம் குறிக்கும் புலவர்கள், "ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்த மாமறையாளன்" எனவும், "இசையாழ்கெழு மிடற்றந்தணன்" எனவும் போற்றுவர்.

சங்ககாலப் புலவர்களுக்குச் சமயப்பிரசாரஞ் செய்யவோ வாது செய்யவோ வழக்குப் பேசவோ தேவை ஏற்படவில்லை அவர்கள் சமரசம் பேசவும் வாய்ப்பைத் தேடியுங்கொள்ளவில்லை. தங்கள் மன எழுச்சிகளை அப்படியே வெளிப்படுத்தினர்கள். அறிவாளிகள் மனம் எங்கிருந்தாலும் கருததொருமிக்கும் (Great minds agree) என்பது போல வேதவிற்பன்னர்கள் நினைத்தவற்றைத் தெற்கே தமிழரும் சிந்தித்திருக்கிறார்கள். பிற்காலத்தில் தேவாரம் வேதசாரம் என நிலைநாட்டப்பட்டதும் காண்க.

சூழ்ச்சி செய்து பொருளீட்டல் வேண்டாம். அன்பே பொருள்; அன்பே சிவம். அன்பினும் அருள் பொருளிற் பெரியது. அன்பு நெறியே அழியாப்பொருள். ஆற்றல்மிக்க இறைவன் அருள்மயமானவன். அருள் தாய்மை, ஆற்றல் ஆண்மை. அது ஆளுந்தன்மையது. அருளாய தாய், ஆற்றல் மிக்க அப்பனை ஆட்டுவிக்கின்றாள். தாளம் போடுகிறாள்.

சங்ககாலச் சைவர், புகழெனில் உயிருங் கொடுப்பர்; பழியெனில் உலகுடன் பெறினும் கொள்ளார்; அயர்விலர்; வாழச்செய்த நல்வினையல்லது ஆளுங்காலைத் துணைபிறிதில்லை என்பனத அறிந்தவர்; சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும் அறத்துவழிப்படும் தோற்றம் கண்டவர்; அருளும், அன்பும் நீக்கி, நீங்கா நிரயங் கொள்பவரோடு ஒன்றாது வாழ்ந்தவர். அவர்கள் சைவர்கள்.

# வேதாந்தத் தெளிவு சைவசித்தாந்தம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.
முன்னைநாள் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்,
சைவாசிரிய கலாசாலை, யாழ்ப்பாணம்

நாம் ஒருவரையொருவர் சந்தித்து உரையாடுகின்றோம். 'நான்', 'நான்' என்று அடிக்கடி பேசுகின்றோம். இந்த 'நான்' யார்?

'நான்' என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொருளை யாராவது கண்டதுண்டா? கேட்டதுண்டா? விஞ்ஞான கூடங்களிற் பரிசோதனஞ் செய்து கண்டுபிடிக்க இயலாதா? 'நான்' என்பது யாது?

இந்த உடம்பை நான் என்போமா? உலகமெல்லாம் அலைகின்ற மனத்தை நான் என்போமா? புத்தி முதலிய அந்தக்கரணங்களுள் யாதாயினுமொன்றை நான் என்போமா? நான் யார்?

உபநிடதங்கள் 'வேதாந்தம்' எனப்படும். அந்த வேதாந்தம் உடம்பும் நீயல்லை; மனமும் நீயல்லை, வேறு எந்தக் கரணமும் நீயல்லை. இவை தவிர்ந்த பொருளே அந்த 'நான்' என்பது. அதனைக் கண்டுபிடி யென்கின்றது.

'நான்' என்பது இவைகள் அல்லாததானால் வேறு எப்படியிருக்கும்? ஒரு குறிப்புச் சொல்லலாகாதா? என்று அந்த வேதாந்தத்தைக் கேட்டால், அது பின்வருமாறு ஒரு குறிப்புச் சொல்லுகிறது.

அப்பனே கேட்பாயாக. சரீரம் மனம் முதலியவைகள் அல்லாததானை, அந்த 'நான்' என்பதுதான் 'பிரமம்'. அதனைக் கண்டுபிடிப்பாயாக. நீ பிரமம் என்கின்றது அந்த வேதாந்தம்.

'நான்' என்று சொல்லிக்கொண்டிருப்பது பிரமம் என்பதைக் கேட்க எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. இந்த வயிறு கழுவுகிற தொழில்களனைத்தையுந் தூர எறிந்து விட்டு, 'நான்' என்பதைக் கண்டுபிடித்து, 'நான் பிரமம்' என்றிருக்கலாமேயென்று வாயூறுகின்றதே. ஒவ்வொருவரும் 'நான்', 'நான்' என்பதைக் கண்டுபிடித்துவிட்டால் யாதொரு குறையுமின்றிப் பிரமமாயிருக்கலாமே ஏன் இவ்வாறு சிந்திக்கின்றோமில்லையேயென்று சிந்திக்கும்போது, சைவசித்தாந்தம் மகனே என்று அழைத்து ஒரு வார்த்தை சொல்லுகின்றது.

குழந்தாய், வேதாந்தம் உனக்குத் தந்தை. தந்தை சொன்மிக்க மந்திரமில்லை வேதாந்த போதனையை நீ பேணி நட. 'நான்' என்பது சரீரம்மனம் முதலியவைகள் அல்லாதது என்று வேதாந்தம் சொன்னது

அத்தனையும் சத்தியமேயாம். சரீராதிகள் அல்லாததாகிய 'நான்' என்பது உன்னுற் காணப்படுமானுல், வேதாந்தங் கூறியவாறு, அந்த 'நான்' பிரமமாகவேதான் தோன்றும். நீ உன்னைப் பிரமமாகவே காண்பாய்; காணவேண்டும். அதற்கு வேண்டிய முயற்சி செய். 'நான் பிரமம்' என்றுகாண். ஆனுல், என்று நிறுத்தியது சைவசித்தாந்தம்.

சைவசித்தாந்தம் இறுதியில்

'ஆனுல்'

என்றதேன்?

'நான்பிரமம்' என்று துள்ளிக் குதித்த ஒவ்வொருவருக்கும், இந்த 'ஆனுல்' பெரிய தலையிடியைத் தருகின்றதே. சைவசித்தாந்தமே, ஏன் 'ஆனுல்' என்கிருய். நான் பிரமம்' ஆவதில் உனக்கு ஏதுஞ் சந்தேகமா என்று கேட்டால் பின்வருமாறு கூறுகின்றது.

மகனே, **'பளிங்குபோன்றது உன்தன்மை'** என்று கூறி அமைகின்றது.

பளிங்கு சார்ந்ததன் வண்ணமாவது. சார்பின் வண்ணமன்றித் தனக்கொரு வண்ணமில்லாதது. 'நான்' என்பது சரீராதிகளைச் சார்ந்து அவற்றின் வண்ணமாயிருக்கிறது. இவ்வாறே பக்குவம் வந்ததொரு காலத்தில் பிரமத்தைச் சார்ந்து பிரமவண்ணமாயிருக்கும். எப்படிச் சரீர வண்ணமாயிருக்கும்போது 'நான்' என்பது சரீரமல்லாததோ அப்படியே பிரமவண்ணமாயிருக்கும்போதும் ''நான்'' என்பது பிரமம் அல்லாததாம் என்று தெரிவிக்கின்றது சைவ சித்தாந்தம்.

சடமான சரீரவண்ணமாயிருந்த 'நான்' என்பதைச் சித்தாகிய பிரமவண்ணமாக்குதற்கு எடுத்த முயற்சியினின்றியமையாமையையும், உபநிடதமாகிய வேதாந்தத்தின் உபாயத்தையும் பாராட்டிக் கொண்டே, 'நான்' என்பதன் உண்மையைத் தெரிவிப்பதனுல், சைவ சித்தாந்தம் வேதாந்தத் தெளிவாயிற்று.

**'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்'** என்பது சிவப்பிரகாசம்.

'நான்' என்பது சரீராதிகளுமன்று. பிரமமுமன்று. அது அவை இரண்டுமல்லாத தொன்று. உயிர் எனப்படும் ஆத்மா அது.

**'கண்ட இவை அல்லேன் நான்**
**காணுக் கழிபரமும் நான் அல்லேன்'**

என்பது சிவஞானசித்தியார்.

கண்ட இவை சரீராதிகள்
காணுக் கழிபரம் பந்தநிலையிற் புலப்படாத பிரமம்.

ஈழத்தின் தலைசிறந்த பீடித் தயாரிப்பாளர்களாகிய

# சி. சின்னத்துரை & பிரதர்

ஸ்தாபனத்தார்,

பீடிப்பாவனையாளர்களின்
நலன் கருதிச் சிறந்த முறையில் தயாரிப்பதுதான்
இலங்கையில் புகழ்பெற்ற

# 786
# கல்கி பீடிகள்

உடல் நலனுக்கு உகந்தது
## "786 கல்கி பீடிகள்"

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்:-

## சி. சின்னத்துரை & பிரதர்

79 & 79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு
T' phone 6043 & 78946

★ மணம் ★ தரம்

★ குணம் ★ மதிப்பு

வாய்ந்தவையே நல்ல சுருட்டுக்கள்

★

**கனகலிங்கம் சுருட்டுக்களையே**

தெரிவு செய்யுங்கள்.

இலங்கையில் மிகச் சிறந்த சுருட்டுக்கள்.

எங்கும் கிடைக்கும்

தொலைபேசி: 5883 தந்தி: கன்சிகார்ஸ்

**வி. கனகலிங்கம் பிள்ளை அன்ட் சன்**

17. சென்ற் ஜோன் வீதி,

**கொழும்பு - 11.**

What Makes a Good Cigars
FLAVOUR, PURITY, QUALITY & VALUE THEN CHOOSE

**KANAGALINGAM CIGARS**

the Finest in Ceylon – Available Everywhere

T' Phone: 5883 T' grams: Kancigars

**V. Kanagalingam Pillai & Son**

17, St, John Road,

**Colombo - 11**

# அடியார் நட்பை நாடு

—சிவானந்த சரஸ்வதி அடிகள்—

1. தன்னை அறிந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவதற்கு அடியார்களின் உறவு வீட்டைத் தாங்கும் தூண்போல இன்றியமையாதது. ஆகையால் அடியார்களின் நட்பை முதலிலே தேடு.

2. ஆத்மீக ஞான ஊற்று அடியார்களில் நிறைய உண்டு. அடியார்களைத் தாழ்மையுடனும் பயபக்தியுடனும் தேடி அணுகு. அவர்கள் தெய்வீக ஞானப்பாலை உனக்கு ஊட்டி வைப்பார்கள்.

3. அடியார்களையும், யோகிகளையும் சித்தர்களையும் நினைந்துருகுங்கள். அவர்கள் உங்களுக்கு உயர்வை நல்குவார்கள். அவர்கள் இறந்துபோகவில்லை. அவர்கள் என்றும் சிரஞ்சீவிகளாய் உள்ளார்கள்.

4. ஒரு பூரணயோகி ஒரு சாகியத்தாரின் பண்பாட்டையும் அச் சாகியத்தாரின் தலைவிதியையும் சீர்ப்படுத்தி அவர்களை உய்விப்பார்.

5. நான் அற்ற பணிவு, தைரியம், கருணை, சமாதானம், பேரறிவு, மன்னித்தல், அடக்கமுடைமை, சமதிருஷ்டி, தராசுக்கோல் போன்ற நடுநிலைமையான மனம் ஆகிய இவைகளே ஒரு துறவியின் ஆபரணங்கள்.

தொகுத்தவர் : திரு. மு. கு. சுப்பிரமணியம்,
"தாயுமானவர் இல்லம்,"
காரைநகர்


இசைக்கலை வாழ்க !

S. S. நடராசா, சங்கீதபூஷணம்

அரசடிக்காடு - காரைநகர்

# நன்றி

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் அருள்மழை பொழிகின்றார். சிவபிரானை முழுமுதற் கடவுளாகவுடையது சைவசமயம். சைவத்தைக் கண்ணெனப் போற்றுபவர்கள் காரைநகர் மக்கள்.

பரசமய மோதல்களினால், சைவமக்கள் தளர்ச்சியுற்றிருந்த காலங்களிலெல்லாம் நாயன்மார்களும், மற்றும் சைவப் பெரியார்களும் தோன்றிச் சைவ சமயம் மேன்மேலும் வளர்ச்சியடைய வழி செய்தனர். மேலை நாட்டினரின் அடக்கு முறையினால், நம் நாட்டுச் சைவப் பெருமக்கள் தமது மதானுட்டானங்களைப் பின்பற்றமுடியாதிருந்த வேளையில், **நாவலர் பெருமான்** தோன்றித் தொன்மைமிகு சைவத்தையும் அதனுடன் பின்னிப்பிணைந்துள்ள தேன்தமிழ் மொழியையும் காத்தருளினார். இத்தகு பணியைத் தமது இலட்சியமாகக் கொண்டு, சமயப் பற்றும், மொழி ஆர்வமும், சேவை உள்ளமும், சுறுசுறுப்பும் மிக்க நல்லோர் பலரால் ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பெற்ற **காரைநகர்ச் சைவமகாசபை**, தன் உயர்ந்த இலட்சியத்தினின்றும் சிறிதும் வழுவாது, ஆல்போலத் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, பேரும் புகழும் பெருவாழ்வும் பெற்று, இன்று, பொன்விழாக் கொண்டாடும் நிலையை அடைந்திருக்கின்றது இச்சபை ஆற்றிய ஐம்பதாண்டுப் பணியின் அடையாளச் சின்னமாகவும், சைவநூற் சாரத்தின் நிரந்தரக் கருவூலமாகவும் விளங்கும் வகையில் ஒரு மலர் தயாரிக்கவேண்டுமெனச் சைவமகாசபையினர் தீர்மானித்தனர். சபைத்தலைவர் திரு. ச. சபாபதி அவர்களும், செயலாளர் திரு. அ. சிவபாதம் அவர்களும் மலரை உருவாக்கும் பொறுப்பினை ஏற்கும்படி அச்சபையின் சார்பாகச் சிறியேனை வற்புறுத்தினர். அவன்தாள் வணங்குவதற்கு அவனருள் வேண்டுவதேபோல், அவன் பணி செய்வதற்கும் அவனருளே வேண்டும். சமயத்தொண்டு புரிவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து, திருவருட் குறிப்பும் அதுவேபோலுமென உணர்ந்து, இப்பணியை ஒப்புக்கொண்டேன்.

சான்றோரின் அன்பும் ஆதரவும் ஆசியும் இருந்தாற்றான் எப்பணியையும் இனிது நிறைவேற்றல் சாலும்.

தமிழகத்திலே, சைவாதீனங்கள் செய்துவரும் சமயத் தொண்டுகள் அளப்பில. சைவாலயங்களைத் தக்கமுறையிலே பரிபாலித்தும், சமயப் பிரசங்கங்கள் செய்வித்தும், சமய நூல்களை அச்சிட்டு இலவசமாக வழங்கியும், ஏழை மக்களுக்கு அன்னுதிகளையளித்தும், சமய நூல்களை நன்கு கற்ற அறிஞர்களுக்குப் பட்டங்களும் பரிசுகளும் வழங்கி அவர்களை ஊக்குவித்தும் அவை செய்யும் அரிய பணிகளை நாடறியும். இப்பணிகளில் முன்னணியில் நிற்பவர்கள், தருமையாதீனக் குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்களும், மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீன மகாசந்நிதானம் **திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்களுமாவர்.

சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் இலகுவான, இனிய தமிழில் எழுதியும் எழுதுவித்தும் நூல்களாக்கி வெளியிடுவதுமன்றித் தமிழ் நாடு தெய்விகப் பேரவைக்குத் தலைமை தாங்கியும் சமயத்துக்குப் பெரும்பணி செய்துவருகின்றார்கள் தருமபுர ஆதீனத்து மகா சந்நிதானம் அவர்கள்.

மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்து மகா சந்நிதானம் அவர்கள், தமிழகத்திலுள்ளோர்க்கு மட்டுமன்றி, எமது நாட்டிலுள்ள சைவ அறிஞர்களுக்கும் கௌரவப் பட்டங்கள் வழங்கியும், பிறசமயத்திற் சேர்ந்தோரை அவர்தம் விருப்பப்படி சைவசமயத்திற் சேர்த்தும் வருகின்றார்கள்.

ஆதி சங்கரரின் மறு அவதாரம் போல் விளங்கும் **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்** அவர்கள், நாட்டின் பல பகுதி

களுக்குஞ் சென்று சமயப்பணி புரிந்து வருகின்ருர்கள். கோவில்கள் பலவற்றின் கும்பாபிஷேகங்களைத் தாமே முன்னின்று நடாத்திவைக்கின்ருர்கள். தம் அறிவுரைகளினுல், மக்களை, உண்மையான சமயவாழ்வு வாழும்படி தூண்டிவருகின்ருர்கள்.

ஈழநாட்டிலே இதுவரை சைவாதீனம் இல்லாக் குறையை நீக்குகின்றது, நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம். மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் கிளையாகத் திகழும் இவ்வாதீனத்தைச் சேர்ந்த **ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாகள்** அவர்கள், நமது நாட்டிலே சைவசமயத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிகின்ருர்கள்.

இந் நால்வர் பெருமக்களின் ஆசிச் செய்திகள் இம்மலருக்குக் கிடைத்தமை பெரும் பேருகும்.

பொருள் வசதியும் கல்வி வசதியும் குறைந்த இடமாகிய கிளிநொச்சியிலே, மஹாதேவ ஆஸ்ரமத்தை அமைத்து, அங்குள்ள ஏழைச் சிருர் பலருக்குத் தாயாகவும் தந்தையாகவும் தோழனுகவும் குருவாகவுமிருந்து தொண்டு செய்பவர்கள் **ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள்** அவர்கள். பல கஷ்டங்களின் மத்தியில் அவர்கள் செய்யும் சமயப் பணி போற்றற்குரியது. அன்னுரின் ஆசியுரை எமக்கு அருமருந்தாக விளங்குகின்றது.

யோகம் என்பது இன்னதென உலகினர்க்கு எடுத்துக்காட்டும் **கவியோகி சுத்தானந்த பாரதியார்,** மக்கள் அனைவரும் தர்மத்தின் வழியே நடக்க வேண்டுமென அல்லும் பகலும் பேசியும் எழுதியும் வருவதுடன் தாமே மற்றையோர்க்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்துவரும் **பாரதரத்தினம் சி. இராஜகோபாலாச்சாரியார்,** உலகிலுள்ள தத்துவ ஞானிகள் வரிசையில் முதலிடம் வகிப்பவரும், இந்தியாவின் முன்னை நாள் ஜனுதிபதியுமாகிய **டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்,** தேசிய உணர்ச்சியைச் செந்தமிழ்ப் பாக்கள்மூலம் படிப்போருள்ளத்திற் செறியச் செய்யும் நாமக்கல் கவிஞரும் அரசவைக் கவிஞருமாகிய **திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை,** எங்கு சென்ருலும் இந்தியப் பண்பாட்டின்

பிரதிநிதியாக விளங்கும், முன்னைநாள் இலங்கை — இந்தியத் தூதுவர் **டாக்டர் பீம்சென் சச்சார்** ஆகியோரின் ஆசியுரைகளும், 'சிவதொண்டன்' ஆசிரியராக அமைந்தும், அகில இலங்கைச் சேக்கிழார் மன்றச் செயலாளராகப் பணியாற்றியும் இன்ன பிறவாறும் சிவப்பணியும் தமிழ்ப் பணியும் செய்து வருகின்ற **பண்டித வித்துவான் க. கி. நடராஜன்** அவர்களின் வாழ்த்துரையும் எமக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டுகின்றன.

இவர்கள் அனைவருக்கும் எம் அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஆழ்ந்து, அகன்று, பரந்து, விரிந்து விளங்கும் நம் சைவ சமயத்தில், உலகோரை உய்வித்து உன்னத நிலைக்கு உயர்த்தும் தத்துவங்கள் நிறைந்துள்ளன. எவரெவர் எப்படியெப்படி இறைவனைத் துதித்து அவனையடைய விரும்புகிறார்களோ, அவரவர்க்கெல்லாம் இடமளித்து ஈடேற்றும் அருட்சங்கப் பலகையாக விளங்குகின்றது சைவசமயம். கடலின் ஆழத்தைக் கண்டு சலிப்படையாது, அதனுள்ளே பொறுமையோடு சுழியோடுபவர்கள், முத்தும் பவழமும் மொய்த்த நற்சங்கும் பெறுவர். சைவநூற் கடலுள் தம் சிந்தையாற் சுழியோடுவோர், சிவஞானமாகிய தீங்கனி சுவைத்துச் செம்மாந்திருக்கப் பெறுவர். சைவ நூல்களுட் சில, நம் மதத்தின் வெவ்வேறு அம்சங்களுக்குத் தனிமுக்கியத்துவங் கொடுத்தாலும் அனைத்தினதும் அடிப்படைக் கொள்கை ஒன்றேயாம்.

> ''தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்'' என்ற

பாடலும் இவ்வுண்மையை வற்புறுத்துதல் காண்க. இம்மலரிலுள்ள கட்டுரைகளும் இத்தகையனவே. முதலிலுள்ள பதினைந்து கட்டுரைகளும் இவ்வெண்பாவில் வரும் ஒழுங்கு முறையிலே நிரைப்படுத்தப்பட்டுள்ளன.

''இதனை இதனால் இவன்முடிப்பவன் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'' என்கின்றார்

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார். இம்மலரி லுள்ள கட்டுரைகளைப் படிப்போர், ஒவ்வொரு கட்டுரையையும் அதனதன் ஆசிரியரைத் தவிர மற்றெவராலும் இத்துணைச் சிறப்பாகவும் தெளிவாகவும் எழுதமுடியாதென்பதை உணர்வர். கட்டுரை அனுப்பியுதவவேண்டும் என்ற எமது கோரிக்கைக்கிணங்கி, அரிய கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியுதவிய அறிஞர் பெருமக்களுக்கு எம் மனப்பூர்வமான நன்றி என்றும் உரியது.

மலரிலுள்ள கட்டுரைகள் அனைத்தையும் படித்து, அணிந்துரைகள் வழங்கிய சிவாகமஞான பானு, அச்சுவேலி, சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், ஆசிரிய கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் பண்டிதர் ஆ. சபாபதி, ஈழநாடு பிரதம ஆசிரியர் ஸ்ரீ. கி. பி. ஹரன் ஆகியோருக்கும் நாம் என்றுங் கடப்பாடுடையோம்.

இம்மலரை உருவாக்குவதற்குப் பல்லாற்றானும் பேருதவிகள் புரிந்த ஆசிரியர் திரு. க. சிற்றம்பலம் அவர்களுக்கும், சைவ மகாசபைச் செயலாளர் திரு. அ. சிவபாதம் அவர்களுக்கும் எம் இருதய பூர்வமான நன்றி உரித்தாகுக.

மலரை அச்சிடும்போது சிறந்த ஆலோசனைகள் கூறியும், வேண்டிய திருத்தங்கள் செய்தும் இம்மலரைச் சிறப்புற அமையச் செய்த, கந்தரோடைத் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை முன்னாள் தலைமையாசிரியர் பிரமஸ்ரீ சு. சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களுக்கும், கல்வியங்காடு, செங்குந்த இந்துக்கல்லூரி விரிவுரையாளர் ஸ்ரீ. சி. சரவணபவன் (சிற்பி) B. A. அவர்களுக்கும் நாம் என்றுங் கடப்பாடுடையோம்.

இம்மலரிலுள்ள யாழ்ப்பாண விளம்பரங்கள் சம்பந்தமாக உதவிபுரிந்த திரு. மு. இரத்தினசிங்கம் அவர்களுக்கும் எம் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஸ்ரீமத் சிவயோகநாத சுவாமிகள் அவர்களின் பிரதிமைப் படவுருவத்தைத் தந்துதவிய சிவ தொண்டன் நிலையத்தினர்க்கும், மதுரைத் திரு ஞானசம்பந்தர் ஆதீனத்து மகாசந்நிதானம் அவர் களினதும், ஸ்ரீலஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர் களினதும் பிரதிமைப் படவுருவங்களைத் தந்துத விய ''ஈழநாடு'' நிறுவனத்தினர்க்கும், மலரின் மேலட்டைப் படத்தை அச்சிட்ட **கொழும்பு மெய்கண்டான் அச்சகத்தினர்க்கும்** எம் நன்றி உரித்தாகுக.

இம்மலர் செவ்வனே அமைவதற்குத் தோன் றாத் துணையாயிருந்து எமக்கு அருள்புரிந்த ஈழத் துச் சிதம்பரத்துக் கூத்தப்பிரானை மனமொழி மெய்களால் வழுத்துகின்றோம்.

''என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்''

திருச்சிற்றம்பலம்.

சைவமகாசபை,
காரைநகர்,
பிலவங்க ஆண்டு,
திருக்கார்த்திகைத் திருநாள்,
17.11.67.

**க. வைத்தீசுவரக்குருக்கள்,**
ஆசிரியர்,
பொன் விழாமலர்.

Phone 7083

# JAYAPAKAN & CO.,

**JEWELLERS & PAWN BROKER**

Branch:-

KANDY ROAD,
KILINOCHCHI.

225, K. K. S. ROAD,
JAFFNA.

சென்ற அரை நூற்றாண்டாகச்
சைவத்துக்கும் தமிழுக்கும்
பெருந் தொண்டாற்றி வருகின்ற

**காரைநகர்ச் சைவ மகாசபையினர்**

## பொன்விழா மலர்

வெளியிடுவதை

**கொழும்பு, காரை அபிவிருத்திச்சபை**
**பாராட்டுகின்றது.**

| | | |
|---|---|---|
| வே. சிவகுரு<br>உப தலைவர்<br>( தலைவருக்காக ). | க. க. சுப்பிரமணியம்<br>செயலாளர்<br>1.8.67 | த. நல்லதம்பி<br>பொருளாளர் |

Wrappr Printed at the Meihandan Press Ltd., Colombo.

அச்சுப்பதிவு: கலாதேவி அச்சகம், சுன்னாகம்.